ஸ்ரீ வேதாந்த தீபிகை

தொகுதி-24 எண்.1.2.3.

ஜூலை முதல் செப்டம்பர் வரை

1935

JL
R65m211,N12
N35:24.1-3
158957

ஸம்புடம் . 24] JULY 1935 [ஸஞ்சிகை 1

ஸ்ரீ

463

வேதாந்த தீபிகை

OFFICE OF THE ...
20 SEP 1935

யுவஸு

ஆனிமீ

PUBLISHED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha,

MADRAS.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை.

1. ஸம்ஸ்க்ருத பாஷையும், அதைக் கற்றுணர்ந்த பண்டிதர்களும்:— [மஹாமஹோபாத்யாய-தட்டை. ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] 1

2. மீமாம்ஸா ஸங்க்ரஹம் :—[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்.] ... 10

3. ஸ்ரீ க்ருஷ்ண தாதார்ய மஹாசார்ய சரிதம்:— ஸ்ரீ. உப. வித்வான். ஐடா க்ருஷ்ண தாதாசார்யர்] ... 20

4. சரணாகதியே சரமோபாயம்:— [பருதல்குடி மாடபூசி. திருமலைஐயங்கார்.] 25

5. கடிதங்கள்:— ... 30

6. வரதராஜ பஞ்சாசத்:—[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசாரியர், M. A. B. L. அட்வோகேட், திருச்சி] ... 33

7. ஸம்பாதகீயம்:— ... 39

8. பரிகர விஜயம்:—[புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்.] ... 147

9. தீவ்ய ஸூரி சரிதம்:— [வங்கீபுரம் கோழியாலம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 145

ஸ்ரீ:

ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும்

புஸ்தகங்கள்

(1) ஸ்ரீ பஞ்சஸ்தவம்: ஸ்ரீ ஸ்துதி— ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரால் இயற்றப் பெற்ற ஒரு தமிழ் உரையுடன் கூடியது ... ரூ 0 2 0

(2) ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:—[ஸ்ரீ ஆளவந்தாரால் அநுக்ரஹிக்கப்பட்டது. ஸ்ரீ. பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாநத்துடன் கூடியது] ... ... ரூ 0 8 0

(3) ஜிதந்தே ஸ்தோத்ரம்:—[ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாநத்துடனும் புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யருடைய வ்யாக்யாநத்துடனும் கூடியது ... ... ரூ 0 6 0

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸ்,
ராமஸ்வாமி தெரு,
மாம்பலம், தியாகராயநகர் போஸ்ட்,
மதிராஸ்.

ஸ்ரீ:

[illegible]

வேதாந்த தீபிகை

ஸம்பாதகர் :—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 24] யுவ ஆனிமீ [ஸஞ்சிகை 1

ஸ்ரீ:

ஸம்ஸ்க்ருத பாஷையும், அதைக் கற்றுணர்ந்த பண்டிதர்களும்.

(மஹாமஹோபாத்யாய-தட்டை. ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்)

உலகத்திலுள்ள மனிதர்கள் தங்கள் தங்கள் எண்ணங்களை பிறர் பக்கலில் வெளியிடுவதற்கும் அவ்வண்ணமே பிறர்களின் எண்ணங்களை தாங்கள் தெரிந்துகொள்வதற்கும் பாஷை ஒன்றே இன்றியமையாத ஸாதனம். பாஷை ஒன்றில்லாவிடில் மனிதர்கள் பசு பக்ஷி மிருகங்களைப்போல் புருஷார்த்த ஸாதநாநுஷ்டானங்களில்லாதவர்களாகவும் ஆஹார நித்ரா பயங்களை மாத்திரம் அநுபவிக்கிறவர்களாகவு மிருக்கவேண்டியதாக ஏற்படும். அப்படிப்பட்ட தேசபாஷைகள் உலகில் பல உள. அவற்றுள் மிகச்சிறப்பு வாய்ந்திருப்பது ஸம்ஸ்க்ருத பாஷை ஒன்றே. 'ஸம்' என்கிற உபஸர்க்கத்திற்கு 'நன்றாக' என்று பொருள். க்ருதம் என்றால் பரிஷ்கரிக்கப்பட்டது என்று பொருள். நன்றாக லக்ஷணம் முதலியவைகளால் பரிஷ்கரிக்கப்பட்டது என்று அர்த்தம்.

15895

[illegible]" என்கிற பாணினி ஸூத்ரத் திலும் இந்த '[illegible]' என்கிற பதம் நிஷ்பன்னமாகிறது. இது தேவ பாஷை. மனிதர்களுக்கு உறியதல்ல.

"[illegible]"

என்கிற அபியுக்த வசனம் இதில் ப்ரமாணம். இது விரிந்த பாஷை. எல்லா உலகங்களிலும் எல்லா த்வீபங்களிலும் இந்த பாஷையே வழங்கப்பட்டு வருகிறது. நான்கு வேதங்களும் அதன் இரு அங்கங்களும் புராணங்களும் மற்றுமுள்ள வாங்மயம் அனைத்தும் ஸம்ஸ்க்ருத பாஷாமயமே. இதில்

"[illegible]"

என்கிற மஹாபாஷ்ய வசனம் பிரமாணம்.

இந்த ஸம்ஸ்க்ருத பாஷா ஞானத்திற்கு காவ்ய சம்பூ நாடகங்கள், கதாக்ரந்தங்கள், ஆக்யாயிகைகள் இவைகள் எல்லாம் முக்கிய ஸாதனங் கள். இவைகளில் ஐந்து வருஷங்களுக்குக் குறையாமல் உழைத்தால் கூடியமட்டும் தெளிவான ஞானம் உண்டாகிறது. பிறகு சாஸ்திரங்களில் ப்ரவேசிக்க வேண்டும்.

"[illegible]"

என்கிற வசனத்தின்படி அதிகமாக புதிக்குத் க்லேசத்தை விளைவிக்கிற சாஸ்திரங்களில் ப்ரவேசித்து ஆசார்யர்களை உபஸர்ப்பித்து அவைகளைக் கற்கவேண்டும். அந்த சாஸ்திரங்களில் ஒவ்வொன்றும் கடல்போல இருக் கிறது. ஸாசப்தாபசப்த ஞாநத்திற்காக தொடக்கத்தில் வியாகரண சாஸ் திரத்தைக் கற்கவேண்டும். வாக்யார்த்த ஞாநத்திற்காக தர்க்க சாஸ்திரத் தைக் கற்கவேண்டும். "இந்த விஷயத்தில், "[illegible]" என்கிற வசனம் பிரமாணம். குறைந்த பக்ஷம் ஒவ்வொரு சாஸ்திரத்திலும் நான்கு வருஷங்கள் உழைக்கவேண்டும். அதன் பிறகு வேதார்த்த விசாரத்திற்காக மீமாம்ஸா சாஸ்திரத்தை அப் யஸிக்கவேண்டும். இரண்டு வருஷகாலமாவது இந்த சாஸ்திரத்தில் ச்ரமப்

படவேண்டும். இதற்குமேல் ப்ரஹ்ம விசாரத்தில் ஆவலுடன் வேதாந்த சாஸ்திரத்தைக் கற்கவேண்டும். நியமத்துடன் பதினைந்து வருஷங்களாவது ஆசார்யர்களை அணுகி சாஸ்திராப்யாஸம் செய்யாதவனுக்கு ஸம்ஸ்க்ருத பாஷை வசப்படுவதில்லை. அலங்கார சாஸ்திர ஞானமும் வேண்டும். அதில்லாவிட்டால் காவிய நாடகாதி க்ரந்தங்களின் ஸௌந்தர்யமும், அர்த்தங்களின் சீர்மையும் ச்லோகங்களின் தாத்பர்யமும் வ்யங்க்யார்த்தங் களும் பத ரசனை சைலியும் புலப்படாது. இவ்வளவிலும் உள்ளபடி பாண்டித் திய முள்ளவன் தான் பண்டிதனாகிறான். இதைக் கணிசித்தே,

"[illegible] /
[illegible] /"

என்று அபியுக்தர் பேசினர். உலகத்தில்,

"[illegible]"

என்கிற வசனத்தின்படி இராமல் ப்ரயோஜனத்தைக் கருதாமலே படிப்பது என்பது நமக்கு ஸ்வரூப ப்ராப்தமென்றே, சாஸ்திரங்களில் பிர வேசித்து வெகு சிரமங்களை அனுபவித்து ஸரஸ்வதீ கடாக்ஷத்தைப் பெற்று ஜன்மாந்தர ஸுக்ருத விசேஷத்தால் பண்டிதனாகிறான். இவ்வண்ணம் சிரமத்தை அனுபவித்து பண்டிதன் என்கிற ப்ரஸித்தியைத் தேடின மஹான்களுக்கு பஹுமானிப்பவர்களும் ஸம்மானிப்பவர்களும் இல்லாமல்

"[illegible] /
[illegible] ॥"

என்கிற பர்த்ருஹரியின் நிர்வேத வசனப்படி எல்லாப்பண்டிதர்களும் கற்ற வித்யை குடலில் குமரிக்கொண்டிருக்க, குருகுல வாஸ ச்ரமம் மறக்காம லிருக்க, ச்ரோதாக்களில்லாமல் உலகம் சூன்யமாயிருக்க, தாரித்ரியம் வளர்ந்துவர, குடும்ப ஸம்ரக்ஷண ப்ரயாஸம் விருத்தியடைய, 'யார் நமக்குத் துணையாவார்' என்று மனங்கலங்க ஆதரவில்லாமல் தபிக்கிறார்கள். தற் காலத்தில் எண்ணிப்பார்த்தால் தென்னாட்டில் நல்ல பண்டிதர்கள் பத்து அல்லது பதினைந்து பேர்களுக்குள் அடங்குவார்கள். இவர்கள் காலங்கள் க்ரமமாக சென்று விட்டால் பண்டித லோகத்தில் பெரும் துர்பிக்ஷமே. நிச்சயம். கொஞ்சமேனும் ஸம்சயம் வேண்டாம்.

தார் போட்ட வாழைவெட்டப்பட்டால் அந்த ஸ்தானத்தில் கன்றுகள் வளர்ந்து பலத்தைத் தருகிற மாதிரியாக வயது சென்ற பண்டிதர்கள் காலம்

சென்று விட்டால் அந்த ஸ்தானத்தில் மற்றுள்ள சிறுவர்கள் காலக்ரமத்தினால் பண்டிதர்களாகி அந்த பண்டித ஸ்தானத்தை அலங்கரிக்க வேண்டாமா? இப்பொழுது இருக்கும் ப்ரபல ஸம்ஸ்க்ருத பண்டிதர்களுக்கு ஒரு நிமிஷமாவது மனதுக்கு ஸ்வாஸ்த்யம் கிடையாது. அதற்குக் காரணம் வறுமையே.

"யத்ர வித்வா ந தத்ர ஸ்ரீ: யத்ர ஸ்ரீ: ந ஸரஸ்வதீ"

என்கிற அபியுக்த வசனம் பொய் போமோ? கஸ்தூரியைப்போல் கிடைக்க அரிதாக இருக்கிற இந்த பண்டிதர்களை தேச க்ஷேமத்தைக் கோருகிற மஹாபுருஷர்கள் தானமானங்களால் உத்ஸாஹத்தை அடையச் செய்து ப்ரவசனங்களால் நம்ம நாட்டில் உள்ள சிறுவர்களை நாளடைவில் நல்ல வைதுஷ்யத்தை அடைந்தவர்களாகச் செய்வித்து, உலகிலெங்கும் பரவி விருத்தியடைந்து வருகிற அஜ்ஞானத்தையும் துராசாரங்களையும் ஸ்வமதத்திலுள்ள அச்ரத்தையையும் நாஸ்திகத் தன்மையையும் ஸாதுக்களிடம் சிறுவர்களுக்கு உண்டாயிருக்கும் அவிச்வாஸத்தையும் போக்கவேண்டும். பக்கம் பக்கமாக பண்டிதர்களைக்கொண்டு தர்மங்களையும் ஸதாசாரங்களையும் உபதேசிக்கும்படி செய்விக்கவேண்டும். அதற்கு ஸாதனமாக தனிகர்களோ ஆஸ்திகர்களான மஹாபுருஷர்களோ பண்டிதர்களுக்கு தனங்களைக் கொடுத்து உதவவேண்டும். இந்த தன தானந்தான் தானமாகும்.

"வேதவித்யா [illegible] /
[illegible]"

என்கிற மஹானுடைய வசனம் ஆதரிக்கத் தக்கது. இந்த பண்டிதர்களை ப்ரஸித்த ப்ராஹ்மண ஸமுதாயமுள்ள நகரங்களிலோ கிராமங்களிலோ க்ஷேத்ரங்களிலோ நியதமாக வஸிக்கும்படி செய்வித்து ஆங்காங்கு இருக்கும் சிறுவர்களை அந்தந்த பண்டிதர்களிடம் ஸம்ஸ்க்ருத பாஷையை நன்கு கற்கும்படி செய்வித்து அன்ன தானங்களால் படிக்கும் சிறுவர்களை போஷித்து வித்யாதானத்தைச் செய்யவேண்டியது அவசியமாக இருக்கிறது.

"அந்நாநி [illegible] கலௌ யுகே /
[illegible]"

என்கிற மஹரிஷிகள் வசனம் போற்றத் தக்கது.

"[illegible]
[illegible] /

[illegible]
[illegible] கலி:"

என்கிற வசன ப்ரகாரம் அனர்த்தங்களாகிற ஸஸ்யங்களுக்கு க்ஷேத்திரமான கலிபுருஷன் நிரங்குசமாக ராஜ்ய பரிபாலனம் செய்யத் தொடங்கி விட்டான். கலிபுருஷனுடைய ஸாம்ராஜ்யத்தை நடத்துகிற மஹான்கள் க்ஷேத்திரங்களிலும் தேவாலயங்களிலும் தர்ம ஸத்திரங்களிலும் தர்ம பாடசாலைகளிலும் ப்ரவேசித்து தர்மத்தை முற்றிலுமே நாசப்படுத்த ஆரம்பித்து விட்டார்கள். காலக்ரமத்தினால் மடங்களிலும் பலாத்காரத்தால் ப்ரவேசித்து வைதிகஸம்பத்தை சிதறியச் செய்யத் தொடங்கி விட்டார்கள். இப்படிப்பட்ட அனர்த்தங்கள் மேல்மேல் வளர்ந்துகொண்டு வரும் தருணத்திலுங்கூட நாம் எல்லோரும் தூங்கினால் எப்பொழுது விழிப்பது? எப்பொழுது இந்த ஆபத்து ப்ரவாஹத்தைத் தடுக்க அணைபோடுவது?

"நிமக்நே [illegible]"

என்கிற வசனத்தின்படி அகாலத்தில் ப்ரயத்னப் படாமல் இந்த ஸமயத்திலேயே முயற்சிக்கவேண்டும். 'தானமேவ கலௌ யுகே' என்கிற வசனம் மறக்கத் தக்கதன்று. பொருளுள்ள மகான்கள் உறக்கத்தை விட்டு எழுந்திருந்து உலகத்தை நன்றாக கவனிக்கவேண்டும். நம்ம வைதிகஸ்ரீயையும் ஸம்ஸ்க்ருத பாஷையையும் இந்த பாஷையைக் கற்றறிந்த பண்டிதர்களையும் பாதுகாத்தால் நமக்கு சேர்ந்திருக்கிற அவத்யங்களெல்லாம் ஸூர்யனைக்கண்ட பனிபோல் விலகி நாம் உத்தரோத்தரம் நன்மையை அடைவோம். இக்காலத்தில் கோவிலைக் கட்டுவதாலும் குளங்களை வெட்டுவதாலும் ஸத்திரங்களை ஏற்படுத்துவதாலும் யாதொரு பயனும் உண்டாகாது. ம்லேச்சர்கள் எங்கும் தடையற்று ப்ரவேசிக்கிறார்கள். நமக்குத் தடுக்க அதிகாரம் கிடையாது. அவர்களுக்கு அனுகூலமாக ராஜாங்கமிருப்பதால் அவர்களே ஜயசாலிகளாக விளங்குகிறார்கள். நாம் ஒடுங்கவேண்டி இருக்கிறது.

கலி புருஷனுடைய ஸாம்ராஜ்யமாகிற தாவாக்னியிலகப்பட்டுத் தத்தளிக்கின்ற நம்மை நாம் பாதுகாத்துக்கொள்வதற்கு ஒரே உபாயம்தான் உண்டு. அதாவது நமக்கு துர்வாஸனையினால் ஏற்பட்டிருக்கும் சுவ வ்ருத்தி ருசியை அகற்றி ஸ்வ வ்ருத்தியில் ஏற்படும் அபிருசியே. ப்ராஹ்மணனுக்கு ஸ்வ தர்மானுஷ்டானம் இம்மையிலும் மறுமையிலும் ஸுகத்தைப்பயக்கத் திறமையுள்ளது. அறியாமையால் தாஹித்தவன் கானலைக்கண்டு பானீயமென்று ப்ரமிப்பது போல் ப்ராஹ்மணன் ஸ்வ தர்மத்தை இழந்து அன்யர்களுடைய வேஷம் பாஷை செய்கை ஆசாரம்முதலியவைகளில் பற்றுதலுள்ள

வனுகி பேதையாகப் போய்விட்டான். அந்தோ! இதுமிக்க வ்யஸனிக்கத் தக்கது.

‘ 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍇 𑌨𑌿𑌧𑌨𑌂 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃 𑌪𑌰𑌧𑌰𑍍𑌮𑍋 𑌭𑌯𑌾𑌵𑌹𑌃 ’

என்கிற கீதாசார்யன் வசனம் மறக்கத்தகாதது.

முற்காலத்திலுள்ள நம் நாட்டு மன்னர்கள் ஸம்ஸ்கிருத பண்டிதர்களால் தங்கள் ஸபையைச் செழிக்கச் செய்து கொண்டிருந்தார்கள். அக்ஷர லக்ஷம் தனம் கொடுத்து போஜராஜன் பண்டிதர்களை ஆராதித்தான். விக்ரமாதித்யன், காளிதாஸன் முதலிய மஹாகவிகளை அபரிமிதமான தனதானத்தால் ஆதரித்து வந்திருக்கிறான். ஹர்ஷவர்த்தனன் முதலிய அரசர்கள் பாணன் முதலிய பண்டிதர்களை மந்திரிகளாக ஸபையில் ஏற்படுத்தி ராஜ்ய பரிபாலனம் செய்துவந்ததாகத் தெரியவருகிறது. அரசர்களுக்குப் பண்டிதர்களும் பண்டிதர்களுக்கு அரசர்களும் பரஸ்பரம் ஆதாரமாக இருந்து வந்திருக்கிறார்கள்.

“ 𑌗𑍁𑌣𑌿𑌨𑌾 𑌸𑌭𑌯𑌾 𑌸𑌭𑌯𑌾 𑌚 𑌗𑍁𑌣𑍀 𑌗𑍁𑌣𑌿𑌨𑌾 𑌸𑌭𑌯𑌾 𑌚 𑌵𑌿𑌭𑌾𑌤𑌿 𑌨𑍃𑌪𑌃 /
𑌕𑌵𑌿𑌨𑌾 𑌚 𑌵𑌿𑌭𑌾𑌵𑌿𑌭𑌵𑍇𑌨 𑌚 𑌕𑌵𑌿𑌃 𑌕𑌵𑌿𑌤𑌾𑌵𑌿𑌭𑌵𑍇𑌨 𑌚 𑌵𑌿𑌭𑌾𑌤𑌿 𑌸𑌭𑌾 ॥”

என்கிற ரஸிககோஷ்டி துரந்தரர்களின் வசன வைகரீ எல்லோராலும் புகழத்தக்கது.

“ 𑌨𑌿𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌾 𑌨 𑌶𑍋𑌭𑌨𑍍𑌤𑍇 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌾 𑌵𑌨𑌿𑌤𑌾 𑌲𑌤𑌾𑌃” ஆதாரமில்லாவிட்டால் பண்டிதர்கள் எவ்வாறு பிரகாசிப்பார்கள்? ப்ராஹ்மணர்கள் இக்காலத்தில் மற்றவர்களாலும் அவர்களிட்ட துர்போதனத்திற்கு உள்பட்டவர்களாலும் வெறுக்கப்பட்டும் அகாரணமான த்வேஷத்துக்கு ஆள்படுத்தப்பட்டும் துன்பத்துக்கு உள்படுத்தப்பட்டும் அவமதிக்கப்பட்டும் நிர்வேதத்தை அடைந்து வருகிறார்கள். உத்தமமான ஜாதியில் ஜனித்தும் வேத வேதாந்தங்களை நன்கு தாங்கள் அத்தியயனம் செய்தும் பிறர்களுக்கு அத்தியாபனம் செய்வித்தும் தாங்கள் ஸ்வதந்திரர்களாக யாகம் செய்தும் பிறர்களுக்கு யாகங்களைச்செய்வித்தும் ப்ரதிக்ரஹம் தானம்இவைகளில் அதிகாரம் வாய்ந்தும் ஸர்வோத்தமமான பதத்தில் தொன்று தொட்டு இருந்து வந்தும் பிராஹ்மணர்கள் இக்காலத்தில் துக்க ஸாகரத்தில் மூழ்கி இருக்கிறார்கள். இதற்குக் காரணம் ஸம்ஸ்கிருத பாஷையின் அநாதரமும், அதை உள்ளபடி கற்றறிந்த பண்டிதர்களிடத்திலுள்ள அவமதிப்பும் ஸ்வதர்மத்தில் பற்றுதலில்லாமையும் ஸ்வ தேச ஸ்வாசாரங்களில் உள்ளபடி

அன்பு இல்லாமையுமே. இவைகள் நீங்கி நம் மதம் ஆசாரம் ஐச்வர்யம் வைதிகஸ்ரீ ஆரோக்கியம் தேச க்ஷேமம் இவைகள் அபிவிருத்தி அடைவதற்கு ஸம்ஸ்கிருதபாஷாஸம்ரக்ஷணம் பிரதானமானகாரணம். இந்த ஸம்ஸ்கிருத பாஷையினால் இயற்றப்பட்ட கிரந்தங்களில் கூறப்படாத தர்மங்கள் எங்கும் இல்லை. இந்த பாஷாமயங்களான மஹநீயங்களான கிரந்தங்களால் ஸர்வ தர்மங்களும் அறியப்படும். நாஸ்திகத்வம் விலகும். ஆஸ்திக்யம் பெருகி வரும். வைதிக ச்ரத்தை ஏற்படும். ஸ்வாசாரத்தில் பற்றுதலுண்டாகும். தேசாபிமானம் உண்டாகும். முதலில் ராமாயணத்தை எடுத்துக்கொள்வோம். இந்த கிரந்தத்தில் பரமபுருஷன் ஸாதுக்களை ரக்ஷிப்பதற்காகவும் துஷ்டர்களை நிக்ரஹிப்பதற்காகவும் தர்மங்களை நிலைநாட்டுவதற்காகவும் யுகம் தோறும் அவதரிக்கிறார் என்றும், அப்படி அவதரித்த ராமபிரானுடைய அநுஷ்டானத்தினால் நமக்கு மாத்ரு வாக்கிய பரிபாலனம் பித்ரு வாக்கிய பரிபாலனம் செய்யத்தக்கதென்றும் ஏக தார வ்ரதம் சிறந்ததென்றும் ஸத்யம் தயை க்ஷமை விநயம் ஸௌலப்யம் ஸௌசீல்யம் இவைகள் உத்தமமான குணங்களென்றும் இந்த குணங்களால் மனிதனுக்கு உண்டாகாத நன்மை இல்லை என்றும் ஸௌப்ராத்ரம் என்பது இணை இல்லாததென்றும் சரணாகத ஸம்ரக்ஷணம் எல்லா தர்மங்களைவிடச் சிறப்புடையதென்றும் ப்ரதிஜ்ஞா பாலனம் அவச்யம் கர்தவ்யமென்றும் தைவ பலத்துக்கு மற்றொன்றும் ஈடாகாதென்றும் பொறுமையுடையவனுக்கு நன்மைகள் உண்டாகுமென்றும் லோகாபவாதம் போரப் பரிஹரிக்கத்தக்கதென்றும் பதிவ்ரதா ஸ்த்ரீகளின் மகிமை அஸாத்திய சக்தி யுள்ளதென்றும் எவ்வளவு பலமுள்ளவனாக இருந்தபோதிலும் தைவபலமில்லாதவனுடைய வலிமை பயன்படாதென்றும் மனிதர்களால் அறிந்து கொள்ளப்படுகிறது. மஹாபாரத கிரந்தத்தை பரிசீலனம் செய்தால், “𑌯𑌦𑌿𑌹𑌾𑌸𑍍𑌤𑌿 𑌤𑌦𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌯𑌨𑍍𑌨𑍇𑌹𑌾𑌸𑍍𑌤𑌿 𑌨 𑌤𑌤𑍍𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍”என்கிறபடி எல்லா தர்ம ரஹஸ்யங்களும் நன்கு புலப்படுகின்றன. தைவபலமில்லாதவனுடைய பௌருஷம் பயனற்றதென்றும், தர்மம் தலைகாக்குமென்றும் உத்கடமான பாவங்களைச் செய்தவனுக்கு விரைவாக கேடு ஸம்பவிக்குமென்றும் புத்திரனானவன் தன் சுகத்தை இழந்தாவது தந்தையின் மனோரதத்தைப் பூர்த்தி செய்ய வேண்டியதென்றும் நன்றி மறவாமை பரம தர்மமென்றும் குருவினிடம் சொல்லும் பொய்யானது சிஷ்யனுடைய எல்லா ஸம்பத்துக்களையும் மிகுதியின்றி நாசம் செய்து விடுமென்றும் தன் விரதத்தை இழந்தாவது தன் பக்தனுடைய விரதத்தைக் காப்பது பரமாத்மாவுக்கு ப்ரியமென்றும் அநாதர்களுக்கு தைவம் ரக்ஷகமென்றும் கர்மயோகம் ஞானயோகம் பக்தியோகம் என்கிற உபாயங்களின் ஸ்வரூபத்தை நன்கு உணர்ந்து முறையே அநுஷ்டிப்பவருக்கு பகவத் ப்ரஸாதத்தால் ஸம்ஸாரம் தொலைந்து சாச்வதமான

மோக்ஷ ஸாம்ராஜ்ய ஸுக முண்டாகிறதென்றும் அறியப்படுகிறது. இவ்வண்ணம் உலகம் சீர்கெட்டுவரும் தருணத்தில் வளர்ந்து கொழுந்து விட்டு செழிக்கிற அதர்மத்தை ஸமூலம் அழித்து தர்மத்தை ஸ்தாபிப்பதற்கு வல்லமையுள்ள ஆசார்யர்கள் ஸ்வாநுஷ்டாநத்தில் மாத்திரம் ச்ரத்தையுள்ளவர்களாக ஸம்பத்துக்களை ஏகாந்த ஸ்தலத்தில் சேமித்து வைத்துக் கொண்டு ஒரு விதத்திலும் திரவ்யத்தை உபயோகப்படுத்தாமல் உறங்குகிறார்கள்.

“ [illegible] /
[illegible] ॥”

என்கிற வசனத்தை அவர்கள் மறந்தார்கள் போலும். தார்மிகர்களே! விழித்துக்கொள்ளுங்கள். எழுந்திருங்கள். நம்ம மதம் நம்முடைய வித்யை ஆசாரம் வைதிகஸ்ரீ இவைகளை விருத்தி அடையச் செய்ய உங்களுக்கு ஊக்கமிருக்குமேயானால் மற்றவர்களை எதிர்பாராமல் நீங்கள் ஒன்று சேர்ந்து தனங்களை தொடக்கத்தில் ஸ்வல்பம் சேகரித்து ஸ்ரீரங்கம் பெருமாள் கோவில் சென்னை ஸ்ரீபெரும்பூதூர் மேலக்கோட்டை திருநாராயணபுரம் பெங்களூர் கோயம்புத்தூர் சேலம் திருச்சினாபள்ளி கரூர் ஈரோட் திருவஹீந்திரபுரம் மதுரை திருநெல்வேலி திண்டுக்கல் ஸ்ரீ வில்லி புத்தூர் திருவள்ளூர் ராமநாதபுரம் வானமாமலை திருக்குருங்குடி இந்த இடங்களில் ஐம்பது ரூபாய்க்குக் குறையாமல் வித்வான்களுக்கு வேதனத்தை ஏற்படுத்தி அவர்களை ஸ்தாபித்து அவர்களிடம் வித்யாக்ரஹணத்துக்காக வித்யார்த்திகளை சேகரித்து அவர்களுக்கு அப்யவஹாரம் முதலிய ஸௌகர்யத்தைச் செய்து இவைகள் சரிவர நடந்து வருவதை பராமர்சிக்க ஒரு தக்க அதிகாரியை ஏற்படுத்தி ஸம்ஸ்கிருத பாஷையில் எல்லோருக்கும் அபிருசியை உண்டு பண்ணி வேதாத்யயனம் காவிய நாடகாலங்காரங்கள் வியாகரணம் தர்க்கம் மீமாம்ஸை வேதாந்தம் ஜ்யோதிஷம் ஸாச்ருதம் பாஹடம் சரகம் அஷ்டாங்கஹ்ருதயம் ஸங்கீத சாஸ்திரம் இவைகளை விருத்தி அடையச் செய்யுங்கள். இந்த தர்மகார்யத்திற்கு எல்லோரும் தனம் கொடுத்து உதவி புரிவார்கள். தவிர நான்கு வித்வான்களைப் பொருக்கி எடுத்து அவர்களுக்குத் தக்கபடி சம்பளத்தை ஏற்படுத்தி பிரயாணச்செலவுக்கும் சாப்பாட்டுச் செலவுக்கும் வேண்டிய பொருளைக் கொடுத்து பக்கம் பக்கமாக இந்த வித்வான்களைப் போகும்படி செய்து கிராமங்கள்தோறும் தர்மங்களைப் பற்றியும் மதத்தைப் பற்றியும் வர்ணாச்ரமாசாரங்களைப் பற்றியும் உபந்யாஸம் செய்யும்படி ஏற்பாடு செய்யுங்கள். இந்த விஷயத்தில் செலவிடும் தனம் தான் தனம். மற்றது தனமல்ல; தினம்தான். அக்ஷயமான தனம் கல்வி ஒன்றே;

ஸத்வித்யாஸஸ்யம் வளர்ந்து வர வர துர்வித்யை என்கிற களைகள் தானாகவே சாய்ந்து போய்விடும். நாளடைவிலே அவைகள் பிடுங்கி எறியப்பட்டுவிடும். இந்த தர்மகாரியங்களில் ப்ரவர்த்தித்து பாடுபடுகிறவர்களுக்கு பரமாத்மா வேண்டும் பொருளை அளிப்பான். பயப்பட வேண்டியதில்லை. ஜகத்ரக்ஷகன் இவர்களுடைய ப்ரயத்னத்தை ஸபல மாக்குவான். இந்த யுகமானது மங்களம் அபிவிருத்தியடைந்து க்ருதயுகம் போலவே ஆய்விடும். முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார். ஆகம சாஸ்திரங்களையும் நன்றாக அப்பியஸிக்கச் செய்வித்து தேவாலயங்களில் சரிவர அர்ச்சக முகத்தினால் பகவதாராதனத்தையும் நடப்பிக்கவேண்டும். ராஷ்ட்ரம் ஸுபிக்ஷமாகவும் ஈதி பாதை இல்லாததாகவும் ஆரோக்கியம் மேலிட்டதாகவும் உத்தரோத்தரம் அபிவிருத்தி அடைந்துவரும். வருஷந்தோறும் ஒரு தடவை வித்வத்ஸபையைக் கூட்டி நல்ல ஸம்மானம் செய்யுங்கள். தனத்தாலும் பாரிதோஷிகங்களாலும் வித்வான்களுடைய மனத்தைக் குளிரச் செய்யுங்கள். அவர்கள் விருத்தி அடைந்தால் உலகம் விருத்தி அடையும். எல்லாவற்றுக்கும் பிரதானமான ஸம்ஸ்கிருத வித்யாரக்ஷணம் அவசியம் செய்யத் தக்கது

𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌨𑌾𑌮 𑌨𑌰𑌸𑍍𑌯 𑌰𑍂𑌪𑌮𑌧𑌿𑌕𑌂 𑌪𑍍𑌰𑌚𑍍𑌛𑌨𑍍𑌨𑌗𑍁𑌪𑍍𑌤𑌂 𑌧𑌨𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌭𑍋𑌗𑌕𑌰𑍀 𑌯𑌶𑌸𑍍𑌸𑍁𑌖𑌕𑌰𑍀 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌗𑍁𑌰𑍂𑌣𑌾𑌂 𑌗𑍁𑌰𑍁𑌃 / 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌬𑌨𑍍𑌧𑍁𑌜𑌨𑍋 𑌵𑌿𑌦𑍇𑌶𑌗𑌮𑌨𑍇 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌪𑌰𑌾 𑌦𑍇𑌵𑌤𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌰𑌾𑌜𑌸𑍁 𑌪𑍂𑌜𑍍𑌯𑌤𑍇 𑌨 𑌹𑌿 𑌧𑌨𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌹𑍀𑌨𑌃 𑌪𑌶𑍁𑌃 /

[illegible] ॥

[illegible] ॥

ஶ்ரீமீமாம்ஸா ஸங்க்ரஹம்.

(திவான் பஹதூர் ஶ்ரீ. உப. வி. கே ராமாநுஜாசார்யர்)

(ஸம்-23 ஸஞ் 12, பக்கம் 756 தொடர்ச்சி)

(149) ஸத்ரம்' என்னும் ஸோமயாகங்களைச் சொல்லுமிடங்களில சில பலன்களைச் சொல்லும் வாக்கியங்கள் இருக்கின்றன—“ப்ரதிதிஷ்டந்தி ஹ வா ய ஏதா ராத்ரீருபயந்தி' என்று. இதின் பொருள்—எவர்கள் இந்த ஸத்திரயாகத்தைச் செய்கிறார்களோ, அவர்கள் நிலையாய் இருக்கிறார்கள்—என்று. ஸத்ரயாகத்தில் அநேக ஸுத்யாஹஸ் இருப்பதால ராத்ரீ: (ராத்திரிகள்) என்று பஹுவசநம். ராத்திரி என்பது 60-நாழியான காலம். ராத்திரி மாத்திரம் அன்று. கீழே சொன்னபடி இவைகளுக்கு ஸ்வர்க்கம் பலன் என்று கொள்ளலாமா? என்று ஸந்தேஹம்.

ஸித்தாந்தம்:—சொன்ன வாக்யம் ஸத்ரயாகத்தை ஸ்தோத்ரம் பண்ணுகிற அர்த்தவாதம். அதில் ப்ரதிஷ்டா (நிலையாயிருப்பது) சொல்லப்படுகிறது. இதைத் தள்ளிவிட்டு, கொஞ்சமும் சொல்லப்படாத ஸ்வர்க்கம் என்பதை ஏன் பலனாகக் கொள்ளவேணும். இது கிட்ட இருக்கிறது. ப்ரதிஷ்டைதான் பலன். (அதி-8)

ஸமாப்நுயு: என்கிற சொல்லை அத்யாஹாரம் செய்தால், அதின் ஸ்வரூபம், அதற்கும் சொல்லப்பட்ட கர்மத்துக்கும் ஸம்பந்தம், அது பலன் என்பது இவைகளைக் கல்பிக்கவேண்டும். ப்ரதிஷ்டையின் ஸ்வரூபம் ஏற்பட்டிருக்கிறது; வாக்யம் ஒன்றாயிருப்பதால் அதற்கும் கர்மத்துக்கும் ஸம்பந்தமும் ஸித்தம். பலன் அதுதான் என்று ஏற்படவேணும். அதற்காக “ப்ரதிதிஷ்டந்தி” என்கிற சொல்லையும் 'உபயந்தி' என்கிற சொல்லையும் கொஞ்சம் மாற்றவேண்டியது.—'ப்ரதிதிஷ்டாகாமா:, உபேயு:' என்று. அப்போது வாக்யத்தின்-பொருள் எவர்கள் நிலையாயிருப்பதை ஆசைப்படுகிறார்களோ, அவர்கள் இந்த ஸத்திரத்தைச் செய்யவேண்டியது' என்று. (சா-383-384)

(150) “ஸௌர்யம் சரும் நிர்வபேத் ப்ரஹ்மவர்சஸகாம:” என்று ஒரு காம்யேஷ்டி வாக்கியம். ப்ரம்மவர்ச்சஸத்தை ஆசைப்படுகிறவன் ஸூரிய தேவதையின் ப்ரியார்த்தத்துக்காக நிர்வாபம் செய்யவேண்டியது என்று அதின் பொருள். ப்ரம்மவர்ச்சஸம் என்பது வேதத்தை படிப்பதால் உண்டாகும் காந்தி. சொன்ன பலனைத்தவிர, ஸ்வர்க்கத்தையும் கூடப் பலனாகக் கொள்ளலாமா? அதை எல்லாரும் தேடுவதால், எல்லாரும் இந்த இஷ்டியைச் செய்வார்களேயென்றால், பதில்—சொன்ன பலனாலேயே விதி

வாக்யத்தின் தேட்டம் போய்விட்டது. வேறு பலனைக் கொள்ளவேண்டிய தேவை இல்லை. ஆகையால் வாக்யத்தில் சொல்லப்பட்டதே பலன். (அதி-9)

வாக்யத்தில் சொன்ன பலனை அந்வாசயமாக அர்த்தம் பண்ணவேணும். மரத்தைக் கொண்டுவருவதில் கிளையும் கூடவரும். அதுபோல இந்த யாகத்தைப் பண்ணி ஸ்வர்க்கத்தை ஸம்பாதி. ப்ரம்மவர்ச்சஸமும் வரும் என்று பூர்வபக்ஷம். ஸித்தாந்தம்:-ஒரு பதத்தால் பொதுவாய் ஒரு விஷயம் தெரிகிற இன்னொரு பதத்துடன் சேர்ந்து அது இன்னதென்று ஏற்படுகிறது. ஆகையால் “ஸௌர்யம் சரும் நிர்வபேத்” என்பது பொதுவாயிருந்தாலும், “ப்ரஹ்மவர்சஸம்” என்கிற சொல்லுடன் சேர்ந்தபோது அதுதான் பலன் என்று ஏற்படும். நீர் சொன்னபடியிருந்தால், அந்யோந்யாச்ரயம் என்கிற குற்றம் வரும். ஸ்வர்க்கம் பலன் என்று முடிவானால், அந்வாசயம் என்று சொல்லலாம். அது நிச்சயமானால் வேறு பலனைத் தேடவேண்டும். (சா-384)

(151) “ஏகஸ்மை வா அந்யா இஷ்டய: காமாய ஆஹ்ரியந்தே, ஸர்வேப்யோ தர்சபூர்ணமாஸௌ” என்று ஒரு வாக்யம். இதன் பொருள்—அந்தந்த பலனுக்காக வெவ்வேறு இஷ்டிகள் செய்யப்படுகின்றன. எல்லா பலன்களுக்காகத் தர்சமும் பூர்ணமாஸமும் என்று. இந்த வாக்யத்தாலே, தர்சபூர்ண மாஸங்களுக்குப் பலன் விதிக்கப்படுகிறதா? அல்லது அது அநுவாதமா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—அநுவாதம்:—விதியைக் காட்டும் லிங் ப்ரத்யயமும் பாவனையைச் சொல்லும் ஆக்யாதமும் இங்கே இல்லையே. ஒரு கேள்வி—'ஸர்வேப்ய:' என்கிற சொல்லில் நாலாவது விபக்தியாலே எல்லா பலன்களும் ஸாத்தியம் என்றும், தர்சபூர்ணமாஸம் ஸாதநம் என்றும் ஏற்படவில்லையா என்று. பதில்—காரகங்களுக்கு ஒன்றோடு ஒன்றுக்கு ஸம்பந்தம் க்ரியையினால் ஏற்படவேண்டும். க்ரியையோ இங்கே இல்லை. நான்காவது விபக்தி ஸம்பந்தத்தைச் சொல்லுகிறது. தர்ச-பூர்ண மாஸங்களுக்கும் பலன்களுக்கும் ஸம்பந்தம் எப்படியென்றால், பதில் - ஸாமிதேநீ மந்திரங்கள் அவைகளுக்கு அங்கம். மாடு கறப்பது தர்சத்துக்கு அங்கம்; அதற்கு வத்ஸாபாகரணம்; ஆகையால் அது உபாங்கம்; பலாசகிளையைக் கொண்டு வருவதற்கும்; ஸாமிதேநீ மந்திரங்களுக்கும் பலன்கள் சொல்லியிருப்பதை நோக்கி, “ஸர்வேப்ய:” என்று சொல்லியிருக்கிறது. அங்கங்களின் பலன்களுக்கு அங்கியுடன் ஸம்பந்தம் அவைகளின் வழியாய் வரலாம். வாஜபேய யாகத்துக்கு யூபத்தின் ஸம்பந்தம் பசுயாகத்தின் வழியாய் வரும் என்று கீழே சொல்லப்பட்டது. ஆகையால் ஏற்கனவே ஏற்பட்டதைச் சொல்லுவதால், விசாரிக்கும் வாக்யம் அநுவாதம். (சா-385)

மீமாம்ஸா ஸங்க்ரஹத்தின்பலன் அங்கம்
உண்டு பண்ணுவது
(திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. சே ராமாநுஜரும் (அதற்காக இருப்
(ஸம்-23 ஸஞ் 12, பக்கம் 756 மொஸங்களால் எல்லா பலன்

களும் ... விஷயம் வேறு விதியால் கிடைக்காமையால் இது விதி. விதிவாக்யமும் பாவனையைச் சொல்லும் பதமும் இல்லையே யென்றால், 'ஸர்வேப்ய' என்கிற பதத்தை அத்யாஹாரம் செய்யவேண்டியது. வேறு வழியாயும் ஸமாதானம் சொல்லலாம். தர்சபூர்ணமாஸ இஷ்டிகளை முதல் முதல் விதிக்கும் வாக்யத்தில் விதியும் பாவனையும் இருக்கின்றன. அவைகளை வைத்துக்கொண்டு தாதர்த்யத்தைச் சொல்லும் நாலாவது விபக்தியால் அவைகளுக்கு பலன்களின் ஸம்பந்தம் காட்டப்படுகிறது. ஆகையால் வாக்யம் பலன்களை விதிக்கிறது. அநுவாதம் அன்று. (அதி - 10)

(152) கீழே தர்சபூர்ணமாஸ இஷ்டிகளால் எல்லா பலன்களும் கிடைக்கும் என்று தீர்மானிக்கப்பட்டது. அவைகளின் ஒரே பிரயோகத்தால் பலன்களின் எல்லாக் காமங்களும் தீருமோ என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம் :—தீரும். எல்லாக் காமங்கள் தீருவதற்கு நிமித்தம் ஒன்றே. அதாவது சொன்ன இஷ்டிகள். நிமித்தம் ஒன்றாயிருந்தால், அதன காரியங்கள் வெவ்வேறாக இருக்கக்கூடாது.

ஸித்தாந்தம்:—இஷ்டிகளை நிமித்தமாக வைத்துக்கொண்டு காமங்கள் விதிக்கப்படவில்லை. ஏனென்றால், அவைகள் செய்யக்கூடியவைகள் அன்று. ஒருவனுக்கு அவைகள் தானே உண்டாகும். அவைகளை உத்தேசித்து அவைகளை அடைவதற்கு ஸாதகமாக இஷ்டிகள் விதிக்கப்படுகின்றன.

(2) கேள்வி:—“ஸர்வேப்ய:” என்கிற ஒரே சொல்லாலே ஸ்வர்க்கம் பசு முதலான எல்லா பலன்களும் உத்தேச்யமாகச் சொல்லப்படுவதால், அவைகள் சேர்ந்தே கிடைக்கும் என்று தோன்றவில்லையா என்று. பதில்—தோன்றினாலும் சேர்க்கையைச் சொல்லுவதில் கருத்து இல்லை.

(3) மறுபடியும் கேள்வி—சொல்லினால் சேர்க்கை தோன்றாவிட்டாலும் ஒரு கர்மத்தின் பலன்களாகையால் அர்த்தத்தால் சேர்க்கை தோன்றுகிறதே என்று. பதில் – ஸ்வர்க்கம் முதலான பலன்களுக்கு ஒன்றுக்கு இன்னொன்றின் தேவையில்லை. ஆகையால் சேர்க்கை ஏற்படாது. ஆகையால் ஒவ்வொரு பலனுக்கும் ஸாதகமாக கர்மம் விதிக்கப்படுகிறது. ஆகையாலேதான் “ஸர்வேப்ய:” என்கிற பஹுவசநம் ஸரியானது. அப்படி

இல்லாமல் எல்லா பலன்களும் சேர்ந்து வருவதானால் சேர்ந்திருப்பது ஒரே பலனானதால் ஸர்வ (எல்லாம்) என்கிற சொல் கூடாது. மேலும், மழை பெய்யவேணுமானால், அப்போதப்போது காரீரி இஷ்டியைச் செய்கிறார்கள். ஒரே பலனுக்கு வெவ்வேறு பிரயோகம் வேண்டுமானால் வெவ்வேறு பலனுக்கு வெவ்வேறு பிரயோகம் வேண்டுமென்று சொல்லவேணுமோ? (அதி-11)

மூன்றாவது பாதம் முற்றிற்று.

நாலாவது அத்யாயம்.

நான்காவது பாதம்.

153. இந்தப் பாதத்தில் பலனுள்ள கர்மம அங்கி என்றும், பலனில்லாதது அங்கமென்றும், சொல்லப்படுகிறது.

“ராஜா ஸ்வாராஜ்யகாமோ ராஜஸூயேந யஜேத” என்று ஒரு வாக்யம். 'ராஜஸூய' என்கிற சொல்லின் பொருள் ப்ரஸித்தமல்லாதபடியாலே அது கீழே 35 வது பாராவில் சொன்னபடி யாகத்தின் பெயர். அப்போது வாக்யத்தின் பொருள் – ராஜா ராஜஸூயம் என்கிற யாகங்களாலே ஸ்வாராஜ்யத்தை உண்டுபண்ணவேண்டியது என்று. இந்த வாக்யம் இருக்கும் இடத்தில் படிக்கப்பட்டு ராஜாவினால் செய்யப்படும் எல்லா யாகங்களும் இஷ்டிகளோ, பசு யாகமோ, ஸோமயாகங்களோ பலனைக் கொடுக்கின்றன. ஆகையால் அவைகள் அங்கி. அதே இடத்தில் படிக்கப்பட்டிருக்கிற யாகமல்லாத வியாபாரங்கள்–சொக்கட்டான் ஆடுகிறது, ராஜந்யனை ஜயிப்பது–அங்கங்கள். அவைகளால் பலன் கிடைக்காது. (அதி-1)

(154) (1) “தர்சபூர்ணமாஸாப்யாம் ஸ்வர்க்காமோ யஜேத” என்கிற இடத்தில் பலனைக் கொடுப்பது தர்சமும் பூர்ணமாஸமும். இந்த இரண்டு சொற்களும் காலத்தைச் சொல்லிக்கொண்டு, கால ஸம்பந்தத்துடன் விதிக்கப்பட்ட அக்னி தேவதையின் யாகம் முதலான ஆறு யாகங்களுக்குத்தான் பெயர்கள். ஆகையால் அவைகளுக்குத்தான் பலத்துடன் ஸம்பந்தம். அவைகள் அங்கி. அதே இடத்தில் படித்திருக்கும் ஆகார ஹோமங்கள், ப்ரயாஜங்கள் முதலானவைகளுக்குப் பலன் இல்லை. அவைகள் மற்றவைகளுக்கு அங்கங்கள். (அதி-11.)

(2) “ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்காமோ யஜேத” என்கிற இடத்தில் பலன் கொடுப்பது ஜ்யோதிஷ்டோமம். ஜ்யோதிஸ் என்பது த்ரிவ்ருத் (9)

பஞ்சதச (15) ஸப்ததச (17) ஏகவிம்ச (21) என்கிற ஸ்தோமங்கள் அவைகளுள்ளது ஜ்யோதிஷ்டோமம். அவைகள் ஸோமயாகங்கள்தான். ஆகையால் அவைகள் அங்கி. தீக்ஷணீயேஷ்டி முதலானவைகளுக்குப் பலனில்லை. அவைகள் அங்கங்கள். (அதி-12)

(155) ஸ்ருதிதோஷாத் ப்ரகரணத்தில் ஒரு வாக்யம் – "யாம் வை காஞ்சனாத்வர்யுஶ்ச யஜமானஶ்ச தேவதாமந்தரித: தஸ்யா ஆவ்ருஶ்ச்யேதே யத்ப்ராஜாபத்யம் ததிக்ரஹம் க்ருஹ்ணாதி - ஸர்வாப்ய ஏவ தேவதாப்யோ நிஹ்நுவாதே" என்று. இதின் பொருள் – அத்வர்யுவும், யஜமானனும் எந்த தேவதையை மறந்துபோகிறார்களோ அதற்கு துரோஹம் செய்கிறார்கள். ப்ராஜாபதி தேவதையின் ததிக்ரஹத்தை நிரப்பினால் அந்த தேவதையின் கோபம் போய்விடும்–என்று. இந்த ததிக்ரஹம் நித்யம். எப்படியென்றால் "ஜ்யேஷ்டோ வா ஏஷ க்ரஹாணாம்" என்று ஒரு வாக்யம். ஸோமக்ரஹங்களுக்குள்ளே இது சிலாக்கியமானது என்று அதின் பொருள். அது நித்யமாயிருந்தால் இப்படிச் சொல்லுவது பொருத்தமாயிருக்கும். ஒருவேளை செய்து ஒருவேளை செய்யாவிட்டால் அதை ச்லாக்யம் என்று சொல்லக்கூடாது. அது நித்யமாயிருப்பது மன்றியில் நைமித்திகமாகவும் இருக்கிறதா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—அது நைமித்திகமாகவும் இருக்கிறது. தேவதையை மறந்து போவதால், அதற்கு கோபம் வரும் என்று சொல்லி ததிக்ரஹத்தினாலே கோபம் போய்விடும் என்று சொல்லியிருக்கிறதே. தேவதையை மறந்து போவது நிமித்தம். அது வந்தபோது செய்யப்படும் ததிக்ரஹத்தின் ததிக்ரஹணம் நைமித்திகம்.

ஸித்தாந்தம்:—இந்த முடிவு பிசகு. தேவதையை மறந்து போவது நிமித்தம் அன்று. நிமித்தமாயிருப்பதற்கு மூன்று அடையாளங்கள் உண்டு. அவைகளில் ஒன்றும் இங்கே இல்லை. அவைகளாவன: (1) யதி என்கிற சொல். உதாரணம் - யதி ராதந்தரஸாமா ஸோம: ஸ்யாத் ஐந்த்ரவாயவாக்ரான் க்ரஹான் க்ருஹ்ணீயாத்" இதின் பொருள் - ஸோமயாகத்தில் ரதந்தரம் என்னும் ஸாமம் 7-வது ஸ்தோத்ரமானால் ஸோமரஸத்தை பாத்ரங்களில் பிடிக்கும்போது, ஐந்த்ரவாயவத்தை முதலில் பிடிக்கவேண்டியது - என்று. இதில் 'யதி' என்கிற சொல் இருக்கிறது. (2) ஏழாம் விபக்தி. உதாரணம்– 'பின்னே ஜுஹோதி' இதின் பொருள் - கபாலங்கள் உடைந்துபோகையில் ஹோமம் செய்கிறது என்று. இங்கே பின்னே என்பது ஏழாவது விபக்தி. (3) 'யஶ்' என்கிற சொல்லும், ஒரு வியாபாரத்தைச் செய்கிறவனைச் சொல்லுகிற சொல்லும் ஓரே விபக்தியுள்ள

யிருந்து, ஒன்றையே காட்டவேண்டும். உதாரணம்–யோ வை ஸம்வத்ஸரம் உக்யமப்ருத்வா அக்னிம் சினுதே" இதின்பொருள்–எவன் ஒருவருஷம் உக்யம் என்கிற அக்னியை தரிக்காமல் அக்நிசயநம் செய்கிறானோ–என்று. இங்கே ய: என்கிற சொல் இருக்கிறது. இவ்விதமான அடையாளங்களில் ஒன்றுமில்லாமையால், நிமித்தமே இல்லை. ததிக்ரஹம் எப்படி நைமித்திகமாகும். (அதி-5)

நாலாவது பாதம் முற்றிற்று.

நான்காவது அத்யாயம் முற்றிற்று.

ஐந்தாவது அத்யாயம்

(156) இரண்டாவது அத்யாயத்தில் கர்மங்களின் பேதம் விசாரிக்கப்பட்டது. அதினால் அவைகளைத் தனித்தனியாய் செய்யவேண்டியது என்று தெரிந்துகொள்ளப்பட்டது. மூன்றாவதில் எது எதற்கு அங்கம் என்று விசாரித்தது. இந்திரன் விஷயமான மந்திரத்தைக்கொண்டு அக்னியின் உபஸ்தானம் செய்யவேண்டியது என்றும், இந்திரனை உபஸ்தானம் செய்யக்கூடாது என்றும் இப்படிச் செய்யவேண்டியது தீர்மானிக்கப்பட்டது. நாலாவதில் எது ப்ரயோஜகம் என்று விசாரித்து, அதிலும் செய்யவேண்டியது இன்னதென்று முடிவு செய்யப்பட்டது. இப்படி மூன்று அத்யாயங்களால் செய்யவேண்டியது இன்னதென்று தெரிந்தது. அவைகளை எந்தக் கிரமப்படி (வரிசையாய்) செய்கிறது என்று ஒரு கேள்வி உண்டாகும். அது இந்த அத்தியாயத்தில் விசரிக்கப்படுகிறது.

1–வதுபாதம்.

(157) எப்படி கர்மங்களைச் செய்வதற்கு வேதம் ப்ரமாணமோ, அப்படியே அவைகளைச் செய்யும் கிரமவிஷயத்திலும் அது பிரமாணம். கிரமமானது இன்னதுதான், இன்னது அன்று என்று இருப்பதால் அதை விசாரிக்கலாம்.

(2) கிரமம் கிரியையன்றே. அதின் ஸ்வரூபத்தை விதிக்க முடியாதே என்றால், பதில் – "தத்னா ஜுஹோதி" என்று ததி (தயிர்) திரவியத்தை கிரியைக்கு விசேஷணமாக விதிக்கிறது. அப்படியே 'இந்த க்ரமத்துடன் செய்யவேண்டியது' என்று கிரியைக்கு விசேஷணமாகக் கிரமத்தை விதிக்கலாம்.

(158) கிரமத்தை விதிக்கிற பிரமாணங்கள் ஆறு. அவைகளில் ச்ருதி க்ரமத்துக்கு உதாரணம் — ஸத்ரரூபமான த்வாதசாஹவிஷயமாய் ஒரு வாக்யம் "ஸ்வயம் பூர்வம் க்ருஹபதிம் தீக்ஷயித்வா ப்ரஹ்மாணம் தீக்ஷயதி — தத உத்காதாரம் — ததோ ஹோதாரம்" என்று. ஸத்ரத்தில் பதினேழுபேர்கள் யஜமானன்கள். அவர்களில் ஒருவன் க்ருஹபதி — அக்னிஷ்டோமத்தில் யஜமானன் ஸ்தானத்திலிருக்கிறான். மற்ற பதினறு பேர்களும் பதினறு ருத்விக்குகளின் வேலையைச் செய்கிறார்கள். 'தீக்ஷயதி' என்கிற ச்ருதி தீக்ஷையை விதிக்கிறது என்று எண்ணலாம். அது ஸரியன்று. எல்லாரும் யஜமானன்கள். இந்த யாகத்தை அக்னிஷ்டோமத்தைப்போல் செய்ய வேண்டியதாகையால், தீக்ஷையைச் செய்விப்பது அதினலேயே ஏற்படும். அதை விதிக்கவேண்டாம். ஆகையால் இப்படி ஏற்படும் தீக்ஷையைச் சொல்லி, கிரமம் விதிக்கப்படுகிறது.

2. ஒரு கேள்வி—க்ரமத்தைச் சொல்லும் சொல் இல்லையே. பதில் — வாக்யத்தாலே அது தெரிகிறது. இப்படித் தெரியும் கிரமமானது செய்யப்படுவதாய் வேறு பிரமாணத்தால் ஏற்படாமையால், இங்கே விதிக்கப்படுகிறது.

3. இன்னுமொரு கேள்வி — ஒரே பேர்வழி அநேக வியாபாரங்களை ஒரு காலத்தில் செய்ய முடியாமையால் கிரமம்தானே ஏற்படுமே? அதை விதிப்பானேன் — என்று. பதில் — இன்ன வரிசையாய்ச் செய்கிறது என்று ஏற்படாதே. வேறு வரிசையாயும் செய்யலாமே. ஆகையால் இப்படித்தான் செய்ய வேண்டுமென்று காட்டுவதற்காக இந்த விதி. (அதி–1)

(159) அர்த்த க்ரமத்துக்கு உதாரணம் — 'அக்னிஹோத்ரம் ஜுஹோதி, யவாகூம் பசதி' என்று ஒரு வாக்யம். இது பாடக்ரமம். இப்படியே வேதம் படிக்கப்படுகிறது. இந்த வாக்யத்தை நினைத்துக்கொண்டு வியாபாரத்தைச் செய்யும்போது, முதல் வியாபாரம் ஹோமமாயும் மேல் வியாபாரம் யவாகூவை (கஞ்சியை) பாகம் பண்ணுவதாகவும் ஏற்படும். ஆனல் த்ரவ்யமில்லாமல், ஹோமம் செய்யமுடியாது. த்ரவ்யம் உண்டாவதற்காக பாகத்தை முதலில் செய்வது அவசியம். ஆகையால் பாடத்தால் ஏற்பட்ட க்ரமத்தைத் தள்ளிவிட்டு, அர்த்தத்தால் ஏற்பட்ட க்ரமத்தை ஒப்புக்கொள்ளவேண்டியது.

(160) பாடக்ரமத்துக்கு உதாரணம்— "ஸமிதோ யஜதி, தனூநபாதம் யஜதி" என்று ஒரு வாக்யம். இவைகள் வெவ்வேறு கர்மங்கள் என்று முன்பே நிர்மாணிக்கப்பட்டது. இங்கே 157 வது பாராவில் காட்டப்பட்ட

வாக்யத்தில் போல, 'த்வா' என்கிற ப்ரத்யயம் இல்லை. 'தத:' என்று சொல்லப்பட்ட ஐந்தாவது விபக்தியுமில்லை. முன் பாராவில் காட்டினபடி இரண்டாவது யாகத்தை முன்னலே செய்யவேண்டியது என்று சொல்லும் யுக்தியும் இல்லை. ஆனபோதிலும் வாக்யத்தில் படித்திருப்பதினல் ஏற்படும் கிரமத்துக்குப் பாதகம் ஒன்றும் இல்லை. இதை ஒப்புக்கொள்ளவேண்டியது தான். (அதி–4)

(161) ப்ரவ்ருத்திக்ரமத்துக்கு உதாரணம்:—வாஜபேயஸோம யாகத்தில் பதினேழு ப்ராஜாபத்ய தேவதையின் பசுக்களை உபாகரணம் செய்ய வேண்டியது. அதில் இதை முதலில் உபாகரணம் செய்கிறது. இதைக் கடைசியில் என்று சொல்லுகிற சாஸ்திரம் இல்லை. இஷ்டமான வரிசைப்படி அதைச் செய்யலாம். அப்படி உபாகரணம் செய்த பிறகு யூபத்தில் நியோஜநம் என்கிற இரண்டாவது ஸம்ஸ்காரத்தைச் செய்யவேண்டும். அதையும் இஷ்டமான வரிசையாய்ச் செய்யலாமா? என்று ஸந்தேஹம்.

ஸித்தாந்தம்:—கூடாது. உபாகரணம் எந்த வரிசையாய்ச் செய்யப்பட்டதோ, அந்த வரிசையாயே நியோஜநத்தையும் மற்ற ஸம்ஸ்காரங்களையும் செய்ய வேண்டியது. ச்ருதியும், அர்த்தமும், பாடமும் எப்படி க்ரமத்தை இன்னது தான் என்று காட்டுகிறதோ, அப்படியே முதல் ப்ரவ்ருத்தியும் க்ரமத்தை இன்னதுதான் என்று காட்டுகிறது. முதல் ப்ரவ்ருத்தியால் ஏற்பட்ட க்ரமம் செய்தவனுடைய புத்தியில் இருக்கிறது. அதைவிட்டு விடுவதற்குக் காரணம் இல்லை. அந்த க்ரமப்படி நியோஜநம் செய்தால் முதல் பசுவின் உபாகரணத்துக்கும் நியோஜநத்துக்கும் நடுவில் மற்ற பதினறு பசுக்களின் உபாகரணம் வருகிறது. "[illegible]" என்கிற விதி அதற்கு உத்தரவு கொடுக்கிறது. இந்த க்ரமத்தை விட்டு மற்ற பசுக்களுக்கு நியோஜனம் செய்வதானல், அப்போது முதல் பசுவின் உபாகரணத்துக்கும் நியோஜநத்துக்கும் நடுவில் முப்பத்திரண்டு வியாபாரங்கள் வரும். இதற்கு சாஸ்திரம் இடம் கொடுக்கவில்லை. ஆகையால் ப்ரவ்ருத்தியாலும் க்ரமம் ஏற்படுகிறது. (அதி–5).

(162) ஸ்தாந க்ரமத்துக்கு உதாரணம்—"ஸாத்யஸ்க்ரே" என்கிற ஸோமயாகத்தில் ஒரேநாளில் எல்லாவியாபாரங்களையும் செய்யவேண்டியது. ப்ரக்ருதியான அக்னிஷ்டோமத்தில் மூன்று பசுயாகங்கள் செய்யப்படுகின்றன - ஸோமயாகங்கள் ஆகும் தினத்தில் ஸவநீயபசு; அதற்கு முதல் நாள் அக்னீஷோமீயபசு; அவப்ருதத்துக்கு மேலே அநூபந்த்யா பசு. இந்த விக்ருதியான யாகத்தில் அவைகளை ஒரே காலத்தில் சேர்த்து உபாகரணம் பண்ணும்படி "ஸஹ பசூநாலபதே" என்று விதிவாக்யம்

சொல்லுகிறது. இந்த வ்யாபாரத்தை ஸவநீயபசுவின் உபாகரணத்தைச் செய்யும் காலத்தில் செய்யவேண்டியது. இதை எந்தக் கிரமப்படி செய்கிறது என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—ப்ரகிருதியான அக்னிஷ்டோமத்தில் எந்த வரிசை ஏற்பட்டிருக்கிறதோ, அந்த வரிசைப்படி.

ஸித்தாந்தம்:—இது கூடாது. ஸவநீயபசுவுக்கு இடம் ஆச்விந க்ரஹத்தைப் பாத்திரத்தில் பிடித்தபிறகு. இது செய்தவுடன் ஸவநீய பசுவின் நினைவு அத்வர்யுவுக்கு வரும். அதனிடத்திலேயே அதைச் செய்யவேண்டியது. அதாவது—முதலில். மற்ற இரண்டும் தங்களுடைய இடங்களை இழந்துவிட்டன. அவைகளைப் பின்னாலே செய்யவேண்டியது. அவைகளுக்குள்ளே வரிசை ப்ரகிருதி யாகத்திலேபோல. (அதி-6)

(163) முக்ய க்ரமத்துக்கு உதாரணம் – சித்ராயாகம் என்கிற விக்ருதி இஷ்டியில் ஏழு யாகங்கள் விதிக்கப்படுகின்றன. அவைகளில் நாலாவதும் ஐந்தாவதும் "ஸாரஸ்வதௌ" என்கிற தேவதையின் யாகங்கள். அவர்கள் ஸரஸ்வதீ என்கிற பெண் தேவதையும் ஸரஸ்வான் என்கிற ஆண் தேவதையும். இந்த சொல்லாலே எதின் யாகம் முன்னாலே; எதின் யாகம் பின்னாலே என்று தெரியவில்லை. நிர்வாபம் முதலான வியாபாரங்களை எந்த வரிசையாய்ச் செய்கிறது என்று ஸந்தேஹம்.

ஸித்தாந்தம்:—இந்த யாகங்களைச் செய்யும்போது ஹோதா சொல்ல வேண்டிய மந்த்ரங்களைச் சொல்லுமிடத்தில் பெண் தேவதையின் யாகத்துக்கு வேண்டிய மந்திரங்களை முன்னாலேயும் ஆண் தேவதையின் யாகத்துக்கு வேண்டியவைகளைப் பின்னாலேயும் படித்திருக்கிறது. ஆகையால் பெண்தேவதையின் யாகத்தை முன்னாலே செய்யவேண்டியது. நிர்வாபம் முதலான வியாபாரங்களை முக்கியமான யாகத்துக்காகச் செய்யப்படுவதால், அந்த வரிசையே நிர்வாபம் முதலானவைகளையும் செய்யவேண்டியது. (அதி - 7)

முக்ய க்ரமத்தில் அங்கங்கள் முக்யத்துக்குக் கிட்ட இருப்பது காரணம்; ப்ரவிருத்தி க்ரமத்தில் அங்கங்களுக்குள்ளே ஒன்று மற்றொன்றுக்குக் கிட்ட இருப்பது. (சாஸ் - 412)

(164) கீழ்ச் சொன்ன க்ரமத்துக்கு அபவாதம் (விலக்குகள்) பூர்ணமாஸ இஷ்டியில் இரண்டாவது மூன்றுவது யாகங்கள் உபாம்சுயாஜமும், அக்நீஷோமீய யாகமும். இரண்டாவதுக்கு த்ரவ்யம் நெய். அதின் தர்மம்

உத்பவநம் முதலானவைகள். மூன்றுவதற்கு த்ரவ்யம் புரோடாசம். அதின் தர்மங்கள் நிர்வாபம் அவஹநநம் முதலானவைகள். கீழே சொன்ன நியாயப்படி நெய்யின் தர்மங்களை முன்னாலே செய்யவேண்டியது என்று ஏற்படும். ஆனால் நிர்வாபம் முதலானவைகளை முன்னாலேயும் நெய்யின் தர்மங்களைப் பின்னாலேயும் வேதம் படித்திருக்கிறது. இப்படி பாடக்ரமத்தினால் ஏற்பட்டது முக்ய க்ரமத்தைத் தள்ளிவிடுகிறது. பாட க்ரமந்தான் வேதத்தின் சொற்களாலே சீக்கிரம் தோன்றுகிறது. முக்ய க்ரமமானது இப்படியிருப்பதுதான் ஸரியானது என்று யோஜனையால் ஏற்படவேண்டியது. ஆகையால் புரோடாசத்துக்கு வேண்டிய வியாபாரங்களை முதலில் செய்யவேண்டும். (அதி - 8)

(165) பாடக்ரமத்தில் மந்த்ரபாடம் ப்ரபலம். பூர்ணமாஸ இஷ்டியில் அக்நீஷோமீயயாகம் யஜுர் வேதத்தில் 3 வது காண்டம், 5 வது ப்ரச்நம், 2 வது அநுவாகத்தில் சொல்லப் படுகிறது. அக்னிதேவதையின் யாகம் அதேகாண்டம். 6 - வது ப்ரச்நம் 3 - வது அநுவாகத்தில் ஒரு வியாபாரத்தை விதித்தபிறகு தானே செய்யவேண்டும் என்னும் காரணத்தை கொண்டு அக்நீஷோமீயயாகத்தைப் முன்னாலேயும் ஆக்நேய யாகத்தைப் பின்னாலேயும் செய்யலாமா என்று ஸந்தேஹம்.

ஸித்தாந்தம்:—கூடாது. மந்த்ரகாண்டத்தில் ஆக்நேய யாகத்தின் மந்த்ரங்களை முன்னாலும் அக்நீஷோமீய யாகத்தின் மந்த்ரங்களைப் பின்னாலேயும் படித்திருக்கிறது. மந்த்ரகாண்டத்தின் க்ரமம் ப்ரபலம். மந்திரத்தின் அர்த்தத்தை நினைத்துக்கொண்டு, வியாபாரங்களைச் செய்ய வேண்டும். ப்ராம்ஹணத்தின் வேலை இது வரையில் ஏற்படாத கர்மங்களை விதிப்பது. அத்துடன் அது செய்யவேண்டிய வேலை முடிந்து விட்டது. ஆகையால் ஆக்நேயயாகத்தை முன்னாலே செய்யவேண்டியது. (அதி—8)

(166) உத்கர்ஷ அபகர்ஷங்கள் :— ப்ரகிருதியான தர்ச இஷ்டியில் ஹவிஸ்ஸை வேதியில் வைத்த பிறகு ப்ரயாஜஹோமங்கள் செய்யப்படுகின்றன. அக்நீஷோமீய பசு யாகத்தில் "திஷ்டந்தம் பசும் ப்ரயஜந்தி" என்று ஒரு வாக்யம் இருக்கிறது. அதின் பொருள் – பசு இருக்கும்போதே ப்ரயாஜங்களைச் செய்கிறது – என்று இந்த யாகத்தைத் தர்சஇஷ்டியைப்போல செய்யவேண்டியதாகையால், பசுவின் ஸம்ஜ்ஞபநம் ஆகி, ஹவிஸ்ஸைக் கொண்டுவந்து வைத்த பிறகுதான் ப்ரயாஜஹோமங்களைச் செய்யவேண்டியது. ஆனால் சொன்ன வாக்யத்தால் அந்தக் கிரமம் தள்ளப்பட்டு, ப்ரயாஜஹோமங்கள் தங்களிடத்தை விட்டுக் கீழே கொண்டுபோகப்படுகின்றன. இப்படிச் செய்வதற்கு அபகர்ஷம் என்று பெயர். இப்படி அபகர்

ஷத்தைச் செய்யும்போது, ப்ரயாஜஹோமங்களை மாத்ரம் விடு கொண்டு போகிறதா? அல்லது அவைகளுக்கு முன்னாலே இருக்கும் அங்கங்களையும் கூடவா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—ப்ரயாஜங்களை மாத்திரம். இதைத்தான் ச்ருதி சொல்லுகிறது. சொன்னபடியே செய்யவேண்டியது. ப்ரயாஜங்களுக்கு முன்னாலே ஸாமிதேநீ மந்த்ரங்களைப் படிக்கிறது. ஆகாரஹோமங்கள் செய்கிறது. இவைகளையும் விடு கொண்டுபோனால் முக்கியமான யாகங்களைவிட்டு மிகவும் விலகிப்போகும். அவைகளைச் செய்யும் காலத்தில் அன்றோ இவைகளைச் செய்யவேண்டியது. அது முடியாமல் போய்விடுமே.

ஸ்ரீ:

ஸ்ரீ க்ருஷ்ண தாதார்ய மஹாதேசிக சரிதம்.

(ஸ்ரீ. உ.ப. வித்வான். ஐயா. க்ருஷ்ண தாதாசார்யர்.)

வ்யாகரண சாஸ்த்ரம் ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியிலே அதிகரித்து ப்ரஸித்த பண்டிதர்களாயிருப்பார் பலருண்டு. அவர்களில் பிள்ளைப் பாக்கம் கோபாலாசாரியார். அஹோபில மடம் - அழகிய சிங்கராஸ்தானத்தில் 37-வது பட்டத்திலே ஆஸ்தாந நிர்வாஹகராபெழுந்தருளியிருந்தவர். இந்த ஸ்வாமி ந்யாய ரீதியில் பரிஷ்காரத்துடனே வ்யாகரணம் மஹாபாஷ்யார்த்தம் அதிகரித்து பண்டிதராய் மஹாவாவதூகராயிருந்தாரென்று கொண்டு வசப்ரதி ராஜ ஸதஸ்ஸிலே மைசூர் காசி முதலான விடங்களிலிருந்து வந்த வ்யாகரண பண்டிதாள் அநேக விதமாக வாதம் செய்து சலாகா பரீக்ஷையும் பண்ணி வ்யாகரணத்தில் ஸர்வதோ முகமான இவர் ஸாமர்த்யத்துக்குப் போரப் ப்ரியப்பட்டு வையாகரண பூஷணம் என்று பிருதம் அளித்தார்கள். மத்வ க்ருஷ்ணாசார்யரென்பவர் சிதம்பரமென்கிற தில்லைத் திருச்சித்ரகூடத்திலும், ஸ்ரீரங்கத்திலும் மற்று மநேக இடங்களிலும் வ்யாகரண பாடப்ரவசநம் செய்துவந்தார். ஸ்ரீ முஷ்ணம் பூவராஹாசாரியர் ஸ்ரீ முஷ்ணத்திலே தானே வ்யாகரண பாடம் சொல்லிவந்தார். பெரியகாஞ்சீபுரத்திலே உபநிஷத் ப்ரஹ்ம மடத்திலே தானே நாராயண சாஸ்த்ரிகள் பாடம் சொல்லிவந்தார். ஸ்ரீ ஸ்வாமி வ்யாகரணத்தி லருளிச்செய்த க்ரந்தங்கள்—ணத்வசந்திரிகை, பாமுக சபேடிகை, மற்றும் சில சப்த விசாரங்கள், நிஷ்ட மஞ்சரீ என்னுமொரு க்ரந்தம், இந்த க்ரந்தம் ஸ்ரீ தேவராஜ ஸ்வாமி தேவஸ்தானம், சடகோப நிலயம் பாடசாலையில் வித்யார்த்திகள் காவ்யங்கள் வாசிக்கும் போது தாது பரிஜ்ஞானத்துக்காக பாடம் நடந்து வந்தது.

அப்படியே ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியில் பூர்வ மீமாம்ஸை அதிகரித்தவர்கள், நாவல்பாக்கம் - சதுர்வேதம் - சதக்ரது ராமாநுஜ தாதாசாரியர், திருமலை நல்லாஞ் சக்ர

வர்த்தி—புஜ்ஜி — ரங்கநாதாசார்யார், புஜ்ஜி—வெங்கட்ட ராகவாசார்யர், பௌண்டரீக புரம்—ரங்கநாதாசார்யர், ஸ்ரீ ஸ்வாமி திருக்குமாரர் கோபால தாதாசார்யர், ஸ்ரீ ஸ்வாமி பெரிய தகப்பனார் குமாரர்கள்—ராகவ தாதாசார்யர், கோபால தாதாசார்யர், பட்டப்பா தாதாசார்யர், மணலாலகட்டை-நாழியூர்-யஜ்ஞ வராஹா சார்யர், ஸ்ரீ தேப்பெருமாள் ஸந்நிதி-ஸ்தாநிக பரிசாரக கைங்கர்யம், மண்டபம்-ஸ்ரீநிவாஸாசார்யர் முதலானோர். இவர்களில் திருக்குமார் முதலானோர் ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியிலேயே சாஸ்த்ர சதுஷ்டயம் அதிகரித்தவர்கள். பட்டப்பா தாதாசார்யர் முதலானோர் தர்க்கத்தில் பஹு க்ரந்தங்கள் ஸ்ரீ ஸ்வாமி திருக்குமாரரிடத்திலும் ப்ராமாண்ய வாதமும் சில வாதக்ரந்தங்களும் ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியிலுமாக வாசித்து ப்ரஸித்தாளாயிருக்குமவர்கள். பௌண்டரீக புரம் - ரங்கநாதாசார்யர் ஸ்வாமி ஸ்ரீ ரங்கத்திலே மீமாம்ஸா ப்ரவசநம் செய்து வந்து விரக்தராய் ஸம்ப்ரதாய ப்ரவசந ச்ரத்தையாலே ஸ்ரீ ரங்கம் ஆண்டவனிடத்திலே க்ரந்தாந்வயம் பெற்று ஸந்யஸித்திருந்த வேளிய நல்லூர் நாராயண ஸ்வாமி ஸந்நிதியிலே துரீயாச்ரம பரிக்ரஹம் பண்ணி ஸ்ரீ ரங்கத்திலே தானே பௌண்டரீக புரம் ஆண்டவன் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன் என்று ப்ரஸித்தராயிருந்தவர். மீமாம்ஸை அதிகரிக்கும் போதே ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியில் காலக்ஷேபங்களில் கூட இருந்து ஸ்ரீ பாஷ்யாதி ஸம்ப்ரதாய க்ரந்தங்களிலே பஹு விஷயங்களிலே சிக்ஷை பெற்று அதிநிபுணராய் விசேஷார்த்தங்களருளிச் செய்யும் போதெல்லாம் 'இது ஸ்ரீ ஸ்வாமி யருளிச் செய்த வர்த்தம்' என்று அருளிச்செய்தே விசேஷ ப்ரதிபத்தியோடே தானே ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்து வந்தார்.

தர்க்க சாஸ்த்ரத்தில் அருளிச்செய்த க்ரந்தங்களெல்லாம் அப்போதைக் கப்போதுள்ள வித்வான்களோடு வாக்யார்த்த ப்ரஸங்கத்திலும் பாடப்ரவசந காலங்களிலுமாகவிருக்கும். ஸ்ரீ பேரருளாளன் மஹோத்ஸவங்களிலே ஸ்ரீ வேதபாராயண கோஷ்டிக்கு நடுநாயகமாக கோஷ்டியின் முன்னேதானே அநுயாத்ரையாக வேதாநுஸந்தானத்தோடு எழுந்தருளும் வழக்கம். க்ரமபாராயணத்திலே த்ருடாப்யாஸம் பண்ணியிருப்பாரும் மயங்கும்படியான கவலைகள் வரும்போது தாம் பின்னோக்கி கடாக்ஷிப்பார். அவர்களும் பாராயணத்திலே ஸாவதாநராய்ப் போருமவர்கள் கொஞ்சம் அநவதாநமுண்டானால் தாமே உச்சைஸ்வரமாக அநுஸந்திப்பர். இப்படிப் பலதடவைகளுண்டு. இந்த ஸ்வாமிக்கு மாத்திரம் ஓரிடத்திலாவது ஒரு காலத்திலாவது அநவதாநத்தைக் காணோமே! இதென்ன பெருமை! என்று கனபாடிகளெல்லாரும் கொண்டாடுவர்கள். இப்படி எழுந்தருளும் காலத்திலே வித்வான்களோடு வாக்யார்த்தம் ப்ரஸக்தமானால் தாம்மாத்திரம் வேதபாராயண கைங்கர்யத்தை நிறுத்தி மற்றவர்களை பண்ணும்படி நியமித்து கோஷ்டிக்கு முன்னேதானே கோஷ்டிக்கு விரோதமன்றியில் ப்ரதிவாதிகளோடு விமர்சநம் பண்ணிக்கொண்டெழுந்தருளுவர். அவகாசம் முண்டாம்போது வேதபாராயணம் முடிந்த வநந்தரம், பெருமாள் ஆஸ்தாநமெழுந்தருளின பிறகு ஸந்நிதி ஸ்ரீ கார்யங்களுக்குத் தகுந்தபடி நியமநம் செய்து வாக்யார்த்தத்துக்கு எழுந்தருளுவது முண்டு. மீமாம்ஸா க்ரந்த ப்ரவசநம் செய்யும்போது மீமாம்ஸையில் ஸகலார்த்தங்களையும் எளிதாக வறிந்துகொள்ளும்படி தத்கால பர்யந்தமாக ஒரு க்ரந்தமில்லை என்று கொண்டு ஸுகபோதார்த்தமாக பாட்டஸாரமென்று ஒரு க்ரந்த மருளிச்செய்து ப்ரவசநம் செய்து வந்தார். தக்ஷிணோத்தர தேசங்களிலுள்ள மீமாம்ஸகரும் மற்றவரும் இந்த க்ரந்தத்தைப்பார்த்து ரொம்ப ஸந்தோஷத்துடனே தாங்களும் வித்யார்த்திகளுக்குப் பாடம் சொல்லிவந்தார்கள்.

பாட்ட தீபிகை என்கிற மீமாம்ஸா க்ரந்தத்துக்கு நவீன தர்க்க ப்ரக்ரியையிலே விஸ்தாரமாக ஒரு டிப்பணியும் அருளிச்செய்தார். இந்த டிப்பணியிலே தானே அநேக விசாரங்களடங்கி யிருக்கையாலே தர்க்க சாஸ்த்ரத்தில் போலே தனியே விசார க்ரந்தங்களென்று கணக்கிட அவகாசமில்லை யாயித்து.

பின் பொருக்கால் திவ்ய தேசங்களை மங்களா சாஸநம் செய்தருள வேணுமென்று திருவுள்ளமாய் ஸ்ரீ மதுராந்தகமெழுந்தருளி, இராமாநுஜன் படித்துறையில் நீராடி நித்ய கர்மாநுஷ்டாநங்களை முடித்துக்கொண்டு க்ரஹஸ்தாச்ரமத்திலே தானே எழுந்தருளியிருக்கும் எம்பெருமானையும் பெரியநம்பிகளையும் திருவடித் தொழுது, இவாள் புருஷகாரமாக அங்குள்ள ஏரிகாத்த ராமன் பெருமாள் தாயார் முதலானோரை மங்களாசாஸனம்செய்து புரட்டாசி மாஸத்திலே ஸ்ரீதேசிகனுத்ஸவத்துக்கு திருவஹீந்திரபுரத்துக்கெழுந்தருளி, கருடநதியிலே நீராடி அநுஷ்டாநங்கள் செய்து ஔஷதாத்ரி சிகரத்திலே எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவனை ஹயக்ரீவ ஸ்தோத்ராநுஸந்தாநத்தாலே மங்களாசாஸனம் செய்து கருடபஞ்சாசதநுஸந்தாநத்தாலே பெரிய திருவடியையும் மங்களாசாஸநம் செய்து ஸ்ரீ தேசிகன் ஹயக்ரீவ மந்த்ர ஜபம் செய்தருளின அச்வத்த வ்ருக்ஷத்தை திருவலமாக எழுந்தருளி, அங்கேதானே ஹயக்ரீவ மந்த்ர ஜபம் செய்தருளி கீழே இறங்கி தெய்வநாயகன், ஹேமாப்ஜநாயகி, ஸ்ரீ தேசிகன் முதலானோரை மங்களாசாஸநம் செய்து அவ்வூரிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களாலே ஸத்க்ருதராய் ஸ்ரீ தேசிகன் உத்ஸவம் 10 நாளும் அங்கேதானே எழுந்தருளியிருந்து அநந்தரம் தில்லை திருச்சித்ரகூடம், காழிச் சீராம விண்ணகரம், முதலாக திருவாங்கூர் திவ்ய தேசங்களையும் திருவாலி திருநகரியில் திருமங்கை மன்னனையும், திருவிந்தளூர், தேரழுந்தூர், சிறுபுலியூர், திருக்கண்ணபுரம், திருநாகை, திருக்கண்ணங்குடி, திருக்கண்ணமங்கை, மன்னார்கோயில், திருச்சேறை, திருநறையூர், திருவிண்ணகர், திருவெள்ளியங்குடி, திருக்குடந்தை, நந்திபுரவிண்ணகரம், ஆதனூர், புள்ளபூதங்குடி கண்ணன் கபிஸ்தலம், திருக்கூடலூர், தஞ்சைமாமணிக்கோயில், திருக்கண்டியூர், திருப்பேர், திருவம்பில், திருவெள்ளறை, திருக்கரம்பனூர், இந்த திவ்யதேசங்களை மங்களாசாஸநம் செய்து கோயிலுக் கெழுந்தருளி வடதிருக்காவிரியில் நீராட்டம் செய்தருளி தம் அநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு மார்கழியீ சுக்ல ஸப்தமியில் தம்மாசார்யன் ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனிடமெழுந்தருள, அந்த ஸ்வாமியும் இவர் வரவறிந்து தேசாந்த்ராகத குணவத் புத்ர ஸம்யோகம்போலே ப்ரீதிப வெள்ளத்திலே மூழ்கிக் கிடக்க ஸ்ரீ ஸ்வாமியும் ‘அபராதஸஹஸ்ரபாஜநம்’ என்கிற ச்லோகத்தை ஹரே’ என்கிற விடத்தில் ‘குரோ’ என்கிற விசேஷத்தோடும் ‘யதி கிஞ்சிதகி க்ராந்தம், என்கிற ச்லோகத்தையும் அநுஸந்தித்து தண்டம் ஸமர்ப்பிக்க அந்த ஸ்வாமியும் லோசநாப்யாம் பிபந்நிவ’ என்கிறபடியே தெகோள் பாராதே பட்டினி கிடந்த கன்றுகளுக்கு நல்ல பாரணையானாப்போல் குளிரக் கடாக்ஷித்து ஸம்ப்ரதாய ப்ரவசந நித்யகர்மாநுஷ்டாந பகவத் பாகவதாராதந யோக க்ஷேமங்கள் விசாரம் பண்ணி கெடும்போது பரஸ்பரம் ஸல்லாபம் பண்ணிக்கொண்டு அந்த ஸ்வாமியோடேதானே பெரிய பெருமாளை மங்களாசாஸந க்ரமத்திலே மங்களாசாஸநம் செய்து ஸ்வாமி நியமநம் கொண்டு ஒரு திருமாளிகையிலே யெழுந்தருளியிருந்து தம்மாசார்ய பாரதந்த்ர்யராய் பெரிய பெருமாளை மங்களாசாஸநம் செய்து வந்தார், பெரிய ஏகாதசியன்று தம்மாசார்யரோடே பரமபத வாசலிலே பெரிய பெருமாள் புறப்பாட்டை மங்களாசாஸநம் பண்ணு

எழுந்தருளும்போது பெருமாளும் அந்த வாசலிலே புறப்பாட்டிலே விஷம கதியிலே எழுந்தருள ஸ்ரீ ஸ்வாமியும் ஸாவதாநமாக மங்களாசாஸநம் செய்து இப்போதிய கதி முன்னேவித்தது போலிருந்தாப்போலே இருந்தில்லை. மாறியிருந்தது என்ன, அப்போதங்கிருந்த தம்மாசார்யர், ஸ்ரீ ரங்கநாராயணஜீயர், முதலானோர் அதென்ன எங்களுக்குத் தெரியவில்லையே! அதைக்காட்டியருள வேணுமென்ன; தம்மாசார்யரும் காட்டும்படி நியமிக்க, ஸ்ரீ ஸ்வாமியும் முன்கதியையும் இப்போதுள்ள கதியையும் தாமடியிட்டு இவைகளிலுண்டான வைலக்ஷண்யத்தைக் காட்ட எல்லாரும் போர விஸ்மயித்து இதென்ன ஸூக்ஷ்மதர்சந மென்று கொண்டாடினார்கள். ஸ்ரீ ரங்கநாராயணஜீயர்:—

“ஸாவா விமேநவ வேஷாஹிநூ ஷூஸூம்தே கஷாவந |
தஸாமெஷு விமூஷ்ஞா ஸாவகா ஸவிகாঃ ஸூதாঃ ||”

என்று சாரநாதயன் சொன்னான். அதை இவர் பக்கலிலே கண்டோமென்று போரப் ப்ரியப்பட்டு பகவதநுபவத்திலே இத்தனை ஆழ்ந்திருப்பார் யாருமில்லை என்றார். இப்படி மங்களாசாஸநம் செய்து கொண்டு ஆசார்ய பரதந்த்ரராக அங்கே தானே கொஞ்சகாலம் எழுந்தருளியிருக்க, ஸ்ரீ பேரருளாளன் ஸ்ரீ கார்யம் நிர்வஹிக்கும்படி ஸ்ரீ ஸ்வாமி பித்ருவ்ய ஸ்ரீநிவாஸ தாதாசாரியர் முதலானோர் ஸ்ரீமுகமனுப்ப, ஸ்ரீ ஸ்வாமியும் அதை உச்சிமேல் கொண்டு தம்மாசார்யர் ஸந்நிதியில் விண்ணப்பிக்க அப்படியே அவரும் நியமிக்க, பெரிய பெருமாள் ஸந்நிதியில் விண்ணப்பித்து விடை கொண்டு மற்றும் தென்னாட்டிலுள்ள திவ்யதேச மங்களாசாஸநோத்ஸாஹ நிவ்ருத்தராய் திரும்பி திருக்குடந்தை குறுகைக் காவலப்பன் காட்டு மன்னார் கோவில் ஸ்ரீமுஷ்ணம், திருக்கோவிலூர், மார்க்கமாக அங்காங்குள்ள எம்பெருமான்களையும், நாதமுனிகள் ஆளவந்தார் முதலானோர்களையும் மங்களாசாஸநம் செய்து கொண்டு பெருமாள் கோவிலுக்கு எழுந்தருளி ஸேவா க்ரமத்திலே பெருமாளை மங்களாசாஸநம் செய்து ஸ்ரீ பேரருளாளன் ஸந்நிதி ஸ்ரீ கார்யத்திலே அபிஷிக்தராய் நிர்வஹித்து வந்தார்.

ஓம் நீர் குன்றம் நரஸிம்ஹாசாரியர், பிள்ளைபாக்கம் கோபாலாசாரியர் ஸந்நிதியில் மஹாபாஷ்யாந்தம் வ்யாகரணம் வாசித்து ப்ரஸித்தராயிருக்குமவர் இவர் முதலாக சில வித்வான்கள் கோவிலுக்கு எழுந்தருளி ஸ்ரீரங்கம் ஸ்வாமி ஸந்நிதியில் ஸ்ரீ பாஷ்யாதிகளை அருளிச்செய்ய வேண்டுமென்று ப்ரார்த்திக்க, அந்த ஸ்வாமியும் ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதிக்குப் போகும்படி நியமிக்க, அவர்களும் ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியிலே வந்து நடந்த வ்ருத்தாந்தத்தை விண்ணப்பித்து அத்யாத்ம சாஸ்த்ரார்வயம் செய்து க்ருதார்த்தரானார்கள். மைசூர் அநந்தாழ்வான் என்று ப்ரஸித்தரான ஒரு வித்வான் ப்ரஹ்மபத சக்திவாதமென்று தானொரு க்ரந்தமெழுதி ஸ்ரீ ஸ்வாமிக்கனுப்ப ஸ்ரீ ஸ்வாமியும் ஆமூலாக்ரமாக ஸம்யக் கடாக்ஷித்து இந்த க்ரந்தம் வேதாந்தத்திலே நவீன தர்க்க ரீதியிலே பஹுவ பரிஷ்கார சாதுர்யமுடையதென்று கொண்டாடும்படி யிருக்கச் செய்தேயும் பூர்வாசார்ய ஸ்ரீ ஸூக்திகளுக்கு விருத்தமாக யிருக்கிறதென்று கொண்டு ப்ரஹ்ம சப்தவிசாரமென்று அவ்விஷயத்திலே தானே அவர் பரிஷ்கரித்தாப்போலே தாமும் விஷய நிஷ்கர்ஷம் பண்ணி நவீநரீதியிலே தானே க்ரந்தமருளிச்செய்தார்.

அவருக்கு மறுப்பியருளினார், பிறகு பன்னிரண்டு ஸம்வத்ஸரங்களுக்கு மேலே அவர் ஜீவித்திருந்தார். இந்த க்ரந்தத்தின் மேலே ஒன்று மெழுதவில்லை. அப்யுபகமம் பண்ணி ச்லாகித்தும் வந்தார். ப்ரஹ்ம சப்தம் கேவல யௌகிகம். யோகார்த்தம் பரமஹத் பரிமாணம் என்று அநந்தாழ்வான் அபிப்ராயம். இது ஸ்ரீபாஷ்ய, ச்ருத ப்ரகாசிகா, தத்வடீகா, ரஹஸ்ய ரக்ஷா, ஸ்தோத்ர பாஷ்ய சண்டமாருத ப்ரப்ருதி பஹு பூர்வாசார்ய ஸ்ரீ ஸூக்தி விருத்தமென்று ஸ்ரீ ஸ்வாமி திருவுள்ளம்.

ப்ரஹ்ம சப்தம் யோகரூடம். ப்ருஹத்வம் யோகார்த்தம். ப்ரஹ்மணி ரூடம், என்று ஸ்ரீ ஸாக்ஷாத் ஸ்வாமி திருவுள்ளம். இதை யடியொற்றித்தான் ஸ்ரீ ஸ்வாமி ப்ரஹ்ம சப்த விசாரமென்கிற க்ரந்தம் நவீரீதியிலே அருளிச்செய்தது. பஹுகாலமாக ஸ்ரீ வைசாகோத்ஸவத்திலே பெரிய திருவடி, சிறியதிருவடி வாஹநோத்ஸவங்கள், மைஸூர் மஹாராஜா அரண்மனை திட்டத்தின்கீழ் ஸொந்த த்ரவ்யத்தாலே தானே நடத்திக்கொண்டு வர, அந்த ராஜ்ய மிணைந்தலைப்பட்டு [illegible]களுடைய ஆளுகையிலே உள்பட அவர்கள் வேதபாஹ்ய மதஸ்தர்களாகையாலே இதாவச்யகச் செலவென்று நிறுத்திவிட்டு ஸ்ரீஸ்வாமிக்கு மறிவிக்க ஸ்ரீஸ்வாமியும் ராஜா செய்து வந்த உத்ஸவ மாகையாலே ராஜாவைக்கொண்டே நடத்திவைக்க வேணுமென்று திருவுள்ளங்கொண்டு வெங்கடகிரி ஸம்ஸ்தாந மஹாராஜாக்குத் தெரியப்படுத்த மஹாராஜாவும் அதி ஸந்தோஷத்துடனே ஸ்ரீ ஸ்வாமி ஒருக்காலித்த ஸம்ஸ்தாநத்துக் கெழுந்தருளினால் நியமப்ப்ரகாரம் நடத்து கொள்ளுகிறேனென்று அந்தரங்க ஸேவகனை அனுப்பி விண்ணப்பிக்க ஸ்ரீ ஸ்வாமியும் பெரியாழ்வார் வ்ருத்தாந்தத்தைத் திருவுள்ளத்திலே கொண்டு பகவத் பாகவத நியமநத்தை முன்னிட்டுத் தாமே எழுந்தருளுவதாக மஹாராஜாவுக்கறிவிக்க அவரும் ஸ்ரீ ஸ்வாமியின் பெருமைக்குக் குறைவில்லாமல் பல்லக்கு மேலே தானே பிருதுகளோடு எழுந்தருள வேணுமென்று ப்ரார்த்தித்து த்ரவ்யத்தைக் கொடுத்து ஆஸ்தாந வித்வானை யனுப்ப ஸ்ரீ ஸ்வாமியும் அதை யங்கீகரித்து மார்க்கத்திலே திருவேங்கட முடையான் எழுந்தருளி யிருக்கையாலே அவனை மங்களாசாஸநம் பண்ணாமல் வெங்கடகிரிக் கெழுந்தருளுவது உசிதமன்றென்று திருவுள்ளம் பற்றி பல்லக்குக்கூட வரச்செய்தேயும் அதிலே தாமேறியருளாதே நாராயணவநம் எழுந்தருளி கல்யாண வெங்கடேசனை மங்களாசாஸநம் செய்து அங்குள்ள வைஷ்ணவர்களால் ஸத்க்ருதராய் திருச்சானூர் எழுந்தருள அங்குள்ளார் ஸ்ரீ ஸ்வாமி எழுந்தருளுகிற வ்ருத்தாந்தத்தை யறிந்து பெரிய ஸந்தோஷத்தோடு திருமலை திருப்பதி திருச்சானூர் தேவஸ்தாநம் ஸ்ரீ கார்யம் நிர்வஹிக்கும் மஹந்து என்கிறவர்க்கறிவிக்க அவரும் தாம் வைராகி குலத்தவராயிருக்கச் செய்தேயும் ஸ்வாமியின் பெருமையை விசதமாகக் கேட்டறிந்தவராகையாலே அதி ஸந்தோஷத்துடனே நேரிலேவந்து திருவடிகளிலே விழுந்து தண்டம்ஸமர்ப்பித்து திருமலை திருப்பதி திருச்சானூர் அநந்தக்கொத்து பரிஜந பரிபர்ஹங்களோடும் அந்த ஸ்தலாசார்ய புருஷாள் திருமலை குமார தோழப்ப தாதாசாரியர் ஸந்நிதி முதலாக மற்று மநேக ஸ்ரீ வைஷ்ணவ ப்ருந்தங்களோடும் தானே நேரிலே வந்திருந்து ஸ்ரீ கோடி கந்நிகாதாநம் தாததேசிகன் ஸந்நிதியாருக்கு நெடுநாளாக ஏற்பட்டிருக்கும் மரியாதைகளோடும் மற்றுமநேக ஸத்காரங்களோடும் மங்களாசாஸநம் செய்துவைக்க, ஸ்ரீ ஸ்வாமியும் எம்பெருமானார், ஸ்ரீ தேசிகன், ஸ்ரீ தாததேசிகன், முதலான நம் பூர்வாசார்யர்கள் மங்களாசாஸநம் பண்ணின க்ரமத்திலே மங்களாசாஸநம் செய்தருளும்போது திருமலையிலே பெருமாள் விமாநம் ஸேவை

ஸாதிக்குமிடத்திலே ஸ்ரீவிமாநத்தைத் தண்டம் ஸமர்ப்பிக்க, அப்போ தெழுந்தருளியிருந்த வைகாநஸ தீக்ஷித ஸ்ரீநிவாஸ பட்டாசார்ய ஸ்வாமி கோடி கந்யாதாநம் தாதாசார்ய ஸ்வாமி காட்டின நிழலிலே தானே அடியோங்கள் குலதைவ மெழுந்தருளியிருக்கிறது. விமாந மங்களாசாஸநம் ஆகவேணு மென்ன 'அடியோங்களுக்குக் குலதைவ மிவரே யன்றோ! அடியோங்கள் திருமலையாரே' என்றருளிச் செய்து அதி ஸந்தோஷத்தோடு விமாந மங்களாசாஸநம் செய்தருளி அங்குள்ள முதலிகளோடு:—

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

அந்த ஆநந்த நிலய விமாந ப்ரதிஷ்டை ஸ்ரீ தாததேசிகன் செய்தருளும்போது ஒரு பௌராணிகர் அநுஸந்தித்த ச்லோகத்தை யருளிச்செய்து, ஸ்ரீ தாததேசிகன் பெருமையை யருளிச்செய்து கொண்டே ஸந்நிதிக் கெழுந்தருளும்போது ஸந்நிதி கைங்கர்யபரர்கள் அநந்த கொத்து பரிஜந பரிவாஹங்களோடு ஸ்ரீ சடகோபனை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டு ஸ்ரீசடகோபம் ப்ரஸாதித்து எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போக, ஸ்ரீ கோபுரநயனார் தொடங்கி ஸேவாக்ரமத்திலே திருவேங்கடமுடையானை மங்களாசாஸநம் செய்து வரிசைகள் பெற்று தயாசதகம், அநுஸந்தித்து. பெருமான் நியமநம் பெற்றுத் திருமலையிலிருந்து ஸந்நிதி பரிஜநங்களோடு கீழே இறங்கி, தாம் எழுந்தளியிருக்கும் திருமாளிகைக் கெழுந்தருளி, ஸ்தலாசார்ய புருஷாள் ஸந்நிதி கைங்கர்ய பரான் எல்லோருமாக யதோசிதம் ப்ரதி ஸம்மாநம் செய்து, அங்கிருந்து மறுநாள் வெங்கடகிரி நகரத்துக் கெழுந்தருள, மஹாராஜாவும் எதிர்கொண்டு வந்து தண்டம் ஸமர்ப்பித்து விசேஷ ஸத்காரங்களோடு நகர ப்ரவேசம் செய்வித்து, ஒரு ஸ்ரீவைஷ்ணவர் திருமாளிகையிலே எழுந்தருளப் பண்ணிவைத்து, நித்யாநுஷ்டாநங்க ளெல்லாம் ஆனபிறகு ஸதஸ்ஸுக்கு எழுந்தருளும்படி ப்ரார்த்தித்து விடை கொண்டு போனார்.

(தொடரும்)

சரணாகதியே சரமோபாயம்

[பந்தல்குடி மாடபூசி ரெ. திருமலை ஐயங்கார்
காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்]

மோக்ஷத்தில் இச்சையுடையவன் முமுக்ஷு. இவன் அறிய வேண்டும் ரஹஸ்யங்கள் மூன்று. அவை திருமந்திரம், த்வயம், சரம ச்லோகம் என்பன. அவற்றுள் பிரதம ரஹஸ்யம் திருமந்திரம். இது எட்டுத் திருவக்ஷரமுமாய் மூன்று பதமாயிருக்கும். திருமந்த்ரத்தால், 'எம்பெருமானுக்கே உரியேனான நான் எனக்கு உரியனன்றிக்கே யொழிய வேணும்; ஸர்வசேஷியான நாராயணனுக்கே எல்லா வடிமைகளும் செய்யப் பெறுவேனாக வேணும்' என்று சொல்லப்படுகிறது.

ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா கீதையை அர்ஜுனனுக்கு உபதேசித்தார். அதன் முடிவில், "அனைத்து அறங்களையும் அறவே துறந்து, என்னை ஒருவனையே கதியெனக் கொள்வாய்; நான் உன்னைச் சகல பாபங்களினின்றும் விடுதலை செய்கின்றேன்; வருந்தாதே" என்று உறுதி கூறினார். பகவானுடைய கழலிணையைத் தொழுவதே நாம் கற்ற கல்வியின் பயன். நமக்கு உய்விடம் எம்பெருமான் பாதாரவிந்தமே. அவன் திருவடியை அடைந்தோரே எல்லா வுலகிற்கு மேலாய் வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வார். இவர் இடும்பைகள் எல்லாம் தீர்ந்துபோம். அவ்வாறு தனக்குவமை யில்லாதான் தாள் சேர்ந்தால் அல்லது மனக் கவலைகளை மாற்றல் அரிது. அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தாரே பொருள் இன்பம் என்ற ஸாகரத்தைக் கடப்பர். பிறவிப் பெருங்கடலை நீந்துவோருக்குப் புணையாக உள்ளது இறைவனது திருவடி. அது தவிர வேறு புணையில்லை. 'கடவுளே கதி; அவராலேயே நான் வாழ்வேன்' என்பதைக் குலசேகராழ்வார் பத்துப் பாடல்களாலே நன்கு விளக்கியுள்ளார். இப்பதிகம் வித்துவக்கோடு என்னும் ஊரிலே திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருமாலைக் குறித்துப் பாடப்பட்டுள்ளது.

திருவித்துவக்கோடு என்ற ஸ்தலம் இடப்பள்ளி ஸ்டேஷனுக்குக் கிழக்கே பத்து மைலில் உள்ளது. அது திருவிற்றுவக்கோடு என்றும் வழங்கப்பெறும்; அத்தலத்து எம்பெருமான் அம்பரீஷனுக்குப் பிரத்தியட்சம். பின்னால் பாடல்கள் வருகின்றன.

"தருதுயரம் தடாயேலுன் சரணல்லால் சரணில்லை
விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட் டம்மானே
அரிசினத்தா லீன்றதாய் அகற்றிடினு மற்றவள்தன்
அருள்நினைந்தே யழுங்குழவி யதுவேபோன் றிருந்தேனே"

[இதன் பொருள்] பரிமளம் மிக்க மலர்களையுடைய பொழிலாலே சூழப்பட்ட திருவித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் ஸர்வேசுவரனே! நீயே தருகிற துக்கத்தை நீயே போக்கா யானால் தேவரீர திருவடிகளே உபாயமல்லது வேறு சரணம் இல்லை. பெற்றதாய் மிகுந்த கோபத்தால் தள்ளிவிட்டாலும் அந்த அன்னையின் அருளையே நினைந்துகொண்டு அவள் காலைக் கட்டிக்கொண் டழுகிற குழந்தையை யொத்திருந்தேன்.

இந்தப் பாட்டால் உயிர்களனைத்தும் ஒரு பெருந் தெய்வத்தின் குழந்தைகள் என்றும், அவை அத் தெய்வத்தின் அருளையே கதியாக உடையன என்றும், அவ்வருளும் தெய்வம் தானே தனக்கும் உயிர்களுக்கு முள்ள சம்பந்தத்தாலே கொடுப்பது என்றும், அவ்வருளை அவன் தாமதித்து நல்கினாலும் அவனது அருளையே நினைந்து வேறு கதியில்லை என்று உணர்ந்து கிடப்பதே நம் கடமை என்றும் அறிகிறோம்.

தள்ளினாலும் புறம்பே போகாமைக்குப் பெரியோர் பின்வரும் ஐதிஹ்யம் கூறுவர்.

"நம்பி திருவழுதி வளநாடு தாஸரை முதலியாண்டான் கோபித்து, கையாலும் காலாலும் துகைத்து இழுத்தவாறே திண்ணையிலே பட்டினியே யொருநாள் போகாதே கிடந்தார்; ஆண்டான் மற்றை நாள் அமுது செய்யப் புகுகிறார். 'அவன் செய்ததென்?' என்று கேட்டவாறே, 'பட்டினியே வாசலிலே கிடந்தான்' என்று கேட்டு அழைத்து 'நீ போகாதே கிடந்ததென்?' என்ன 'ஒரு நாள் ஒரு பிடி சோறிட்டவன் எல்லாப் படியாலும் நிந்தித்தாலும் வாசல் விட்டுப் போகிறதில்லை நாய். நான் எங்கே போவது?' என்றார்.

2. "கண்டா ரிகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை யல்லால் அறியாக் குலமகள்போல்
விண்டோய் மதிள்புடைசூழ் வித்துவக்கோட் டம்மா! நீ
கொண்டாளா யாகிலுமுன் குரைகழலே கூறுவனே."

[இ-ள்] பார்த்தவர்களெல்லாம் இகழத்தக்க காரியங்களையே தன் கணவன் செய்தாலும், தன்னைப் பெண்டு கொண்ட புருஷனையொழிய வேறொருவனை மனத்தாலும் நினைத்தறியாத பதிவ்ரதையைப் போல, ஆகாசத்தை அளாவி மதில்கள் நாற்புறமும் சூழ்ந்திருக்கும் வித்துவக்கோட்டம்மா! தேவரீர் அடியேனைச் சேஷபூதனாக அடிமை கொள்ளாவிட்டாலும் உன்னுடைய சப்திக்கின்ற வீரக்கழலணிந்த திருவடிகளையே ஸதா துதிப்பேன்.

ஒரு பதிவ்ரதை தன் கணவனைத் தவிர வேறு கதி ஒன்று உண்டென்று கருதாள். கண்டார் இகழும்படி கணவன் கேவலமாய் நடந்துகொண்டாலும், தன்னை மனைவியாகக் கொண்டு ஆளாவிட்டாலும், அத் தர்ம பத்தினி அவன் பாதங்களையே நம்பிக் காத்திருப்பள்.

இங்குப் பரமபுருஷனை நாயகனாகவும் தம்மை நாயகியாகவும் பாவித்து அனுபவிக்கிறார் ஆழ்வார். ஜீவபரமாத்மாக்களின் சம்பந்தங்களில் இதுவும் ஒன்று.

3. "மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மா!என்
பால்நோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றிலேன்
தான்நோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோல்நோக்கி வாழும் குடிபோன் றிருந்தேனே"

[இ-ள்] பலவகைப்பட்ட மீன்கள் நித்யவாஸம் பண்ணத் தேடுகிற ஜலஸம்ருத்தியை யுடைய வயலாலே சூழப்பட்ட வித்துவக்கோட்டம்மா! என் விஷயத்தில் கடாக்ஷியாதிருந்தாயே யாகிலும் உன்னைத் தஞ்சமாகப் பற்றுகையொழிய வேறொருவரைத் துணையாகப் பற்றமாட்டேன். ரக்ஷணத்திலே தீக்ஷித்துத் தனிமாலையிட்டிருக்கிற ராஜா, பிரஜைகளை ரக்ஷியாமல் எவ்வகைப்பட்ட துன்பங்களைச் செய்தாலும் அவனுடைய ஆஜ்ஞைக்குப் பின்சென்று வாழ்கின்ற குடிகளைப்போ லிருந்தேன்.

அரசனுடைய செங்கோலை நோக்கி வாழ்கின்றவர் குடிஜனங்கள். அரசன் தன் தொழிலை மறந்து பிரஜைகளைக் காத்து ரக்ஷியாமலிருப்பினும், அவன் மறுபடியும் தன் கடமையை உணர்ந்து ரக்ஷிப்பான் என்று பொறுமையுடன் காத்திருப்பர் ஜனங்கள். அவனை நீத்து அராஜகமாக நாட்டிலே வாழத் துணியார். அதுபோல் பகவான் நம்மேல் அருள்கொண்டு நோக்காது அசட்டை செய்தபோதும் அவனையே பற்றாக இருப்பதன்றி வேறு பற்று ஒன்றைக் கொள்வதில்லை என்ற உண்மை வெளியிடப்படுகிறது,

4. "வாளா லறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட் டம்மா!நீ
ஆளா வுனதருளே பார்ப்ப னடியேனே"

[இ - ள்] வித்துவக் கோட்டில் எழுந்தருளியிருக்கும் ஸர்வ ஸ்வாமியான நீ, உன் மாயையாலே ஒருக்காலும் நீங்காத துக்கத்தை விளைத்தாலும், சேஷ பூதனான நான், கத்தியாலே அறுத்து ஊசியைக் காய்ச்சிச் சுட்டாலும் வைத்தியனிடத்தில் நீங்காத அன்பையுடைய நோயாளியைப் போலே, அடிமை செய்கைக்காக உன்னுடைய கிருபையையே புத்தி பண்ணி யிருப்பேன்.

மருத்துவன் நோயாளனை வாளால் அறுத்துச் சுடுகின்றான். அவ்வாறு அவனைத் துன்புறுத்துவதும் அவனுடைய நன்மையைக் கருதியேதான். அதுபோல் பகவான் நமக்குத் துன்பங்களை விளைத்தாலும் அருள் கொண்டு செய்ததே. நாம் படும் துன்பங்கள் யாவும் பகவான் செய்யும் வைத்தியத் தொழில்களே.

5. "வெங்கட்டின் களிறடர்த்தாய் வித்துவக்கோட் டம்மானே
எங்குப்போ யுய்கேனுன் னிணையடியே யடையலல்லால்
எங்கும்போய்க் கரைகாணா தெறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே."

[இ - ள்] வெவ்விய கண்ணையும் திண்ணிய நெஞ்சையும் உடைத்தான குவலயா பீடத்தைக் கொன்றவனே! வித்துவக்கோட்டம்மானே! உன்னுடைய திருவடிகளே தஞ்சம். அதொழிய வேறு யாரிடத்தில் போய் உஜ்ஜீவிக்கப் போகிறேன். நாலு திக்கிலும் போய்ப் பார்த்துக் கரைகாணாமையாலே அலையெறிகிற ஸமுத்ரத்திலே திரும்பி வந்து அங்கு வர்த்திக்கிற கப்பலினுடைய கம்பத்தில் ஏறிநிற்கிற பெரிய பக்ஷியை யொத்திருந்தேன்.

வங்கத்தின் கூம்பிலேயுள்ளது ஒருபறவை. அது,அதனை நீங்க நினைத்துக் கடலிலே நாற்புறமும் பறந்து அலைந்து எங்கும் காணாது தவிக்கிறது. இறுதியில் முன் இருந்த கூம்பே கதி என்று மீள்கிறது. வேறு எங்குச் சென்று தங்கமுடியும்? அதுபோல நாம் பகவானை மறந்து வேறுகதிகளை நாடித் திரிகிறோம். ஸம்ஸார ஸாகரத்தில் உழல்கிறோம். ஆயினும் இறுதியில் அவனேகதி யென்று உணர்ந்து மீண்டும் அவனையே சரணடைகிறோம். அவ்வாறு புகும்போது நாம் வேறுகதி நாடிச் சென்றதைப் பொருட் படுத்தாது அருள் புரிகிறான் பகவான்.

6. "செந்தழலே வந்தழலைச் செய்திடினுஞ் செங்கமலம்
அந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லா லலராவால்
வெந்துயர்வீட் டாவிடினும் வித்துவக்கோட் டம்மா! உன்
அந்தமில்சீர்க் கல்லா லகங்குழைய மாட்டேனே."

[இ - ள்] சிவந்த நெருப்பானது கிட்டி உஷ்ணத்தைப் பண்ணினாலும் அழகிய தாமரைகளானவை ஆகாசத்திலே வர்த்திக்கிற ஸூர்யனுடைய உஷ்ணத்துக் கல்லது

மலராவாம். வித்துவக்கோட்டம்மா! என்னுடைய க்ரூரமான துக்கத்தை நீ போக்காவிட்டாலும் உன்னுடைய அளவில்லாத கல்யாண குணங்களுக் கல்லது என் நெஞ்சு களிப்புறாது.

தாமரைக் கொடி தன்னை வெயிலாலே வருத்தும் சூரிய கிரணங்களைக் கண்டதும் மலரும். அதுபோல் எனக்கு என்ன துயரங்கள் நேர்ந்தபோதும், யான் உன் அருளைக் கருதி அகம் குழைவேன். உன் பெருமையை நினைந்து உன்னையே புகழ்ந்து மனமிளகி உருகுவதும் உன்னுடைய அருளை எதிர்பார்த்து ஏங்குவதுமே என் கடன்.

7. "எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கு மற்றவைபோல்
மெய்த்துயர்வீட் டாவிடினும் வித்துவக்கோட் டம்மா! என்
சித்தமிக உன்பாலே வைப்பன் அடியேனே."

[இ-ள்.] இளமை தங்கிய பயிர்களானவை மேகமானது பெய்யாதே மிகவும் மறந்த காலத்திலும், கறுத்து ஆகாசத்திலே எழுகிற பெரிய மேகங்களையே பார்த்த வண்ணமாயிருக்கும். அவைபோல் வித்துவக் கோட்டம்மா! அனுபவித்தே கழியவேண்டும் மெய்யான துக்கத்தைப் போக்காவிட்டாலும் அடியேன் என்மனதை உன் விஷயத்திலேயே மிகவும் வைப்பேன்.

பகவானது கருணை, மேகம் பொழிகின்ற மழைபோன்றது. பயிர்கள் ஆகாசத்தை நோக்கி மழையை எதிர்பார்த்து வாடும். அதேபோல் பக்தன் பகவானிடம் பரிசுத்த சித்தத்தைச் செலுத்திவைப்பான்.

8. "தொக்கிலங்கு யாறெல்லாம் பரந்தோடித் தொடுகடலே
புக்கன்றிப் புறம்நிற்க மாட்டாத மற்றவைபோல்
மிக்கிலங்கு முகில்நிறத்தாய்! வித்துவக்கோட் டம்மா! உன்
புக்கிலங்கு சீரல்லால் புக்கிலன்காண் புண்ணியனே."

[இ - ள்] நதிகளெல்லாம் திரண்டு ஒளியை யுடைத்தாய்ப் பார்த்த விடமெங்கும் பரந்து ஓடி ஆழமான கடலிலே சென்று புகலல்லது வேறோரிடத்தில் நிற்கமாட்டாதவையா யிருக்கின்றன. அவ்வாறுகளைப் போலே மிகவும் விளங்கா நின்றுள்ள மேகம் போன்ற திருநிறத்தை யுடையனாய்த் திருவித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கிற ஸர்வ ஸ்வாமியான புண்ணியனே! உட்புக உட்புக உஜ்வலமாகிற உன்னுடைய கல்யாண குணங்களை யொழிய வேறொரு புகலுடையே னல்லேன் காண்.

நீர் ஆறுகளில் ஓடியும், குளம் ஏரி இவற்றில் தங்கியும் சென்று, இறுதியிலே ஸாகரத்தையே அடைகின்றது. அதுபோல உயிர்கள் எங்குச் சென்றாலும் பகவானுடைய பாதாரவிந்தங்களையே சேரும் இயல்பை உடையன.

9. "நின்னையே தான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே தான்வேண்டும் செல்வம்போல் மாயத்தால்
மின்னையே சேர்திகிரி வித்துவக்கோட் டம்மா!
நின்னையே தான்வேண்டி நிற்ப னடியேனே."

[இ-ள்] உன்னையே வேண்டி நிரவதிகமான ஸம்பத்தை விரும்பாதவனையே தான் மேல்விழுந்து கிட்டுகைக்கு அவசரம் பார்க்கிற ஐச்வர்யத்தைப் போலே, மின்போல் பளபளத் திருந்துள்ள திருவாழியாழ்வானை இடைவிடாதே தரித்துக்கொண்டிருக்கிற வித்துவக் கோட்டம்மா! உன் மாயையாலே என்னை உபேக்ஷித்தாயாகிலும் சேஷபூதனை நான் உன்னையே விரும்பி யிருப்பேன்.

செல்வம் என்பது தன்னை வேண்டாது பகவானையே வேண்டுகிற அவனைப் பின் தொடர்கின்றது. அதுபோல் பக்தனும் தன்னை வேண்டாத பகவானையே பின்தொடர்கின்றான்.

10. "வித்துவக்கோட் டம்மா! நீ வேண்டாயே யாயிடினும்
மற்றாரும் பற்றிலே னென்றவனைத் தாள்நயந்த
கொற்றவேல் தானைக் குலசேகரன் சொன்ன
நற்றமிழ் பத்தும்வல்லார் நண்ணார் நரகமே."

[இ-ள்] திருவித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கிற ஸர்வேச்வரனே! நீ என்னை உபேக்ஷித்தாயே யாகிலும் வேறொருவரும் அணைபாவாரில்லை என்று அவனுடைய திருவடிகளை ஆசைப்பட்டவராய், ஜயப்ரதமான வேலையும் ஸைந்யத்தையும் உடையரான ஸ்ரீ குலசேகரப் பெருமாள் அருளிச்செய்த தமிழ்ப் பத்துப் பாட்டுக்களையும் விலக்ஷணமாய் அப்யஸிக்க வல்லவர்கள் ஸம்சாரமாகிற நரகத்தைக் கிட்டார்கள்.

பகவானை, தாய், கணவன், அரசன், மருத்துவன், வங்கம், சூரியன், மாமுகில், சாகரம், சம்பத்து என்பதாகப் பாவித்துத் தன்னை குழந்தை, மனைவி, பிரஜை, யோயாளி, மாப்பறவை, தாமரை, பைங்கூழ், தண்ணீர், சொத்து என்று மதித்து, இவ்விதமான அநேபாக்ய பாவங்களாலே எம்பெருமான் தாளிணையே கதி என்னும் உண்மையை உலகிற்கு உவர்தளித்தார் ஸ்ரீ குலசேகரப் பெருமான்.

பெருமாள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

க டி த ங் க ள்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபா லிமிடெட்: சென்னை

(1)

டி ஸபையின் ஆதரவின்கீழ், பெருமாள் கோவிலில், ஸ்ரீ பேரருளாளன் ப்ரஹ்மோத்ஸவத்தில் ஸ்ரீ. உ.ப. வி. வி. ஸ்ரீநிவாஸையங்காருடைய 'ஹஸ்திகிரி' என்னும் க்ருஹத்தில் ஒரு ஸதஸ் கூட்டப்பட்டது. 16-5-35 முதல் 20-5-35 வரையில் டி ஸதஸ்ஸில் ஸ்ரீ. உ.ப. கோஷ்டீபுரம் ஸௌம்யநாராயணாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உ.ப. கோடிகந்நிகாதாநம் ஐயா க்ருஷ்ணதாதாசார்ய ஸ்வாமி, பண்டித வி. அநந்தாசார்ய ஸ்வாமி சித்தூர் ஸ்ரீநிவாஸ ராகவாசார்ய ஸ்வாமி, நடாதூர் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி ஆகிய இவர்கள், முறையே ஸ்ரீதேசிகன் வைபவம், ஹஸ்திகிரி மாஹாத்ம்யம், காளிதாஸரும் கவி தார்க்கிக ஸிம்ஹமும், பாதுகா ஸாம்ராஜ்யம், நடாதூரம்மாள் வைபவம் என்னும் விஷயங்களைப்பற்றி உபந்யஸித்தார்கள்.

டி ஸபையாரால் இப்போது ப்ரசுரிக்கப்பட்டு வெளிவந்திருக்கிற ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் ஸாதித்த 'ஸ்ரீ ந்யாயஸித்தாஞ்ஜநம்' என்னும் ப்ரதம ஸம்புடம் ஸதஸ்ஸில் ஸமர்ப்பிக்கப்பட்டு, டி ஸ்ரீகோசம் விற்பனைக்கு ஸித்தமாயிருக்கும் விஷயமும் தெரிவிக்கப்பட்டது. உத்ஸவத்தில் எழுந்தருளியிருந்த ஸ்வாமிகள் வித்வான்கள் ஆகிய எல்லாரும் டி ஸ்ரீகோசத்தின் ஸம்ஸ்தாந விசேஷத்தையும் (Get up), ரமணீயமாயும் கம்பீரமாயுமுள்ள லிபியையும், அதிமநோஹரமான கட்டிடத்தையும் (Binding) வெகுவாக ப்ரசம்ஸித்து, இந்தக் கைங்கர்யம் மேன்மேல் வ்ருத்தியடைந்து யாதொரு அந்தராயமு மில்லாமல் ஸ்ரீ தேவாதிராஜன் தலைக்கட்டவேண்டு மென்று அநுக்ரஹித்தார்கள்.

முடிவில்: உபந்யாஸம் செய்த ஸ்வாமிகளுக்கு ஸ்ரீ. உ.ப. வி. வி. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமி ஸம்மாநம்செய்து, டி ஸபையில் ஸகல ஸ்ரீ வைஷ்ணவர்களும் அங்கத்தினராக வேண்டிய ஆவசியகதையையும் வற்புறுத்தினர். பின்னர் ஸதஸ் முடிவுபெற்றது.

(2)

காஞ்சீபுரம் ஸ்ரீ வைஷ்ணவ ஸபை

ஸ்ரீ வைஷ்ணவ ஆசார்யர்களில் ஒருவரான ஸ்ரீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா எழுந்தருளியிருந்த காலத்தைப்பற்றிக் கொஞ்சகாலமாக ஒரு வாதம் நடந்துவருகிறது. அவ்விஷயத்தை நேரில் சர்ச்சை செய்து தீர்மானிக்க, இவ்வருஷம் மேமீ 22உ சின்னகாஞ்சீபுரம் ஆனைக்கட்டித் தெரு 70. ெந. 'ஹஸ்திகிரி' யில் ஒரு ஸதஸ் நடந்தது. வாதம் செய்யவேண்டியவர்களில் ஒருவரான காஞ்சி ஸ்ரீ. உ.ப. ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யர் ஸதஸ்ஸுக்கும் வரவில்லை; மத்யஸ்தர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்த மூன்று ஸ்வாமிகளில் ஸ்ரீ. உ.ப. வி. வி. ஸ்ரீநிவாஸையங்காரும், பண்டித அநந்தாசார்ய ஸ்வாமியும் மத்யஸ்தர்களாக இருப்பதையும், ஸதஸ் 'ஹஸ்திகிரி' யில் நடப்பதையும் ப்ர. அண்ணங்கராசார்யர் ஒப்புக்கொள்ளவுமில்லை. ஆதலால் "டி ஸதஸ் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலில் ஸ்ரீ கோஷ்டீபுரம் வித்வான் ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமி அக்ராஸநத்தில் நடப்பதில் இஷ்டமுண்டா?" என்று ப்ர. அண்ணங்கராசார்யரைக் கேட்டு வரும்படி கோஷ்டீபுரம் ஸ்வாமி செய்தி அனுப்பினர். தாம் சொல்ல வேண்டியவைகளெல்லாம் தமது புஸ்தகங்களில் இருப்பதாகவும், அவைகளைப் படித்த பிறகு ஏதாவது ஸந்தேஹம் ஏற்பட்டால் அதைத் தாம் ஸ்ரீ கோஷ்டீபுரம் ஸ்வாமியிடம் ஏகாந்தத்தில் தெரிவிப்பதாகவும் பதிலளித்து, ஸபைக்கு வர ப்ர. அண்ணங்கராசார்யர் மறுத்துவிட்டார். ஆகவே, மறுதினம் ஸதஸ் அவ்விடத்திலேயே நடப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

மறுநாள் (23-5-35) ஸதஸ் கூடிற்று. இரண்டு கக்ஷிகளுக்காகவும் சொல்லவேண்டியவைகளைக் கவனித்த பிறகு, கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. ஆசார்யர்களின் காலத்தைப்பற்றியோ வயஸ்ஸைப்பற்றியோ விசாரிக்கும் விஷயத்திலும், மற்ற சரித்ர ஆராய்ச்சி விஷயத்திலும், முடிவு, எந்த ஸம்ப்ரதாயஸ்தருக்கு ஸாதகமாயிருந்தாலும் பாதகமாயிருந்தாலும், அதைக் கவனியாமல் சாஸ்த்ரீயமான முறையில் உண்மையை மட்டும் கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் விசாரணை செய்ய வேண்டியது.

2. விஷய சர்ச்சைகளில் இப்பொழுது அதிக அபிருசியோடு செய்யப்படும் பரஸ்பர நிந்தையும், ஆசார்யர்களென்று மிகுந்த கௌரவத்தோடு அநேக ஸ்ரீ வைஷ்ணவர்களால் கொண்டாடப்படும் மஹான்கள் விஷயத்தில் உபயோகிக்கப்படும் உக்ரமாயும் அநுசித மாயுமுள்ள சப்த ப்ரயோகங்கள் அடியோடு விலக்கப்படவேண்டும்.

3. இரு கக்ஷியாரின் வாதத்தைக் கேட்டதில், ஸ்ரீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா, கலி 4494 ஆன ஸ்ரீமுக வர்ஷத்தில் மோக்ஷ மடைந்திருக்கவேண்டு மென்றும், ஆகை யினால் கலி 4403 -ல் அவதரித்திருக்க வேண்டுமென்றும், ஸ்ரீ மணவாளமாமுனிகளுக் குப் பின்பு இருந்ததாகச் சொல்பவைகளெல்லாம் தப்பாக இருக்கவேண்டுமென்றும், அவ்வாறு சொல்கின்றவர் வேறு வ்யக்தியாக இருக்கக்கூடுமென்றும் ஸதஸ்ஸுக்குத் தோன்றுகிறது. ஆனால் இதுவரையில் செய்த விஷய ஆராய்ச்சிகள் போதா வென்றும் இந்த விஷயத்தை ஸந்தேஹமறத் தீர்க்கவேண்டியது அவசியமாக இருக்கிறபடியால்,

ஸ்ரீ. உப. திருமலை தாதாசார்யர் (திருப்பதி).
,, ,, புரிசை க்ருஷ்ணமாசார்யர் ,,
,, ,, தோட்டாலம் வேணுகோபாலாசார்யர் (சென்னை)
,, ,, டி. பி. ராஜகோபாலாசார்யர் (கார்யதர்சி)
,, ,, வி. வி. ஸ்ரீநிவாஸையங்கார் (அத்யக்ஷர்)

ஆகிய இந்த ஸ்வாமிகளை ஒரு கமிட்டியாக நியமித்து, ஸ்ரீ. ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா அவதரித்த காலம், அவர் பரமபதம் அடைந்த காலம், அவரைப்பற்றியுள்ள ஐதிஹ்யங்களின் உண்மை, ஆகிய இவைகளை விசாரித்து யுவவர்ஷம் முடிவிற்குள் ரிபோர்ட் செய்யவேண்டியது.

மேலே கண்ட தீர்மானங்களின்படி கமிட்டி மேல் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

(3)

ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேசிகாய நம:

1935ம் ஷு மேமீ 21வ சின்ன காஞ்சீபுரம் ஆனைக்கட்டித் தெரு 70 நெ. 'ஹஸ்திகிரி' யில் ஸ்ரீ தேவப் பெருமாளுடைய ப்ரஹ்மோத்ஸவத்தில் ஸ்ரீரங்கம் ஸ்ரீ தேசிக வர்த்திநீ ஸம்ரக்ஷண ஸபை சென்னை கிளையின் ஆதரவில் ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்திகளின் ப்ரபாவத்தைப் பற்றி ஸ்ரீ. உப. ஐயா க்ருஷ்ண தாதாசார்ய ஸ்வாமி அக்ராஸநத்தில், திருப்பதி காலெஜ் ப்ரொபஸ்ஸர் தர்க்க மீமாம்ஸா சிரோமணி ஸ்ரீ. உப. உத்தமூர் வீரராகவாசார்ய ஸ்வாமி ஷை காலெஜ் ப்ரின்ஸிபல் பண்டிதராஜ ஸ்ரீ. உப. திருவரங்கம் திருமலை தாதாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உப. மீமாம்ஸா விசாரத தோட்டாலம் வேணுகோபாலாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உப. வித்வான் வில்லிவலம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, இவர்களால் விரிவாகவும் ரஸமாகவும் உபந்யாஸங்கள் நடைபெற்றன. இவர்களில் ஸ்ரீ. உப. டி. டி. தாதாசார்ய ஸ்வாமி ஸம்ஸ்க்ருத பாஷையில் வெகுஅழகாக உபந்யஸித்தார். ஷை ஸபையில் ஸ்ரீ. உப. கோஷ்டிபுரம் ஸதந்த்ர ஸ்வதந்த்ர ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமி, ந்யாய பூர்வோத்தர மீமாம்ஸா பண்டிதர் ஸ்ரீ. உப. ராவல் பாக்கம் தேவராஜாசார்ய ஸ்வாமி, முதலான வித்வான்களும், ஹைகோர்ட் மாஜி ஜட்ஜ் ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமி, திவான்பகதூர் மதுரை கே. ராமையங்கார் ஸ்வாமி, தஞ்சாவூர் அட்வொகேட் V. S. ராஜகோபாலாசார்ய ஸ்வாமி, சென்னை அட்வொகேட் ஸ்ரீ. உப. டி. டி. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி முதலான ப்ரமுகர்களும் எழுந்தருளியிருந்தார்கள்.

கடைசியில்: ஷை ஸபையின் சென்னை கிளை உபாத்யக்ஷர் பரவஸ்து ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் கவிதா வைலக்ஷண்யத்தைச் சுருக்கமாக ஸாதித்தார். பின்னர், ஷை ஸபையில் உழைப்பாக்கம் ஸ்ரீ. உப. லக்ஷ்மீ நரஸிம்மாசார்ய ஸ்வாமி செங்கல்பட்டு ஜில்லா கார்யதர்சியாகவும், சின்ன காஞ்சீபுரம் தெற்கு மாடவீதி பி. வி. சடகோபாசார்யர் காஞ்சீபுரம் தாலூகா ஏஜெண்டாகவும், ஏற்படுத்தப்பட்டார்கள். தேசிகாபிமானிகள் ஷையார்களிடம் ஸபையின் பாரங்களைக் கையெழுத்துசெய்து ஸபைக்குப் போஷகர்களாகவும் அங்கத்தினர்களாகவும் ஆகும்படி ப்ரார்த்திக்கப்படுகிறார்கள். ஷை ஸபையின் ப்ரசுரங்கள் ஷையார்களிடம் கிடைக்கும்.

டி. கே. ஸ்ரீநிவாஸையங்கார்.

ஸ்ரீ:

ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத்

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசாரியர், M. A. B. L. அட்வோகேட், திருச்சி]

[illegible]
[illegible] /
[illegible]
[illegible] ॥

ஸாஹஸ வ்யாபாரத்தி லிறங்கிய அல்லது இறங்கும்படி இடங்கொடுத்த குற்றத்தை மன்னிக்கவேணு மென்கிறீர். ஸாஹஸத்தி லிறங்குவானேன்? அல்லது இறங்கப்பட இடம் கொடுப்பானேன்? அப்புறம் அதற்கு மன்னிப்புக் கேட்பானேன்?

'ந ஸாஹஸம் அநாருஹ்ய நரோ பத்ராணி பஶ்யதி' [ஸாஹஸத்தி லேறாமல் மநுஷ்யன் க்ஷேமங்களைப் பார்க்க முடியாது.] என்கிற ந்யாயத்தை அநுஸரித்து, ஸாஹஸத்தை ஆச்ரயித்ததாக நீர் சொன்னால் என்னை அணுகுவதற்கு வேண்டிய நிர்த்தோஷதை உமக்குளதோ?

'உன் பெருமை மாசுணுதோ வம்மானே'

என்கிற க்ரமத்தில் என்னை உபஸநம் செய்ய நீர் கூசி, ஸ்வாமி பயத்தால் அகல வேண்டாமோ? '[illegible]' என்று நீர் பணிக்

கும் க்ரமத்தில் நானும்மைக் கிட்ட இழுத்தாலும் பயம் உம்மைத் தடுக்க வேண்டாமோ? இப்படி ஆக்ஷேபங்கள் வரக் கூறுகிறார்.

அனாதிகாலம் தொட்டு, கூட்டம் கூட்டமாய் நான் செய்த அபராத வர்க்கங்களை நானறிந்தவனே. 'ஜாநந்' (அறிந்து) என்ற பதத்தால் ஸ்தோத்ரம் செய்வதற்கு வேண்டிய ஜ்ஞானசக்தி எனக் கில்லாவிடினும், ஸ்தோத்ர ப்ரவ்ருத்தியி லிருந்து அகன்றோடுவதற்கு என்னுடைய அபராதித்வ ஜ்ஞான முளதென்று வேடிக்கையாய்க் காட்டுகிறார். ஸ்தோத்ர ப்ரவ்ருத்த மான ஜ்ஞானமில்லை யாயினும் தந்நிவர்த்தகமான ஜ்ஞானம் அபரிமித மாக உளதென்பது கருத்து. 'விஹித' என்கிற பதத்தினால் உம்முடைய ஆஜ்ஞா ரூபமான சாஸ்த்ரத்தினால் விதிக்கப்பட்ட கர்மங்களை எப்படி ச்ரத்தை யுடனும் ப்ரீதியுடனும் செய்வேணுமோ, அப்படியே உம்முடைய ஆஜ்ஞை யால் நிஷித்தங்களை நான் அநுஷ்டித்தே னென்று வ்யஞ்ஜநம். நிஷித்தமே விஹிதம் போல என்னால் விஹிதம் (அநுஷ்டிதம்) ஆயிற்றென்று வ்யஞ்ஜநம். 'ஸநாதி' என்னும் பதத்தால், செய்யப்பட்ட அபராத ஸஹஸ்ரங்களை ப்ராயச்சித்தாதிகளால் போக்கிக்கொள்ள அநாதிகாலமாக எத்தனையோ அவகாச மிருந்தும், செய்த அபராதம் முழுவதும் செய்ததேயாய் நிற்கிறதென்று கருத்து. போகத்தால் மட்டும் செலவழிந்த ஸ்வல்பம் போக, விசேஷ பாகம் அப்படியே சித்ரகுப்தன் கருணைக் கணக்கில் என்பேரில் பாக்கியாய் நிற்கிறது. 'திணை நென்மணிய சித்திரகுத்தன் தெரித்துவைத்த சுருணையி லேறிய சூழ்வினை முற்றை'யும் நானறிந்தும் என்று கருத்து. 'அபாராத்ய' பதத்திற்கு விஹிதமான வர்ணாச்ரமங்களால பரமபுருஷனான விஷ்ணுவை ஆராதிக்க வேண்டியதென்கிற வசனத்தை ஆதரியாமல் உம்மிடத்தில் அபராதத்தையே செய்து போந்தேன்' என்று கருத்து. ஆராதநம் செய்யாமல் அபராதமே செய்தேன். உபஸர்க்கம் மாறினாலும் 'ராதி' தாதுவொன்றே. 'ஸமூஹ' என்கிற பதத்திற்கு 'என்னுடைய அபராதங்களை ஒன்றொன்றாய்க் கணக்கிட உம்மாலும் முடியாது; வகுப்பு வகுப்பாய்த் தான் கணக்கிடவேணும்' என்று த்வநி.

ஸ்வாமிந் ஸபதி கிலவீ வத்ஸ ஹம் ந ப்ருவே— என்னுடைய குற்றங்களைத் தெரிந்த நான் பயாவிஷ்டனாய்த் துதிசெய்ய வாய்திறக்க முடியாமலே அசக்தனாய் நின்றுவிட்டேன். நான் கைவாங்கி விட்டேன். பேசுவதற்கு சக்தியில்லாமல் ஊமையாய் மௌனத்தையே நான் கைப்பற்றிவிட்டேன். 'ஸஹம்' என்பதற்கு இது கருத்து. இங்கே 'ஸ்வாமிந்' என்பது, குற்றம் நிரம்பச் செய்த வேலைக்காரன் ஸ்வாமியை நெருங்குவதற்கு அத்யந்தம் அச்சப்படுவ னென்பதைக் காட்டுகிறது. ஸ்வாமித்வ மிங்கே பயஹேதுவா

யிருக்கிறது. 'கிலவீ' என்பதால், 'ஸ்துதிஷு' என்று பல ஸ்துதிகள் செய்ய ப்ரார்த்தித்ததற்கு ஒரு வார்த்தைகூடப் பேசச் சக்தியில்லாமல் ஊமையானே னென்று கருத்து. 'கிலவீ' – வார்த்தை உருப்படி யில்லாமல் அவ்யக்தமாய் ஏதோ பிதற்றவும் சக்தியிலேன்.

ஸஹஸா வத்ஸல பயாவீ – இரண்டாவது ச்லோகத்தில், 'பல ஸ்தோத்ரங்கள் செய்யும் ஸாஹஸத்தில் இறங்கப் போகிறேன்; அதை க்ஷமித்தருள வேணு'மென்றீர் ஆரம்பிக்கட்டும். இவருடைய மதுமத்தமமான ஜிஹ்வையி லிருந்து வரும் தேன்மொழிகளைக் கேட்டுக் களிப்போமென்று நாம் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்க, நீர் மறுபடியும் அசக்தனாய் அகன்று விட்டே னென்கிறீர். இத்தோடு முடிந்ததோ ஸ்தோத்ரம் என்று கேட்கக் கூறுகிறார். பயத்தினால் என் நாக்கு எழும்பாமல் நிச்சேஷ்டமானாலும், நான் அசக்தனாய் நின்றுவிட்டாலும், நான் அகன்றோடினாலும், தாயும் தந்தையுமாகிய உமது வாத்ஸல்யம் என்னை இழுத்து மார்போடணைத்துப் பயத்தை இருந்த இடம் தெரியாமல் போக்கி உச்சாவசமாயும் உம்மைத் துதிபாடச்செய்கின்றது. பிறவி மூகனையும் வாசாலகனாகச் செய்யுமவன் ஈச்வரன். இங்கே அந்த சக்தி உமது வாத்ஸல்யத்திற்கு உளது. உம்மிடமிருந்து பயத்தினால் (கம்பநத்தால்: நடுங்குவதால்) வாயு, ஸூர்யாதிகள் தங்கள் தங்கள் பணிகளைச் செய்கிறார்கள். அவர்கள் குற்றமில்லாத அதிகாரி புருஷர்கள். நான் குற்றம் நிறைந்தவன். நான் உம்மை அணுக பீத பீதனாய் ஓடுகையில், உம்முடைய மாத்ருத்வ பித்ருத்வ ஸம்பந்தத்தை வெளிப்படுத்தி, உமது வாத்ஸல்யத்தை ப்ரகடநம் செய்து எனது பயத்தை அகற்றுகிறீர். நான் ஓடுவதை நிறுத்தி என்னை ஓடச்செய்த பயத்தைத் தூர ஓடச்செய்கிறீர். உம்முடைய ஸஹஜ நிர்வ்யாஜ வாத்ஸல்யம் ப்ரகாசிக்கப்படாவிட்டால் என் பயம் தெளியாது. பூர்வார்த்தத்தில் காட்டிய அதிக பயம் தெளிய மருந்து உமது நிர்வ்யாஜமான வாத்ஸல்ய மென்பதைக் காட்ட அந்த விசேஷணத்தோடு கூப்பிடுவதாகப் பின்பாதியை ஆரம்பித்தார்.

'ஸ்வாமிந்' – என்று இரண்டாம்பாத முதலில் கூப்பிட்டதற்கு எதிர்த்தட்டாய் மூன்றாம்பாத முதலில் 'வத்ஸலனே' என்றார். ஸ்வாமியே தஞ்சமான பிதாவும் மாதாவுமானான். அவை யல்லவு மாயினான். ஸ்வாமியே தாய் தந்தையென்று தெரிந்ததும் பயம் பறந்துபோயிற்று. 'வத்ஸல'– என்பதற்குத் தான் இளங்கன்று போலவே பயம் நீங்கிற்றென்று கருத்து. இளங்கன்று பயமறியாதன்றோ? '[illegible]' என்றபடி இன்னஞ் சிறிய சேவகனேன்.

നിരങ്കുശം—நிர்ப்பயமாக - தட்டுத்தடையில்லாமல். அங்குசத்தால் பயமும் ஸ்வச்சந்த ப்ரவ்ருத்தியில் தடையு மேற்படும். இரண்டு மில்லை. பயத்தால் நடுங்கிய நடுக்கம் போய் அடியோடு அச்சமில்லாமல் ஸ்வச்சந்த மாகப் பிதற்றும்படி உச்சாவசமாக மனம்போன போக்கெல்லாம் பேசும்படி நாடு சிரிக்குமே என்னும் அச்சமற்று. இது க்ரியா விசேஷணம். வாத்ஸல் யத்தோடும் அந்வயிக்கலாம். உம்முடைய வாத்ஸல்யத்திற்கும் தட்டுத்தடை யில்லை. அதுவும் நிரங்குசமான ஸ்வாதந்த்ரியத்தை அவலம்பிக்கிறது.

போருளும் வாத்ஸல்யமும் கரைமீறினல் எம்மையும் தடுப்பாரார்? பெருமாள் தடைசெய்தாலும் அவை மீறுகின்றனபோலும்! അഹം — நான் பேச அசக்தனேன் என்றேன். கைவாங்கிப்போன അഹം (என்னை) உம் முடைய வாத்ஸல்யம் திருப்பி அழைத்துவந்து விட்டது. ஆகையினல் 'என்னை' என்கிறார். 'என்னை' என்னும் கர்மத்வ நிர்த்தேசத்தால் தனக்கு ப்ரயோஜ்ய கர்த்ருத்வம் மட்டு மென்று காட்டுகிறார். நான் செய்கிறே னென்பதில்லை. என்னைச் செய்விக்கச் செய்கிறது. முன்பாதியில் நான் ஸ்தோத்ரம் பண்ண அசக்த மென்பதற்கும் இப்பொழுது வாசாலகனுகச் செய்கிற தென்பதற்கும் விரோதமில்லை.

“ ജായം ചെഹ്യവശഃ കൂ കരിഷ്യസ്യ ഭഗവാനപി തത്ര ”

என்பது போல இங்கே எனக்கு நிமித்தமாத்ரமான ஹேது கர்த்ருத்வமே.

വാത്സല്യേന ഭവതഃ—'അഹം' என்பதற்கு ப்ரதியாய் 'உம்முடைய வாத்ஸல்யமே' என்கிறார். போருளாளனுகிய உம்முடை வாத்ஸல்யம் மட்டுமே. ഭവത ഏവ വാത്സല്യം. இரண்டாம் பாதியில் 'வத்ஸல' என்று கூப்பிட்டதால் வாத்ஸல்யத்தோடு கூடினவனே; வாத்ஸல்ய விசிஷ்டனே. குணவிசிஷ்டமான தர்மியைக் கூப்பிட்டார். இங்கே அச்சத்தை நீக்கி என் னைப் பேசச் செய்வது வத்ஸலாக்ய விசிஷ்ட பொருளிலிருந்து நிஷ்கர்ஷித் தால் பிரித்தெடுத்த விசேஷணம்சமான வாத்ஸல்ய குணத்துக்கு மட்டும் கர்த்ருத்வ மென்கிறார். விசிஷ்டத்தில் விசேஷ்யமான பெருமாளை 'ഭവതഃ' என்று பிரித்தெடுத்துவிட்டு விசேஷணம்சமான வாத்ஸல்ய குணத்தை மட்டும் தனித்து முக்ய கர்த்தாவாகப் பேசுகிறார். 3-ம் பாதத்தில் வாத் ஸல்ய குணவிசிஷ்டனுன வத்ஸலனுக்கு (குணிக்கு) ப்ராதாந்யம். வத்ஸல குணத்திற்கு அமுக்யத்வம். 4-ம் பாதத்தில் பலமாகிய ஸ்தோத்ர கர்த்ருத் வம் ஸித்திக்கையில் பெருமானை ஆறும் வேற்றுமையினுல் அப்ரதாநமாக (விசேஷணமாக) ஆக்கி குணத்தையே ப்ரதாநமாக்கி அதைக் கர்த்தாவாகப் பணித்தார். முதலில் குணத்திற்கு அப்ராதாந்யமும் பின்பு முக்ய பக்ஷ

மாகக் குணத்திற்கு ப்ராதாந்யமும் பணிக்கப்பட்டது. அவர் குணத்தால் வரும் ஏற்றம் அவருடையதே என்பதைக் காட்ட 'உம்முடைய' என்று தனித்துப் பேசினர். 'ஏவ' என்பதால் 'உம்முடைய குணத்தானே, மற்ருெருவர் குணமல்லவே' என்னும் கருத்தை விளக்கினர். 'ஏவ' என்பதற்கு உம் முடைய இந்தக் குண மொன்றுக்கே கர்த்ருத்வம். எனக்கும் கர்த்ருத்வ மில்லை. என் கார்யங்களில் கர்த்ருத்வேந ப்ரஸித்தமான என்னுடைய முக்குணங்களுக்கும் கர்த்ருத்வமில்லை. கேவலனுன உமக்கும் கர்த்ருத்வ மில்லை. உம்முடைய மற்ற குணங்களுக்கும் இந்தக் கர்த்ருத்வத்தில் அந் வய மில்லை' என்றும் பொருள். 'സ്വതന്ത്രഃ കർത്താ' பாணினி. உலகத்தில் ஒரு ஸ்வதந்த்ரன் உளன். அவன் பெருமாளே. ஸ்வதந்த்ரனை அவரை விட்டு ஆச்ரயமில்லாமல் நிற்க யோக்யதையில்லாத ஒரு தர்மத்தைக் கர்த்தாவாகக் காட்டினுல் பாணினி கோபிப்பாரோ வென்றால அதற்காக வாத்ஸல்ய தர்மத்திற்குத் தடையில்லாத ஸ்வாதந்த்ர்யத்தை உபபாதிக்க 'നിരങ്കുശം' என்று அதன் அப்ரதிஹதமான ஸ்வாதந்த்ர்யத்தை நிர்த்தே சித்தார் போலும். இந்தக் கவிஸிம்ஹத்தின் குகை யாரறிவார்? “ஸ்ரீ രംഗ രാജ കമലാപദലാലിതത്വം” இந்த ஸ்துதி ஸாஹஸத்தில் இறக்கும் அபராதத்தைச் செய்கிறது. பெரிய பெருமாளும் பெரிய பிராட்டியாரும் சைசவம் முதல் அவர்கள் திருவடித்தாமரைப் பூக்களை எனக்குக் காட்டி என்னை ரக்ஷணம் செய்து செல்வப்பிள்ளையாக என்னை வளர்த்தனரென்ற தைர்ய மல்லவோ என்னை ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தைச் செய்ய ஸாஹஸத்தில் இறக்கினது. அந்தச் செலவத்திற்குக் குற்றமே யொழிய என் குற்றமில்லை என்றார் ஸ்ரீ பட்டர். ஸ்ரீரங்க ராஜருக்கும் ஸ்ரீரங்க நாச்சியாருக்கும் எப் படி பட்டர் செல்வக் குழந்தையோ, அப்படியே வரதனுக்கும் பெருந்தேவி யாருக்கும் தூப்புல் பிள்ளையாகிய தான் சிசுவென்று ഭാവം. ஸ்துதி ஸாஹ ஸத்தில் பட்டர் ஸாதித்ததை அநுஸரித்து இங்கும், 'ஸ்துதியில் ஸாஹ ஸத்தை' என்று கூறப்பட்டது. பட்டருடைய அநுபவ மிங்கே கவி மன தில் ஓடுகிறது. இரண்டாம் ச்லோகத்தில் ஸ்தோத்ர ஸாஹஸத்தை க்ஷமித்தருள வேணுமென்று ப்ரார்த்தித்தது கூட அவச்யமில்லை. அந்த அபராதம் உம்முடைய வாத்ஸல்யம் செய்விப்பதே யொழிய நானுகச் செய்வ தல்ல வென்கிறர்.

ഭവതീ ഗിരാ ഭീ— முகமென்னும் என்வாய் மூடினதைத் திறந்து வெண்கலக் கடையில் யானை புகுந்தாப்போல் கண கண வென்று சப் திக்கச் செய்கிறது. இங்கே 'മൗനാദ്വിമോചിതാ ഭവതി മന്ത്രാണാം' என்று ஆண்டாள் விஷயத்தில் கூறப்பட்டதை அநுஸந்திக்கவேணும்.

இரண்டிடத்திலும் ஏகரூபமான அநுபவம். ஆநந்தமயமான ப்ரஹ்மத்தின் எல்லையில்லாத ஆநந்தகுணம் வேதபுருஷனுக்கு மௌனத்தை நிர்ப்பந்தம் செய்தது. அவன் வாயைக் கட்டி விட்டது. தாயாராகிய ஆண்டாளின் குணங்கள் அப்படிக்கில்லாமல் மௌனத்தை த்வேஷித்து அதை அகற்றிக் குழந்தையைப் பேசப் பண்ணுகின்றன. முகத்தின் வ்யாபாரமாகிய பேச்சைக் கொடுப்பதை முகரமென்பர். 'ராதி' என்பது கொடுப்பதைச் சொல்லும். 'மூகம் ராதீதி' அடைத்த வாய்க்குப் பேச்சைக் கொடுக்கும் பெருமாளான வரதன் பேச்சுக்குத் தாதாவாக என்னைச் செய்கிறார். எனக்குப் பேச்சு வரங்கொடுத்து என்னிடத்தில் பேச்சு தாநம் வாங்குமிவர் பெருமையை என் சொல்லுவோம்? வரங் கொடுக்கவந்த பெருமாள் என்னை உதாரனுக்கி என்னை உதாரனென்று புகழ, எனக்குப் பேச்சு பிச்சை கொடுத்து என்னிடம் அதையே பிக்ஷை வாங்குகிறார். முகரன் என்பதற்குப் பேச்சைத் தாநம் பண்ணுகிறவனென்று பொருளானதால், என்னை அவருக்குப் பேச்சு தாதாவாகச் செய்கிறானென்று பொருளாகிறது. 'வாசாலீ கரோதி' என்பதற்கு முன்பு ஒருநாளுமில்லாத ஸ்துதி தாத்ருத்வத்தை எனக்குப் புதிதாக அளிக்கிறார். கல்ப வ்ருக்ஷகனான வரதன் என்னைத் தம் விஷயத்திலேயே உதாரனாக (தாதாவாக)ச் செய்கிறார். வரதனுக்கே ஸ்தோத்ர வார்த்தையைச் செய்யும் இந்த ஸ்தோத்ரத்தைக் கடைசி ச்லோகத்தில் 'உதாரம்' என்று பணிப்பதைக் கவனிக்க வேணும்.

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ।

யோऽநந்த: ப்ருதிவ்யாஸ் ஸஹவஹிதோ ப்ருஸந்தாம்
ஸம்ஜ்வலயந் விஷாக்நியஶ: ஸ்வயா நூர ।
சந்த்ரோஸ்ம ஹஸ்தவாரணஶ்வரணத்வமாரீஶ
பூர்ணாதேஶோ ஹஸவதே பாஷ்ய ததேவ ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

மடத்து மசோதாவின் பரித்யாகம். மடங்களைச் சீர்திருத்தம் செய்யவேண்டும் என்னும் உத்தேசத்துடன் சட்ட நிர்மாண ஸபையாருடைய பரிசீலனைக்குக் கொண்டு வரப்பட்ட மசோதாவானது பரித்யஜிக்கப்பட்டு விட்டது என்னும் ஸமாசாரத்தைக் கேட்டு நாம் மிகவும் ஆநந்திக்கிறோம்.

“ஜோஷிக ஸாயாமபி ஶ்ரேஷ்ட்யவசூதஹ்ரா” என்கிறபடி ஜகத்திற்குத் தீங்கைச் செய்விக்கக்கூடிய வஸ்து வொன்று நசித்தால், அந்த நாசத்தால் எல்லோரும் ஸந்தோஷப்படுவார்களன்றோ? இந்த மசோதா, ராஜாங்கத்தாரால் சட்டமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கும்பக்ஷத்தில், அது மஹத்தான அதர்மங்களுக்கெல்லாம் காரணமாகப் பர்யவஸித்து ஜகத்திற்கே பெரியதொரு க்ஷோபத்தை விளைவிக்கும். அம்மாதிரி அநர்த்தத்தை வரவொட்டாமல் தடுத்தது ஏதோ ஒரு ஸுக்ருத விசேஷம். அப்படிப்பட்ட ஸுக்ருதங்கள் பஹுவாக இருந்துகொண்டு இவ்வாபத்தைப் போன்ற வேறு ஆபத்துகள் நம்மை ஆக்ரமிக்க முயலும்பொழுதெல்லாம் அவ்வாபத்துக்களிலிருந்து நம்மை ஸம்ரக்ஷித்தல் வேண்டும் என்றே நாம் ப்ரார்த்தித்துக்கொண்டிருக்கிறோம். பாம்புடன் ஒரு கூரையில் வஸிப்பது போல இருக்கிறது நம்முடைய தாத்காலிக ஸ்திதி. எந்த ஸமயத்தில் எவ்விதமான ஆபத்து எவ்விடமிருந்து நேருமோவென்று எப்பொழுதும் சங்கித்துக்கொண்டே நிற்கின்றோம். அகிஞ்சனர்களான நம்மைப் பகவானே ஸம்ரக்ஷிக்கவேண்டும்.

* * * * *

“ந தே ரூபம்” என்பதின் உட்பொருள். ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸம் முதலியவைகளில் தென்படும் வாக்யங்களின் உட்பொருளை நமது ஆசார்யர்களே நன்கு அறிவார்கள் என்பது நமது ஆசார்யர்களின் திவ்ய ஸூக்திகளை ச்ரத்தையுடன் ஸேவிப்பவர்களுக்கு நன்கு விளங்கும். இதற்கு நிதர்சனமாக “ஜிதந்தா” ஸ்தோத்ரத்தில் தென்படும் ஒரு ச்லோகத்தை உதாஹரிப்போம்.

“ந தே ரூபம் ந சாகாரோ நாயுதாநி ந சாஸ்பதம் ।
ததாபி புருஷாகாரோ பக்தாநாம் த்வம் ப்ரகாஸஸே ॥”

என்பது அந்த ஸ்தோத்ரத்தின் ஐந்தாவது ச்லோகம். ஆபாததி இதன் பொருள் பின்வருமாறு தோற்றும். "ஹே பகவந்! உனக்கு ரூபமுமில்லை, ஆகாரங்களுமில்லை, ஆயுதங்களுமில்லை, ஸ்தாநமுமில்லை. இப்படியெல்லாம் இருக்கையிலும், நீ பக்தர்களுக்காக ஒரு புருஷாகாரமுள்ளவன் போல ப்ர காசிக்கிறாய்." இந்த அர்த்தத்தை நமது ஆசார்யர்கள் அங்கீகரிக்கவில்லை. இந்த அர்த்தம் ஸ்வரஸமாக ஏற்படுகிறது என்பது உண்மையே. ஆனால், ஒரு வாக்யத்திற்கு அர்த்தம் செய்கையில் கேவலம் அந்த அர்த்தம் ஸ்வரஸ மாக ஏற்படுகின்றது என்பதை மாத்ரம் பார்த்து அர்த்தத்தை நிர்த்தா ரணம் செய்வது உசிதமாகமாட்டாது. ஸ்வரஸமாய் இருப்பதுடன் எந்த அர்த்தம் ப்ரகரணத்திற்கு ஒட்டியும் இருக்கின்றதோ அதுவே சரியான அர்த்தமாகுமன்றோ? இந்த ச்லோகம் படிக்கப்படும் ப்ரகரண மென்னவென்றால்—முதல் ச்லோகத்தால் உபேயத்தை நிர்ணயித்து, இரண்டாவதால் உபாயத்தை அத்யவஸித்து, பிறகு அந்த உபாயம் கேவலம் உபாஸநத்திற்கு அங்கமாவது மாத்ரமன்று; அது ஸ்வதந்த்ரோபாயமு மாகும்; அதற்கு சிஷ்டாசாரமுமுண்டு' என்று சொல்லி, பிறகு இந்த ச்லோகத்தால், அதனுடைய ப்ராவண்யத்திற்காகப் பல பர்யந்தமான சிஷ்டாசாரம் சொல்லப்படுகின்றது. ஸர்வாதிகமான வஸ்து ஆச்ரித பாரதந்த்ரமாக இருக்கின்றது என்று நிரூபிக்கப்பட்டாலொழிய உபாயத்தில் ப்ராவண்யம் ஏற்படமாட்டாதன்றோ? ஆகையால், இவ்விடம் பகவானுடைய வாத்ஸல்ய ஸௌசீல்யம் முதலியவைகள் சொல்லப்படுமிடம். இந்த இடத்திற்கு, "பகவானுக்கு ரூபமில்லை" என்று சொல்வது எவ்விதம் பொருந்தும்? பொருந்தும் அர்த்தம் பின்வருமாறு நிற்கும்.

[illegible] [[illegible]] – உன்னுடைய ரூபம் [ஸ்வரூபம்] உன்னுடைய ப்ரயோஜநத்திற்காக வன்று; அது [ஆச்ரிதர்களுக்காகவன்றோ?]. ஆச்ரிதர்கள் தங்களையும் தங்கள் உடைமையையும் ஈச்வரனுக்காக்கி வைக்கிறது போல, ஈச்வரனும் தன்னையும் தன்னுடைமையையும் ஆச்ரிதர்களுக்காக்கி வைக்கிறான் என்பது பொருள். 'அது ஸ்வரூபத்தாலே, இது வாத்ஸல்ய ஸௌசீல்யாதிகளாலே. ஸ்வதந்த்ரமாயிருக்கிற அது பாரதந்த்ரமாய் இருக்கிலும் இருக்கும். ஸர்வ நியந்தாவானவன் ஒரு ஸம்ஸாரிக்குப் புத்ரனுமானிறே!' என்பது ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளையின் திவ்ய ஸூக்தி. இம்மாதிரியே, '[illegible]; [illegible], [illegible]' என்று அர்த்தம் சொல்ல வேண்டும்.

[illegible] – இப்படி இருக்கச்செய்தேயும் புருஷாகாரனுமிருக்கிற இருப்பு ஒருபொழுதும் குலையாதே இருக்கும்.

[illegible] – பக்தர்களுக்காகவன்றோ உன் இருப்பு? [illegible] ஆச்ரயிப்பாருக்கு எளியனாக இருக்கும் பொழுதுதான் நீ உஜ்ஜ்வலியாநின்றாய்? இதுவன்றோ ஸ்வரஸமான அர்த்தம்?

ஸ்ரீ:

ஸ்ரீ வேதாந்த தீபிகை

வேதாந்த விசாரம் செய்யும்

ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

[ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால் ப்ரசுரிக்கப்பட்டது.]

1934 - 1935

[பவ—யுவ]

ஸம்புடம்—23.

ஸம்பாதகர்: – வங்கிபுரம் ஸ்ரீ வாசுதேவாசார்யர்

சென்னை

கலாரத்நாகரம் அச்சாபீஸ்.

1935.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

(அகராதி)

23-ம் ஸம்புடம்—(1934—35)

அத்வைத ஸித்தாந்தமும் பகவத் பக்தியும் 428
ஒரு தர்மசாஸ்த்ர விஷய நிர்ணயம் 510
க்ரந்த விமர்சம் 512, 546, 570, 598, 629, 672, 745
க்ருஹஸ்தனுவது எப்படி? 669

கடிதங்கள்.—

ஆழ்வார் திருநகரி ஸ்ரீ ராமபிரான் கோயில் திருப்பணி கைங்கர்யம் ... 634
ஒரு தேவாலய ஸம்ப்ரோக்ஷணம் 599
ஒரு யோகீச்வரரின் நிர்யாணம் 757
தஞ்சை ஜில்லா ப்ராஹ்மணர் ஸநாதந தர்ம ஸம்ரக்ஷண ஸங்கம் ... 573
பம்பாய் பனஸ்வாடி ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் ப்ரஹ்மோத்ஸவம்... 572
மதுரை ஸ்ரீ வைஷ்ணவ ஸத்ஸம்ப்ரதாய ஸபா 574
வேத பாஷ்யத்தில் சில ஸந்தேஹங்கள் 678
ஸ்ரீ உபயவேதாந்த ப்ரவர்த்தந ஸபா 540
ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபா, புது மாம்பலம் 629
ஸ்ரீ மஹா மஹோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதைய ரவர்களின் 80-ம்
ஆண்டு நிறைவு விழா...... 630
ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ரக்ஷண ஸபா, ஸ்ரீரங்கம் 632, 633, 634, 674, 677, 716
ஸ்ரீமத் ஜகத்குரு அநந்தாசார்ய ஸ்வாமிகளின் 61-வது ஆண்டு விழா... 672
ஸ்ரீ ஸத்வித்யா பாடசாலே, சைதாப்பேட்டை 717
ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை, சேலம் 719
ஹிந்து மடங்களின் நிலைமை 719

குரு பக்தி 613, 649
தேவாலயங்களும் அவைகளின் தூய்மையும் ... 405, 423
ப்ரதிவாதி பயங்கரமடம், பெருமாள்கோவில் 377
பராங்குச பயோதி 393
பஞ்சமரின் ஜாதி 460
புருஷ ஸூக்தம் 467, 500, 519
மாத்ரு பித்ரு பக்தி 564, 579
மீமாம்ஸா ஸங்க்ரஹம் ... 355, 387, 417, 449, 479, 529, 547, 587, 621, 658,
[693, 749.
மோக்ஷ ஸ்வரூபம் 559, 583
ஸ்ரீ வைஷ்ணவர்களின் உபய வேதாந்தங்கள் 364
ஸ்ரீ காஞ்சி அண்ணங்காசார்ய ஸ்வாமி 374
ஸ்ரீ வேதாந்த தீபிகையைப்பற்றிய ஓர் விஜ்ஞாபநம் 385
ஸ்ரீ வைஷ்ணவ மதமும் யாகமும் 397

ஸ்ரீ விபீஷண சரணாகதி	399
ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமியின் உபந்யாஸங்கள்	411
ஸ்ரீ காஞ்சி அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் உபந்யாஸ ஸங்க்ரஹம் ...	437
ஸ்ரீ கண்ணபிரான் பெருமை	490
ஸ்ரீ தேசிகன் வைபவம்	494
ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஸ்வரூபமும் தர்மமும் ...	603, 641, 683
ஸ்ரீ க்ருஷ்ண தாதார்ய மஹாதேசிக சரிதம்	653, 704, 733
ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத்	709, 738
ஸ்ரீ நம்மாழ்வார் ஸ்துதி	715, 745
ஸ்ரீ ஸ்துதி வ்யாக்யானம்	725
ஸ்ரீ உபய வேதாந்த ப்ரவர்த்தந ஸபா, பெங்களூர்	747
ஸநாதந தர்மம்	368

ஸம்பாதகரின் குறிப்புக்கள்:—

அத்வைதமும் பக்தியும்	412
இக்காலத்திய வித்யாப்யாஸம்	577
ஓர் வித்வத் ஸபாஜநம்	579
சாரதா சட்டம்	443
தூராக்ரஹிகளின் தௌஷ்ட்யம்	[illegible]80
நமது தர்மங்களின் தத்கால ஸ்திதி ...	176
மதராஸ் தேவஸ்தாந சட்டம்	6[illegible]
மதாந்தர தூஷணம்	7[illegible]
மடங்களைப் பற்றிய சட்டம்	639
மடங்கள் ஸம்பந்தமான மசோதா	681
ரவீந்த்ர நாததாகூர்	514
வைதிக ஸம்ப்ரதாயத்தின் மாலிந்யமும் அதன் ஹேதுவும் ...	543
ஸ்ரீ வேதாந்த தீபிகை	383
ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹமும் ஸ்ரீ பரிகரவிஜயமும்	478
ஸ்ரீ பரிகர விஜயம்	575
ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, மாம்பலம் ...	576, 638
ஸ்ரீ வேதாந்த தீபிகை	600
ஸ்ரீமான் எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார்...	635
ஹரிஜனங்களின் ஆலயப்ரவேசம்	602
ஹிந்துமதமும் அதற்கு நேர்ந்துள்ள அபாயங்களும்	446
ஹிந்துமடங்கள் மசோதாவும் ஸ்ரீ அஹோபிலமட ஸம்ப்ரதாயமும் ...	720
ஸ்த்ரீகளின் வித்யாப்யாஸம்	759
க்ஷீரஸாகர ச்லோகம்	403

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]

[illegible]
[illegible]

[illegible]—

கும்? அவன் எந்த விதியினால் தேவதையினுடையவும் பித்ருக்களுடையவும் ஹோமத்தைப் பண்ணுவன்? மோக்ஷத்தை அடையுமவன் எந்த மார்க்கத்தினால் போவன். மோக்ஷமென்பது எது?

மோக்ஷத்திலிருப்பவன் என்ன காரியத்தைச் செய்வன்? எந்தக் காரியத்தினால் திரும்பி ஸம்ஸாரத்துக்கு வாரமலிருப்பன்?

'தேவதைகளுக்கெல்லாம் தேவதையாக விளங்குகிறவன் யாவன்? அப்படியே பித்ருக்களுக்கெல்லாம் பிதாவாக விளங்குகிறவன் எவன்? ஸ்ருஷ்டிக்கு விஷயமாகாத வஸ்து எது? ஓ பிதாமஹனே! இவை எல்லாவற்றையும் எனக்கு உபதேசிக்கவேண்டும்' என்கிற தர்மபுத்ரருடைய கேள்வியைக்குறித்து பீஷ்மருடைய பதில் வார்த்தையானது விஸ்தாரமாக அநேக க்ரந்தங்களினால் சொல்லப்பட்டிருக்கிறது.

அங்கு சொல்லப்புகுகிற வ்ருத்தத்தினுடைய மேன்மையானது தோஷமில்லாதவனாய் தெரியாத விஷயங்களை முறையோடு கேட்குமரசனே! ரஹஸ்யமான விஷயத்தைக் குறித்து என்னைக் கேட்கிறாய். இந்த விஷயமானது நூறு வருஷகாலம் முழுவதும் ஆலோசித்துப் பார்த்தாலும் கேவல ஊஹத்தினால் அறிந்து சொல்லக் கூடியதல்ல. என்று சொல்வதினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. மிறகு,

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

'இந்த விஷயத்தில் நாராயண ரிஷிக்கும் நாரத ரிஷிக்கும் நடந்த ஸம்வாதரூபமான பழமையான வேர் இதிஹாஸத்தைப் பெரியோர்கள் சொல்லுகிறார்கள்' என்று ப்ரமாணம் காட்டப்பட்டிருக்கிறது.

அநாதிகாலமாக இருப்பவனும், வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன் என்று நான்கு ரூபங்களை தரிப்பவனும் எல்லாப் பிராணிகளுக்கும் அந்தர்யாமியான நாராயணன் தர்மதேவதைக்குப் புத்திரனாக அவதரித்தான் என்று என் தகப்பனார் சொல்லியிருக்கிறார்.

முன்பொரு காலத்தில் ஸ்வாயம்புவ மந்வந்தரத்தில் ஹரியானவர் நர நாராயணரூபியாகவும், பிறகு ஸ்ரீக்ருஷ்ணரூபியாகவும் அவதரித்தார்.

* நித்யர்களான அந்த நர நாராயண ரிஷிகள் பதர்யாச்ரமத்தையடைந்து தங்கமயமான வண்டியிலிருந்துகொண்டு தபஸ்ஸைப் பண்ணினார்கள்.

அந்த வண்டியானது எட்டுச் சக்கரங்களோடு கூடியது. ஐந்து பூதங்களோடு கூடியது. பார்க்கிறவர்களுடைய கண்களுக்கு அழகாகத் தோன்றுமது. அவ்விடத்தில் ஆதிகாரணர்களாயும், உலகத்திற்கு நாயகர்களாயும் தவம் செய்வதினால் இளைத்து ப்ரகாசமாக தெரிகிற எலும்புகளை உடையவர்களுமாயிருக்கிற

* இங்கு காரணரூபத்தினால் நரநாராயணர்களை நித்யர்களென்கிறது.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

அந்த நர நாராயணர்கள் தபஸ்வினாலும், தேஜஸ்வினாலும், தேவதைகளினாலும்கூட பார்க்க முடியாதவர்களாக இருந்தார்கள். அவர்கள் எவர்கள் விஷயத்தில் அநுக்ரஹத்தைப் பண்ணுகிறார்களோ! அந்த மனிதர்கள்தான் அந்த நர நாராயணர்களைப் பார்க்க யோக்யராவார்கள். என்று நர நாராயணர்களின் தபஸ்ஸைச் சொல்ல ஆரம்பித்து,

அங்கம் உபாங்கங்களோடு கூடியதான எல்லா வேதங்களிலும், மற்றும் புராணங்களிலும் நீ சொல்லப்படுகிறாய். நீ புண்ணிய பாபங்களினால் பிறக்காதவன். எக்காலத்திலுமிருக்கிறவன். உலகத்தை தரிக்கிறவன். உலகத்தை ஸ்ருஷ்டிக்கிறவன். ஸம்ஹரிக்கிறவன். புருஷோத்தமன்.

முன்னிருந்ததும், பின் உண்டாகப்போகிறதுமான இந்த எல்லா உலகங்களும் உன்னிடத்திலேயே இருப்பை உடையன. 'ஹே தேவனே, க்ருஹஸ்தாச்ரமத்தின் ஆண்டாகப்படுகிறதான நான்கு எல்லா ஆச்ரமஸ்தர்களும் பல தேவதா ரூபியாகவிருக்கிற உன்னையே தினந்தோறும் பூஜிக்கிறார்கள்.

இப்படி எல்லா ப்ராணிகளுக்கும் தாயும், தகப்பனுமாயும், தேவதையுமாய் அநாதியான தத்வமுமாயிருக்கிற நீ,

[illegible]
[illegible]

இதி நாரதஸ்ய நாராயணம் ப்ரதி ப்ரஶ்ந—

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

இப்பொழுது உன்னை உண்டுபண்ணினவனை மற்றொரு எந்த தேவதையைப் பூஜிக்கிறாய். அப்படி உன்னாலும் பூஜிக்கக்கூடிய தேவன் ஒருவனிருக்கிறானா! ஓ மஹாபாக்யத்தைக் கொடுக்குமவனே, நீர் எவனை பூஜிக்கிறீர். அந்த விஷயத்தைக் கேட்கிற எனக்குச் சொல்லவேண்டுமென்று நாராயண ரிஷியைக் குறித்து நாரதருடைய கேள்வியினாலும்,

எந்த ஆத்ம வஸ்துவானது (ஸூக்ஷ்மமாயும்) ப்ரதிகாதார்ஹமாயும், ப்ரத்யக்ஷகோசரமாயும், அநுமானத்தினால் அறிய முடியாததாயும், சலிக்காததாயும், நசிக்காததாயும், இந்த்ரியங்களில்லாததாயும், ரூப ரஸ ஆதி குணங்களில்லாததாயும், ப்ராக்ருத பஞ்சபூதமய தேஹமில்லாததாயுமிருக்கிறதோ!

அந்த ஆத்மாவே எல்லா ப்ராணிகளுக்கும் அந்தராத்மாவென்றும் க்ஷேத்ரஜ்ஞனென்றும் சொல்லப்படுகிறான். அவனே ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற குணத்ரய ஸம்பந்த மற்றவனென்றும் புருஷனென்றும் சொல்லப்படுகிறான்.

'ஓ ப்ராமண ச்ரேஷ்டனே, அந்த ஆத்மாவினிடத்திலிருந்தே இந்த்ரியங்களால் அறியமுடியாத ஸத்வம், ரஜஸ், தமஸ் என்று மூன்று குணங்களோடுகூடிய ப்ரகிருதியானது உண்டாயிற்று. நித்யமாயும் இந்த்ரியங்களால் அறியப்படாததுமான யாதொரு ப்ரக்ருதி உண்டோ! அந்த அவ்யக்தமான ப்ரக்ருதி தானே வ்யக்தங்களான ஸர்வ வஸ்துக்களிலுமிருக்கிறது.

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

காரணாவஸ்தையை யடைந்ததாயும், கார்யாவஸ்தையை யடைந்ததுமான யாதொரு ப்ரக்ருதி உண்டோ! அதையே எங்களுக்குக் காரணமென்று தெரிந்துகொள். கீழே சொல்லப்பட்ட அவ்யக்த காரணமான ஸர்வாத்மாவானவனே! தேவகார்யங்களிலும் பித்ருகார்யங்களிலும் பூஜிக்கப்படுகிறான்.

ஓ பிராமணனே! அவனைக்காட்டிலும் உயர்ந்தவனான மற்றொருவனை பிதாவும் மற்றொரு தேவனும் கிடையாது. அவன் எங்களுக்கு ஆத்மாவென்று அறியத்தகுந்தவன். ஆகையினால் நாங்கள் அவனை பூஜிக்கிறோம்.

உலகங்களின் பாவங்களைப் போக்கி சுத்தமாக்குகிறதான வேதமர்யாதையானது அவனாலேயே ஸ்தாபிக்கப்பட்டது. தேவதைகளுடைய பூஜையும் பித்ருக்களுடைய பூஜையும் எல்லாராலும் செய்யப்படவேண்டியதென்று அவன் ஆஜ்ஞைபண்ணியிருக்கிறான்.

ப்ரம்மா, ருத்ரன், மனு, தக்ஷர், ப்ருகு, தர்மர், தபஸ் தமர், மரீசி, ஆங்கிரஸ், அத்ரி, புலஸ்தியர், புலஹர்.

க்ருது, உயர்ந்த ஸ்தானத்திலிருக்கும் வஸிஷ்டர், விவஸ்வாந், ஸோமன், கர்தமர், அவிதர், க்ருதர், விக்ருதி, என்று உண்டாயிருக்கிற 21 பேர்களும் ப்ரஜாபதி.

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ॥
[illegible] ॥

என்று சொல்லப்படுகிறார்கள். இந்த 21 ப்ரஜாபதிகளும் மேலே சொல்லப்பட்ட பரமாத்மாவினுடைய அனாதியான ஆஜ்ஞையை பூஜிக்கிறார்கள் என்றபடி.

ப்ராம்மண ச்ரேஷ்டர்களான மஹர்ஷிகளாலும் தேவபூஜை, பித்ருக்களுடைய பூஜைகளையும் அந்த பரமாத்மாவினுடைய ஆஜ்ஞையினாலேயே உள்ளபடியே அறிகிறார்கள்.

மற்றும் தங்களுடைய புத்தி சக்தியினால் அறியப்பட்ட விஷயங்களையும் அந்த பரமாத்மாவினுடைய அநுக்ரஹத்தினாலேயே தெரிந்துகொள்கிறார்கள்.

ஸ்வர்க்கலோகத்திலிருக்கிறவர்களான எந்த ப்ராணிகளும் அந்த பரமாத்மாவை நமஸ்கரிக்கிறார்களோ, அவர்களும் அவனுடைய அநுக்ரஹத்தினால் அவனால் உத்திரவு பண்ணப்பட்ட பலத்தோடுகூடின மார்க்கத்தையடைகிறார்கள்.

எந்த ப்ராணிகள் 17 விதங்களான குணங்களினாலும் 17 விதங்களான கர்மங்களினாலும் விடப்பட்டார்களோ! அவர்கள், இந்த்ரியங்கள் 10, பூதங்கள் 5, ஆக 15 கலைகளையும் விட்டு முக்தியை அடைகிறார்களென்பது நிச்சயம்.

மோக்ஷத்தை யடைந்தவர்களால் விரும்பக்கூடிய பலமானது க்ஷேத்ரஜ்ஞன்தான் என்று சொல்லப்படுகிறான். அவன்தான் மற்றும் எல்லாராலும் ஆச்ரயிக்கப்படுகிறவன், என்றும் ஸத்வாதி குணமில்லாதவன் என்றும் சொல்லப்படுகிறான்.

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ।

அந்த பரமாத்மாவே. ஜ்ஞானயோகத்தினால் பார்க்கப்படுகிறான். ஆகையினால் நாங்களும் இந்த ஸம்ஸார மண்டலத்தில் அந்த பரமாத்மாவை ஸாக்ஷாத்கரிப்பதற்காக அநாதி வித்தனான அவனை பூஜித்து வருகிறோம்.

பல தேவதாந்தர்யாமியாக இருக்குமவனை வேதங்களும் ஆச்ரமங்களும் பக்தியோடு பூஜிக்கின்றன. இங்கு வேதாச்ரமங்கள் பூஜிக்கிறதாவது வேதத்தில் நிஷ்டையை உடையவர்களும் ஆச்ரமத்தில் நிஷ்டையை உடையவர்களும் பூஜிப்பதே. அவன் அவர்களுக்கு வேண்டிய ஸர்வ பலன்களையும் கொடுக்கிறான்.

எந்த மனிதர்கள் இந்த உலகத்தில் அவனிடத்திலேயே நம்பிக்கை உடையவர்களாய் அவனையே த்யானம் செய்கிறார்களோ! அவர்கள் அவனுடைய தேஜோமயமான வைகுண்டலோகத்தை ப்ரவேசிக்கிறார்கள். இது அவர்களுக்கு அதிக பலமாக ஸம்பவிக்கிறது.

ஓ நாரதரே, மிகவும் ரஹஸ்யமான இந்த உபதேசமானது உமக்கு என்னால் சொல்லப்பட்டது. இந்த விஷயமானது அந்த நாராயணரிஷியிடத்தில் பக்தியினாலும் எங்களிடத்திலும் பக்தியினாலும் உம்மால் கேட்கப்பட்டது. உமக்கு உபதேசிக்கப்பட்டதென்று தாத்பர்யம்.

இப்படி நாராயணனுடைய பதில் வாக்யத்தினால் தர்மபுத்ரருடைய கேள்விக்கு பதில் சொல்லப்பட்டது. அங்கு எந்த தேவதையை பூஜிக்க வேண்டியது என்கிற கேள்விக்கு நான்கு ஆச்ரமங்கள் என்பது முதலான வாக்யங்களினால் பதில் சொல்லப்பட்டது.

[illegible] ||

[illegible] ||

[illegible] ||

[illegible] ||

[illegible] ||

[illegible] ||

எவனால் ஆத்மாவுக்கு ஸ்திரமான ஸ்வர்க்கமுண்டாகும், எவனால் மோக்ஷமுண்டாகும் என்கிற கேள்விக்கு அந்த பரமாத்மாதான் எல்லா பலன்களுக்கும் 'கதி' என்கிற வாக்யத்தினால் பதில் சொல்லப்பட்டது. இங்கு 'கதி' என்கிற பதத்திற்கு 'உபாயம்' என்று அர்த்தம்.

முக்தனானவன் எந்த பலத்தை அடைகிறான் என்கிற கேள்விக்கு முக்தர்களுக்கு பரமாத்மாவே கதி என்கிற வாக்யத்தினால் பதில் சொல்லப் பட்டது. இங்கு 'கதி' என்கிறபதம் பயனைச் சொல்லுகிறது.

மோக்ஷத்தின் ஸ்வரூபம் எப்படிப்பட்டது என்கிற கேள்விக்கு முக்தனானவர்கள் ப்ரஹ்ம ஸ்வரூபமான தேஜஸ்ஸை ப்ரவேசிக்கிறார்கள் என்பதினால் பதில் சொல்லப்பட்டது.

ஸ்வர்கத்திலிருக்கிறவன் என்னகார்யத்தைச் செய்கிறான் என்பதற்கு 'ஸ்வர்கஸ்தா அபி' என்கிற வாக்யத்தினால் பதில் சொல்லப்பட்டது.

தேவதைகளுக்கெல்லாம் எவன் தேவன். பித்ருக்களுக்கெல்லாம் எவன் பிதா என்கிற கேள்விக்கு 'பிதா மாதா ச' என்கிற வாக்யத்தினால பதில் சொல்லப்பட்டது.

ஸ்ருஷ்டிக்கு முன்காலத்திலிருந்த தத்வம் எது என்கிற கேள்விக்கு 'சாச்வதம் தத்வம்' என்கிற வாக்யத்தினால் பதில் சொல்லப்பட்டது.

மான்மதத் திலகமார் மதிநிகர் வதனமுங்
காண்மணத் திடுகலா ரத்தொடை கமழ்தரும்
வாணிகர்த் திடுமகன் மார்பமும் மீனவன்
றூணிலைத் திடுபெருந் தகைமையுந் தன்மையும். 128

மன்னுமிம் மழகிய மாமணை வாளனைப்
பன்னரும் பாவெனுந் தொடையலான் மறையினின்
முன்னணிந் தென்னவிம் முருகவிழ் கைத்தொடை
தன்னிலிங் கணிகநீ தாழ்த்திடா தென்றனள். 129

வேறு

இன்னண மிசைத்த லோடு மெம்மனை யெழுமா னந்தர்
தன்னினின் றளிய ரும்பு மகரந்தத் திமைக டண்மை
மன்னுமிஞ் சகத் தூடார் கருமணி யளிய கண்க
ளென்றுதண் ணிலத் தார்முன் னரங்கன்றோ ளியைச் சாத்தி. 130

மற்றுமோர் மலர்ந்த வல்லி யருகுறுந் தருவைத் தாவிப்
பற்றவங் கெழுவ தென்னப் படர்ந்துகைம் மலரிற் பற்றும்
பொற்றகல் லார மன்னும் புதுமணத் தொடைய ருனு
முற்றிழை யணிந்து முன்னர் முகமதி வணங்கி நின்றாள். 131

சுரகணஞ் சொரிந்த பூமா ரியினின்றும் பொய்கை யோகி
வரர்முத ரடியா ரானந் தக்கணீர்த் துளியின் மாயன்
விரவுறு மலதா ரத்தோர் விழைந்துகா ளெக்கத் தோடும்
விரைகமழ் தொடைய லந்த வரங்கன்றோள் வீழ்ந்த தம்மா. 132

சூடிமுன் கொடுத்தாள் சூட்டுஞ் செங்கிதக் குவளை மாலை
பாடிய வரங்க னோரா ரகலஞ்செங் கதிரோன் கீழ்பால்
மேருறும் பொருப்பி னுச்சி நின்றுதன் காங்கண் முந்த
லோடுறப் பரப்பு நீல வானென வொளிர்ந்த தன்றே. 133

ஆங்குதென் னரங்கத் தம்மா னறநெறி வதுவை யாற்றற்
கோங்குயர் பரவை மன்னன் மீதிவர்ந் தெவிய விட்ட
கோங்கிள முலையா ளோடும் வகுளபூ டணன்றன் கோயிற்
பாங்குற மிடையும் வையம் படர்மறு கெழுந்த காலை. 134

அவனருச் சாவ தார வரிகளு மயனே யாதி
திவிசர் களுமின் பொய்கைத் திருமல ரெழுந்தோ ராதி

நவையறு மாழ்வா ராரு நானிலம் புகழ்ந்து போற்றக்
குவிகொடு தொடர்ந்து போந்த கோலமார் குறிக்கற் பாலார். 13

நித்திலக் கவிகை யாங்கே பணிபதி நிழற்றி னேற்
கற்றைவெண் கவரி காற்றின் கடற்றிரை வர்களுங் கொண்டார்
சித்திரச் சிவிறி மின்னு மிருசுட செடுக்க வீச
சுத்திரா மர்களும் பொன்னங் குண்டமே சுமந்து போந்தார் 13

இயக்கர்தம் பதியு மாங்கே யேந்தினன் மணிக்கா ளாஞ்சி
மயக்கிடு முனிவ ரேனு மாதர்க ணடலஞ் செய்தார்
துயக்கறு மறைக ளோதித் தொழுதுநான் மறையோ ராழ்ந்தார்
புயற்குல மிடிப்ப தென்னப் பறைக்குலம் பொதுளி யார்த்த. 137

12-வது சருக்கம்

வேறு

பலவாய பொழிலாய பலகைக்க ணூலைபாத
பகவென்னு மளவின்றியே
நலமாய கழகங்க ளவைசெய்த வினையென்று
நவியாது முறைநாடியே
வலமாய தன்செய்ய தமைகொண்ட வுருவாய
மலர்மங்கை யுந்தானுமே
குலவாவ கந்துய்ய வட்டாடு திருமாலி
னடிகண்டு குறைவிண்டதே. 1

பெருமானெ ழுப்வீதி நிரைகொண்ட வரையுண்ட
பெருமாட மண்ணீடெலாம்
விரைநாறு மந்தார மலர்மாலை யணிசெய்து
வில்வீசு மணிதுன்னிய
வுரையாறு ஞற்றுந்த சும்பன்று பலவாரி
பூரித்த வொருநீரன
நிரையாய மைத்தோங்கு கடைதோறுங் குலைவாழை
முதலாய நிலைநாட்டினர். 2

மறுகெங்கு மாகந்தை வருபல்ல வணமுண்ட
துகிலந்த கருகோடியே
நறுமின்ப ளிப்பாணி தேக்கிப்ப சுங்கால்க
ளைக்துன்ன காலுவித

முறுமென்ம லர்க்குப்பை முழுதும்ப ரப்பித்த
ஞெளிநித்திலத் தொளிபதா
நிறைமாம ணித்தோர ணங்கண் மிசைத் தாங்கி
நிலவப்பிணித் திட்டனர். 3

அம்மாம ணித்தோர ணத்தோளி நிலவுற்ற
தாகாய தலமெங்கணு
மம்மாமி னும்வான விகலாளி கொல்லென்ற
யிர்த்தாரங் குள்ளாரெலா
மம்மான ரங்கத்தி னெழுமந்த வெழில்காண
வம்மாந கர்ப்பெண்டனை
யம்மாம கந்தோறு நசையானெ ழுந்திட்ட
கோலாக லந்தன்னமோ. 4

ஒருமாத ரொருகாத ணிந்திட்ட குழையோடு
முயர்மாட மிவர்கந்தனை
டிருமாதி னெருபூவை தீட்டஞ்ச னத்தேக
கழியோடு செலவுற்றனள்
குருமாம ணிப்பொற்சி லம்புற்ற வொருதாளி
னெருதேர்கை குருகும்றனள்
வருமாமு லைக்குற்ற கலைசோர வொருதைய
லுணராது வலிதோடினள். 5

மற்றோரெ ழிலமங்கை மணிமாட மீதேறு
விரைவின்னெ திர்மின்னுறும்
பொற்றேம றங்கஞ்ச னம்பித்தி யுண்மன்னு
பொருவற்ற தன்னீழலை
நற்றோழி யெனவுள்ள மருளாம கிழ்ந்தன்பி
னங்காய்வி ரைந்தேகுகண்
பெற்றேம தன்பேறு பெறுவோம ரங்கன்ற
னுயர்கோல மிவணோக்கியே. 6

புரியாழ்ந ரம்பன்ன புகலாரு மொருநங்கை
பிறையாரு நுதலிட்டிட
மருவாரு நறுநான மலராரு துனியங்கு
லிக்கண்வ கித்திட்டன
டிருவாழு லனமார்பன் வருகோல மதுகாணும்
விரைவுற்ற செயலானெனிர்

விரியாடி யூடிற்ற மூகனீழல் வளைஇற்க
விழைவுற்று வக்குற்றனள்.

தன்றோழி யொருதாளை யன்போடு செம்பஞ்சி
யின்சேறு தாளூட்டுவான்
மென்றும ரைக்கையின் மிசைகொள்ள வலளந்த
விழவிற்கெ முஞ்சிக்கையி
னன்றோங்கு மலருடு நனிநாற சோகத்தி
விடுதோக ளச்செய்கையுங்
துன்றேரி ரிங்கூந்த லத்தோகை மேற்செய்து
துணைவிற்ற ணங்தேகினன். 8

பேரோர்கி தம்பத்து கில்சேர முகிலொன்று
பெருகோதி யுஞ்சேர்தர
நாராய ணன்றன்னை நனிவீழ்ந்த லங்கோல
மாயோடு மொருமெல்லியல்
சீராரு துவராப திப்பேரை முன்கூவி
முறையிட்ட செலவாயினு
ளோரார்ந்த னள்ளோனு மிவளோரி டும்பைக்கு
மிடனுத வின்றிங்கரோ. 9

வேறு

மின்னு நூபுரந் தோளிலுங் கேயூர மிளிரும்
பொன்ன டிக்கணு மேகலை பொலியுகந் தாத்து
மன்னு தண்மணி வடங்கழ தடத்துமோ கமங்கை
யின்ன வண்ணமே யிழைபல வணிந்தனள் விரைவால். 10

கூறு நானவைம் பாலவிழ்ந் தலையவோர் நங்கை
யேறு போழ்துமே லகங்குழ லிருந்துவீழ் பிணையல்
வீற ணங்கனி விரைகெள விடுத்தவம் பலங்க
ளூறு இன்றது கடுத்ததன் கலருட னடுவண். 11

கோதை யென்னயின் கோதையார் கோதையை யுதவி
மாத வன்புய மறைப்பனென் றன்னினு னெனவோர்
கோதை சேர்தருங் கூந்தலி னெலியல்கைக் கொண்டா
ளாதரத் தாங்கன்மு னின்றகங் குழைந்தன ளாமால். 12

நான மாசொடு நகைநிலா வெறிந்தொளிர் வதன
மீன நாமகத் திரள்பல மின்னனுர் தங்கள்
வான காடுறு மேலக வரிசைகண் முழுது
மான பொற்பல கணிகளுள் ளவைதொறு மமர்ந்த. 13

உழையி னுக்கியர் நாணமொ டகப்பணி யொருவா
மழையி னின்னிற மாயவ னெழுதரு மருகிற்
கழையி னேர்கர தங்கணத் தொடும்பொறி சிதறி
நுழையி னுறலர்க் கணைகளா னுந்தகங் கண்டார். 14

மேலின் மின்னிய விமானம திடைமிடைந் திமையா
தேனு மின்விழ விதப்பெற நோக்குறு நாருங்
கோல மாரிமை யவர்களுங் குறித்துவே றுணரார்
நூலி னோர்களு நடங்குறு மனத்தொடு நின்றார். 15

அண்ட நாயகன் மருகனு யமைவுறுந் திருவைக்
கொண்ட கோதையை யீன்றிடுங் குரவர்கள் முன்ன
மண்டு தீயிடை மணந்தரி திழைத்தசெந் தவம்போற்
பண்டு மண்ணிடைப் பரிந்திழைத் தவரெவ ருளரோ. 16

தெங்க ரம்பையுட் டிகழ்தரு வரங்கநா யகன்றன்
தொங்க லர்ந்ததா ருரத்தகல் இற்கிலாள் குலவப்
பொங்கு மாசையிற் கோதையின் புதுமண முறலான்
மங்கை மார்களிற் பெருந்திரு மணந்தவ ளவளே. 17

கோதை வானவ ரியாவரு நோக்குறக் குலவுந்
தாது விழ்ந்ததார் தடம்புயஞ் சூட்டிய தகையான்
மாத வன்றிரு வருச்சைக ளனைத்தினு மறையு
மோத ரும்பகட் டாங்கனே யுயர்ந்தவ னுமால். 18

அங்கி யைம்முக னுதவ னுயிரங் கண்ண
னங்க மில்லவ னரியிவர்க் கருஞ்சுவா கையுமை
தங்கு சாயையஞ் சசிரகு தாக்கணம் இவ்போ
லங்கி னர்ந்தகோ தையுமரங் கற்குரித் தானன். 19

என்று னங்களித் திசைத்திடும் புரிபரி வையரின்
றன்றி ருஞ்சுவைத் திருமொழி திருச்செவித் துளையா
னன்று கொண்டவர்க் கருங்கடைக் கணிப்புற நல்கிச்
சென்று மாறனின் திருமனை வாயிலிற் செறிந்தான். 20

ஏறு கலையிற் றிகிரி விழியினு ரின்மேன்
மோக மோடிருந் துய்த்திடு மரங்களின் முன்னர்ப்
போக மென்மலர்க் கந்துகம் புள்ளர சிறகின்
வேக வாயுவிற் றகைப்புறப் புறம்படலம் வீழ்ந்த. 21

ஓங்கு வாயிலி லுவணன்மீ துறைதர வுலகம்
பாங்கி னுய்ந்திட வெழுந்திடும் பராங்குச முனி
யாங்கி ளர்ந்திடு மடியவர் சுருப்புர முதலாந்
தீங்கி கந்தநீ ராசன விதிதெரிந் திழைத்தார் 22

மேரு வில்லின்ன மென்மலர்க் கரம்பிடித் தவனன்
சீரு றுத்திருச் செங்கயிற் புறக்கிருந் திழியா
வார ணத்தயன் சுவத்திய யனைஞ்சொல மாற
னேரி ருந்தடங் காட்டிட வெழுந்தன னென்ப. 23

வேறு

எங்கும் கதலி கமுகங்க ளியைந்து முத்தந்
தங்குந் தொடையன் மலர்த்தார்களுந் தாழ்ந்த பல்ல
தொங்கும் மணியின் சுடர்மின்னு மனேக தோரணைச்
சங்க முதல பலபுட்ப டலங்கள் சான்ற. 24

மெய்யார் துகிலி னகயுளாண் பெடை மீது காதல்
செய்யா வனப்பிற் றொகாடல் செறிந்து தூங்கி
யொய்யா ரமாயங்க தன்பின் படரெண் மையாக
வேயாயி ரங்கோடிக ளெங்கு மலங்க வார்ந்தும். 25

தண்ணி லத்தின சரமேற் பலகா லவந்த
வெண்ணற் சவியின் விசித்துள்ள துகூல மற்றும்
வண்ணத் துயர்ந்த தவளத்தொளி மலி மின்ன
வெண்ணற் கரியவிருஞ் செம்மைக ளின்னு மேய்ந்த. 26

வதுவைக் கமைத்த மணிமண்டப காப்ப னூலிற்
சதுரத் திழைக்க மணிமேடையி னிட்ட சந்தம்
புதுநற் றவிசின் மணவாளனும் பெண்ணும் புக்கு
முதமுற் றிருக்கச் சடகோப முனிவர் செய்தார். 27

விண்ணின் குரவன் விளம்புஞ்சுப மூர்த்தர் தன்னிற்
பெண்ணும் பிளையு நறுநீர்படிந் தாடை சாத்தி

மண்ணும் மணியி னணியோ பெறுமற் றணிந்து
கண்ணும் கருத்தும் கவர்ந்துள்ளவர் காட்சி தந்தே 28

மனைமீ திருக்க மலரோனவர் பூங் கரத்திற்
பனைபல் கறங்க மணிக்கங்கணம் பண்பி னார்த்துத்
துணையா மமரர்க் கெரிவானவன் றாய செய்யி
னளேபா தெழும் பச்சிலையோடவி யார்ந்து பெய்தான். 29

சீரார் பருதிமணி யின்செம்மலர்ச் செங்கரங் கொண்
டேராய் வருடி யிலகும்வெயில் வேந்த னென்னப்
போரா ரயினோர் விழிமாதரின் பூங்கரத் தேக
காரா ரரங்கன் கரம்பற்றுபு மிக் கொளிர்ந்தான். 30

ஆசைப் பெருக்கத் தனங்கன் சொரி யம்பதென்ன
மாசற் றவத்தம் பதிகண்மலர் மாலும் கையில்
வாசச் சுவேத வளநீரும் புறம தங்கே
நேசத் தபாணி க்ரகணந் திகழ்ந்தந் நேரம். 31

ஒருவர்க் கொருவ ரவனேக்குறு மொத்த பார்வை
பெருகிக் களிப்பி னெழுவாயிற் பெருமி நாண
மருகித் தளர்ந்து மிகவாஞ்சையு மாங் கெழும்பப்
பருகற் கினியா யுடன்மற்றெழும் பாங்கி னன்றே. 32

அத்தம் பதிகள் வலஞ்செய்திகை யாங் கெழுந்த
சுத்தம் பெருகு முயர்தீவலஞ் சூழ வந்தார்
புத்தம் புதிய வரவிந்த மலரை வைக
லொத்தங் கரச வனஞ்சுற்று மிரண்டை யொப்ப. 33

பொன்னன்ன வூர்தி புகலப்புகழ் கோதையை யன்
னன்னிங்க ரத்தி லொளிர்தன் மலர்த்தண் கரத்தான்
மனனுஞ்ச மழ்ப்பின் மருளும்மட மானி னேக்கின்
மின்னுஞ் சுடரிற் பொறியோம மிடைந்து செய்தாள். 34

அக்கா லவியின் மணமுண்டெழு மந்த வோம
மிக்கா ரொழுங்கின் கருந்தும மிளிரு மின்னு
மொக்கா தகோதை பொளியார்முக வாரி சத்திற்
புக்கா வெழும்புங் கரும்புட்கல மாலை போன்ற. 35

மற்று மிரங்கண் மகவானரன் சொல்ல மாயன்
சிற்றே ரிடையா ளிதயந்திகழ் செம்ம ணிக்க
ளுற்றே யிலகுற் கொனும்பூவடி நான்கு கையிற்
பற்று வெடுத்தம் மியின்மீது பரிந்து வைத்தான். 36

இவ்வா றவளை மணந்தே யயனீ ஈனுதி
யவ்வா னவர் போற்றிசைப்பத் திசழ்ந்தன்ன வைய
னெவ்வா வமுத வுததிக்க ணெழுந்த காமர்ச்
செவ்வாய் மயிலைச் செறிகாவினுங் கண்டனின்றால். 37

வேதன் கபாலி முதற்றேவரை விண்டு சேனை
நாதன் மதுர கவிநாரணன் மூர்த்தி யெல்லா
மோதும் மதுரைக் கிறைகாவலர் தம்மை யோர்ந்தே
யேதம் படாது சிறப்புச்செய வீங்கு மன்னே. 38

வகுளா பரணர் பணித்தாருடன் பொய்கை வந்த
தகையார் முதலாந் திருத்தேவியின் றந்தை யார்கண்
மகிழா வணைந்த திருமங்கைா சாச னத்திற்
குகவா வரங்க ளுயர்முத்தி யவர்க் களித்தான். 39

வேறு

சூடிமுன் கொடுத்த தோகைத் தாயருந் தாதி மாருஞ்
சேடியர் குலமு மெண்ணும் வரமெலாஞ் சிறப்பி னீந்தே
யாடியிற் கபோலத் தாளோ டறைதரற் கரிய சீரின்
மாடிய சயன கோல மணவறை மணந்தான் மன்னே. 40

ஆவிபோ லரிய மேனி யவையுமொன் றாக வாங்கே
காவியங் கண்ணு ளோடுங் கலந்துகண் வளருங் காலை
மேவிய புலரி கண்ட சடசித்தர் முதல மேலாந்
தீவிய வடியா ரையன் றுயிலெழத் தெருட்ட லுற்றார். 41

ஐயதன் பதங்க ளாலே யடியுறு மாழ்கு மாசைச்
செய்யபற் பினியின் செய்தி யுணர்ந்துருத் தெழுந்த செங்கேழ்
வெய்யவற் கிரிந்து தண்ணென் விதுகலை தளர்ந்து சோர
வெய்யெனக் குடயில் வெற்பி னொளிந்துய வோரு மன்றே. 42

அம்பரந் தணந்து இன்ன மவிரவம் பராசை யாய
கொம்பனை யவளைக் கூடித் தாரகை மறைந்து மாழ்கத்
தம்பொலி விழந்து சோருங் கரங்களிற் றளருங் காமி
யிம்பரிற் கிடப்ப தென்ன விலகுமம் புலியு மாலே. 4

குமுதினி குடக்குப் பெண்ணின் மலைமுலைக் கோட்டில் வீழ்தர்
வமுதமா கிரணகாய்க ணகத்தையை யறிந்து சாம்பி
யமதிலாம் வதனங் கூம்பித் தயங்கிய நயன்மா றார
ழுழுதைய விறைவ னுற்றன் மாளினி கணமு முண்டே. 4

ஸ்ரீ

வேதாந்த தீபிகை

வைதிக ஹிந்து மத ஸம்பந்தமான
ஓர் உயர்ந்த மாதத் தமிழ்ப் பத்ரிகை.

வருஷச் சந்தா: ரூ. 3
தனிப் பிரதி: அணா 5

குறிப்பு

(1) தீபிகையின் ஸம்பந்தமான ஸகல விஷயங்களையும் மணியார்டர்கள் விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட வேண்டிய வ்யாஸங்கள் உள்பட எல்லாவற்றை யும் "ஸம்பாதகர், வேதாந்த தீபிகை, ராமஸ்வாமிதெரு, மாம்பலம், சென்னை" என்னும் விலாஸத்திற்கு அனுப்ப வேண்டும்.

(2) தபாலில் அனுப்பப்படும் ஸஞ்சிகைகள் சரிவர எல்லாச் சந்தாதாரர் களுக்கும் போய்ச் சேரவில்லை என்று நாம் அறிகின்றோம். ஒவ்வொரு மாஸத் திலும் இரண்டாவது மூன்றாவது தேதிகளுக்குள்ளாகவே ஸஞ்சிகைகளெல் லாம் தபாலில் சேர்ப்பிவிக்கிறபடியால் அடுத்து வரும் மாஸம் 5 அல்லது 6 தேதி களுக்குள் சந்தாதாரர்களிடம் அவை சேரவேண்டும். அப்படி அவை சேரா விட்டால் சந்தாதாரர்கள் தயவு செய்து அதை உடனே மானேஜருக்குத் தெரி விக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

(3) இந்த வர்ஷத்தியச் சந்தாவை இன்னும் செலுத்தாமலிருக்கும் சந்தா தாரர்கள் விளம்பமின்றிக்குச் சந்தாவைக் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள விலாஸத் திற்கு அனுப்ப க்ருபை செய்தால் ஸௌகர்யமாக இருக்கும்

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை,
ராமஸ்வாமி தெரு,
மாம்பலம், தியாகராயநகர் போஸ்ட்,
மதிராஸ்.

Registered No. M. 916.

Sri Vaishnava Siddhanta Prachara Sabha Ltd.

An Institution under the above designation has recently been registered under the Iudian Companies Act for the purpose of promoting and propagating the doctrines of Sri Vaishnava Religion and Philosophy. The Company published a Memorial Edition of Sri Vedanta Desika's Works, in Nagari Script. 'NYAYA SIDDHANJANAM' with the commentary of Sri Rangaramanuja Swami and with an introduction by Mahamahopadhyaya Ramanuja Vijayadhvaja Kapisthalam Desikacharia Swami is abcut to be issued.

Shares in the Company of Rs. 50 each are payable by convenient instalments. The following are the office-bearers of the Company.

Sriman	V. V. Sreenivasa Iyengar, B.A., B.L.	*President*
"	K.S. Krishnasawmi Iyengar. B.A., B.L. Advocate.	*Genl Secy.*
"	R. Kesava Iyengar., M.A., B.L.	*Exec: Secy.*
"	T.D. Sreenivasachari, M.A., B.L.	"
"	S. Aravamuda Iyengar, B.A., B.L. Advocate.	*Treasurer.*
"	N.T. Shamanna, Solicitor.	*Director*
"	M. Sudarsana Iyengar, Merchant.	"
"	C.V. Venktaramana Iyengar, B.A , B.L. Coimbatore.	"
"	T.E. Satakopachariar, B.A., B.L. Cuddalore.	"

It is requested that all Sri Vaishnavas will take shares i[n] and otherwise co-operate with the work of the Company.

The registered Office of the Company is at 'Nigamant[a] Nilayam' Edward Elliots Road, Mylapore. Memorandum [of] Association and any other information may be had on applic[a]tion to the Registered Office of the Sabha.

Printed by K. R. Press, and published by Vankipuram S. Vasudevachariar for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Madras.

Vol. 24] AUGUST 1935 [Part. 2

Editor: V. V. Srinivasa Aiyangar

ஸ்ரீ
வேதாந்த தீபிகை

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால்
ப்ரசுரிக்கப்படும் மாதாந்தரத்
தமிழ்ப் பத்திரிகை.

OFFICE OF THE REGISTRAR
20 SEP 1935
MADRAS

யுவஹூ ஹரி ஆடிமீ

பத்ராதிபர்:—
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

CONDUCTED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,

MADRAS.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை.

1. பத்ராதிபரின் விஜ்ஞாபநம்:— ... i

2. மீமாம்ஸா ஸங்க்ரஹம் :—[திவான் பஹதூர்
ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்.] ... 41

3. திருவள்ளுவரும் ஸ்ரீ வைஷ்ணவமும்:—
[பந்தல்குடி மாடபூசி. ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி,
திருவல்லிகேணித்தமிழ்ச் சங்கம்.] ... 50

4. ஸ்ரீ க்ருஷ்ண தாதார்ய மஹாதேசிக சரிதம்:—
ஸ்ரீ. உப. வித்வாந். ஐபா க்ருஷ்ணதாதாசார்யர்] ... 60

5. வரதராஜ பஞ்சாசத்:—[ஸ்ரீ. உ.ப. A. V. கோபாலாசாரியர்,
M. A. B. L. அட்வோகேட், திருச்சி.] ... 63

6. கடிதங்கள்:— ... 73

7. பரிகர விஜயம்:—[புத்தங்கோட்டகம் வித்வான்
ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்.] ... 155

8. தீவ்ய ஸூரி சரிதம்:—
[வங்கீபுரம் கோழியாலம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 153

ஸ்ரீ:

ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்

(1) ஸ்ரீ பஞ்சஸ்தவம்: ஸ்ரீ ஸ்துதி—
ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரால் இயற்றப் பெற்ற
ஒரு தமிழ் உரையுடன் கூடியது ... ரூ 0 2 0

(2) ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:—[ஸ்ரீ ஆளவந்தாரால் அநுக்ர
ஹிக்கப்பட்டது. ஸ்ரீ. பெரியவாச்சான் பிள்ளையின்
வ்யாக்யாநத்துடன் கூடியது] ... ... ரூ 0 8 0

(3) ஜிதந்தே ஸ்தோத்ரம்:—[ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை
யின் வ்யாக்யாநத்துடனும் புத்தங்கோட்டகம்
வித்வாந் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யருடைய
வ்யாக்யாநத்துடனும் கூடியது ... ... ரூ 0 6 0

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸ்,
ராமஸ்வாமி தெரு,
மாம்பலம், தியாகராயநகர் போஸ்ட்,
மதிராஸ்.

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ||

வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

ஸம்பு. 24] யுவ ஸூ ஆடிமீ [ஸஞ்சிகை 2

ஸ்ரீ:

பத்ராதிபரின் விஜ்ஞாபநம்.

'ஸ்ரீ வேதாந்த தீபிகை' யென்னும் இம்மாதாந்தரத் தமிழ்ப்பத்ரிகை, நாநாதேச வர்த்தமாநங்களை மட்டும் தெரிவிக்கும் பத்ரிகைகள்போல் அல்லாமல் தெய்வ வழிபாடு, கர்மம், ஜ்ஞாநம், பக்தி முதலிய துறைகளில் மாந்தர்க்கு அறிவை விளைவிக்கும் பத்ரிகையாகும். இது சற்றேறக்குறைய இருபத்துநான்கு வர்ஷங்களாக நடைபெற்றுவருகிற தென்பதை நமது நேயர் பலர் நன்கறிவர். இது தொடக்கத்திற் சிலகாலம் ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையாராலும், பிறகு ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையாராலும், நடத்தப்பட்டு, இப்பொழுது ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால் ப்ரசுரிக்கப்பட்டு வருகிறது. சென்ற இருபத்துநான்கு வருஷகாலமாக இப்பத்ரிகைக்கு ஸ்ரீ. உ. வே. டி. டி. ராஜகோபாலாசார்யர், ஸ்ரீ. உ. வே. ஸ்ரீ. வாஸுதேவாசார்யர், ஸ்ரீ. உ. வே. தி. த. ரங்காசார்யர், ஸ்ரீ. உ. வே. நடாதூர் ஸ்ரீநிவாஸாசாரியர், ஸ்ரீ. உ. வே. மஹாமஹோபாத்யாய திருவஹீந்த்ர

புதூர் வித்வான் சேட்லூர் நரஸிம்ஹாசார்யர், ஸ்ரீ. உ. வே. என். ஸ்ரீநிவாஸ ராகவய்யங்கார் முதலிய இன்னோர், அவ்வப்போது ஸம்பாதகர்களாக இருந்து இதனைப் பெரிதும் போற்றிவந்தனர். சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், இப்பத்ரிகை, நடத்துவாரின்றி அடியோடு நின்றுவிடவே, ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்ய ஸ்வாமி மிகவும் சோசித்துத் தமது இயற்கைப் பெருங் கருணையாலும், நமது ஸித்தாந்தத்திலுள்ள ச்ரத்தாதிக்யத்தாலும், தமது அந்தரங்கருள் ஒருவரைக் கொண்டு 'ஸ்ரீ வைதிகமத தீபிகை' என்ற பெயருடன் தாமே ஸம்பாதகராக இருந்து நடத்திவந்தார். அவ்வாறே இரண்டு மூன்று மாதங்கள் கழிய, பிறகு அப்பத்ரிகை 'ஸ்ரீ வேதாந்த தீபிகை' என்னும் பெயருடன் மீண்டும் நிலவலாயிற்று. இவ்விஷயமும் நமது தீபிகாபிமாநிகளுக்குத் தெரிந்திருக்கக்கூடும்.

இப்பத்ரிகை ஆரம்பித்தது முதல், ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்ய ஸ்வாமி இதற்கு ஹஸ்தாவலம்பம் கொடுத்திராத பக்ஷத்தில் இப்பத்ரிகை இருந்த இடம் தெரியாமலே போயிருக்கும். இந்த ஸ்வாமியின் ஜ்ஞாநாநுஷ்டாநங்களைப் பற்றிப் புகழ்ந்துபேச நாம் ஸர்வதா அநர்ஹர். இந்த ஸ்வாமி பாஷாந்தரத்தை அப்யஸித்து, நமது சாஸ்த்ரங்களில் தெளிந்த ஞானத்தையும், த்ருடமான விச்வாஸத்தையும், அவற்றிற்கு அநுகுணமான வைதிகாசாரத்தையும் உடையவராவதோடு, எழுதப் புகும் விஷயங்களைத் தெளிவான நடையில் யாவரும் நன்கு அறியும்படி எழுதும் யோக்யதையும் உடையவ ரென்பது நமது தீபிகையைப் படிக்கும் நேயர் யாவரும் நன்கறிந்துள்ளார்கள்.

இந்த ஸ்வாமி தத்காலம் தமக்குள்ள கார்யாந்தரங்களாலும், திருமேனி அசக்தியாலும், தீபிகையின் ஸம்பாதகராயிருக்கும் இக்கைங்கர்யத்திலிருந்து நிவர்த்தித்துக் கொள்ளவேண்டு மென்று தெரிவித்தார். அந்த ஸ்வாமி ஏற்கெனவே வாநப்ரஸ்தாச்ரம ரீதியில் ரிஷிதுல்யராய் எழுந்தருளியிருப்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே. ஆதலால் அந்த ஸ்வாமிக்கு இனிமேலாவது இந்தப் பத்ரிகை ஸம்பந்தமான எல்லாப் பரத்தையும் தாமே வஹிக்கவேண்டிய ச்ரமத்தை நிவர்த்திசெய்து, அந்த ஸ்வாமிக்குத் திருமேனியின் ஸௌக்யமும் மனக்கவலையில்லாத சாந்தியும் உண்டாகுமாறு செய்வதும் நம்மவர் எல்லோர்க்கும் ப்ராப்தமான ஒரு கைங்கர்யம். அது பற்றி அந்த ஸ்வாமி தெரிவித்துக்கொண்டதை அநுஸரித்து ப்ரசாரக ஸபையார் அடியேனைச் சில காலமாவது இப்பத்ரிகையின் ஸம்பாதக ஸ்தாந

ஸம்பந்தமான கார்யங்களை நடத்திவரவேண்டு மென்று ஆஜ்ஞாபித்தார்கள். அதற்கு இணங்குவதல்லால் வேறு மார்க்க மில்லாத அடியேன், அந்த விஷயத்தில் ஸர்வதா சக்தனாகவாவது அதிகாரியாகவாவது இல்லாமலிருந்த போதிலும், 'இது கர்த்தவ்யமான கைங்கர்யம்' என்று கருதி ஒப்புக்கொள்ளவேண்டியதாக நேரிட்டது.

நம் ஸம்ப்ரதாயத்தில், இப்பத்ரிகை ஒன்றுதான் இதுவரை இருந்து வருகிறது. இதற்கு ஆயிரக்கணக்காகச் சந்தாதாரர்கள் ஏற்பட்டால் இன்னும் இதை விஸ்தரித்துச் செவ்வையாய் நடத்தலாம். யாதுகாரணம் பற்றியோ நாளது வரையில் அவ்விதமான வைபவம் இப்பத்ரிகைக்குக் கிடைக்காதது சோசநீயம் தான். வ்யர்த்தமான கதைகளும் ஹாஸ்யமான விஷயங்களுமே அமைந்த பத்ரிகைகள் பதினாயிரக்கணக்காக நமது தேசத்தில் ப்ரசாரமடைந்து வருகின்றன வென்பது எல்லாருக்கும் தெரிந்திருக்கக்கூடும். அவை நிரவதிகமாக இருக்கும் விஷயத்தில் நமக்கு பொறாமை சிறிதும் கிடையாது. ஆனால் நமது ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்த அனைவர்க்கும் மிகவும் முக்யமான தத்வ ஹித புருஷார்த்தங்கள் மூன்றும் செவ்வனே தெரிந்துகொள்ளக் கூடியதான வேதாந்த சாஸ்த்ர விஷயமாய் ஏற்பட்ட இந்தத் தீபிகை, இந்நாட்டில் விசேஷமான ப்ரசாரத்தை அடைய வேண்டுமென்று கோருவதில் எவ்விதமான தோஷமும் இல்லை. இப்பத்ரிகை இதுவரையிலுமே விசேஷமான ப்ரசாரத்தை அடையாததற்கு, அதில் ப்ரசுரிக்கப்பட்டு வரும் விஷயங்கள் பண்டிதர்களுக்கு மாத்ரமே உபயுக்தமாகிற தென்பதும், ஸாதாரணமாய் ஸம்ப்ரதாயத்தில் ச்ரத்தை உள்ளவர்களுக்கு ப்ரயோஜநகரமாய் ஆவதில்லை யென்பதுமே காரணமாது மென்று அநேகர் சொல்லக் கேட்டிருக்கிறோம். அதையும் யோசித்து, இனிமேல் நம் ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்த பண்டித பாமரர் எல்லாருக்குமே உபகாரகமாகும்படி அநேகமாய் விஷயங்களை சேகரம் செய்து ப்ரசுரிக்க வேண்டு மென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆதலால், நம்முடைய ஸித்தாந்தத்தைச் சார்ந்த அனைவரும் இப்பத்ரிகைக்குச் சந்தாதாரர்களாகி, இந்தப் பத்ரிகையைப் புனருத்திக்குக் கொண்டுவரக்கூடிய விஷயத்தில் உதவிசெய்ய வேண்டுமாறு ப்ரார்த்திக்கப்படுகிறது.

அடியேன் வேதாந்த வைதிக விஷயங்களில் கிஞ்சிஜ்ஞனாயிருந்தபோதிலும், அடியேன் இப்பத்ரிகையின் ஸம்பாதக ஸ்தாநத்தை ஒப்புக்கொண்டு

நடத்துவதால், இந்தப் பத்ரிகையிலும் அதன் விஷயங்களிலும் அடியேனைப் போன்ற லௌகிகர்களுக்கும் ப்ரவேசமும் ப்ரயோஜநமும் உண்டென்று எல்லாரும் அறிந்துகொள்ளக்கூடு மாகையால், அதையும் இப்பத்ரிகைக்கு ஒரு புரோவ்ருத்திக்குக் காரணமாகக் கருதவும் இடமுண்டு. அதுவுமன்றி, ஸம்பாதகர் என்பது பத்ரிகைக்கு விஷய ஸம்பாதநம் மாத்ரம் செய்வதினாலே ஏற்பட்ட நாமகரணமாதலால், விஷயப்ரதாநம் பண்ணக்கூடிய ஸ்வாமிகளை ப்ரார்த்திப்பதிலும், பத்ரிகையைப் படிப்பவர்களுக்கு ஆகர்ஷகமாகவும் ஹிதமாகவும் உள்ள விஷயங்களைத் தேர்ந்தறிவதிலும், சக்தர்களாயிருக்கிறவர்கள் ஸம்பாதக ஸ்தாநத்தை ஒப்புக்கொண்டு நடத்தக்கூடு மல்லவா? மேலும் ஸ்ரீ. உ. வே. வாஸுதேவாசார்ய ஸ்வாமி இந்தப் பத்ரிகைக்கு ஏகதேசத்தில் ஸம்பாதகராயிருந்து தத்காலம் நிவ்ருத்தி செய்துகொண்டிருப்பதை யோசித்து, அடியேன் இந்தப் பத்ரிகை ஸம்பந்தமாய் "விஷய ஸம்பாதக கமிட்டி" என்று ஒன்று ஏற்படுத்தி அதில் அந்வயிக்க வேண்டுமென்று நம் தமிழ்நாட்டிலுள்ள அநேக மஹா பண்டிதர்களை ப்ரார்த்தித்திருக்கிறேன். அவர்கள் அனைவருமே அடியேனுடைய ப்ரார்த்தனைக்கு க்ருபையாய் இணங்கி அநுக்ரஹிப்பார்களென்று த்ருடமாய் நம்பியிருக்கிறேன். அவ்விஷயமும், அப்படி ஒப்புக்கொள்ளும் பண்டிதர்களுடைய திருநாமங்களும் விவரமாக அடுத்த ஸஞ்சிகையில் தெரிவிக்கப்படும்.

தவிர: இப்பத்ரிகையானது, வேதாந்த சாஸ்த்ரத்தை நமது ஜீவதசையில் எந்த விதத்திலும் தீபம்போல் வழிகாட்டி நமக்குப் புலப்படுத்துவதற்காகவே முக்யமாய் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகக் கருதுவதே உசிதம். ஸித்தாந்த நிர்த்தாரண விஷயத்தில் ஏற்கெனவே பரமாசார்யர்கள் செய்து வைத்திருக்கும் க்ரந்தங்களே எவ்வித வாதத்துக்கும் வாக்யார்த்தத்துக்கும் போதுமானவை. அப்படிப்பட்ட உத்தமாதிகாரிகளுக்கு இந்தப் பத்ரிகை உபயுக்தமாக உத்தேசிக்கப்பட்டதன்று. ஸித்தாந்த ஸம்ரக்ஷண விஷயத்தில் அவ்வித அதிகாரிகள் அவ்வப்பொழுது நேரிடும் ஆக்ஷேபங்களுக்கும் ப்ரதிகக்ஷிகளுக்கும் தகுந்த ஸமாதாநம் செய்தருள்வது அவர்கள் பரமாகவே யிருக்க, அது விஷயத்தில் ஸாதாரணமான வ்யக்திகளுக்கு ப்ரவேசம் கூட இருக்க அவகாசம் இல்லை. வாதமும் ஸித்தாந்த ஸ்தாபநமும் அவச்ய கர்த்தவ்யங்களாக ஏற்பட்டிருப்பினும்,

அவைகளே புருஷார்த்தங்களாகக் கருதவும் இடமில்லை. ஆதலால் நம்முடைய ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த அனைவர்க்கும் முக்யமாய் அறியக்கூடியதும் அறியவேண்டியதும் யாதெனில்: ஏற்கெனவே நிர்த்தாரணம் செய்யப்பட்டிருக்கும் தத்வ ஹித புருஷார்த்தங்களை ஜீவ தசையில் ஆசாராநுஷ்டாந பர்யவஸாநமாகச் செய்யவேண்டு மென்பதே. வ்யாகரணம், தர்க்கம், வேதாந்தம், மீமாம்ஸை, முதலான சாஸ்த்ரங்களில் அநேக வர்ஷங்கள் பரிச்ரமப்பட்டுப் பாரங்கத பாண்டித்யம் ஸம்பாதித்தவர்களில், எத்தனைபேர் தாங்கள் கற்ற சாஸ்த்ரங்களை ஜீவதசையில் ப்ரதிதிநமும் அநுஷ்டாநத்துக்கு உபயோகமாக்கி, நடவடிக்கைக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதை ஆலோசிக்கும்போது, நூற்றுக்கு எத்தனைபேர் தேறுவார்கள் என்பது யோஜிக்கவேண்டிய விஷயம். அது காரணம்பற்றிக் கூடியவரையில் இந்தப் பத்ரிகையானது எல்லார்க்குமே வேதாந்த விசாரம் மாத்திரமாய் இல்லாமல், வேதாந்த அப்யாஸமாகவும் ஆகவேண்டுமென்னும் நோக்கத்துடனேயே நடைபெற வேண்டுமென்பது அநேகருடைய அபிலாஷை. அதுவுமன்றி, அநேக நூற்றாண்டுகளுக்கு முன் செய்யப்பட்ட ஸித்தாந்த நிர்த்தாரணமானது காலதேச வர்த்தமாநங்களால் அசிந்த்யமாய் வேறுபட்டிருக்கும் ப்ரஸ்துத தசையில் எவ்விதம் புரோவ்ருத்திக்குக் கொண்டுவரக் கூடுமென்றும், பாச்சாத்ய ஸம்பர்தத்தால் மனக்கலக்கமோ அலக்ஷ்யமோ ஏற்பட்டிருக்கும் நம்மவர்களில் அநேகர்க்கு எவ்வித வகையாய் வேதாந்த சாஸ்த்ரத்தின் ஔத்க்ருஷ்ட்யத்தையும் ஸாதுதமத்வத்தையும் உபதேசித்து ஊட்டக்கூடுமென்று தெரிந்து, அதுவிஷயத்தில் ஸாத்யமான கைங்கர்யத்தைச் செய்வதே இந்தப் பத்ரிகையின் முக்யமான கருத்து. அப்படியில்லாமல் சர்வித சர்வணம் என்பதே புருஷார்த்தமாகாது. அத்யுத்தமமான நமது வேதாந்தசாஸ்த்ரத்தை ஆசாராநுஷ்டாந பர்யவஸாநமாக ஆக்கும் விஷயத்தில் அநேக விதங்களில் நம்மால் செய்யக்கூடிய கைங்கர்யங்கள் உண்டு. இந்தப் பூலோகத்தில் உள்ள மற்ற தேசங்கள் யாவற்றிலும் அநேக மஹான்களும் ஸபையோர்களும் ஆத்மதத்வம், ஆத்மசக்தி, ஆத்மதர்மம், ஆத்மாநந்தம் முதலான விஷயங்களில் எவ்வளவோ ஆராய்ச்சி செய்துகொண்டு வருகிறார்கள். அப்படியிருக்க, இந்தப் பரதகண்டத்தில் அத்யுத்தமமான வேதாந்தசாஸ்த்ரத்துக்கு ஏகபோக வாரிஸுகளாக ஏற்பட்ட நாம், அதை எவ்வளவோ அநாதரவு செய்துவிட்டுப் புரோவ்ருத்தி விஷயத்தில் ப்ரயத்நம் இல்லாமலே இருந்து வருகிறோம். இவ்வித காரணங்களையெல்லாம் யோஜித்து, இனிமேல் கூடியவரையில் அடி-

யிற்கண்ட ஒவ்வொரு விஷய ஸம்பந்தமாயும் தீபிகையில் ஒவ்வொரு பாகம் ஏற்படுத்தி, அந்தந்தப் பாகத்தில் அவைகளைக் குறித்த ஆராய்ச்சிகளையும் யோஜனைகளையும் அநுபவங்களையும் ஸஹ்ருதயர்களாயிருக்கும் எல்லாரும் எழுதிவர வேண்டுமென்று இந்தப் பத்ரிகையைப் புதிதாய் ஏற்றுக்கொண்டிருக்கும் ஸபையாரின் மநோரதம்.

அவ்விஷயங்களாவன:—

1. மந்த்ரங்களின் தத்வ விசார பாகம்,
2. ஆத்ம சக்தி தத்வ விசார பாகம்,
3. ப்ராசீந ஆசார அநுஷ்டாநங்களின் தத்வ விசார பாகம்,
4. ப்ரகாசிக்கப்படாத க்ரந்தங்களின் ஆராய்ச்சி பாகம்,
5. பாச்சாத்ய சாஸ்த்ரங்களால் வேதாந்த நிரூபண பாகம், என்பன.

மேற்கண்ட விஷயங்கள் மாத்ரமே யல்லாமல் கூடிய சீக்ரம் ஆரம்பித்து, முக்யமான எல்லா உபநிஷத்துக்களுக்கும் பதவுரையும், அவச்யமான இடங்களில் சுருக்கமான வ்யாக்யாநமும் சேர்த்துத் தீபிகையின் அநுபந்தமாய் அச்சிட்டு ப்ரசுரப்படுத்த ஏற்பாடுகள் நிறைவேறி வருகின்றன.

இன்னும் கூடியவரையில் அநேக விதங்களாய்ப் புதிதான விஷயங்களையும் ரீதிகளையும் அவலம்பித்துத் தீபிகையை நடத்திவர ஸங்கல்பித்திருக்கிறோம். ஆதலால் தீபிகையின் சந்தாதாரர்கள் யாவரும், தமது சந்தாக்களைக் காலத்தில் செலுத்துவதோடு, இன்னும் நமது ஸித்தாந்தத்தில் ச்ரத்தையாவது ருசியாவது உள்ளவர்களையும் தீபிகைக்குச்சந்தாதாரர்களாகச் செய்ய வேண்டுமென்று ப்ரார்த்திக்கப்படுகிறது. ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்ய ஸ்வாமி நிவர்த்தி செய்துகொண்டது தீபிகா ப்ரசுர விஷயத்தில் தமக்கு இருக்கும் ச்ரமத்தை மாத்ரமே தான். அந்த ஸ்வாமியே இனிமேலும் இந்தப் பத்ரிகைக்கு ப்ரசாரகராக (Publisher) இருப்பது மல்லாமல், விஷய ஸம்பாதக கமிட்டியில் ஒருவராக இருக்கவும் க்ருபையாய் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

வி. வி. ஸ்ரீ.
பத்ராதிபர்.

ஸ்ரீ:

ஸ்ரீ [illegible] நம:

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

வேதாந்த தீபிகை

ஸம்பாதகர்:—வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்.

ஸம்பு. 24] யுவ ஹு ஆடிமீ [ஸஞ்சிகை 2

ஸ்ரீ:

மீமாம்ஸா ஸங்க்ரஹம்

[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்]

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஸித்தாந்தம்:—ப்ரக்ருதியான தர்ச இஷ்டியில் வியாபாரங்களைச் செய்யும் க்ரமம் இன்னது என்று ஏற்பட்டிருக்கிறது. அதைப் பார்த்து பசுயாகத்தைச் செய்கையில், வியாபாரங்கள் வரும்போது, அவைகளைச் செய்யும் க்ரமத்துடனேயே வருகின்றன. அந்த க்ரமத்தைவிட்டு, ஒரு வியாபாரத்தை மாத்திரம் கொண்டு போவதானால், முன் வியாபாரம் பின் வியாபாரத்தை நினைவுக்குக் கொண்டுவாராமல் போகும். அதைச் செய்வது மறந்துபோகும். ஆகையால் ஏற்பட்ட க்ரமத்தை மாற்றாமல் ப்ரயாஜங்களோடு முடியும் வியாபாரங்களைக் கீழே கொண்டுபோக வேண்டும். இதற்கு அபகர்ஷம் என்று பெயர். இதற்குத்ததர்தந்யாயம் என்று பெயர். (அதி–12)

165. இப்படியே ஸவநீய பசுயாகத்தில் ஒரு வாக்யம்.—'[illegible]' என்பது. ஸோமயாகத்தில் கடைசி

யில் அக்நிஷ்டோம ஸ்ாமத்தைக் காநம் செய்த பிறகு, ஆக்நிமாருதசஸ்த்ரம் படிக்கப்படுகிறது. அதற்குமேலே அநுயாஜ ஹோமங்களைச் செய்யவேண்டியது என்று விதிக்கப்படுகிறது. ப்ரக்ருதியான அக்நீஷோமீய பசுயாகத்தில் ஸ்விஷ்டக்ருத் யாகமும் இடாபக்ஷணமும் ஆனபிறகு அநுயாஜ ஹோமங்களைச் செய்யவேண்டியது. சொன்ன வாக்யத்தால் அவைகளை நிறுத்தி வைத்து ஸோம யாகங்களை முடித்து, அப்புறம் செய்யவேண்டியது. இப்படி மேலே கொண்டுபோவதை உத்கர்ஷம் என்று சொல்லுகிறது. கீழே சொன்ன காரணத்தாலே அநுயாஜ ஹோமங்கள் முதலான அங்கங்களையும் மேலே கொண்டுபோக வேண்டியது. இதற்கு தந்த்ராதிந்யாயம் என்று பெயர். (அதி–12)

166. கீழ்ச்சொன்ன ந்யாயங்கள் வியாபாரங்களுக்கு ஒன்றோடு ஸம்பந்தம் இருந்தால் வரும். ஸம்பந்தமில்லாத இடங்களில் அவைகள் வரமாட்டா. உதாரணம்: அக்நிஷ்டோமத்தில் ஸோமத்தை ஹவிர்தாநத்துக்கும் அக்நியை ஆக்நீத்ரமண்டபத்துக்கும் கொண்டுபோய் வைத்து, வைஸர்ஜந ஹோமங்களுக்கு மேலே கொண்டுபோக வேண்டும். வேதத்தில் இவைகளைச் சொல்லி, பிறகு யூபத்தை வெட்டுவது சொல்லப்படுகிறது. ஒருவாக்யம் "தீக்ஷாவஸாநே யூபம் சி²நத்தி" என்பது. தீக்ஷாகாலத்தில் இந்த வியாபாரம் அபகர்ஷம் செய்யப்படுகிறது. ஆகையாலே யூபத்தை வெட்டும் வியாபாரம் ஸோம அக்நிகளின் ப்ரணயநத்தையும் கீழே கொண்டு போகுமா என்று ஸந்தேஹம். போகாது என்று தீர்மானம். ப்ரணயநம் ஸோமயாகத்துக்கு அங்கம். யூபத்தை வெட்டுவது அக்நீஷோமீய பசுயாகத்துக்கு அங்கம். இரண்டுக்கும் ஒன்றுக்கொன்று ஸம்பந்தமில்லை; கிரமமுமில்லை. சொல்லப்பட்ட யூபச் சேதநத்துக்கு மாத்திரம் அபகர்ஷம். (அதி-14)

முதல்பாதம் முற்றிற்று.

இரண்டாவது பாதம்.

167. முன் பாதத்தில் ச்ருதி முதலான பிரமாணங்களாலே கிரமம் விதிக்கப்பட்டது. அந்தக் கிரமத்தின் விசேஷம் சில இடங்களில் பதார்த்தாநுஸமயமாயிருப்பதும், வேறிடங்களில் காண்டாநுஸமயமாயிருப்பதும் இந்த பாதத்தில் விசாரிக்கப்படுகிறது.

வாஜபேய ஸோம யாகத்தில் ப்ரஜாபதி தேவதையின் பதினேழு பசுக்களுக்குஒவ்வொன்றுக்கும் உபாகரணம் முதலான ஸம்ஸ்காரங்களைச் செய்யவேண்டியது. அவைகளை எந்த க்ரமமாய் செய்கிறது என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—ஒவ்வொரு பசுவுக்கும் எல்லா ஸம்ஸ்காரங்களை ஒன்றின்பின் ஒன்றாய்ச் செய்யவேண்டியது. ஒரு பசுவுக்கு ஆனபிறகு வேறு பசுவுக்கு அவைகளைச் செய்ய வேண்டியது. ப்ரதாநமானதை அங்கங்களுடன் கூடச் செய்கிறது என்று ப்ரயோக விதி இருக்கிறது. அப்படிச் செய்தால் தான் ஸம்ஸ்காரங்கள் ஆகிய தர்மங்களுக்குச் சேர்க்கை (ஸாஹித்யம்) இருக்கும். ப்ரகிருதியான அக்நீஷோமீய பசு யாகத்தில் ஸம்ஸ்காரங்கள் சேர்ந்தே செய்யப்படுகின்றன. அதைப் போலவே இதையும் செய்யவேண்டியதாகையால், ஸம்ஸ்காரங்களை ஒவ்வொரு பசுவுக்கும் சேர்த்தே செய்ய வேண்டும்.

ஸித்தாந்தம்:—விதிவாக்கியத்தில் "ஸப்தத³ஶ ப்ராஜாபத்யாந் பஶூந்" என்று 'பஶூந்' என்கிற ஒரேசொல்லால் பசுக்களுக்குச் சேர்க்கை சொல்லப்படுகிறது. அப்படியே "வைஶ்வதே³வீம் க்ருத்வா ப்ராஜாபத்யைஶ்சரந்தி" என்கிற வாக்கியத்தாலும் ஒரேகாலத்தில் எல்லாப் பசுக்களுக்கும் சேர்ந்தே வியாபாரம் செய்யவேண்டியது என்றும் காட்டப்படுகிறது. இந்த வாக்யங்கள் ப்ரத்யக்ஷமாயிருக்கின்றன. ஆகையால் ப்ரபலம். தர்மங்களின் சேர்க்கைக்கு இரண்டு காரணங்கள் சொல்லப்பட்டன. (1) ப்ரயோகவசநம். ஒரே ப்ரயோகத்தில் எல்லா தர்மங்களும் சேராவிட்டால், சில தர்மங்கள் இல்லாமையால், ப்ரயோகவிதிப்படி நடக்கப்படவில்லையென்று அர்த்தாபத்தி ப்ரமாணத்தால் தர்மங்களின் சேர்க்கை வேண்டியது. இது ப்ரத்யக்ஷ வசநத்தைக் காட்டிலும் துர்பலம். (2) ப்ரகிருதியில் இருப்பதாலே, இங்கேயும் தர்மங்களின் சேர்க்கை வேண்டுமென்பது அநுமாநத்தாலே ஏற்படும். ஆகையால் துர்பலம். ஆகையால் பசுவின் சேர்க்கை பாதிக்கப்படாமைக்காக, முதல் ஸம்ஸ்காரத்தை எல்லாப் பசுக்களுக்கும் செய்து, அப்புறம் இரண்டாவது ஸம்ஸ்காரத்தை செய்கிறது. அதையும் எல்லாப் பசுக்களுக்கும் செய்தபிறகு மூன்றாவது ஸம்ஸ்காரம். இப்படிச் செய்வதற்கு பதா³ர்தா²நு ஸமயம் என்று பெயர். இப்படிச் செய்யும்போது தர்மங்களின் சேர்க்கை இல்லாமல் போகவில்லை. ஒரே ப்ரயோகத்தில் எல்லா ஸம்ஸ்காரங்களும் செய்யப்படுகின்றன. (அதி–1)

168. பதார்த்தாநு ஸமயம் என்கிற க்ரமம் எல்லா இடங்களிலும் கூடாது. உதாரணம் (1) அச்வத்தைத் தாநம் செய்கிறவன் ஒரு இஷ்டியைச் செய்யவேண்டியது. அதில் வருணதேவதைக்கு நாலு கபால புரோடாசங்களைச் செய்து கொடுக்கவேண்டியது. குதிரைகள் எத்தனையோ, அவ்வளவு புரோடாசங்கள். குதிரைகள் நூறானால் நூறு புரோடாசங்கள் வேண்டியது. இங்கே பதார்த்தாநு ஸமயம் கூடாது. முதல் ஸம்ஸ்கா

ரத்தைச் செய்துகொண்டு நாலாவது புரோடாசத்துக்குப் போவதற்குள் சுட்ட கபாலங்களில் வைக்கப்பட்ட புரோடாசங்கள் உலர்ந்து சாம்பலாய்ப் போய்விடும். ஆகையால் ஒவ்வொரு புரோடாசத்துக்கு எல்லாத் தர்மங்களைச் செய்து மற்றவைகளுக்குப் போகவேண்டியது. இதற்குக் காண்டாநு ஸமயம் என்றுபெயர். (அதி-2)

(2) சில யாகங்களில் பதினொரு யூபங்கள் வேண்டியது. ஒவ்வொன்றுக்கும் அஞ்ஜநம் (நெய்யினால் தடவுகிறது), தூக்கி நடுவது முதலான வியாபாரங்களைச் செய்யவேண்டியது. ஆதி முதல் கடைசிவரையில் யஜமானன் யூபத்தைத் தொட்டுக்கொண்டிருக்க வேண்டியது. அதை விடக்கூடாது. இங்கே காண்டாநு ஸமயம்தான் கூடும். (அதி-5)

169. கீழே சொன்ன இரண்டு க்ரமங்களில் எதைச் செய்யவேண்டியது என்று முடிவுபண்ண "பதார்த்தம்" என்பது இன்னது என்று தெரிய வேண்டும்.

(1) நிர்வாப விஷயத்தில்—'சதுரோ முஷ்டீந் நிர்வபதி' என்பது வாக்யம். ஒவ்வொரு முஷ்டியும் ஒரு பதார்த்தமா? அப்படியானால், பூர்ணமாஸ இஷ்டியில் இரண்டு புரோடாசம் வேண்டுமாகையால், முதல் புரோடாசத்துக்கு ஒரு முஷ்டி, இரண்டாவது புரோடாசத்துக்கு ஒரு முஷ்டி எடுத்துச் சேர்த்து, அப்புறம் இரண்டாவது; அதன் பிறகு மூன்றாவது; அதன்பிறகு நாலாவது என்று ஏற்படும். எது பதார்த்தம் என்று உலகத்து யுக்தியைக் கொண்டு தீர்மானிக்கக்கூடாது. வேதம் என்ன சொல்கிறது என்று பார்க்க வேண்டும். ஒரே விதியால் தெரிவிக்கப்பட்டது ஒரு பதார்த்தம். விதி நாலு என்கிற ஸங்க்யையோடு கூடிய முஷ்டிகளைத் தான் சொல்லுகிறது. ஆகையால் நாலு முஷ்டிகளும் சேர்ந்து ஒரே பதார்த்தம். ஒவ்வொரு முஷ்டியும் அந்த பதார்த்தத்தின் பாகம். பூர்ணமான பதார்த்தமன்று.

இப்படியே ஆக்நேய புரோடாசத்துக்கு எட்டு காபாலங்களையும் வைப்பது ஒரே பதார்த்தம். (அதி-3)

(2) அவஹநந விஷயத்தில்—மான் தோலைப் போடுவது; அதின்மேல் உரலை வைப்பது; அதில் நெல்லைப்போடுவது; குத்துகிறது; முறத்தாலே புடைப்பது-என்கிற வியாபாரங்களைச் செய்யவேண்டும். இவைகள் வெவ்வேறு பதார்த்தங்களா? அப்படியானால் சில இஷ்டிகளில் வெவ்வேறு தானியங்களைக்கொண்டு வந்து புரோடாசங்கள், சருக்கள் செய்யவேண்டியது. பதார்த்தாநு ஸமயப்படி செய்வதானால், அநேக மான் தோல்கள், உரல்கள் உலக்கைகள் வேண்டும். பதில் 'வ்ரீஹீநவஹந்தி' என்பது விதிவாக்யம். அவ

ஹநநம் என்பது ஒரே பதார்த்தம். மான் தோலைப் போடுவதில் ஆரம்பித்து அரிசியாவதுடன் முடிக்கிறது. ஆகையால் ஒரு தானியத்துக்கு அவஹநநத்தைச் செய்து, இன்னொரு தானியத்துக்குச் செய்யலாம். ஒரே மான் தோலையும், உரலையும், உலக்கையும் கொண்டு வரிசையாய் எல்லாவற்றையும் அரிசியாகப் பண்ணலாம். (அதி-7)

(3) ஹவிஸ்ஸை அவதாநம் செய்யும் விஷயத்தில்—"த்விர்ஹவிஷோ அவத்யதி" என்று ஒரு வாக்யம் இருக்கிறது. இரண்டு தடவை ஹவிஸ்ஸிலிருந்து எடுப்பது ஒரு பதார்த்தம். அக்னிதேவதைக்கு இப்படி எடுத்து வைத்து ஹோமம் செய்யாமல், அக்னீஷோம தேவதைக்கு அவதாநம் செய்கிறதா? என்றால்,

பதில்—அவதாநம் முதல் ஹோமம் வரையில் ஒரே பதார்த்தம். அவதாநமில்லாமல் ஹோமம் செய்யமுடியாது. ஹோமவிஷயமான விதியாலேயே அவதாநம் ஹோமத்துக்கு அங்கம் என்று ஏற்படுகிறது. ஆகையாலேதான் 'சதுரவத்தம் ஜுஹோதி' என்று ஒரே விதியால் அவதாநத்துடன் கூடின ஒரே ஹோமம் என்கிற பதார்த்தம் விதிக்கப்படுகிறது. நாலு தடவை எடுக்கப்பட்டது (சதுரவத்தம்) ஹவிஸ்ஸிலிருந்து இரண்டு தடவை எடுக்கப்படுவதாலும், உபஸ்தரணத்துடனும் அபிகாரணத்துடன் சேருவதாலும் ஆகிறது என்று காட்டுவதற்காக "த்விர்ஹவிஷோ அவத்யதி" என்று சொல்லப்பட்டது. ஆகையால் அவதாநம் முதல் ஹோமம் வரையில் ஒரே பதார்த்தம். (அதி-4)

இரண்டாவது பாதம் முற்றிற்று.

மூன்றாவது பாதம்

170. இந்தப் பாதத்தில் இரண்டு நியாயங்கள் சொல்லப்படுகின்றன. முதலாவது விக்ருதி யாகங்களில் விதிக்கும் ஸங்க்யையை ஆவ்ருத்தியாலே ஸம்பாதிக்க வேண்டும் என்பது.

ப்ரக்ருதியான தர்ச இஷ்டியில் ப்ரயாஜங்கள் ஐந்து. அக்னீஷோமீய பசுயாகத்தில் "ஏகாதச ப்ரயாஜாந்யஜதி" என்று ஒரு வாக்யம் இருக்கிறது. இதின் பொருள்— பதினொரு ப்ரயாஜயாகங்களைச் செய்கிறது—என்று. ஐந்து ப்ரயாஜங்களை எப்படிப் பதினொன்றாகப் பண்ணுகிறது என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:— ப்ரயாஜங்களை உத்தேசித்துப் பதினைன்று என்கிற குணம் விதிக்கப்படுகிறது. ஆகையால் ப்ரதானமான ஒவ்வொன்றுக்கும் இந்த ஸங்க்யை விதிக்கப்படுகிறது என்று ஒப்புக்கொள்ள வேண்டும். உத்தேச்யமான ப்ரயாஜங்களின் ஸாஹித்யத்தைச் சொல்லுவதில் கருத்தில்லை.

ஸித்தாந்தம்:— ஒவ்வொரு ப்ரயாஜத்தின் ஸ்வரூபத்தைக் கொண்டே பதினைன்று என்னும் ஸங்க்யையை ஸம்பாதிக்க முடியாது. ஐந்து ப்ரயாஜங்களின் தொகையினாலும் முடியாது. ஆகையால் அவைகளின் ப்ரயோகத்தின் வழியாகத்தான் அது ஏற்படும். ப்ரயோகத்தை ஆவ்ருத்தி பண்ணலாம். அதாவது அவைகளைத் திருப்பிச் செய்யலாம். (அதி — 1)

ப்ரயாஜாந் என்கிற சொல்லுக்கு ப்ரயோகிக்கப்பட்ட ப்ரயாஜங்கள் என்று லக்ஷணைவ்ருத்தியால் பொருள். ப்ரயாஜாந் என்கிற சொல்லாலே அவைகளின் சேர்க்கை (ஸாஹித்யம்) தோன்றுகிறது. ஐந்தை ஆவ்ருத்தி பண்ணுவதால் ஸங்க்யை ஏற்படவேணும். ஸங்க்யையின் ஸ்வபாவம் பல பதார்த்தங்களிலிருப்பது. (சாஸ்த்ர — 428—429)

171. கீழ்ச் சொன்ன ஆவ்ருத்தியை எப்படிச் செய்கிறது என்று ஸந்தேஹம். மஹாசயந ப்ரகரணத்தில் ‘ஷடுபஸத:’ என்று ஒரு வாக்யம். ப்ரக்ருதியான அக்நிஷ்டோமத்தில் உபஸத்துக்கள் மூன்றே. இதில் ஆறு உபஸத்துக்கள். மூன்றை ஆறாக ஆவ்ருத்தியாலே பண்ணவேண்டியது என்று கீழ்ப் பாராவால் ஏற்படுகிறது. ஆவ்ருத்தி எப்படி—

பூர்வபக்ஷம்:— உபஸத்துக்களின் ஸமுதாயத்தை (தொகையை) ஆவ்ருத்தி பண்ணவேண்டியது. அதாவது மூன்றையும் ஒருதடவை செய்து, மறுபடியும் செய்கிறது. உலகத்திலும் இதைப் பார்க்கலாம். ஒரு கோலாலே பூமியை யளக்கிறவன் கோல் முழுவதையும் போட்டுப் போட்டு அளக்கிறான். மூன்றுதடவை ஸ்வாத்யாயத்தைப் படி என்றால், முழுவதையும் முதலில்படித்து, மறுபடியும் படிக்கிறான். அதுபோல, இதற்கு கண்டகுலிக ந்யாயம் என்று பெயர்.

ஸித்தாந்தம்:—சொன்னபடி செய்தால் ப்ரக்ருதியான யாகத்தில் ஏற்பட்ட க்ரமம் தள்ளிவிடப்பட்டதாக ஆகும். முதலாவது உபஸத்தை நான்காவது நாளில் செய்யவேண்டியதாய் வரும். அப்போது முதலாவது உபஸத் என்பது போய் நாலாவது உபஸத் என்று ஆகும். ஆகையால் முதல் உபஸத்தை இரண்டு நாள்களிலும், இரண்டாவதை இரண்டு நாள்களிலும், மூன்றாவதை இரண்டு நாள்களிலும் செய்கிறது.

(2) அத்யாய உதாரணம் ஸரியன்று. அநுவாகங்களின் தொகையைத்தான் அத்யாயம் என்று சொல்லுகிறது. அதைத்தான் ஆவிருத்தி பண்ண விதி. அப்படி அங்கே தொகைக்கு உபஸத் என்று பெயரில்லை. (அதி – 2)

இப்படியே ப்ரயாஜங்களையும் பதினைன்றாகப் பண்ண ஸ்வஸ்தாநத்தில் ஆவ்ருத்தி பண்ணவேண்டியது. ந்யாயமாலை எழுதினவர் முதல் நாளை இரண்டு தடவையும் கடைசி ப்ரயாஜத்தை மூன்று தடவையும் ஆவ்ருத்தி பண்ணுகிறது என்று சொல்லுகிறார். ஆபஸ்தம்பர் ந்யாயத்தை ஒப்புக்கொண்டு ஆவ்ருத்தியை வேறு வழியாய்ச் சொல்லுகிறார்-நாலாவது ப்ரயாஜத்தை நாலுதடவையும் ஐந்தாவதை நாலுதடவையும் என்று.

172. இரண்டாவது ந்யாயம்—த்ரி: ப்ரதமாமந்வாஹ த்ரிருத்தமாம்—என்பது தர்ச பூர்ணமாஸ இஷ்டியில் பதினொரு ஸாமிதேநீ மந்திரங்கள் இருக்கின்றன. பதினைந்து வேண்டியிருக்கிறது. அதற்காக முதல் மந்த்ரத்தை மூன்று தடவையும், கடைசி மந்த்ரத்தை மூன்று தடவையும் ஆவ்ருத்தி பண்ணுகிறது என்று விதி இருக்கிறது. ப்ரதிஷ்டையை (நிலையாயிருப்பதை) வேண்டுகிறவனுக்கு “ஸப்ததஶாநுப்ரூயாத்” என்று ஒரு வாக்யம் இருக்கிறது. அதிகமாக வேண்டிய ஆறு மந்திரங்களை ருக்வேதத்தில் தசதீயம் என்னும் இடத்திலிருந்து எடுத்துச் சேர்க்கவேண்டியது என்று 10-வது அத்தியாயத்தில் சொல்லப்போகிறது. இங்கே விசாரம் செய்வது அவைகளை எங்கே வைக்கிறது என்பது ப்ரக்ருதியான இஷ்டியில் ஏற்பட்ட க்ரமத்தை மாற்றக்கூடாதானதால், புதிதாய் வந்தவர்களுக்குக் கடைசி இடம் என்று சொல்லுகிறபடி அவைகளைக் கடைசியில் சேர்க்க வேண்டியது. இங்கே ஒரு கேள்வி-“தாய்யா” என்கிற மந்த்ரங்களை நடுவில் (அதாவது 8-வதுக்கும் 9-வதுக்கும் நடுவில்) வைக்கவில்லையா? அப்படியே இவைகளையும் வைக்கவேண்டாமா? என்று. பதில்-இது விசேஷ வசநத்தால் ஏற்பட்டது. மற்றவைகளுக்கு அப்படி வசநமில்லை.

மறுபடியும் கேள்வி—தாய்யா என்பது புதிதாய்ச் சேர்ப்பதற்கு எல்லாம் பெயரன்றோ?-என்று. பதில்-அன்று. இரண்டு ருக்குக்களுக்குத்தான் அந்தப் பெயர் (அதி-3.)

மூன்றாவது பாதம் முற்றிற்று.

நான்காவது பாதம்.

173. அக்நிஷ்டோமத்தில் ப்ராதஸ்ஸவநத்தில் ஆச்விநக்ரஹம் க்ரஹிக்கப்படுகிறது. அதை ஸாராக்ரஹங்களுக்குள்ளே மூன்றுவதாகப் படித்திருக்கிறது. ஆனால் "ஆச்விநோ தசமோ க்ருஹ்யதே" என்று ஒரு வசநம் இருக்கிறது. அதாவது க்ரஹத்தில் அது பத்தாவதாக இருக்கவேண்டும் என்று. இது ச்ருதிக்ரமம். இவைகளில் எது ப்ரபலம் என்று ஸந்தேஹம்.

பாடமானது இன்னது க்ரமம் என்று சொல்லவில்லை. படித்தபடி க்ரமம் இல்லாவிட்டால், வேதம் அப்படிப் படித்திருக்காது என்று நினைத்து, அதுதான் க்ரமம் என்று நாம் கொள்ளுகிறோம். ச்ருதியோ நேராகவே க்ரமத்தைச் சொல்லுகிறது: ஆகையால் ச்ருதிக்ரமம் ப்ரபலம்.

(2) இப்படியே அர்த்தக்ரமமும் பாடக்ரமத்தைக் காட்டிலும் ப்ரபலம். 157-வது பாராவில் சொன்ன உதாரணத்தைப் பார்க்க. பாடக்ரமத்தை ஒப்புக்கொள்ளும்போது வஸ்துக்களின் சக்திக்கு ஒத்து ஒப்புக்கொள்ள வேண்டியது. யவாகூவைப் பாகம் பண்ணுவதற்கு முன்னாலே, அக்நிஹோத்ர ஹோமத்தைச் செய்ய முடியாது. ஆகையால் பாடமானது ஸாமர்த்தியம் ஆகிய அர்த்தத்தைக் கொண்டு பிழைக்க வேண்டியது. அர்த்தம் ப்ரபலம். (அதி – 1)

நான்காவது பாதம் முற்றிற்று.

ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

ஆறாவது அத்யாயம்

174. செய்ய வேண்டிய கர்மங்களையும் அவைகளைச் செய்யும் க்ரமத்தையும் சொல்லியாய் விட்டது. இப்போது அவைகளை எவன் செய்ய வேண்டியவன் என்று இந்த அத்யாயத்தில் விசாரிக்கப்படுகிறது.

முதல் பாதம்

175. "ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்ககாமோ யஜேத" என்று ஒருவாக்யம். யாகமாகிய வேலையைச் செய்கிறவன் கர்த்தா. பலனை அநுபவிப்பவன் அதிகாரி. கர்த்தா அதிகாரியா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—யாகம் செய்கிறவன் அதிகாரியன்று. அதாவது: அவனுக்குப் பலனுடைய அநுபவமில்லை. ஏனென்றால், 'யஜேத' என்கிற சொல்லில் ஆக்யாதம் (விகுதி) பாவனையைச் சொல்லுகிறது. தாதுவும் (உண்டுபண்ணப்படுவது) தாதுவின் அர்த்தமான யாகம். பாவனையைச் சொல்லும் ஆக்யாதமும் யாகமும் ஒரே சொல்லாலே சொல்லப்படுகிறது. ஸ்வர்க்கம் என்பது வேறு சொல்லாலே சொல்லப்படுகிறது. ஆகையால் அதுக்கு பாவனையோடு ஸம்பந்தம் வாக்யம் என்கிற ப்ரமாணத்தால் ஏற்படவேணும். ஒரே சொல்லாக இருக்கிற யஜேத என்பது ச்ருதி. அது வாக்யத்தைக்காட்டிலும் ப்ரபலம். ஆகையால் இந்த வாக்யத்தால் பலனைச் சொல்லாமையாலே, யாகத்தைச் செய்கிறவனுக்கு பலனுடைய அநுபவமில்லை. அவனுக்கு அதிகாரமில்லை. அதைப்பற்றி விசாரிக்க வேண்டியதில்லை.

(2) மேலும், ஸ்வர்க்கம் என்பது இனி உண்டுபண்ணப்படுவது அன்று, ஏற்கனவே இருக்கிற வஸ்து. அதை ஆசைப்பட்டு யாகத்தைச் செய்யவேண்டியது. அது யாகத்துக்கு ஸாதநம். அதற்கு யாகம் ஸாதநம் என்று சொல்லக்கூடாது. ஸ்வர்க்கம் என்கிற சொல் ஸுகத்தைச் சொல்லவில்லை. ஸுகத்துக்கு ஸாதநமானதைச் சொல்லுகிறது. அதை ஆசைப்படுவது தகுந்தது.

ஸித்தாந்தம்:—"யஜேத" என்கிற சொல்லில் ப்ரத்யயம் ஆக்யாதம் மாத்ரமன்று. அது லிங் ப்ரத்யயமாயுமிருந்து பாவனையைச் சொல்லி ஒருவனை ஒரு வேலையைச் செய்யும்படி ஏவுகிறது. ஒருவன் தனக்குப் பிடித்த பலன் இல்லாவிட்டால் ஒரு வேலையையும் செய்யமாட்டான். ஆகையால் பலன் இதனால் ஏற்படுகிறது. பலனுடன் பாவனைக்கு ஸம்பந்தம் ஒரே ப்ரத்யயத்தால் சொல்லப்படுவதால் உண்டான பிறகு, ப்ரக்ருதியின் அர்த்தமான யாகத்துடன் ஸம்பந்தமில்லை. அந்த பலன் எது என்றால், ஸ்வர்க்கம் என்று பிறகு ஏற்படுகிறது. ஸ்வர்க்கம் என்கிற சொல் ருடியால் உயர்ந்த ஸுகத்தைச் சொல்லுகிறது. லக்ஷணையாலே த்ரவ்யத்தைச் சொல்லவேணும். ஆகையால் ஸ்வர்க்கம் தான் பாவ்யம். இதையே 'காம' என்கிற சொல்லும் காட்டுகிறது. யாகம் செய்கிறவனுக்குப் பலனுடைய அநுபவமிருப்பதாலே, கர்த்தாவுக்கு அதிகாரமிருக்கிறது. அதின் விஷயமான விசாரத்தைச் செய்யலாம். (அதி – 1)

(தொடரும்)

திருவள்ளுவரும் ஸ்ரீ வைஷ்ணவமும்

[பந்தல்குடி மாடபூசி. ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

திருவள்ளுவ நாயனாரையும், அவர் இயற்றிய திருக்குறளையும் அனைவரும் அறிவர். இவர் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் நம் தமிழ் நாட்டில் திகழ்ந்த ஒரு சிறந்த ஞானி. பொதுமறை எனச் சிறப்பித்துக் கூறப்படும் திருக்குறள், ஸ்ரீ பகவத் கீதை போன்று பல பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு, உலகத்தினர் யாவரும் அதனைப் போற்றிவருகின்றனர். நான்மறை பூர்வ வேதமும், பாரதம் மத்திய வேதமும், திருக்குறள் உத்தர வேதமும் என்பர் ஆன்றோர்.

"நாடாமுத னான்மறை நான்முக னாவிற்
பாடா விடைப் பாரதம் பகர்ந்தேன்—கூடாரை
யெள்ளிய வென்றி யிலங்கிலை வேன்மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு"

என்ற நாமகள் பாசுரமே இதற்குச் சான்று.

"எப்பொருளும் யாரும் இயல்பி னறிவுறச்
செப்பிய வள்ளுவர்தஞ் செப்பவரு—முப்பாற்குப்
பாரதஞ் சீராம கதை மனுப்பண்டை மறை
நேர்வன மற்றில்லை நிகர்"

என்ற திருவள்ளுவ மாலைச் செய்யுளும் நோக்கற்பாலதே.

குறளாசிரியர் மதம் இன்னதென அறுதியிட இயலாதாயினும், அவர் ஸ்ரீவைஷ்ணவ மதக்கொள்கைகளையும், ஸ்ரீவைஷ்ணவர்க்கே உரித்தான பர வாசுதேவனைக் குறித்தும் தம் நூலில் எங்ஙனம் கூறியுள்ளார் என்பதை ஒருவாறு எடுத்துக் காட்டவேண்டுமென் பது இக்கட்டுரையின் முக்ய கருத்து. திருக்குறள் என்ற சப்தத்தைக் கேட்டவாறே அது 'அவைஷ்ணவமான நூல்' என்று நன்கு உணராத சில ஸ்ரீவைஷ்ணவர்கள் சொல் வது எம்மட்டில் பொருத்தமுடைய தென்பதும், அக்கிரந்தம் ஆதரணீயமா அல்லவா என்பதும் விருப்பு வெறுப்பின்றிக் கவனிப்போர்க்கு நன்கு விளக்கவேண்டும் என்பதும் எமது அபிப்ராயம். 'தீக்குறளைச் சென்றோதோம்' என்ற ஆண்டாள் வாக்கை மேற் கோளாக வைத்து, 'குறள் படிக்கலாகாது' என்று ஒரு சாதாரண வைதிக ஸ்ரீவைஷ்ண வர் சொன்னாராம். தீ-அனர்த்தத்தை விளைக்கத்தக்க, குறளை- பொய்யான வார்த்தை களை, சென்று—ஒருவரிடம் போய், ஓதோம்-சொல்லாதவர்களாய்; என்பது இத்திருப் பாவைச் செய்யுளடிக்குப் பதவுரை. பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம் பின் வருமாறு:—

"தீக்குறளைச் சென்றோதோம்—பிறர்க்கு அனர்த்தாவஹமாகப் பொய் சொல்லக் கடவோமல்லோம். பிராட்டி, பெருமான் பக்கல் ஏகாந்தத்திலும் ஏகாக்ஷி ஏககர்ணிகள்

நலிந்தபடி சொல்லிற்றாகவில்லையே ஸ்ரீராமாயணத்தில்; நம்மில் நாம் "நப்பின்னை நங் காய்" என்றும், "நாயகப்பெண் பிள்ளாய்" என்றும், "பேய்ப்பெண்ணே" என்றும் ஒருவர்க்கொருவர் இட்டிட்டு கொண்டு சொன்னவை க்ருஷ்ணன் செவிப்படுத்தக் கட வோமல்லோம்".

இதனால் ஆக்ஷேபஞ்செய்தவர் எங்ஙனம் சம்பிரதாயக் கிரந்தங்களையும் பிறநூல்களை யும் ஆராய்ந்துள்ளார் என்பது நன்கு புலனாகும்.

"......இவர்கள் மகிழ்ந்து பாடும் செய்ய தமிழ்மாலைகள் நாம் தெளிய ஓதித் தெளி யாத மறை நிலங்கள் தெளிகின்றோமே" என்ற ஸ்ரீமந்நிகமாந்த மகாதேசிகன் அருளிச் செயலால் ஆழ்வார்கள் ஸ்ரீ ஸூக்திகளின் பெருமை நன்கு தெளிகின்றது. ஆழ்வாரில் தலைசிறந்தவர் நம்மாழ்வார். இவரே பிரபன்னஜன கூடஸ்தர். இவர் கிரந்தங்களில் சிறந்தது திருவாய்மொழி. இதைத் திரமிடோபநிஷத்து, திரமிட வேதம் என்றே விவதரிப்பதுண்டு.

"மிக்க விறைநிலையும் மெய்யா முயிர்நிலையும்
தக்க நெறியும் தடையாகித்—தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்
யாழினிசை வேதத் தியல்"

என்ற பட்டர் அருளிச்செய்த திருவாய்மொழித் தனியன் இக்கருத்தை வற்புறுத்தும். ஔவையாரும் இடைக்காடரும் நாயனாரைச் சந்தித்தபோது அவர்கள் அவரை நோக்கி, "நீரியற்றிய குறள் எத்தன்மைத்து?" என்று வினவ, அதற்கவர் "குறுமுனிவன் முத் தமிழு மென்குறளு நங்கை, சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்" என்று விடைபகர்ந்த தாகக் கர்ண பரம்பரையாக வழங்கிவருகின்றது. இத்தால் அகஸ்திய மகரிஷியால் செய்யப்பட்ட தமிழ் வியாகரணத்திற்கும் குறளுக்கும் திருவாய்மொழியே மூலகிரந்தம் என்பது வெளியிடப்பட்டது.

திருவாய்மொழி வியாக்யானங்களுள் சிறந்தது ஈடு என்ற முப்பத்தாறாயிரப்படியே. அதிற் கண்டிருக்கும் ஓர் விஷயத்தை ஈண்டு தருதும்.

திருவாய்மொழி முதற்பத்து - நாலாந் திருவாய்மொழி - நான்காம் பாட்டு - பின் வருமாறு:—

"என்னீர்மை கண்டிரங்கி இதுதகா தென்னாத
என்னீல முகில்வண்ணர்க் கென்சொலியான் சொல்லுகேனோ
நன்னீர்மை யினியவர்கண் தங்காதென் றொருவாய்ச்சொல்
நன்னீல மகன்றில்காள் நல்குதிரோ நல்கீரோ"

ஈடு—நாலாம் பாட்டு:—

(என் நீர்மை கண்டிரங்கி)—என் நீர்மையுண்டு—என் ஸ்வபாவம்; என் மார்த்தவம். (கண்டிரங்கி யிது தகாதென்னாத)—இத்தைக் கண்டு தயைபண்ணி 'நாம் பிரியுமது தகாது' என்னாதே போகட்டுப் போனவர்க்கு. பட்டரை ஒரு தமிழன் 'கேட்டிராகி,'

என்றோ 'கண்டிராங்கி' என்னப் பெறுமோ?' என்ன, 'அணைத்த கை நெகிழ்த்த வளவிலே வெளுத்தபடி கண்டால் பிரியத் தகாதென்றிருக்க வேண்டாவோ?' இப்படிக் கூடுமோ? என்னில்;—"புல்லி" இத்யாதி, "காதலர் தொடுவுழி" இத்யாதி "உனக்கு இத்தமிழ் போகாதோ?" என்றார்.

இங்குத் தமிழனுடைய வினாவின் அர்த்தமாவது:—

நாயகனைப் பிரிந்து தூதுவிடுகிற பிரகரணத்தில் தலைவியின் நிலைமையைத் தேசாந்தரத்தி லிருப்பவனாகிய தலைவன் காணுமாறில்லை. ஆகையால் 'என்னீர்மை கேட்டிராங்கி' என்று சொல்வதே பொருத்த முடையது என்பதாம். அதற்குப் பட்டர் அருளிய சமாதானமாவது:—முன்பு இருவரும் கூடியிருக்கிற காலத்தில் சிறிது பிரிந்த அளவிலே தலைவிக் குண்டாகியிருக்கிற பசப்பு நிறத்தைத் தலைவன் கண்டிருக்கிறான்; ஆகையால் என்னீர்மை என்னத் தட்டில்லை என்பதாம். இதற்குச் சமாதானமாக இரண்டு தமிழ் மேற்கோள்களும் காட்டப்பட்டன. முதல் மேற்கோளான "புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவில் அள்ளிக் கொள்வற்றே பசப்பு" என்று காமத்துப்பால் கற்பியல் பசப்புறுபருவரலின்கண் உள்ளது. தலைவனைப் பிரிந்த தலைவி தன்னிடத்திலுண்டான நிற வேறுபாட்டைக் கண்டு வருந்தியகாலை தோழி, "நாயகன் பிரிந்தானேலும் சமீபத்திலே யிருக்கிறானாதலால் விரைவில் வந்து கவலையை அகற்றுவா னென்பதறியாது வருந்துகின்றனையே!' என்று கூற, அதற்கு மறுமொழியாகத் தலைவி கூறுவதே இக்குறளிற் குறிப்பிடும் விஷயம். இதற்குப் பரிமேலழகர் "முன்னொரு ஞான்று காதலரைப் புல்லிக் கிடந்த யான் அறியாது புடைபெயர்ந்தேன்; அப்புடைபெயர்ந்தவளவிலே பசப்பு அள்ளிக் கொள்வது போல வந்து செறிந்தது" என உரை வகுத்துள்ளார். தலைமகள் தோழிக்கு யான் தலைவரைத் தழுவிக்கிடந்த ஒருநாள் சிறிது விலகினேன்; விலகியவளவிலேயே எனக்குப் பசப்புண்டாயிற்றென்று தனது அனுபவங் கூறினாளென்பது இக்குறட் கருத்து.

'உனக்கு இத்தமிழ் போகாதோ?' என்றது, உனக்கு இத்தமிழ் மேற்கோள்களில் அறிவு செல்லாதோ என்றவாறு. அதாவது இவைகளை நீ அறியாயோ வென்பதாம்.

இதனால் நம் வைணவ ஆசிரியர்கள் திருக்குறளையும் நன்கு அப்யஸித்துப் போற்றி வந்தனர் என்பதும், திருவாய்மொழியின் நுட்பங்களை நன்கு அறிந்து அனுபவிக்கக் குறளை ஓதுதலும் சிறந்த தென்பதும், அவர்கள் போற்றி வந்ததைப் புறக்கணிப்பது அபசார ஹேதுவாகும் என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு அறியலாகும்.

மேலும் திருவள்ளுவரைப் பிரமனின் அம்சமென்று கூறுவர்.

"நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
றான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்க செவி"

என்ற திருவள்ளுவ மாலைப் பாசுரமே இதற்குப் போதிய சான்று.

'நான்முகனை நாராயணன் படைத்தான்' என்ற கணக்கிலே பிரம்மாவுக்குப் பூர்ண விஷ்ணு சம்பந்தமுண்டு; தவிர மஹாவிஷ்ணுவே நாயனாராக வந்தாரெனவும் கூறுவர்,

"மாலுங்குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞாலமுழுது நயந் தளந்தான்—வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள் வெண்பாவடியால் வையத்தா
ருள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து."

என வருதலுங் காண்க.

இவைதவிர திருக்குறளில் ஆழ்வார் அருளிச்செயல்கள் எங்ஙனம் விரவி வந்துள்ளன என்பதைச் சற்று ஆராய்வாம்.

பொருட்பால் அரசியல் இறைமாட்சி என்ற அதிகாரத்தலைப்பில் பரிமேலழகர் உரை பின்வருமாறு:—

"இறைமாட்சி—அஃதாவது: அவன்றன் நற்குண நற்செய்கைகள் உலக பாலருருவாய் நின்று உலகங் காத்தலின் இறையென்றார். 'திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே என்னும்' என்று பெரியாரும் பணித்தார்."

பெரியார் என்பது நம்மாழ்வாரை. இவ்வடியுள்ள பாசுரத்தை ஈண்டு தருதும். திருவாய்மொழி, நான்காம் பத்து நாலாந் திருவாய்மொழி-8-வது பாசுரம்.

"திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனேயென்னும்
உருவுடை வண்ணங்கள் காணில் உலகளந்தானென்று துள்ளும்
கருவுடைத் தேவில்களெல்லாம் கடல் வண்ணன் கோயிலே யென்னும்
வெருவிலும் வீழ்விலு மோவாக் கண்ணன் கழல்கள் விரும்புமே"

திருக்குறள் முதலாவது பாயிரம் கடவுள் வாழ்த்து.

1. "அகர முதலவெழுத் தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக உடையன, அதுபோல உலகங்கடவுளை முதலாக உடையது என்பது இதன் கருத்து.

காத்தற்றொழிற்குரிய கடவுள் திருமால். அவர் திருநாமங்களில் அகரம் முதன்மையான நாமம். அது மங்கலச் சொல். "பிரதம ரஹஸ்யம் திருமந்த்ரம். இதுதான் எட்டுத் திருவக்ஷரமாய் மூன்று பதமாயிருக்கும். இதில் முதற்பதம் ப்ரணவம். இது 'அ' என்றும், 'உ' என்றும், 'ம' என்றும் மூன்று திருவக்ஷரம். இதில் அகாரம் ஸகல சப்தத்துக்கும் காரணமாய் நாராணபதத்துக்கு ஸங்க்ரஹமா யிருக்கையாலே, ஸகல ஜகத்துக்கும் காரணமாய் ஸர்வரக்ஷகனை எம்பெருமானைச் சொல்லுகிறது" என்பது ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் திருவாய்மலர்ந்தருளின முமுக்ஷுப்படி.

அகரம்-கரம் என்பது எழுத்துச் சாரியை. தமிழ் எண்ணில் 'அ' என்பது எட்டு. எனவே அகரம் அஷ்டாக்ஷர பிரதிபாதிதமான எம்பெருமானைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

பகவாந் என்னும் வடமொழி விகாரமே பகவன். பகம் என்பது ஆறு குணங்களைக் குறிக்கும். அவையாவன:— நிறைந்த மகிமை, தைரியம், கீர்த்தி, ஐசுவரியம், ஞானம், வைராக்கியம். பகவன் என்பதற்கு இந்த ஆறு குணங்களையுடைய கடவுள் என்பது பொருள். அது அசாதாரணமாய் ஷட் குண பரிபூர்ணமான ஸகுணப் பிரம்மத்தைக் குறிப்பது. அது ஸ்ரீமந்நாராயணனுக்கே உரித்தான பெயராகும். அவனது அடியார்க்கு இந்நாமத்தையிட்டுப், 'பாகவதர்' என வழங்குதலையும் காணலாம்.

'ஆதிபகவன்' என்பதை 'ஆதித்யனுகிற பகவன்' என்று கொள்ளலும் ஒன்று. 'ஆதிவாரம்' என்பது உலகவழக்கு. ஸ்ரீமந்நாராயணன் சூர்யமண்டல மத்தியில் நின்று அவனுக்குக் கதி முதலியன உண்டு பண்ணுகிருன் என்பது நூற்கொள்கை.

'ஆதிபகவன்' என்பதையும், ஆழ்வார் அருளிச் செயலிலுள்ள 'ஆதியம் பகவன்' என்பதையும் நோக்குக. ஆழ்வார் பாசுரம் பின்வருமாறு.—

"பிணக்கற அறுவகைச் சமயமும் நெறியுள்ளி யுரைத்த
கணக்கறு நலத்தனன் அந்தமிலாதியம் பகவன்
வணக்குடைத்தவ நெறி வழி நின்று புறநெறி களைகட்டு
உணக்குமின் பசையற அவனுடை யுணர்வு கொண்டுணர்ந்தே"
(திரு. I—3—5)

"அந்தமிலாதி ஆப்ததமன், அகர்மவஸ்யன். அம்பகவன்-பகவச்சப்தம் முக்யமாக வசிப்பது இவன் பக்கலிலே, அல்லாதார் பக்கல் ஔபசாரிகம்" என்பது ஈடு. 'அவன் அருளிச் செய்தருளின ஸ்ரீ கீதையாலே ஸமஸ்த கல்யாண குணாத்மகனை அவனை உணர்ந்து வ்யதிரிக்த ஸங்கத்தை விடுவ தென்கிருர்" என்பது ஆருயிரப்படி. 'உலகு' என்பது பல பொருளொரு சொல். அது ஜீவாத்மாக்களை உணர்த்தும். மேலும் இப்பதம் உலகங்களையும் அவ்வுலகத்துப் பொருள்களையும் உணர்த்தும்.

"உலகுதன்னை நீபடைத்தி யுள்ளொடுக்கி வைத்திமீண்
டுலகுதன்னு ளேபிறத்தி யோரிடத்தை யல்லையால்
உலகுநின்னொ டொன்றிநிற்க வேறுநிற்றி யாதலால்
உலகில்நின்னை யுள்ளசூழல் யாவருள்ள வல்லரே."

என்பது திருமழிசைப்பிரான் அருளிச்செய்த திருச்சந்தவிருத்தப் பாசுரம்.

2. "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்"

மெய்யறிவுடைய கடவுளடியை வணங்காதவாது கல்வியறிவு பயனுடையதன்று என்பது இக்குறட் கருத்து.

"ஆகம வறிவிற்குப் பயன் அவன்றாளைத் தொழுது பிறவி யறுத்த லென்பது இதனாற் கூறப்பட்டது." என்பது பரிமேலழகர் குறிப்பு.

"ஆகமமென்பன மனு முதலாகிய, வறனொடு புணர்ந்த திறனறி நூலே" என்பது தண்டியலங்காரம்.

"அயர்வறு மமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே"

என்கிருர் நம்மாழ்வார்.

"எம்பெருமானுடைய ஆச்ரித ஜநஸமஸ்த து:காபநோதந ஸ்வபாவமான திருவடி மலர்களிலே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வசேஷ வ்ருத்தியையும் பண்ணி உஜ்ஜீவி யென்று தம்முடைய திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்கிருர்" என்பது ஆருயிரப்படி. அயர்வறும் அமரர்கள், என்பது ப்ராப்ய வேஷத்தையும், 'தொழுதெழு' என்பது ப்ராப்த பலமான கைங்கர்யத்தையும், 'என்மனனே' என்பது பரிசுத்தாந்த: கரணனே அதிகாரி என்பதையும் சொல்கிறது.

'வால் அறிவன்' என்பதற்கு 'ஸர்வஜ்ஞன்' என்பது பொருள். இச்சப்தம் ஸ்ரீமந் நாராயணனையே குறிக்கும்.

"ஆதியான வானவர்க்கு மண்டமாய வப்புறத்து
ஆதியான வானவர்க்கு மாதியான வாதிநீ
ஆதியான வானவாண ரந்தகாலம் நீயுரைத்தி
ஆதியான காலநின்னை யாவர்காண வல்லரே"

என்ற திருச்சந்தவிருத்தப் பாசுரம் இதை வற்புறுத்துகின்றது.

"நற்றாள்—பிறவிப் பிணிக்கு மருந்தாகலின்" என்கிருர் பரிமேலழகர். 'துயரறு சுடரடி' என்கிருர் ஆழ்வார். 'துயரறுக்கும்' என்று முன்புள்ள முதலிகள் அருளிச் செய்யும்படி.' என்பது ஈடு. 'தொழாஅரெனின்' என்கிற எதிர்மறை 'தொழு தெழு' என்பதை நோக்கியே போலும்.

3. "மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்"

கடவுளடிகளைச் சேர்ந்தவர்கள் மோக்ஷத்தில் வாழ்வார்கள் என்பது இதன் கருத்து.

மலர்மிசை என்பது அன்பால் நினைவாரது உள்ளக்கமலத்தின்கண். தாமரை மலர் போன்றது நெஞ்சம். இருதய கமலம் என்றே நெஞ்சு வழங்கப்படும். இதை 'மனனக மலமற மலர்மிசை யெழுதரும்' என்ற ஆழ்வார் பாசுரத்தோடு ஒப்பிடலாம்.

'வேண்டுதல் வேண்டாமையிலான்' என்ற நாலாஞ்செய்யு ளடியைக் கீழ்ப்பாசுரத்தோடு உற்று நோக்கலாம்.

"கொள்கை கொளாமை யிலாதான்
எள்கலி ராக மிலாதான்'
விள்கை விள்ளாமை விரும்பி
உள் கலந்தார்க் கோரமுதே" (திரு. 1—6—5)

'எள்கலி ராகமிலாதான்—அடிமை கொள்ளுமிடத்தில் வாசியில்லையே யாகிலும் அவ்வாசியை நினைத்திருக்குமோ வென்னில், ராகத்வேஷ விபாக மின்றிக்கே எல்லார்க்கும் மொக்க வத்ஸலனா யிருக்கும்.' என்பது இருபத்து நாலாயிரப்படி.

"திருவுள்ளத்தாலே சிலரை இகழ்ந்திருத்தல் சிலரை ஆதரித்தல் செய்யான்" என்பது ஈடு.

"ஒரு பொருளையும் விழைதலும் வெறுத்தலும் இல்லாதவன்" என்பது மேற்குறளுக்குப் பரிமேலழகர் வகுத்த உரை.

"பொய்தீ ரொழுக்க நெறி" என்று ஆறாங் குறளில் வருவதை, "வணக்குடைத் தவநெறி" என்ற ஆழ்வார் பாசுரத்தோடு ஒப்பிடலாம்.

பொய்தீரொழுக்க நெறி மெய்யான ஒழுக்க நெறியைப் போதிக்கின்ற வேதம். பாரதம் ஐந்தாவது வேதம். பகவத் கீதையே உபநிஷத்து. "வேதமு மற்றொன்றினுக்குச் சேடமாகா தெத்தகைய வுயிர்களுக்குந் தாய் போல வுண்மையே யெடுத் தியம்பும்" என்றும், 'ஆதலான் மறையிற் சொலப்பட்ட வருத்தமே யுண்மையானது' என்று கூறுகிறது சூத சங்கிதை. ஆறாங் குறளை முழுதுந் தருதும் வேறொரு விசேடமு மிருத்தலின்.

6. "பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீரொழுக்க
நெறி நின்றார் நீடு வாழ்வார்"

பொறிவாயில் ஐந்தவித்தான் என்பதற்கு மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளை வழியாக வுடைய ஐந்தவாவினையும் அறுத்தான் எனப் பரிமேலழகர் உரை வருகின்றது.

பொறிவாயில் ஐந்தவித்தான் என்பது விஷ்ணுவின் திருநாமங்களி லொன்றாகிய இருஷீகேச னென்னும் வடமொழிப் பெயரின் மொழிபெயர்ப்பு. இந்திரியங்கட் கீசனாயிருப்பவன் என்பது இதன் பொருள். (ஈசன் தலைவன்)

பகவானை 'ஐந்தவித்தான்' என்றதும் அவன் கூறிய ஒழுக்கங்களைப் 'பொய்தீ ரொழுக்கம்' என்றதும், ஒரு காலத்து ஐந்து அவியாதவனாய் நின்று பிறகு ஐந்து அவித்தானாயினா னென்றும், ஒரு காலத்துப் பொய் நீங்காத ஒழுக்கமாயிருந்து மற்றொரு காலத்துப் பொய்தீர்ந்த ஒழுக்கமாயிற்று என்ற கருத்துப் படாமல், இயற்கையாகவே என்றும் ஐம்புலவாசை நீங்கினவ னென்றும், எக்காலத்தும் மெய்ம்மை யான் ஒழுக்க மென்றும் கருத்துப்படுதல் காண்க.

7. "தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது"

கடவுளடி சேராதவர் மனக்கவலை நீக்குத லில்லை என்பது இக்குறட்பாவின்கருத்து. "தனக்குவமை யில்லாதான்" எனவே தனக்கு உயர்வின்மையு மில்லை என்பது தொனி. "ஈடு மெடுப் புமிலீசன்" என்பது திருவாய்மொழி. (1—6—3) மேற்கூறிய குறட்மாவற்கு "தாள் சேராதவர் பிறவிக் கேதுவாகிய காம வெகுளி மயக்கங்களை மாற்றமாட்டாமையின் பிறந்திறந்து அவற்றின் வருந் துன்பங்களுள் அழுந்துவர்" என்பது பரிமேலழகர் குறிப்பு. "மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து அடியை யடைந்து உள்ளம்தேறி ஈறி லின்பத் திரு வெள்ளம் யான் மூழ்கினன்" (2—7—8) என்ற திருவாய்மொழி இக்கருத்ததே.

8. "அறவாழி யந்தணன்றாள் சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது"

"அறக்கடலாகிய அந்தணனது தாளாகிய புணையைச் சேர்ந்தார்க் கல்லது அதனிற் பிறவாகிய கடல்களை நீந்தல் அரிது. பல வேறுவகைப்பட்ட அறங்க ளெல்லாவற்றையும் தனக்கு வடிவமாக உடையனாகலின் 'அறவாழி யந்தணன்' என்றார். 'அறவாழி என்பதைத் தரும சக்கரமாக்கி அதனையுடைய அந்தண னென்று உரைப்பாரு முளர்.' பிறவாழி—பிறப்புத் துன்பங்களாகிய கடலென்றும் பொருள்படும். ஆழி—ஆழ்ந்தது, வட்டம், பகைவரை அழிப்பது. இக்குறளில் வரும் 'அறவாழி அந்தணன்' என்பது திருவாய்மொழியிலுள்ள 'அறவனை ஆழிப்படை அந்தணனை' என்பதோடொடு ஒக்கும்.

"பிறவித் துயரற ஞானத்துள் நின்று
துறவிச் சுடர் விளக்கம் தலைப்பெய்வார்
அறவனை ஆழிப்படை அந்தணனை
மறவியை யன்றி மனத்து வைப்பாரே" (திரு. 1—7—1)

"பரமதார்மிகனாய் திருவாழியையுடையனாய்ப் பரமபாவந பூதனான ஈசுவரனை."

"[அறவனை—அவர்கள் படியையும், பலம்கொடுக்கிறவன் படியையும் பார்த்த 'என்ன பரமோதாரனோ?' என்கிறார். ஏதேனுமொரு ப்ரயோஜநத்துக்கும் தன்னையே அபேக்ஷிக்கும் அத்தனை யாகாதே வேண்டுவது. 'எங்களுக்கு நீ வேண்டா, க்ஷுத்ர ப்ரயோஜநம் அமையும்' என்றிருக்கிறவர்களுக்கும் அத்தைக் கொடுத்துவிடுவதே! என்ன தார்மிகனோ என்கிறார். ஆழிப்படை யந்தணனை—ஆத்மாநுபவ விரோதியைப் போக்குகைக்குப் பரிகாரமான திருவாழியைக் கையிலே யுடையவன். அந்தணன் என்று—சாணிச் சாற்றோபாதி சுத்தன் என்று கொண்டார்க ளித்தனை; போக்யதையில் நெஞ்சு சென்றதில்லை 'சுத்திகுண விசிஷ்டன்' என்றாயிற்று அவர்கள் அனுஸந்திப்பது. கையுந் திருவாழியுமான அழகைக் கண்டால் அதில் கால் தாழாதே, தங்கள் ப்ரயோஜநத்துக்கு உறுப்பான சுத்தி மாத்ரத்தையே பற்றுவதே! என்கிறார்" என்பது ஈடு.

ஒன்பதாவது குறளில் "எண்குணத்தான்" என்பதை "எண்பெருக் கந்நலம்" என்பதனோடு ஒப்பிடுதல் சாலச் சிறந்தது.

எண் குணங்களாவன:—அணிமா, மகிமா, கரிமா, லகிமா, ப்ராப்தி, ப்ராகாம்யம், ஈசத்வம், வசித்வம். இவை முறையே: மிகவும் நுண்ணியதாதல், மிகவும் பருத்ததாதல், மிகவும் கனத்தல், மிகவும் நொய்தாதல், வேண்டுவன அடைதல், குறைவின்றி நிறைவுள்ளவனாதல், யாவர்க்கும் மேம்பட்டிருத்தல், எல்லாவற்றையும் தன் வசமாக்க வல்லவனாதல் எனப் பொருள் படும்.

எண்குணத்தான்—மிகவும் கண்ணியமாக நினைக்கப்படும் சாத்விக குணசம்பூர்ணன். "எண்ணிய மூன்றனுள் முற்குணத்தவரே முதலோர் அவர் நற்குணக்கடலாடுதல் நன்று" என்றானிறே கம்பனும். இதுவன்றி அவனுடைய கல்யாணகுணங்களை எண்ணி முடியா. அவன் அநந்தகல்யாண குணகண மகோததி என்றும் பொருள் கொள்ளலாம்.

"எண்பெருக் கந்நலத்து, ஒண்பொரு ளீறில, வண் புகழ் நாரணன், திண் கழல் சேரே." (திரு. 1—2—10)

"எட்டுமா மூர்த்தியெண் கண்ண னெண்டிக் கெட்டிறை யெண் பிரகிருதி
எட்டுமா வரைகளீன்ற வெண்குணத்தோ னெட்டெணு மென்குணமதி யோர்க்
கெட்டுமா மலரெண் சித்தியெண்பத்தி யெட்டுயோகாங்க மெண்செல்வம்
எட்டுமா குணமெட் டெட்டெனுங்கலை யெட்டிரதமே லெனவு மெட்டினமே"

என்பது அதிகாரஸங்க்ரஹச் செய்யுள். எம்பெருமானுடைய எட்டுக் குணங்களாவன:— கர்மத்துக்கு உட்படாமை, கிழத்தனமில்லாமை, மரணமில்லாமை, பசியில்லாமை, தாஹமில்லாமை, சோகமில்லாமை, நித்யமான போகங்களை யுடைமை, நினைத்ததை முடிக்க வல்லமை என்பன.

10 "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்"

"இறைவனடி யென்னும் புணையைச் சேர்ந்தார் பிறவியாகிய பெரிய கடலை நீந்துவர்; அதனைச் சேராதார் நீந்தமாட்டாராய் அதனு ளழுந்துவர்" என்பது பரிமேலழகர் உரை. இறைவன்-எல்லாப் பொருள்களிலும் அந்தர்யாமியாய்த் தங்குபவன் (இறுத்தல்-தங்குதல்)

இக்குறளைப் பின்வரும் திருவாய்மொழியோடு ஒப்பிடுக.

"அணைவது அரவணைமேல் பூம்பாவை யாகம்
புணர்வது இருவரவர் முதலும் தானே
இணைவனும் எப்பொருட்கும் வீடு முதலாம்
புணைவன் பிறவிக்கடல் நீந்து வார்க்கே." (திரு. 2—8—1)

பிறவி-சம்சாரமாகிற, கடல்-கடலை, நீந்துவார்க்கு-நீந்திக் கரையேறவேண்டுவோர்க்கு புணைவன்-தெப்பமாமவனு யிருக்கும், புணைவன்-தெப்பமாமவன். "(பிறவிக்கடல் நீந்துவார்க்கு-புணைவன்) ஸம்ஸாரமென்றொரு பெருங்கடல், அது எங்களாற் கடக்கப்போகாது, ப்ரபலனை நீயே கழித்துத் தரவேணும் என்றிருப்பார்க்கு ப்ரதி பூவாய் நின்று கடத்திக் கொடுக்கும். புணையாமவ னென்றபடி. ஸர்வபார நிர்வாஹகனுமவ னென்றபடி. 'விஷ்ணு போதம்' என்னக் கடவதிறே."

ஸ்ரீவைஷ்ணவனுக்குக் கர்மம், ஜ்ஞாநம், பக்தி, ப்ரபத்தி என்கிற படிகள் ஸாதநம். கர்மம் கைங்கர்யத்திலே புகும்; ஜ்ஞானம் ஸ்வரூப ப்ரகாசத்திலே புகும்; பக்தி ப்ராப்ய ருசியிலே புகும்; ப்ரபத்தி ஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞாநத்திலே புகும். ஸ்ரீபகவத் கீதா சாஸ்த்ரத்தில் சொல்லிய பிரபத்தி மார்க்கத்தைத் தழுவியே திருவள்ளுவரும், 'நற்றாள் தொழார்' 'மாணடிசேர்ந்தார்' 'அடிசேர்ந்தார்' 'புகழ் புரிந்தார்' 'ஒழுக்க நெறி நின்றார்' 'தாள் சேர்ந்தார்' 'தாளைவணங்காத் தலை' 'அடிசேராதார்' என்றும் சரணாகதி சாஸ்திரத்தை விளக்கியுள்ளார்.

மேலும்,

"ஊரவர் கவ்வை யெருவிட்டு அன்னைசொல் நீர்படுத்து
ஈரநெல் வித்தி முளைத்த நெஞ்சப் பெருஞ் செய்யுள்

பேரமர் காதல் கடல்புரைய விளைவித்த
காரமர் மேனிநம் கண்ணன்தோழி கடியனே" (திரு. 5—3—4) என்பதை

மூப்பால் ' அலரறிவுத்தல் ' அதிகாரத்தில்,

"ஊரவர் கவ்வை யெருவாக வன்னைசொன்
னீராக நீளுமிந் நோய்"

என்ற செய்யுளோடு ஒப்பிடலாம்.

"கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலும் ஐங்கருவி
கண்ட வின்பம் தெரிவரிய அளவிலாச் சிற்றின்பம்
ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப
கண்டசதிர் கண்டொழிந்தேன் அடைந்தேன் உன் திருவடியே" (திரு. 4-9-10)
என்பதை

"கண்டு கேட்டுண்டு யிர்த்துற்றறி யுமைம் புலனு
மொண்டொடி கண்ணே யுள"

என்ற காமத்துப்பால் ' புணர்ச்சி மகிழ்தல் ' முதற்குறளோடு ஒப்பிடத்தகும்.

"தாம் வீழ்வார் மென்றோட்டு யிலினினிதுகொ
றாமரைக் கண்ணா னுலகு"

என்ற காமத்துப்பால் ' புணர்ச்சி மகிழ்தல் ' அதிகாரத்தின் வரும் செய்யுளில் "அவற்றைத் துறந்த தவயோகிக ளெய்துஞ் செங்கண் மாலுலகம். இந்திரனுல கென்றுரைப் பாருமுளர். தாமரைக் கண்ணன் என்பது அவருக்குப் பெயரன்மையின் அஃதுரையின்மை அறிக" என்ற பரிமேலழகர் குறிப்பை நன்கு கவனித்தல் நலம். ' புண்டரீகாக்ஷன் ' என்பது அசாதாரணமாய் ஸ்ரீமந் நாராயணனையே குறிக்கு மென்பதை அறியாத ஸ்ரீ வைஷ்ணவரும் உளரோ?

பொருட்பால் அரசியல் ' மடியின்மை' இறுதிச்செய்யுள்

"மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
றாஅயதெல்லா மொருங்கு"

"தன்னடி யளவானே எல்லா வுலகையும் அளந்த இறைவன் கடந்த பரப்பு முழுதையும் மடியிலாத அரசன் முறையான் அன்றி ஒருங்கே எய்தும்" என்ற பரிமேலழகர் உரையும், 'அடியளந்தான்' என்றது வாளா பெயராய் நின்றது-என்ற குறிப்பும் நன்கு கவனிக்கற்பாலன. (இறைவன்—திருமால். பின்னிற்கும் தாஅயது என்பது திருமால் உலகளந்த வரலாற்றைத் தெரிவித்து நிற்றலால், முன்னிற்கும் அடியளந்தான் என்பது அவ்வரலாற்றைத் தெரிவியாது வாளா—யாதொரு விசேடமும் கற்பியாது—திருமா லென்னும் பெயர் மாத்திரமாய் நின்றதென்க) இதனால் நாயனார் வழிபட்ட கடவுள் யாரெனத் தெள்ளிதில் உணரலாம்,

''வைணவர்கள் வள்ளுவரைத் தம் மதத்தவர் என்று சொல்லிக்கொண்டு 'மடியில்லா மன்னவன்' 'தாம் வீழ்வார்' என்கின்ற திருக்குறள்கள் அதற்காதாரமாய் இருக்கின்றன வென்று எடுத்துக் காட்டினும், அவர்கள் நாயனருக்குத் திருக்கோயிலும் திருவுருவும் அமைத்துத் தம் மதத்திற்கேற்ப வணங்குவதாகக் காணப்பட வில்லை'' எனப் பிற்காலத்திய ஓரறிஞர் கூறியிருக்கிறார்.

நாயனர் இது காறும் கூறியவாற்றால்: திருவள்ளுவரை ஸ்ரீவைஷ்ணவர்கள் போற்றற்குரியர். அவர் திருவாய்மலர்ந்தருளியிருக்கும் திருக்குறளை முறையே நன்கு ஓதக்கடவர். புறக்கணித்தல் பொருந்தாது. ஆசாரியர்கள் அபிமானித்ததைப் போற்றலே சீடர்கள் கடன். ஆங்காங்குத் தமிழ்ச் சங்க வாயிலாகக் குறள் வகுப்புகள், பிரசங்கங்கள் நடைபெறுமாயின், அவற்றை மனப்பூர்த்தியாய் ஆதரிக்க வேண்டுவது ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவனுடைய கடமை என்பதையும் தனித்துக் கூறவேண்டுவதில்லை. இவற்றை நிந்திப்பதும், ஆதரியாது ஆலசியமாக இருப்பதும் ஆன்றோர் ஒழுக்கன்று. குற்றம் நீக்கிக் குணமே கொள்க. எம்பெருமான் அவதாரங்களில் சிறந்தது தசாவதாரம். நாயனர் நாமங்கள் பத்து. அவர் நூலின் பெயர் பத்து. அவர் பாடியதும் பதிகச்செய்யுள்.

''எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்''

''செவிக் குணவில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்''

ஸ்ரீ:

ஸ்ரீ க்ருஷ்ண தாதார்ய மஹாதேசிக சரிதம்.

(ஸ்ரீ. உப. வித்வாந். ஐயா. க்ருஷ்ண தாதாசார்யர்.)

முன்னமே தானே மஹாராஜாவும் ஸ்ரீ ஸ்வாமிக்கு, குறிப்பிட்ட ஒரு தினத்திலே எழுந்தருளப் போகிறாரென்றும், அப்போது மற்றத் தேசத்திலுள்ள வித்வாந்களெல்லாம் தங்கள் தங்கள் வித்யார்த்திகளோடு வரவேண்டுமென்றும் தெரிவித்திருந்தபடியால், பகு வித்வாந்கள் தங்கள் வித்யார்த்திகளோடு முன்னமே வந்திருந்தார்கள். ஸ்ரீ ஸ்வாமியோடும் சதுஸ் தந்த்ரங்களிலும் வல்ல வித்யார்த்திகள் பலர் வந்திருந்தனர். ஸ்ரீஸ்வாமியும் தமது கர்மாநுஷ்டானங்களை அநுஷ்டித்துத் தமது வித்யார்த்திகளோடு ஆஸ்தான மண்டபம் எழுந்தருள, மற்ற வித்வாந்களும் தத்தம் வித்யார்த்திகளுடன் அவ்விடம் வந்து யதாஸ்தானம் உட்கார்ந்தார்கள். அப்போது மஹாராஜாவும் ஸ்ரீ ஸ்வாமிக்கு எதிரில் பத்தாஞ்ஜலியாய் நின்றுகொண்டு, ''அடியேனுடைய பாக்யத்தாலும் முன்னோர்களுடைய பாக்யத்தாலும் இங்கே இத்தனை பண்டிதர்கள் சேர்ந்திருக்கிறார்கள்; அவரவர் திருவுள்ளப்படி சதுஸ்தந்த்ரங்களிலும் கர்ணாநந்தமாக விஷய விமர்சங்கள் நடத்தலாமே'' என்று

ப்ரார்த்தித்தார். அப்படியே நாலைந்து நாட்கள் விசாரங்கள் நடந்தன. மஹாராஜாவும் ஸ்ரீ ஸ்வாமிக்குத் தந்த்ர சதுஷ்டயத்திலுமாக விசேஷ ஸத்காரம் செய்தார். தவிர, மற்ற வித்வாந்களுக்கும் வித்யார்த்திகளுக்குமாக அவரவர் யோக்யதாநுகுணமாய் ஸம்மாநங்கள் செய்யப்பட்டன. ந்யாய சாஸ்த்ரத்திலே சில வாதங்கள் அப்போது ஸங்க்ரஹித்ததாயிருக்கும். அநந்தரம் ஸ்ரீ ஸ்வாமி திருவுள்ளப்படி மஹாராஜா, பெரிய திருவடி சிறிய திருவடி மஹோத்ஸவங்களை ஸ்ரீ ஸ்வாமி முகமாகவே ஆயிரம் ரூபாய்க்குமேல் செலவு செய்து, ப்ரதி ஸம்வத்ஸரமும் நடத்திவைப்பதாக ஒப்புக்கொண்டார்; ஸ்ரீ பேரருளாளன் நித்யப்படி திருவாராதநத்திலும் தம் த்ரவ்யம் கொஞ்சம் கலக்க வேண்டுமென்று பெருமாள்கோவிலிலேதானே வேகவதி நதிக்கரையிலே பெரிய தோட்டம் ஒன்று வாங்கி ஸமர்ப்பித்தார். ஸ்ரீ ஸ்வாமியும் அதிஸந்தோஷத்தோடு ஸ்ரீ பேரருளாளன் திருவடி வாரத்துக்கு எழுந்தருளி யதா க்ரமமாகக் கைங்கர்யங்களை நடத்திவந்தார்.

பின்பு ஒரு கால விசேஷத்தில் மந்தஸா ராஜ்யாதிபதியான ஓட்ர ப்ராஹ்மண வித்வாந் ஒருவர், ஸ்ரீ ஸ்வாமி ப்ரபாவத்தைக் கேட்டு, ஸ்ரீ ஸ்வாமி ஸ்ரீ பாதத்திலே தானே ஸ்ரீ பாஷ்யாதிகளை அதிகரிக்க வேணுமென்று கொண்டு, தம்குல குருவாயிருக்கும் திருமலை ஈச்சம்பாடி ஸ்ரீநிவாஸராகவாசார்யர் என்பவரை ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதிக்கு அனுப்பினர் அவரும் ஸ்ரீ ஸ்வாமியைத் தண்டன் ஸமர்ப்பித்து அநுவதித்து, ராஜாவின் அபிப்ராயத்தை விண்ணப்பித்தார். ஸ்ரீ ஸ்வாமி, 'ராஜ்ய தந்த்ரங்களை ப்ராப்தரானவர் கையிலே ஒப்புவித்து விரக்தராய் இவ்விடம் வந்தால் ஆகலாம்' என்று அருளிச் செய்ய, அவரும் இவ்வ்ருத்தாந்தத்தை அங்குப் போய் ராஜாவுக்கு அறிவித்தார். ராஜாவும் அது கேட்டு, ராஜபதவிக்கு ப்ராப்தனான புத்ரன் தத்காலத்திலே அப்ராப்த வயஸ்கனாயும் அசக்தனாயும் இருக்கையாலும், காலகதியை யோசித்தும், தம் ஆசார்யர் முன்னமே ஸ்ரீஸ்வாமி ஸந்நிதியிலே ஆச்ரயித்தவராயிருக்கச் செய்தேயும், புநஸ்ச ஸகலார்த்தங்களையும் த்ருடீகரணம் பண்ணிக்கொண்டு தனக்குச் சொல்லவேணுமென்று ப்ரார்த்திக்க, அவரும் அப்படியே ஸ்ரீ ஸ்வாமி ஸ்ரீபாதத்திலே வந்து புநஸ்ச ஸகலார்த்தங்களையும் சிக்ஷித்துக்கொண்டு அதிநிபுணராய் அந்த ராஜருக்கும் மற்றும் சில ஓட்ர ஸ்ரீ வைஷ்ணவ ப்ராஹ்மணர்களுக்குமாக ஸ்ரீ பாஷ்யாதிகளை அருளிச் செய்தார்.

ஒரு ஸமயம் மஹாவைத்யநாதன் என்னுமொரு ப்ரஸித்தனான காயகன், ஸ்ரீஸ்வாமி ஸந்நிதியில் பாடித் தனக்குள்ள பௌடிமையைக்காட்டி ஸம்மாநம் பெறவேணுமென்று எண்ணி ப்ரார்த்திக்க, ஸ்ரீஸ்வாமியும் 'விஷய வைலக்ஷண்ய முள்ள பாட்டாயிருந்தால் பாடலாம்' என்று நியமித்தார். அதன் மேல் ஒரு பௌர்ணமி உத்ஸவத்தில் பெருமாள் உத்ஸவம் கண்டருளி ஸந்நிதிக்குள் எழுந்தருளினவாறே, ஸ்ரீ ஸ்வாமியும் ஸ்ரீ பேருளாளன் திருவபிஷேக மண்டபம் எழுந்தருளினர். அவ்வளவில் அவ்விடத்தில் பஹு காயக ப்ரவரர்கள் சேர்ந்தார்கள். ஸ்ரீ ஸ்வாமியும் வீற்றிருந்து ஐயரைப் பாட நியமிக்க, அவரும் ம்ருதங்கம் முதலிய பக்க வாத்யங்களோடு, பாட்டுக் கேட்குமவர் ச்ரோத்ர மனோரஞ்ஜநமாம் படி பாடினர். ஸ்ரீஸ்வாமிக்கு நாதநாமக்ரியா என்னும் ராகத்திலே அதிப்ரீதி என்று அறிந்து, 'அந்த ராகத்திலே தானே தம் ஸாமர்த்யமெல்லாம் காட்டிப் பாடுமளவிலே, நடுவிலே ஸ்ரீஸ்வாமி கொஞ்சம் மந்தஹாஸம் பண்ணும்படியிருந்தது. அந்த இடத்தையே மறுபடியும் பாடும்படி ஸ்ரீ ஸ்வாமி நியமிக்க, அவரும் அப்படியே பாடிவருகையில், அந்தப் பாட்டு அவ்விடத்தில் தாளத்துக்கு ஒத்திராமையைக் காட்டித் தாம் கைத்தாளம் போட்டு காநம் பண்ணிக் காட்ட, அத்தனை காயகர்களும் திகைத்துப் போனார்கள். ஐயரும் தமக்குண்டான லஜ்ஜாதவும் உள்ளடங்காதே கூப்பின கையோடு

வாசா அநேக நமஸ்காரங்கள் செய்ததுமன்றி, ‘இவர் காலத்தில் ஸாக்ஷாத் க்ருஷ்ண மூர்த்தி’ என்று பலவாறு கொண்டாடினர். கடைசியாக ஸ்ரீஸ்வாமியும் அவர் காலத்தை ரொம்ப ப்ரசம்ஸித்து, ஸ்ரீஸந்நிதியில் ஏற்பட்டிருக்கும் வித்வத் ஸம்பாவநா க்ரமத்திலே ஒரு வஸ்த்ரத்தைப் பரிசளிக்க, அவரும் அதி ஸந்தோஷத்தோடே ஸ்ரீஸ்வாமியைப் புகழ்ந்துகொண்டு போனார். இந்த வ்ருத்தாந்தத்தைத் தமக்கு ஒரு பெருமையாகவே நினைத்து, அதை மன்னார் கோவில் ப்ருஹ்ம ஸ்ரீ ராஜு சாஸ்த்ரிகளிடத்தில் சொல்லிக் கொண்டதாகச் சொல்வதுண்டு.

ஸ்ரீ ஸ்வாமி வேதாந்த ஸம்ப்ரதாய க்ரந்த ப்ரவசநம் செய்தருளும்போது அருளிச் செய்த க்ரந்தங்கள் அநேகம் உண்டு. அவை:—ப்ரத்ய சத்வாதி ஸ்வயம் ப்ரகாசத்வ விசாரம், அருணாதிகரண விசாரம், ப்ரதீதா அப்ரதீதா வேத்யாதி ச்ருத ப்ரகாசிகா ஸ்ரீ ஸூக்தி வ்யாக்யாநம், அநேக ஜீவேந்யேத்யாதி ச்ருத்யர்த்த விசாரம், அகில சப்தார்த்த விசாரம், ஆப்ரயாணோபாஸநாவர்த்தந விசாரம், அநுவர்த்தமாநத்வாநுமாநோபாதி விசாரம், ஆபர்யவஸாந வ்ருத்தி விசாரம்—ப்ரத்யுக்த்வாதி ஸ்வரூப நிரூபகத்வ விசாரம், மற்றும் அநேகமாக ச்ருத ப்ரகாசிகா பங்க்த்யர்த்த விசாரம் இப்படி அநேகம் உண்டு. ஸ்ரீ ஸர்வார்த்த ஸித்தியிலும் இப்படி அநேக விஷய விசாரங்கள் உண்டு.

இப்படி ஸ்ரீ ஸ்வாமி ஸ்ரீ பேரருளாளன் திருவடி வாரத்திலே இருந்துகொண்டு ஸித்தாந்த ஸ்தாபநம் செய்துகொண்டிருக்கும்போது, தென்தேச யாத்ரை போயிருந்த கோவர்த்தநம் கந்தாடை ரங்காசார்யர் என்கிற மஹாநுபாவர் ஒருவர், ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியிலே ஸாமாந்ய சாஸ்த்ர பரிசயம் யதோசிதமாகப் பண்ணி, பிள்ளை லோகாசார்யர் ரஹஸ்யங்களிலே அபிநிவிஷ்டராயிருந்த கப்யாமூர் எம்பார் ஜீயர் என்பவரை ஆஸ்தாந வித்வானாக வைத்துக்கொண்டு, கோயிலிலேயிருந்து ஸ்ரீரங்கம் ஸ்வாமி ஸந்நிதிக்கு ப்ரபத்யுபாயத்வ விஷயத்திலும் பிராட்டி விஷயத்திலுமாக ஸ்ரீ ரஹஸ்யத்ரய ஸாராதி க்ரந்தங்களிலே உபபாதித்த விஷயங்கள் அஸங்கதங்கள் என்று ஸ்தாபித்தார். “ஸாமர்த்யம் உண்டானால் உம் ஸித்தாந்தத்தை நம்மோடு நேரில் வாதம் செய்து ஸ்தாபித்துக் கொள்ளும்” என்று அறிவிக்க, அந்த ஸ்வாமியும், “இவர்கள் யாரோ ப்ரபல வித்வாந்கள்; இவர்களோடு நேரில் வாதம் பண்ணுவது ஆச்ரம விருத்தம்” என்று கொண்டு,

“[illegible]”—

என்கிற ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதய ஸ்ரீ ஸூக்தியின் படியே தம் திருவடிகளைக் கொண்டு நிரஸிக்கத் திருவுள்ளமாய் ஆராய்ந்தவளவிலே அங்குள்ளவர்களெல்லாம் ப்ரதி பக்ஷியின் ஆடம்பரங்களைக் கண்டு ஸ்ரீ ஸ்வாமியைக் கொண்டுதான் இவர்களை நிரஸிக்கவேணுமென்று திருவுள்ள மூவந்து ஸ்ரீ ஸ்வாமிக்கு ஸ்ரீ முகம் அனுப்ப, அவர்களும் பயந்து, திருமெய்யம் திருக்கோட்டியூர் முதலான திவ்ய தேசங்களுக்கு ப்ரயாணம் போவதாகச் சொல்லிப் போயினர். ஸ்ரீ ஸ்வாமியும் ஸ்ரீ முகத்தைக் கடாக்ஷித்துத் தம் வித்யார்த்தியோடு வாதம் செய்வது யுக்தமன்றென்றும், ‘நான் வருவதாக அறிந்தால் அவர்களே வாதத்தை நிறுத்திவிடுவார்கள்’ என்றும் விண்ணப்பஞ்செய்து அனுப்பினர்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத்

[ஸ்ரீ. உ.வே. A. V. கோபாலாசாரியர், M. A. B. L. அட்வோகேட், திருச்சி]

[illegible]

கிம் வ்யாஹராமி வரத ஸ்துதயே—காருண்யத்தை முதல் ச்லோகத்திலும், க்ஷமையை இரண்டாம் ச்லோகத்திலும், வாத்ஸல்யத்தை மூன்றாம் ச்லோகத்திலும் ஸ்ரீ ஸ்வாமி அநுஸந்தித்தார். வரதனுக்கு அஸாதாரணமான வரதத்வத்தை (ஔதார்யத்தை) ஏன் அநுஸந்திக்கக் கூடாது? ‘[illegible]’ என்று திருநாமம் என்கிற ச்ருதி ப்ரமாணத்தாலேயே அபேக்ஷித்தவற்றை யெல்லாம் கொடுக்குமவரிடம் ஏன் கேட்க ஸங்கோசப்படவேணும்? நம் ஞானம்தான் அத்யந்த ஸங்கோசமாயுள்ளது. அடுத்த பாதத்தில் அதன் ஸங்கோசத்தைக் கூறப்போகிறார். கேட்கும் விஷயத்தில் இந்த வரதப் பெருமாளிடம் ஸங்கோசம் வேண்டாமே என்று ‘வரத’ என்று ஸம்போதநம் செய்து, பின்பாதியில் ஸ்தோத்ரம் செய்யவேண்டிய உத்தமமான அர்த்தங்களையும் வாக்கையும் ப்ரார்த்திக்கிறார். தாதாவான அவரல்லவோ வெட்கம் முழுவதையும் கைக்கொள்ளுகிறார். அவர் தாமே வெட்கத்தை வஹிக்கையில், நாம் ஏன் வெட்கப்படவேணும் நாம் வெட்கப்பட்டுக் கேட்காமலிருந்தால், அவரது (வரத வென்னும்) திருநாமத்துக்கல்லவோ அழிவுவரும். அவர் பெயரை நாமே அழிக்கலாமோ? திருநாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டு யாசிப்போம்.

வரதனை ஸ்தோத்ரம் செய்ய வரமான (ஸர்வோத்தமமான) அர்த்தமும் வாக்கும் வேண்டாவோ? வரமான அவ்விரண்டையும் வரத்தைக் கொடுக்குமவரிடமிருந்தல்லாமல் வேறு எங்கே யாசிக்கக்கூடும்? எதையாவது யாசிப்பதற்காக ஸ்தோத்ரம் செய்பவர் உலகில் உளர். இவர் ஸ்தோத்ரம் செய்யவேண்டியதற்காகமட்டும் வரார்த்தங்களை யாசிக்கிறார். ஸ்தோத்ரம் இவருக்கு ஸ்வயம் ப்ரயோஜநம். ‘தொழுது தொழுது’ என்றபடி.

ஸ்துதயே—என்று நான்காம் வேற்றுமையால் 'ஸ்தோத்ரம் செய்வதே ஸ்வயம் ப்ரயோஜநம்' என்று காட்டுகிறார். ஸ்தோத்ரம் ஸித்திப்பதே இவருக்கு வரம். அந்த வரத்தையே வரதனிடம் யாசிக்கிறார்.

அர்த்திகளைத் தேடிப் பிடித்து, அவர்களை வரித்துக்கோரின வரத்தைக் கேட்கும்படி நிர்ப்பந்தித்துக் கொடுக்கும் பெருமாள் இவர். இவரால் வரிக்கப்பட்டவருக்கு இவர் தம் ஸ்வரூப குணாதிகளை ப்ரகாசப்படுத்துவர். இவர் ஸ்வரூப ரூபகுணங்கள் நமக்கு ப்ரகாசமாகாவிட்டால் எப்படி ஸ்தோத்ரம் செய்யக் கூடும்? ஆகையால் இவருக்கு வரணீயனாகும்படி நாமும் செய்து கொள்ளவேணும். இவர் அன்றியில் இந்த ஸ்தோத்ரத்தை நிர்மாணம் செய்ய வேறு கதி நமக்கு இல்லை யென்றும், நமக்கு ஸ்வயமாக யாதொரு சக்தி யோக்யதை முதலியன இல்லை யென்றும், நாம் அத்யந்தம் அகிஞ்சநர் என்றும், நமக்கு த்ருடமான புத்தியிருப்பதை இவர் அறியும்படி செய்யவேணும். 'இந்த ஸ்துதியை நிர்மாணம் செய்ய, நான் ஸ்துதிவிஷயமான இப்பெருமாளையும் இவர் குணங்களையும் பற்றி என்ன அம்சத்தை அறிவேன்? எதனை அறியப் போகிறேன்? எப்படிப் பேசப் போகிறேன்? என்ன வாக்கைச் சேர்க்கப் போகிறேன்?' என்று தம்முடைய ஆகிஞ்சந்யத்தை விளக்குகிறார்.

ஏழாவது ச்லோகத்தில் 'கண்களுக்கு அவிஷயமான எவரை' என்று ஸ்தோத்ரம் ஆரம்பிக்கப் படுகிறது. ஆறு ச்லோகங்களில் ஸ்துதி செய்ய வேண்டிய ஸகல ஸாமக்ரியையும் அளிக்கும்படி ப்ரார்த்தித்து, அதைப் பெற்றுக் கொள்ளுகிறார். ஆறங்கங்களையுடைய ப்ரபத்தியைத் தவிர நமக்கு ஸ்தோத்ரம் ஸித்திக்க வேறு உபாயமில்லை யென்பதைக் காட்ட ஆறு ச்லோகம் என்கிற எண்ணிக்கையை அவலம்பித்தார் போலும். வரதனுக்கு அவரமான ஸ்தோத்ரத்தைக் கொடுக்கலாமோ? வரமான ஸ்தோத்ரம் அவன் தானம் பண்ணினாலொழிய எப்படி ஸாதிக்கக் கூடும்?

முன் ச்லோகம் முடிவில், 'உமது வாத்ஸல்யம் தான் என் வாயைத் திறந்து சப்திக்கச் செய்கிறது' என்றார். மூடியிருந்த வாய் திறந்துவிட்டது. ஆயினும், 'எந்தக் குணத்தை மனத்தினால் சிந்திப்பது? எப்படி வர்ணிப்பது?' என்று திகைப்பாய் இருக்கிறதே என்கிறார். இவர் திகைப்பு த்ருவன் என்னும் குழந்தையின் திகைப்பைப் போன்றது என்று இங்கே அநுஸந்தாநம். வாலம்—என்று தம்மை வயதில் த்ருவனைப் போன்ற குழந்தையாக நினைத்துக்கொள்வதை ஸூசித்தார்.

'[illegible]'

என்று த்ருவன் திகைத்துப் பேசத் தெரியாமல் நின்றபொழுது பெருமாள் ப்ரஹ்மமயமும் ப்ரணவமயமுமாகிய தம்முடைய ஸ்ரீ பாஞ்சஜந்யத்தாலே கன்னத்தில் தொட்டு அநுக்ரஹித்தார். பாஞ்சஜந்யம் போதுமோவென்று சங்கித்துத் தம்முடைய க்ருபையாலும் ஸ்பர்சித்தாரென்றும் அழகாக ஸூசி '[illegible]' என்று மூன்றாம் வேற்றுமை யென்கிற ச்ருதி ப்ரமாணத்தால் க்ருபைக்கு ஒரு முக்யமான ஸாதநத் தன்மையைக் காட்டினார். 'உம்மை ஸ்தோத்ரம் பண்ண வ்யாஹ்ருதிகளை எமக்குக் கொடுக்க வேண்டாமோ? வ்யாஹ்ருதீ—உம்மை ஸ்தோத்ரம் செய்ய வேண்டியதற்கு வேத வ்யாஹ்ருதிகளைப் போலவும், வ்யாஹ்ருதி சிரஸ்கமாகவும் பரிகரமாகவும் உள்ள காயத்ரியைப் போலவும் வேதஸாரஸ்வதியாக இருக்கவேணுமே என்றுள் மனோரதத்தை ஸூசிக்கிறார்.

'த்வாம் ஸர்வகாரணமுசந்தி அநாதிவாச:'

என்று நித்யமான அறியா மறைகள் உம்மையே காரணப் பொருளென்று விரும்புகின்றன என்று கூறப் போகிறார். அந்த வேத ஸாரஸ்வதி போன்ற சாச்வத ஸாரஸ்வதத்தை அபேக்ஷிக்கிறார். த்ருவனுடைய ஸ்தோத்ரத்தின் முதல் ச்லோகம் இங்கே ஸ்வாமி நெஞ்சில் ஓடுகிறது. அதற்கும் மூலமான கேநோபநிஷத் முழுவதும் இவர் நெஞ்சில் உளது. 'யாரால் இச்சிக்கப்பட்டு (ஸங்கல்பிக்கப்பட்டு) மனம் ஒரு பொருளில் விழுகிறது? யாரால் இச்சிக்கப்பட்டு இந்தப் பேச்சு பேசப்படுகிறது? கண் காதுகளை எந்தத் தேவன் ப்ரேரணம் செய்கிறான்? காதுக்குக் காதாகவும், கண்ணுக்குக் கண்ணாகவும், வாக்குக்கு வாக்காகவும், மனஸ்ஸுக்கு மனஸ்ஸாகவும் இருப்பவன்' என்று அங்கே உள்ளது. இந்த்ரியங்களுக்கு வேதாந்தங்களில் 'தேவர்கள்' என்று பெயர். எமது இந்த தேவராஜப்பெருமாள், ஸர்வேந்த்ரியங்களையும் நியமிப்பவர். கேநோபநிஷத் ஒவ்வொரு இந்த்ரியமும், அதை அதிஷ்டானம் செய்யும் அக்ந்யாதி தேவர்களும், பெருமானுடைய இச்சையில்லாமல் போனால் சேஷ்டையற்றிருப்பதைக் கதையினால் விளக்குகிறது. இந்த ச்லோகம் முதல் மூன்று ச்லோகங்களில் இந்த்ரியங்களென்னும் தேவர்களுக்கும், அவற்றை அதிஷ்டானம் செய்யும் தேவர்களுக்கும், அரசனான தேவராஜனாகிய இப்பெருமானுடைய இச்சையில்லாமல், மனோவ்யாபாரமும் வாக்வ்யாபாரமும் அஸாத்யமானபடியால், இவரை ப்ரார்த்தனையால் வசப்படுத்தி, கேட்ட வரமெல்லாம் கொடுப்பதில் இவருக்கு மசக்கையானபடியால் இவரைக் கேட்டு உத்தம வாகர்த்தங்களை ஸாதித்துக் கொள்ளவேண்டுமென்று ப்ரயத்நம். கொடுக்கும் வ்யாபாரத்திலேயே இப்பெருமானுக்கு லஜ்ஜை ஸஹஜம். அதிலும் தம்மையே ஸ்தோத்ரம் செய்யச் சக்தியை யாசிக்கும்பொழுது அதைக் கொடுப்பதில் லஜ்ஜைக்கு

அளவிருக்குமோ? 'நீர் இல்லாவிட்டால் என்னதான் நடக்கும்?' என்று அடுத்த ச்லோகத்தின் முடிவில் கூறுகிறார்.

ஏழாவது ச்லோகத்தில் ஸ்தோத்ராரம்பத்திலேயே, 'ஸப்தரூவக்ஷமூ ஹ்ருதி' என்று இந்தக் கேநோபநிஷத்தில் இருப்பதை மனத்திற் கொண்டு, 'யம் வக்ஷ்யா வி‌ஷயம்' என்று ஸாதிக்கிறாரென்பது ஸ்பஷ்டம். த்ருவன் ஸ்தோத்ரத்திலும் இந்த உபநிஷத்தின் பொருள்களே விளக்கப்படுகின்றன. ஏழுலோகங்களையும் க்ருஹமாகக் (குடும்பமாகக்) கொண்டு ஸப்தலோகீ க்ருஹஸ்தனை இப்பெருமானுக்கு ஸப்தலோகங்களையும் பொருளாகக்கொண்ட ஸப்த வ்யாஹ்ருதிகள் அநுரூபமாகும். பெருமாளை ஸ்தோத்ரம் பண்ணின காளிதாஸரும் 'இந்த ஸ்தோத்ர வாக்கெல்லாம் உண்மையான வ்யாஹ்ருதி' என்று வ்யாஹ்ருதி சப்தத்தை ப்ரயோகித்தார். இந்த ஸ்வாரஸ்யத்தை உத்தேசித்து, சப்த ப்ரயோக ரூபமான வ்யாஹாரத்துக்கு வேண்டிய ஞான விஷயத்திலும் 'வ்யாஹராமி' என்றும் ப்ரயோகித்தார். சப்தம் மட்டும் வேதவ்யாஹ்ருதியா யிருந்தால் போதாது. அதற்கு முன் உள்ள ஜ்ஞாநமும் இவ்வேதப் பெருமாள் விஷயத்தில் வ்யாஹ்ருதியா யிருக்க வேண்டுமென்று மநோரதம். 'கிம் வ்யாஹராமி' என்று முதலில் ஜ்ஞாந விஷயமாயும், 'கதம் வா' என்னும் இடத்தில், 'எப்படி வ்யாஹரிக்கப் போகிறேன்?' என்று அநுஷங்கத்தால் 'பேசப் போகிறேன்' என்று வேறு அர்த்தத்தில் ப்ரயோகிக்கலாமோ என்கிற சங்கையை வெகு அழகாகக் கூரர் ஸ்வாமி விவரதிகரணத்திலுள்ள ஸ்ரீ பாஷ்யத்தை ப்ரமாணமாகக் காட்டிப் பரிஹரித்தார். த்ருவன் படிக்காத குழந்தை. இவர் இருபதுவயதில் நாநா வித்யைகளையும் கரைகண்டவராயினும், இப்பெருமாளை ஸ்துதி செய்யும் விஷயத்தில் படிக்காதவருக்கும் தமக்கும் வாசியில்லை யென்று திருவுள்ளம்.

தன்னுடைய ஆகிஞ்சந்யத்தை (ஒருகைம்முதலுமில்லாமையை) நன்கு விளக்க 'ஒன்றுமில்லை, அர்த்த ஞானமில்லை, வாக்ஞானமில்லை' என்று 'கிம்' சப்தத்தையே ப்ரயோகித்து, அந்த 'கிம்' 'இல்லை' என்னும் தாத்பர்யத்தைக் காட்டுகிறார். 'எதை அறிவேன், எதைப் பேசுவேன்' என்று எவ்விஷயத்திலும் இல்லாமையே வித்திக்கிறதால் 'அகிஞ்சநன்' என்பது ஸ்பஷ்டமாய் விளங்கும். 'நகிஞ்சந, நகிஞ்சந' என்பது பொருள். இங்கே 'கிம்' என்னும் கேள்வியால் ஆர்த்திகமாகக் காட்டிய ஆகிஞ்சந்யத்தை அடுத்த பாதத்தில் ஸ்பஷ்டமாக சாப்தமாக விளக்குகிறார். இதற்குமுன் வேறு ஸ்துதிகள் ஒரு விஷயத்திலும் செய்ததில்லையோ? செய்ததுண்டு. ஆயினும் வரதஸ்துதி செய்ததில்லை. 'வரதஸ்துதி வித்திக்க' என்ன ஞானமுண்டு? என்ன சக்தி உண்டு? என்ற பொருளைக் காட்ட 'வரத ஸ்துதயே' என்று சேர்த்து அந்வயிப்பதிலும்

திருவுள்ளம். அதற்காகவே 'வரத' என்கிற ஸம்போதநத்தை 'ஸ்துதயே' என்பதற்கு முன்னே வைத்தார் போலும்.

கிம் வ்யாஹராமி—என்பதற்கு அடுத்தாற்போல், 'வரத' என்று ஸம்போதநம் செய்வதில் மிக்க அழகு உளது. உமது பெருமையை நானே அறிந்து நானேப் பேசினால் 'கிஞ்சித்கரம்' என்னும் இளப்பமானதையே 'அவரத்தையே' நினைத்துப் பேசுவேன் என்றும் தாத்பர்யம். ஸர்வோத்தமத்தைக் கொடுக்கும் வரதனுக்குக் குத்ஸிதத்தை (அவரத்தைக்) கொடுப்பது உசிதமாகுமோ என்று கருத்து. வரம் கொடுப்பவருக்கு 'கிம்' அவரத்தையா கொடுப்பது? எம்மிடமோ வரம் (உயர்ந்தது) இல்லை ; அது அவரிடமே உள்ளது. அவரிடம் வரத்தைப் பிச்சை வாங்கியாவது அவருக்கு வரத்தையே கொடுப்போம். அவரத்தைக் கொடுக்க மாட்டோம்.

'வரத ஸ்துதயே' என்று சேர்த்து அந்வயிப்பதிலும் திருவுள்ளம் உண்டென்று நிச்சயமான அடையாளமுண்டு. 'இதி விஹித உதாரம்...ஸ்தோத்ரம்' என்று முடிவில் இந்த ஸ்தோத்ரம் உதாரமான ஸ்தோதரம் (அதாவது; வரதஸ்தோத்ரம்) என்று ஸ்பஷ்டமாக அருளிச் செய்கிறார். பெருமாள் எப்படி உதாரரோ அப்படியே அவர் விஷயமான ஸ்தோத்ரமும் அபேக்ஷிதத்தையெல்லாம் வழங்கும்படி உதாரமாக வேணும். உதாரமாகப் பொருள்களையும் வாக்கையும் வழங்கவேணும். உதாரமான வாகர்த்தங்களால் அமைக்கப்படவேணும்.

ஸ்தோத்ரம் என்பது ஒரு பாவனையாகும். அதுவே ஒரு க்ருதியுமாகும். சப்த பாவனையும் அர்த்த பாவனையும் இரண்டும் இங்கே ஒன்று சேரும். சப்த பாவனையால் அர்த்த பாவனை இங்கேயும் பாவிக்கப்படும். ஆனால் 'கிம் பாவயேத், கதம் பாவயேத், கேந பாவயேத்' என்னும் மூன்று பாவநாம்சங்கள் இந்த ஸ்தோத்ர பாவனையிலும் ஸ்தோத்ர க்ருதியிலும் எப்படியென்பதை இங்கே வேடிக்கையாகக் காட்டுகிறார். குணமுடைய ஒரு (குணி) வஸ்துவில் உள்ள குணங்களைப் பேசுவது ஸ்தோத்ரம். அந்த குணங்களைப் பேச, அந்த குணங்களை முன்பு மனத்தினால் பாவனை (சிந்தனை, த்யாநம்) செய்யவேணும். 'கிம் வ்யாஹராமி'—என்ன குணங்களைப் பாவனை செய்யப் போகிறேன். மீமாஸகர் 'கிம் பாவயேத்' என்பதற்கு என்ன பலத்தைப் பாவனை செய்வது என்று பொருள் கொள்ளுவர். ஸ்வர்க்காதிகளான யாக பலன்கள் அவர்களுக்கு அதனால் பாவ்யம். இங்கே ஸ்தோத்ரத்தால் பாவிக்கும் பகவத் ஸ்வரூப ரூப குணங்களே நமக்கு அடையவேண்டிய ப்ரயோஜநமாகிறது. ஸ்தோத்ரமே பலமாக முடிகிறது. ஸ்தோத்ரத்திலும் குணங்களோடு கூடப் பகவானுடைய அநுபவம். பின்பு பலமாகிய மோக்ஷ

மும் 'விபச்சித்தான ப்ரஹ்மத்தோடு கூட ஸகல கல்யாண குணங்களையும் அநுபவிக்கிறான்' என்று ஓதப்படும் ப்ரஹ்ம தத்குணாநுபவமே. மீமாம்ஸையின் அர்த்தவாதாதிகரணத்துக்கு ஸ்வயம் ப்ரயோஜநமான பரமாநந்தகர ப்ரஹ்மத்தை ஆநந்த ரூபமான விதியாக நம்முடைய ஹ்ருதய குஹையிலே நமக்கு ஆநந்தத்தைப் பூர்ணமாகக் கொடுப்பதற்கென்றே நாம் இசையும் அவஸரத்தை ப்ரதீக்ஷித்துக்கொண்டிருக்கிற தென்பதைத் தெரிவிக்கும். வேதாந்தார்த்த வாதங்களுக்கு ஆநர்த்தக்யம் (ப்ரயோஜநமின்மை) இல்லை. அவை புருஷார்த்த பர்யவஸாயிகள் தான் என்னும் அபவாதத்தை ஸமர்வயாதிகரணம் விளக்குகிறது. 'கிம்ஹவிஷ' என்பதற்கு ப்ரஹ்ம ஸ்வரூப ரூப குணங்களைப் பாவநம் செய்யவேணுமென்று பதில். 'கிம்ஹவிஷ' என்பதற்கு, 'செய்யவேண்டிய க்ருதியான ஸ்தோத்ரமென்னும் பாவநையை என்ன உபர்க்க சப்தங்களைக்கொண்டு செய்வது' என்பது பொருள். ஸ்தோத்ரத்தின் அங்கங்கள (சரீரம்) வாகர்த்தங்கள். 'ஹவ்யதயே' என்கிற நான்காம் வேற்றுமையால் ஸ்வரூப ரூப குண பாவநை செய்வதென்கிற ஸ்தோத்ரமே ஸ்வயம் ப்ரயோஜந மாதலால் 'கிம்ஹவிஷ' என்கிற பல பாவநைக்கு அதுவே விஷயமென்று விளக்கப்படுகிறது. 'கேநஹவிஷ' என்கிற ப்ரச்நத்துக்கு என்ன பதில்? 'ஹோத்ர' என்னும் ஸாதநத்தால் ஸ்வர்க்கம் என்னும் ப்ரயோஜநத்தைப் பாவநம் செய்வதென்பர் மீமாம்ஸகர். இங்கே யாக ஸ்தாநத்தில் பெருமாளே ஸாதநமாவர். 'கேந' என்பதற்குப் பெருமாளாலேயே என்று பதில்.

அடுத்த ச்லோகத்தில் மூன்றாம் பாதத்தில் 'ஸாயுஜ்யபாவா' (உம்மாலேயே ஸாதித்துக் கொள்ளும்) என்று கூறப்போகிறார். இந்த ஸ்தோத்ரமென்னும் பலத்தை நீரே எமக்கு அர்த்தத்தையும் ஸரஸ்வதியையும் கொடுப்பதால் ஸாதிக்க வேண்டுமென்று இந்த ச்லோகத்தின் பின்பாதியில் கூறுகிறார்.

த்ரவ்யம், தேவதை, பலம் இம்மூன்றில் இங்கே ப்ரீதியடைய வேண்டிய தேவதை அவனே; பலமும் அவனே. த்ரவ்யமும் அவனுடைய ஸ்வரூப ரூபகுணங்களைச் சொல்லும் சப்தார்த்தமயமான காவ்ய ஸரஸ்வதி. த்ரவ்யத்தை வாதனாகிய நீரே கொடுக்க வேணும்.

'ஹவ்யதயே' என்பதற்கு ஸ்தோத்ர ஸ்ருஷ்டிக்காக என்பது பொருள். 'ஸ பூரிதி வ்யாஹரத் ஸ பூமிமஸ்ருஜத ஸ புவ இதி வ்யாஹரத் ஸோऽந்தரிக்ஷமஸ்ருஜத'—என்று வேதம் ஸ்ரஷ்டாவின் வ்யாஹார பூர்வமாக ஸ்ருஷ்டியை வர்ணித்தது. இங்கே அந்த ச்ருதியை நினைத்து, ஆச்சர்யமான ஸ்தோத்ரத்தை ஸ்ருஷ்டிக்க 'வ்யாஹாரஸம்பதாநாய' வ்யாஹார

பூர்வகமாக உடனே அநாயாஸமாக இப்பெருமாள் அநுக்ரஹித்தால் ப்ரஜாபதி ஸ்ருஷ்டிப்பர். இப்பெருமாள் விஷயமாக ரசனையாக நான் மனோரதிக்கும் ஆச்சர்யமான ஸ்தோத்ரத்தை அவரே வ்யாஹார பூர்வகமாய் ஸ்ருஷ்டிக்கவேணுமே யல்லாது, நான் வ்யாஹாரணம் செய்து ஸ்ருஷ்டிக்க வல்லனோ? என் மனஸ்ஸும் வ்யாஹாரம் என்னும் அர்த்த விஷய ஜ்ஞாநத்திற்கு ஸமர்த்தமல்ல; என்வாக்கும் வ்யாஹாரமென்னும் சப்த ரசனைக்கு ஸமர்த்தமல்ல.

வகிஷ்யோத்யோதோ ஹஸ்தகிரிநாத வ்யுதாஸ:—என்னிடம் நீர் பொய் சொல்லலாமா? உமக்கு வாகர்த்தங்கள் இல்லை யென்றால் நம்புவதோ? முன்பே ஜந்மஸித்தமாக மற்றைக் கவிகளுக்குப் போல உமக்குக் கவிதா சக்தியை நாம் கொடுக்கவில்லையோ? ஆனால் அவைகள் எல்லாம் மின்மினிப் பூச்சியைப் போல் ஈஷத் ப்ரகாசம் போலே மின்னும். இரவில் மின்மினிப் பூச்சி ஸூர்யோதயத்தோடு அடியோடு ப்ரகாசத்தை யிழக்கும். அதன் மின்மினிப்பு ஸூர்ய வெளிச்சத்துக்கு முன் லயமடையும். உம்முடைய தேஜஸ்ஸை நோக்குங்கால் ஸஹஸ்ர கிரணனான ஸூர்யன் கூட இருட்டாயிருந்தால் மணம் பெறுவனே என்று சொல்லும்படி யிருக்கும். ஸூர்யனே உம்முடைய ஸந்நிதியில் பாஸிக்கமாட்டான் என்று வேதம் சொல்லுகிறது. ஸூர்யனுக்கு ஸூர்யனானவன் என்று ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனுடைய ப்ரபாவத்தை ஸுமித்ரை கௌஸல்யைக்கு உபதேசித்தாள். 'வகிஷ்யோதம்' என்பது மின்மினிப் பூச்சிக்கும் ஸூர்யனுக்கு பெயர். வ்யாகரணங்களை யெல்லாம் திருவடி முதலியவர்களுக்குக் கற்பித்தவரும், யாஜ்ஞவல்க்ய முனிக்கு ப்ரஹ்ம பாராயணத்தை உபதேசித்தவரும், ஈசாவாஸ்ய மந்த்ரங்களை ஸாக்ஷாத்கரித்தவருமான ஸூர்ய பகவானுக்கே தம்முடைய சக்தியால் மட்டும் வர்ணிக்கக் கூடாத உம்மை, அவர் பெயரை மட்டும் தரித்த மின்மினிப் பூச்சியைப் போன்ற நான் எப்படி வருணிக்கச் சக்தனாவேன் என்று காட்ட, இரண்டுக்கும் பெயரான 'வகிஷ்யோத' சப்தத்தை ப்ரயோகித்தார் போலும். முன்பாதத்தில் வ்யாஹ்ருதி ப்ரஸ்தாவம் வந்தது. இங்கே ஸாவித்ர மந்த்ரமான காயத்ரீயும் நினைக்கப்படுகிறது. காயத்ரீ போன்ற ஸரஸ்வதியால் ஸ்தோத்ரம் செய்யவேண்டிய பொருளை மின்மினிப் பூச்சிக் கவிகள் தம்சக்தியால் ஸ்துதிக்கக் கூடுமோ? லகுத்தன்மையில் தான் எமக்கு ப்ரகர்ஷம் உண்டென்பதை வேடிக்கையாய்க் காட்ட 'ஹஸ்த' என்பதற்கு முன் 'வ்யு' என்னும் உபஸர்க்கத்தை ப்ரயோகித்தார். ஸங்கோசத்தில் தான் எமக்கு ஸம்யக்த்வம்; கவிதையில் இல்லையென்று வேடிக்கை.

'ஸத்யம் கரிஷ்யே ஜ்ஞாந ஸத்யம் வ்யுதாஸ:'

என்று தத்வ முக்தா கலாபத்தில் பொருள்களின் ப்ரகாசம் என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டிய ஜ்ஞாந லக்ஷணம் என்றார். ஸூர்ய ப்ரபையைப்போல எல்லாவற்றையும் விஷயீகரிக்கும் ப்ரகாசம் என்னும் ஜ்ஞாநம் ஸ்வபாவமாயிருந்தும், அது ப்ரகாசமாகாமல் சுருக்கத்தை அடைந்திருக்கிறது. 'கத்யோதம்' என்னும் மின்மினிப் பூச்சி போன்ற ப்ரகாசம், 'ப்ரத்யோதம்' என்னும் ஸூர்யன் ப்ரபையைப்போல் ஆகுமல்லவோ ஸ்துதிக்க ப்ரயத்நம் செய்யலாம். மின்மினிப் பூச்சி போன்ற என் கவிதை 'ஸம்ப்ரஹ்ம' என்று வர்ணிக்கப்படும் ப்ரஹ்மமென்றும், ஸநாதமான வஸ்துவை த்யோதநம் செய்ய வல்லதாகுமோ? ப்ரகாச ஸ்வரூபரான தேவர்களுக்கும் கீடமென்னும் மின்மினிப் புழுவுக்கும் எப்படி தூரமோ, அப்படியே தேவ தேவனுக்கும் தேவர்களுக்கும் என்று ஸ்ரீ தாத்பர்ய சந்த்ரிகையில் ஸாதித்து, அதற்கு ப்ரமாணமாக 'கீடா: ஸகேஶா: ஸுரா: த்ருஷ்யந்து' என்று உதாஹரித்தார்.

'தநோது ஸம்ஸேவ்ய மதிம் ச ஸாரஸ்வதீம் ச'—ப்ரணவ வ்யாஹ்ருதிகளோடு கூடிய காயத்ரீ ஸாரஸ்வதீ நெஞ்சில் ஓடுகிறது. அங்கே 'ஸவிதுர்வரேண்யம் பர்க:' என்று ஸூர்ய ஸஹஸ்ர ப்ரகாச தேஜஸ்ஸை இந்த மின்மினிப் பூச்சியா ப்ரகாசப்படுத்தும்? காயத்ரியைப் போன்ற வேதஸாரஸ்வதியை இவர் புத்ரனை ப்ரஹ்மாவுக்கு இவர், 'ப்ரசோதயேத் வாணீ ஸரஸ்வதீ' என்றபடி ப்ரசோதநம் பண்ணியதுபோல எனக்கும் அவர் என் மதியை (யீக்களை) ப்ரசோதநம் செய்து எனக்கு வேதஸாரஸ்வதியைப் போன்ற வாக்கை அளிக்க வேணும். இந்த ஸ்தோத்ரம் 'ச்ருதிஸுபகம்', ச்ருதிகள் சேருமதால் அழகியது. ச்ருதியைப் போல் அழகியது என்றபடி.

'தேநஹ்ருஷ்டாய ஹ்ருஷ்டாய ஸூக்திகவயே'

என்றதுபோல இந்தப் பிள்ளைக்கும் இவரைத் துதிசெய்ய வேதம் போன்ற வாக்கைக் கொடுக்க வேணும். சப்தார்த்தங்கள் சேர்ந்தது காவ்யமாகும். 'அமேயா விஷ்ணுப்ரியம் வாணீ' என்கிறபடி இந்தத் திவ்யதம்பதிகளே உயர்ந்த வாக்கும் அர்த்தமுமாவர். இவர்களைத் துதிசெய்ய இவர்களே வாகர்த்த ரூபமான காவ்யமாக வேணும். 'ய ஸூக்தா:' என்றபடி தம்மையே வாகர்த்தங்களாக எமக்குக் கொடுக்க வேணும். 'தம்மையே தமர்க்கு நல்கும்' என்றபடி. 'திய:' என்று முதலில் படித்ததால் காயத்ரீ ஸாரஸ்வதியின் முதல் பதத்தையும் நினைக்கிறார். 'ப்ரத்யோத' என்று ஸவித்ரு நாமமும் கிடைத்தது. வரதனென்பதும் வரேண்யத்தை ஒத்தது. தேவராஜன்

என்னும் தேவன் இங்கே ஸ்துதி விஷயன். ப்ரகாச சப்தமும் 'பர்க:' என்னும் சப்தபர்யாயம். மதி என்பது புத்தியால் விஷயீகரிக்கப்படும் பொருளுக்கும் உபலக்ஷணம். காயத்ரீயில் உள்ள 'திய:' என்பதை ஒத்திருக்க அர்த்தம் என்று படிக்காமல் மதி என்று படித்தார். 'ஸ்ருதி' என்னும் ஸ்த்ரீ லிங்கத்துக்கு மதி என்பது அழகாகச் சேரும். மதியும் ஸரஸ்வதியும் ஒன்றுக்கொன்று பிரியாத ஸகிகள்.

ஆழ்வாருக்குத் திருவாய்மொழி பாட 'மயர்வற மதி' அருளினபடி, நமக்கும் மதி அருளவேண்டுமென்று காட்டவும் மதி சப்தம். முதல் சதகத்தில் 'வரதனை வீக்ஷணம் செய்து' என்று ஆழ்வார் விஷயமாக இவர் பணித்ததை நினைக்கவேணும். ஆழ்வாருடைய ஸாரஸ்வத ஸார ஸரஸ்வதியைப்போல் எனக்கும் ஸரஸ்வதியை அருளவேணும். புத்ரனை ப்ரஹ்மாவுக்கு வேத ஸாரஸ்வதியையும் புத்தி ப்ரகாசத்தையும் வாக்தேவியான ஸரஸ்வதியையும் கொடுத்தார். எனக்குப் புத்தி ப்ரகாசத்தையும் வாக் ஸரஸ்வதியையும் அளிக்க வேணுமென்கிறார். வரதனுக்கு வரமான ஸ்தோத்ரத்தை நான் பாடி அளிக்க, அவர் எனக்கு அதைத் தயாரித்து ஸமர்ப்பணம் செய்தால், 'தத் ஸாரஸ்வ ஸேவாபூர்ணம்' என்றபடி நான் அவருக்கு அர்ப்பணம் செய்து விடலாம். 'ஸம்ஸேவ்ய' என்பதால், கொடுப்பதில் நிகரில்லாத நீர் என்னுடைய ஸ்வத்தாக இந்த ஸ்தோத்ரத்தை எனக்குத் தாநம் செய்து விட்டால், நான் இதை உமக்கு என்னுடைய ஸ்வத்தாகக் கொடுக்க சக்யமாகும்.

'அயவா கிம் நு ஸம்ஸேவ்யாமி தே'

என்று மலைக்க வேண்டியதில்லை என்பதைக் காட்ட, 'தநோது ஸம்ஸேவ்ய' என்கிறார் போலும். 'யதேவ்யதே தவ ஹ்ருத்தம்' என்கிற க்ரமத்தில் உம்முடைய தாநமாவதற்கு முன் உடனே நான், நீர் ஸமர்ப்பணம் செய்யும்போது உமக்கு ஸமர்ப்பித்து விடுகிறேன். எனக்கு நீர் தாநம் (ஸமர்ப்பணம்) செய்யும் க்ஷணத்திலேயே தாமஸமன்றியில் தத்க்ஷணத்திலேயே உமக்கு ஸமர்ப்பணம் செய்து விடுகிறேன் என்பதைக் காட்டுவதற்கு அடுத்த பாதத்தில் 'ஸாம்ஸம்ஸா யியோதி' என்று 'உன்னை அதிவேகமாக ஸ்தோத்ரத்தை ஸமர்ப்பித்து ப்ரீணநம் செய்கிறேன்' என்று திருப்பிக் கொடுக்கும் வேகத்தை ஸூசிக்கிறார் போலும். நன்றாகக் கொடுக்கவேணும். 'திருவுரையாய்த் தாம் பொருளாய் நிற்பார் வந்தார்' என்று அருளிச் செய்ததும் இதற்கு வ்யாக்யாநமாகும்.

த்வாம் ஸஞ்ஜவாம் ஸ்துதிபதை: யதார்ஹம் அபிநாதி—ஸஞ்ஜவாம் என்பதற்கு உள்ளது உள்ளபடி யென்றும், வேகமாய் என்றும் பொருள். இரண்டும் இங்கே அபேக்ஷிதம். இல்லாததைச் சொல்லித் துதிசெய்வது ஸரியான ஸ்தோத்ர மாகாது. இல்லாததைச் சொல்லிப் புகழ்வது புகழப் படுபவருக்கும் வெட்கத்தைக் கொடுக்கும். அது தத்வ ஜ்ஞாநமும் ஆகாது. இந்த ஸத்ய வ்ரத க்ஷேத்ரத்தில் ஸரஸ்வதீ வேகவதியாக இருக்கிறாள். நீர் எனக்கு அளிக்கும் ஸரஸ்வதீ வேகமுள்ளவளாய் இருக்கவேணும்.

ஸ்துதிபதை:— ஒவ்வொரு பதமும் நீர் கொடுத்ததாகவே இருக்கவேணும். ஒருபதம் கூட என் சரக்காகாது. ஒவ்வொரு பதமும் வரமாயிருக்கவேணும். இந்த ஸ்தோத்ரத்தில் ஒருபதம் கூட அநாஞ்ஜஸமாய் இருக்கக் கூடாது. என்ன வேகமாக ஸ்தோத்ரத்தைச் சொன்னாலும் ஒவ்வொரு பதமும் ஸ்பஷ்டமாய் உச்சரிதமாகவேணும். '[illegible]' என்ற திருவடி பேச்சுப்போல, இந்த ஸ்தோத்ரத்தில் ஒவ்வொரு பதமும் ஸ்துதி பதமாக (ஸ்தோத்ரம் செய்யத்தக்கதாக) அமையவேணும். எல்லாப் பதங்களும் லோகோத்தர மென்று புகழப் படவேணும். ஒருபதம் கூட அவரமாகலாகாது. முன்பாதத்தில் நீர் எமக்கு வாகர்த்தங்களை ஸமர்ப்பித்து என்னுடைய ஸ்வந்த மாக்கி விடவேணு மென்றார். அவர் அப்படியே கொடுத்து இவர் ஸ்வந்த மாக்கினதும், 'நான் அழகாக' உண்மையாக, வேகமாக, ஸ்தோத்ர பதங்களை என் தேவதை யாகிய உமக்கு த்யாகம் செய்து உம்மை ப்ரீதராகச் செய்கிறேன்; என் தேவனாகிய உம்மைப் பூஜை செய்கிறேன்' என்கிறார். இந்த நான்காம் பாதத்தில் தேவபூஜை என்கிற யஜநமும், தேவதையை உத்தேசித்து த்ரவ்ய த்யாகம் செய்யும் யாகஸ்வரூபமும் ஸித்திக்கின்றன. முன் பாதத்திற் கோரியபடி வரதன் இவருக்கு ஸமர்ப்பித்து இவரதாக்கி விட்டால், சப்த மென்னும் அத்ரவ்யமீ இவருடைய ஸ்வந்த த்ரவ்யமாகி இவருக்கு த்யாகம் ஸித்திக்கிறது. 'யத:' என்பதற்கு எந்தக் காரணத்தால் என்று பொருள். முன்பாதத்தில் ப்ரார்த்தித்தது ஸபலமானதால் அது இங்கே சொல்லும் த்யாகத்தின் ஸித்திக்குக் காரண மாயிற்று. 'த்வாம் அஹம்' (உம்மைநான்); நீரெங்கே நானெங்கே? 'ஸூர்ய ப்ரபவமான வம்சமெங்கே? அல்பவிஷயமான என் மதி எங்கே? ஆகையால் வாகர்த்த ஸ்வரூபமான ஈச்வர தம்பதிகளே எனக்கு வாகர்த்தங்களை அளிக்கவேண்டும்' என்றார் காளிதாஸர். 'ஸூர்யனுக்கும் ஸூர்யனான வரதனெங்கே? மின்மினிப்பூச்சிபோன்ற என் மதி எங்கே? வரதனே எனக்கு வாகர்த்தங்களை அருள்வேண்டும்' என்று இங்கே பணிப்பு.

(தொடரும்)

ஸ்ரீ:

கடிதங்கள்.

(1)

ஸ்ரீ வேங்கடேச தேவஸ்தானம், பம்பாய்.

ஸ்ரீ வேங்கடேச தேவஸ்தானத்தைப் பம்பாயில் ப்ரதிஷ்டிப்பித்தது, ஸ்ரீ ஜகத்குரு ப்ரதிவாதி பயங்கரம் அநந்தாசார்ய ஸ்வாமிகளின் திருவருள் என்பது யாவர்க்கும் வெளிப்படை. இதற்காக அன்னார் அனேக லக்ஷக்கணக்கான பொருள்களைச் செலவிட்டு, தென்னாட்டுக் கோயில்கள் போலவும் சில்பசாஸ்த்ர மூரண் இல்லாமலும் கட்டுவித்து, இற்றைக்கு எட்டு ஆண்டுகள் ஆகின்றன. இதுவரையில் இக்கோயிலும், கோயிலைச் சேர்ந்த ஸகல ஸொத்துக்களும், ஸ்ரீ ஸ்வாமிகளின் பேரிலேயே சொந்தமாக இருந்தன. சென்ற ஜூன் மாதம் 12-ந் தேதி (வைசாக விசாகம்) ஸ்வாமிகளுடைய பெருங்கருணையால் இச்சொத்துகளையும், மற்ற மடம் முதலான சகல அசையும் பொருள் அசையாப் பொருள்களையும் ஸ்ரீ வேங்கடேசனுக்கே அர்ப்பணமாகச் செய்து, தான சாஸனத்தையும் பம்பாய் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸில் ரிஜிஸ்டர் செய்தார்கள். ஒரு புருஷாயுஸ் பரிச்ரமப்பட்டு, செல்வ மனைத்தும் வழங்கி, அதை முடிவில் அர்ப்பணம் செய்வதென்னும் த்யாகம் எம்மனோரால் இயம்புதற்கு அரிதேயாகும். நிற்க:

இக்கடல் புடைசூழ்ந்த வையகத்தில், அறம் பொருள் இன்பம் வீடு என்பவை நான்கு புருஷார்த்தங்கள் என்று பெரியோர்கள் வகுத்துள்ளார்கள். இவற்றுள் இங்கு எய்தக் கூடியது அறம் பொருள் இன்பம் என மூன்றேயாகும். மற்றும் எண்ணியது எண்ணியாங்கு செய்துவது யாவர்க்கும் இயலாததாகும். ஞானம் அனுட்டானங்கள் நன்றாகவேயுடைய திண்ணியர்களே எண்ணியது முடிப்பர். மற்றையோர்க்கு இக் கருமங்கள் எளியவா மூகா வென்பது கையிலங்கு நெல்லிக்கனி.

இவ்வொரு மாமரத்தின் முப்பழங்களான அறம் பொருள் இன்பம் என மூன்று புருஷார்த்தங்களும் தனித்தனியாகக் கொள்ளப்படினும், மூன்றுக்கும் காரணம் ஒன்றேயாகும் என்பது துணிபு. ஆரா ரிவற்றி னிடையதனை யெய்துவர், அவர் சேர்ந்திருந்த மற்ற இரு புருஷார்த்தங்களை அடைதல் எளிதேயாகும். பொருள் கைக்கொண்டபின் அறம் செய்வது அரிதேயாகும். பொன் கைக்கொண்டபின் இன்பம் துய்த்தல் எளிதேயாகும். பொருளால் அமரர் உலகம் புக்கியல லாகாது. அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால் பிறவாழி நீந்தலரிது. சிரிய மாண்புடையார் செல்வத்தினால் அன்பினை அறிந்து அறமீட்டுவார்கள். புல்லறிவுடையோர் பொருள் கைக்கொண்டபின், இன்பம் நிலைபெயற் நிரம்ப நெடுந்துன்பம் அநுபவிப்பர்.

இன்று சாதல் நின்று சாத லன்றி, எவ்வுலகத் தெவ்வவையும் வாழ்ந்தே நிற்ப தென்பது இயலா தாதலால், ஆறறிவு படைத்த மாந்தர், மண்மிசை அந்நாள் வாலறிவன் தந்த ஆக்கையின் பயனாகத் திருமாலால் அருளப்பட்ட நெறியெல்லாம் ஓர்ந்து, நிறைஞானத்தொரு மூர்த்தியின் நிலையிடமான கலங்காப் பெருநகரம் காண்பதுவே ஆக்கையின் பயனாகக் கொள்வர். இதையே பண்பும் பயனுமாகக் கொண்டோர், இவ்வுலகத்தின் பற்றினை அற விடுவர். அற்றது பற்றெனின் உற்றது வீடன்றோ? வீடு பெறுவதுவே பயனாகத் தெளிந்தபின் பற்றினை முற்றவும் விடுதல் வேண்டும்.

'பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது, பின்னது
அற்றோர் அறிவது அறிக.'—என்பது மூதுரை.

முன் செய்த வினையால் இப்பிறவியில் பெரும் பொருள் ஈட்டுவோர், அக்காரணத்தைக் கைம்மாறு கருதாது வழங்கும் வானம் போல் தம்முயிர்க்கு உறுதி தேடாது மன்னுயிர் ஓம்புவர். இது பெருந்தகையாளர் தொடர்பு. இக்கூற்றை யெல்லாம் முன்னுரையில் கேட்டதுண்டு. கலியும் கெடும்படி, தொண்ட ரெல்லாரும் தொழுது நின்று ஆர்க்கும்படி பூவார் திருமகள் புல்கிய தேவாதி தேவனை, திருவேங்கடத்துறை செல்வனை, மண்மகள் பொலிவெய்த திருமகள் தழுவும் மற்றும் கலைமகள் எண் தோளினன் விளங்கும் செல்வச் செறியார்ந்த மாடம் கொடி கதிர் அணவும் திங்களும் நாளும் விழவறாத பல் குழாங்கள் குழுமிய பம்பை மாநகரில் பிரதிஷ்டிப்பித்தது ஸ்வாமிகளின் அரும் செயலாகும். மானிடர்களாகப் பிறந்து தானமும் தவமும் செய்வரேல் வானவர் நாடு வழி திறக்குமென்பது மெய்யே யாயினும், வாளிளவரசு வைகுந்தக் குட்டன் வாஸுதேவனுக்கு ஓர் கோயி லமைப்பது ஈசன் திருவருளேயாகும். முன்ன ரெண்ணில், பெருந் தவத்தோர்களான மகரிஷிகள், அரசர்களுடைய பொருளுதவியால் பெரிய கோயில்கள் சமைத்து ப்ரதிஷ்டிப்பித்தனர். இப்பொழுது அரசர்கள் உதவியின்றி, தானே தனக்குத் துணையாய், தன் எழிற் பெருஞ் செல்வத்தினால் இவ்வுலகர்கள் காண இணையில்லா எழில் மாடங்கள் இயற்றியது அக்காலத்திய ரிஷிகளினும் அரசர்களினும் செயற்கரும் செய்கைக்கும் சீரியதே யாகும். இவ்வரும் பெறற் புகழினை தம்மதாகவே கைகொண்டது மிகவும் சால்புடைத்து. வண்மையால், மிகுபொறையால், எண்ணில் பல்குணங்களும் மலியப்பெற்று, மண்ணில் இதுபோல் எவரும் எய்தாத மாயாப்புகழ் எய்தி, கண்ணனுக்கே அற்றுத் தீர்ந்து, காண வினிய கருங் குழல் கோவிந்தனுக்கு நாடும் நகரமும் வைகலும் மாத்திரைப் போதும் எவ்வுயிருக்கும் வைகுந்த மாநகர் மற்றது கை யென்னலாம்படி மணிப் பெட்டகம்போல் மண்டபமும் மாளிகையும் இயற்றி, பம்பை மாநகரம் பொலிவெய்தும்படி புரிந்தது, தேனும்பாலும் கலந்தன்ன ஸ்வாமிகளின் அறத்தின் பயனாகும்.

ஆழ்வார்கள் எல்லாம் ஏககண்டராய் ஒருமிடறாக மங்களாஸனம் செய்த "வட திருவேங்கடத்தான்" "வடவேங்கடமாமலை" வட திருவேங்கடநாட" என்னும் வாசகங்கள் எல்லாம் இன்று தென் திருவேங்கட மென்னலாம்படி யாய்த்து. அன்றியும், வட திருவேங்கடமென்னும் சொல், இனிப் பம்பாயில் எழுந்தருளியிருப்பவனையே குறிக்குமேயொழிய, தென்னாட்டுத் தமிழ்நாட்டு எல்லையாகக் குறிக்கப்பட்டுள்ள திருவேங்கடத்தைக் குறிக்க வொண்ணுமோ என்று ஐயம் நிகழ்வது. பரன் சென்று சேர் திருவேங்கட

மாலையினாலே, இதுவும் பரன் அசைந்து கடைந்த வருத்தத்தினால் நாகத்தின் தண் பள்ளிகொண்டவன் கச்சிமா நகரினின்று எண்ணூறு மையில்கள் தூரம் (எண்பதுகாவதம்) நடந்து சென்று சேர்ந்ததினால் பரன் சென்று சேர்வது என்னத் தட்டில்லையன்றோ?

மற்றும், கால தேச வர்த்தமானங்களை நோக்குங்கால், 'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்' என்பது பழைய தமிழ் நாட்டெல்லையாகும். இப்பொழுதோ, முன்னு மதுரை துடக்கமாக வண் துவராபதி தன்னளவும் பெருகியது. இச்செயலினுக்கேற்ப, சொன்ன வண்ணம் செய்த பெருமாளும் முன் செந்நாப் புலவர் புகன்றபடியே நின்றதுவும் கிடந்ததுவும் செய்தபடியினாலே, தமிழ் ப்ரபந்தங்கள் வளருவான் வேண்டி வட திருவேங்கடத்தானைப் பம்பாய் மாநகரில் சென்று சேர்வதாயிற்று.

அஃதாயின், அத் திருவேங்கடத்துறை அப்பனுக்கும், பம்பாயில் கோயில் கொண்ட வேங்கடத்துறைவார்க்கும் ஒற்றுமை யுண்டோ வென்னின், சில ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் உள. அவை வருமாறு:—

அங்கு—மலைமேல் நின்று மனத்து ளிருப்பான்.

இங்கு—அலைமேல் அமரும் அழகியாரவர்.

அங்கு—வானரமும் வேடுமுடை வேங்கடம்.

இங்கு—மானவர்தங்கள் சிந்தை அமர்ந்துறைகின்ற எந்தை.

அங்கு—சினவேங்கை யார்க்கும் ஆயன் திருமலை.

இங்கு—மனப்போர் முடித்து நெறியெல்லாம் எடுத்துரைத்த நிறைஞானத்தொரு மூர்த்தி.

அது—வெயிரும் சாரல் விண்ணவர் விரும்புவது.

இது—மாமயி லன்னவர் மானமூர்வது.

அங்கு—செங்கணாளியிட்டு இறைஞ்சுவது.

இங்கு—மங்கை நல்லார்கள் மகிழ்ந் தேத்துவது.

அங்கு—சிலைக்க வேடர் தெழிப்பறாதது.

இங்கு—அலைக்கையால் அடிவருட அணிமாமலர் மங்கையோடு அன்பளவி விற்றிருப்பது.

அங்கு—சென்று வணங்கும் சேணுயர் வேங்கடம்.

இங்கு—நின்று தொழுவார்தம் வினைபோக மேவும் பிரான்.

அங்கு—தடங்கடல் முகந்து விசும்பிடை பிளிற
தடவரைக் களிறென்று முனிந்து மடங்கல் நின்று அதிரும்

இங்கு—படவரவல்குல் பாவை நல்லார்கள் பயிற்றிய
நாடகத் தொலிபோய் அடைபுடை தழுவி அண்டநின்று அதிரும்.

அங்கு—வானகச் சோலை மரதகச் சாயல் மாமணிக் கல்லதர் நிறைந்தது.

இங்கு—மான்போலும் மென்னேக்கில் செய்ய வாயார்
மரகதம்போல் மடக்கிளியைக் கையில் கொண்டு தேன்போலும்
மென்மழலே பயிற்றுவது.

அங்கு—மலேதிகழ் சந்தகில் கனகமணியும் கொண்டு
அலேத்துவரும் குளி ரருவி வேங்கடம்.

இங்கு—மலேயிலங்கு நிரைச்சந்தி மாடவீதி ஆடவரை மடமொழியார்
முகத்திரண்டு சிலேவிலங்கி மனஞ்சிறை கொண்டிருப்பது.

அங்கு—கதமிகு சினத்த கடதடக் களிற்றின்
கவுள்வழி களி வண்டு பருக மதமிகுசாரல்.

இங்கு—போதலர் புன்னே மல்லிகை மௌவல் புதுவிரை
மலரணேந்து சீத ஒண்தென்றல் திசைதோறும் வீசுவது.

இப்படியே பல்லாற்றானும் பல்வளங்களும் செழிக்கப் பெற்று இவ்வழகிய நகரத்திலே மல்லாண்ட திண்டோள் மணி வண்ணற்குப் பல்லாண்டும் பலகாலும் வாழி வாழி தலேயளிக்கும் அடியவர்க்கருளி அரவணேத் துயின்ற ஆழியானுக்கு ஆடகமாடம் சமைத்தது—ஸார்வ பௌமரான ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி அநந்தாசார்ய ஸ்வாமிகளின் அளவிறந்த ஆற்றலாகும். "மண்மேல் என்று முள்ளது காஞ்சி" என்ற சேக்கிழார் வாக்கின்படி, மண்மேல் என்று முள்ளதாக இருப்பது நம் திருவேங்கடத்தப்பன் மகிழ்ந்துறையும் பம்பை மாநகரம். ஸ்வாமிகள் ஷை தேவஸ்தானத்தின் நிர்வாக விஷயமாகவும் அதற்குச் சாதனங்களும் நிறுவியுள்ளார்கள். அவர்களுடைய பேரும் புகழும் பொன்னெழுத்துக்களால் செதுக்கப்பட்டு என்றும் அழியாம லிருக்குமாக. அன்னர் அனேக ஆண்டுகள் எழுந்தருளியிருந்து உலகத்தாரைத் தம் அமிர்தவசனங்களால் வாழ்விப்பார்களென்பது ஸர்வேச்வரனுடைய திருவருளாகும்.

C. P. ராஜகோபாலாசார்யர்.

(2)

ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷண ஸபா, ஸ்ரீரங்கம்.

கிளை—'க்ருஷ்ணபவநம்,' வேப்பேரி.

ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை (சென்னைக் கிளையின் ஆதாவில்)—

ஏப்ரல்மூ 9வ செவ்வாய்க்கிழமை-திருவல்லிக்கேணி ஸ்ரீஅஹோபில மடத்தில் ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தான வித்வான் ஸ்ரீ. உப. வே. பண்டிதபூஷணம் தில்லியம்பூர் சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமி தலைமையில் ஸ்ரீ. உப. வே. வித்வான் பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியாலும்,

ஏப்ரல்மூ 11வ வியாழக்கிழமை—மதுராந்தகத்தில் ஏரிகாத்த ராமபிரான் ஸந்நிதியில் கருடபுரம் ஸ்ரீ. உப. வே. வித்வான் ஸ்ரீநிவாஸாசார்யர் அக்ராஸநத்தின் கீழ் ஸ்ரீ. உப. வே. பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியாலும்,

ஏப்ரல்மூ ஞாயிற்றுக்கிழமை—சென்னை ஜார்ஜ் டவுன் சைவ முத்தையா முதலி தெரு ஸ்ரீ. உ. வே. சக்ரபாணி அய்யங்கார் ஸ்வாமி க்ருஹத்தில் ஸ்ரீ. உ. வே. பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியாலும்,

மேமூ 5வ ஞாயிற்றுக்கிழமை—மயிலாப்பூர் ஸ்ரீதேசிகன் ஸந்நிதியில், ஸ்ரீ. உப வே. ஸ்ரீரங்கம் A. V. கோபாலாசார்யர் M. A., B. L., (அட்வகேட்) ஸ்வாமியாலும்,

மேமூ 7வ செவ்வாய்க்கிழமை—ஸ்ரீ பாஷ்யகாரர் அவதார மஹோத்ஸவ தினத்தில் ஸ்ரீ பெரும்பூதூர் ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ உ. வே. வித்வான் பெரிய அழகியசிங்கர் குமாரர் ஸ்வாமி அக்ராஸனத்தில், ஸ்ரீ. உ. வே. பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியாலும்,

மேமூ 21வ செவ்வாய்க்கிழமை—காஞ்சீபுரம் ஸ்ரீ தேவராஜப் பெருமாள் வேத மஹோத்ஸவ தினத்தன்று, ஸ்ரீ. உப. வே. V. V. ஸ்ரீனிவாஸய்யங்கார் (அட்வேகேட்) ஸ்வாமியின் க்ருஹமாகிய ஹஸ்திகிரியில் ஸ்ரீ. உப. வே. ஐயா க்ருஷ்ண தாதாசார்ய ஸ்வாமியின் அக்ராஸனத்தின் கீழ், திருப்பதி S. V. S. காலேஜ் ப்ரொபஸர் தர்க்க மீமாம்ஸா சிரோமணி உத்தமூர் வீரராகவாசார்ய ஸ்வாமி, மேல் கண்ட காலேஜ் பிரின்ஸிபால் (M. O. L.) பண்டிதராஜ சிரோமணி ஸ்ரீ. உ. வே. திருவரங்கம் திருமலே தாதாசார்ய ஸ்வாமி, மீமாம்ஸா வாரிதி தோட்டாலம் ஸ்ரீ. உ வே. வேணுகோபாலாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ உ. வே. வித்வான் வில்லிவலம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உ. வே. பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி, ஆகிய இவர்களாலும்,

ஜூலைமூ 2வ ஞாயிற்றுக்கிழமை—ஜார்ஜ் டவுன் சைவ முத்தையா முதலி தெருவில், எண திருமங்கலம் ஸ்ரீ. உப. வே. வாத்தியார் ரங்கஸாமி அய்யங்கார் ஸ்வாமி அக்ராஸனத்தில் ஸ்ரீ. உப. வே. பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியாலும்,

ஜூன்மூ 9வ ஞாயிற்றுக்கிழமை—சென்னை ஜார்ஜ் டவுன் க்ருஷ்ணப்ப நாயகன் அக்ரஹாரத்தில் 19நெ. க்ருஹத்தில் ஸ்ரீ. உப. வே. பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவல்லிக்கேணி தமிழ்ச்சங்கக் காரியதரிசியான ஸ்ரீ. உ. வே. திருமலே அய்யங்கார் ஸ்வாமி, திருவாதி ஸம்ஸ்க்ருத காலேஜ் தமிழ்ப்பண்டிதர் முதலியவர்களாலும், ஸபையின் ப்ரசார விஷயமான உபந்யாஸங்கள் செய்யப்பட்டன. இவ்வுபந்யாஸங்களில் ஸ்ரீதேசிகனுடைய பெருமையைப்பற்றியும், அவரது க்ரந்தங்களின் ஏற்றத்தைப் பற்றியும், இந்த க்ரந்தங்களை ஸம்ரக்ஷிக்கும் அரிய கைங்கர்யத்தி லீடுபட்டு ஸபை உழைத்து வருவதைப் பற்றியும், ஸபையின் நோக்கங்களேப் பற்றியும், அதனிடம் பொது ஜனங்கள் காட்டிவரும் ஆதரவைப் பற்றியும், யாவரும் ஸபையின் அங்கத்தினராகவும் போஷகர்களாகவும் சேர்ந்து அதைப் பலப்படுத்தவேண்டிய அவச்யத்தைப் பற்றியும் விரிவாகப் பேசப்பட்டன. மேலே குறிப்பிட்டுள்ள விடங்களில் ஸபைக்குக் கார்யதர்சிகளையும் ஏஜெண்டுகளேயும் நியமித்து, அங்கத்தினர்களைச் சேர்க்கவேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இதுவரையில் ஸபையார் நான்கு புஸ்தகங்களே வெளியிட்டிருக்கிறார்கள். இனி ப்ரதி மாதமும் ஒரு ஸஞ்சிகையாக வெளியிடுவதென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது.

இன்னும் அப்பொழுதைக் கப்பொழுது பத்திரிகைகளில் ஸ்ரீ தேசிகனுடைய ஸ்ரீ ஸூக்திகளைப் பற்றி எழுதி, அவற்றால் பொதுஜனங்களுக்கு ஸ்ரீ தேசிகனுடைய க்ருதிகளில் ஒரு ருசியை யுண்டாக்குவ தென்றும் நிச்சயித்திருக்கின்றது.

(3)

ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷண ஸபா, ஸ்ரீரங்கம்.

கிளை : 29, "க்ருஷ்ணபவநம்", சென்னை.

'தேசிகன்' என்னும் சொல், பொதுவாக 'ஆசார்யன்' என்னும் கருத்தையுடையதேனும், ஸ்ரீமந்நாதமுனிகள் தொடங்கி எம்பெருமானார் ஈறாகவுள்ள ஒருவரையுங் குறியாமல், அவர்களுக்கும் முற்பட்ட ஆழ்வார்களையுங் குறியாமல், உலகத்துக்கே ஆதிகுருவான ஸ்ரிய:பதியான ஸர்வேச்வரனையுங் குறியாமல், சிறப்பாக ஒப்பின்றித் தனிப்பெருமையுடன் விளங்காநிற்கும் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனையே குறிக்கின்றது. ஏனெனில், நம் பூர்வாசார்யர்கள் யாவரும் நமக்குச் செய்திருக்கும் பெருநல்லுதவிக்கு அளவில்லையெனினும், அது ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன், தமது அபார கருணையினால் நமக்குச் செய்திருக்கும் உபகாரத்தின் ஏகதேசமே யாகும்.

எம்பெருமானையே போல் எண்ணிக்கையற்ற நற்குணங்களுக் கெல்லாம் இருப்பிடமாய், குலத்தினாலும் கல்வி நலத்தினாலும் மேலாய், 'வேதநூற் பிராயம் நூறு' என்னும் புருஷஆயுள் முழுவதையும் பெற்று, இந்நூறு ஆண்டுகளையும் தமது கருணையின் மிகுதியினால் பிறவிக்கடலில் கிடந்துழலும் நமக்கு ஆத்ம உஜ்ஜீவந ஹேதுவான க்ரந்தங்கள் பலவற்றை யருளிச்செய்தே கழித்தவர் நம் தேசிகன். உலகின் சுவை பலவித மாகலான், ஒவ்வொருவருக்கும், அவரவர்களுக்கு ஏற்றவாறு பத்யமாயும் கத்யமாயும் கடிநமாயும் ஸரளமாயும் பெரியதாயும் சிறியதாயும் வேதாந்தமாயும் காவ்யமாயும் வடமொழியிலேயும் தமிழிலேயுமாக க்ரந்தங்களை வேண்டுபவர்க்கு வேண்டிற்றீவர் நம் தூப்புல் வள்ளல்.

ஸ்ரீ தேசிகனுடைய கவிதா ரசனையைப் பற்றி மந்தமதிகளாகிய நாம் என்ன சொல்லக் கிடக்கின்றது? மஹாவீரவைபவம், ஹம்ஸ ஸந்தேசம், யாதவாப்யுதயம் என்னும் காவ்யங்களுக்கு இணை காண்பதரிது. "காவ்யேஷு நாடகம் ரம்யம்" என்பர் பெரியோர். இவர் இதர கவிகளால் கையாள முடியாத சாந்த ரஸ ப்ரசுரமான ஸங்கல்ப ஸூர்யோதய நாடகத்தை யருளிச்செய்திருக்கின்றார். விநோதமான அர்த்தங்களை யுடைய "ஸுபாஷிதநீவி" என்னும் தனி ச்லோகச் சுரங்கத்தையும் நமக்கே தந்திருக்கின்றார். பக்தியுடன் நவரஸங்களும் ததும்பும் இவரது ஸ்தோத்ரங்களுக்கும் ந்யாய சாஸ்த்ரங்களுக்கும் ஆசார அநுஷ்டாநாதி நிர்ணய தர்மசாஸ்த்ரங்களுக்கும் அளவில்லை. தமிழிலோ ஸ்ரீ தேசிகனது பாண்டித்யம் மிகப் பெரிது. சொல்லிலக்கணமும் பொருளிலக்கணமும் குன்றாமலும், மோனை எதுகை தொடை முதலியவற்றோடு யாப்பிலக்கணத்தில் வழுவில்லாமலும், மிகவும் கடினமான சந்தவிருத்தங்கள் உள்ளிட்டுப் பல ப்ரபந்தங்கள் அருளிச் செய்திருக்கின்றார். இவ்வாறு ஆழ்ந்த கருத்துள்ள கவிகளைச் செய்து கவிதார்க்கிக சிங்க மென்னும் தமது உயர்ந்த பிருதை அர்த்தமுள்ளதாகச் செய்துகொண்டார். இவ்வாறு அழகாகவும் ஆச்சரியமாகவும் காவ்யாதிகளைச் செய்து உஜ்ஜீவந ஹேதுவா ர மோக்ஷத்தின் வழிகளைக் காட்டி,

"ஒன்றே யென்னி னொன்றேயாம் பலவென் றுரைக்கிற் பலவேயாம்
அன்றே யென்னி னன்றேயாம் ஆமே யென்னி னாமேயாம்
இன்றே யென்னி னின்றேயாம் உளதென் றுரைக்கி னுளதேயாம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை நமக்கிங் கென்னோ பிழைப்பம்மா"

என்று பெரியோர்களும் வழிதெரியாமல் திகைக்கும் வேதங்களாகிய காந்தாரத்தின் சரியான வழிகளைக் காட்டி, நமது ஸ்வரூபத்தையும் நமக்குச் செவ்வனே யுணர்த்திய நம் தேசிகனுக்கு நாம் செய்யும் கைம்மாறுதா னென்னை? ஒன்றுமில்லை. திருவேங்கடமுடையான் அவதாரமென்றும், அவருடைய திருமணியின் அவதாரமென்றும், அவரைப் போற்றி யுகப்பதுதான் நமக்கு ப்ராப்தம். அவர் நம்மிடம் கையடையாக வைத்திருக்கும் க்ரந்தங்களைப் பிறர் விபரீதமான அர்த்தங்களைச் செய்து கெடுக்காமல் பாதுகாத்து, நமது ஸந்ததியாரிடம் இந்த ஸம்ப்ரதாயமாகிய தாய சொத்தை ஒப்பிப்பது தான் ப்ராப்தம். இவ்வரிய கைங்கரியத்தி லீடுபட்டு உழைத்துவரும் ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையை ஒவ்வொருவரும் ஆதரிக்கக் கடமைப்பட்டவர்கள். இந்த ஸபைக்கு இதுவரையிலும் சேராதவர்கள், இன்று முதலாவது சேர்ந்து, தங்களாலியன்ற அளவு உதவி அதை விருத்தி செய்யவேண்டும். இதன் அவசியத்தைச் சொல்லவும் வேண்டுமோ?

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த பிரசார ஸபை

(லிமிடெட்)

ஷேர் ஒன்றுக்கு ரூபாய்—50

மொத்தமாயாவது சௌகர்ய பிரகாரம் மாதம் மாதமாவது செலுத்தலாம். சித்தாந்தத்தில் ஆஸ்தையுள்ள ஒவ்வொருவரும் ஒரு ஷேராவது எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பிரார்த்திக்கப் படுகிறது.

இந்த சபையாரால் அச்சிட்டுவெளியிட நிச்சயிக்கப் பட்ட ஸ்ரீ ஸூக்திகளில் இப்பொழுது,

நியாய ஸித்தாஞ்சநம்

என்னும் கிரந்த சித்தமாயிருக்கிறது.

சந்தாதாரர்களுக்கு இந்த கிரந்தம்
விலையின்றி அனுப்பப்படும்

அயலார்க்கு பிரதி 1க்கு
ரூபாய் 5—0—0

பாடசாலை மாணவர்களுக்கும்
சக்தியில்லாத பண்டிதர்களுக்கும்
பாதி விலை அதாவது ரூபாய் 2—8—0

𑌯𑌷𑍍𑌟𑌵𑍍𑌯 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌉𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌭𑌗𑌵𑌤 𑌏𑌵𑍇𑌤𑌿 𑌉𑌤𑍍𑌤𑌰 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑍇 𑌸𑍍𑌪𑌷𑍍𑌟𑌮𑍍.

𑌏𑌤𑌤𑍍 𑌤𑌤𑍍𑌪𑌾𑌵𑌿𑌤𑌾 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌲𑍋𑌕𑍇—

𑌐𑌕𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸 𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑌾𑌤𑍍 𑌤𑌮𑍇𑌵 𑌵𑌿𑌦𑌿𑌤𑍍𑌵𑌾 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤 𑌤𑌮𑍇𑌵𑍇𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌪𑌦𑌸𑍍𑌯— 𑌪𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑍇 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌶𑌸𑍍𑌤𑍍𑌯𑌂 𑌉𑌕𑍍𑌤𑌮𑌿𑌤𑌿 𑌭𑌾𑌵𑌃 ॥

𑌅𑌥 𑌵𑌿𑌧𑌿𑌨𑌾 𑌕𑍇𑌨 𑌹𑍋𑌮𑌃 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌸𑍍𑌯 𑌪𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑌵𑌿𑌧𑌿𑌨𑍇𑌤𑌿 𑌉𑌤𑍍𑌤𑌰𑌂 𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌯𑌿𑌤𑍁𑌂 𑌉𑌤𑍍𑌤𑌰𑍋 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌃.

𑌅𑌷𑍍𑌟𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌤𑍍𑌤𑌮𑍇 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 𑌉𑌪𑌚𑌾𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌂 𑌅𑌵𑌤𑌾𑌰𑌯𑌤𑌿—

'யஷ்டவ்ய:' என்பது முதலிய வாக்யங்களினால் சொல்லப்பட்டவன் பகவான் தான் என்று மேல் வாக்யங்களினால் ஏற்படுகிறது.

'ஏத தத்பாவிதா' என்கிற ச்லோகத்தில் பகவான் ஒருவனையே ஆச்ரயித்திருப்பதை (ஐகாந்த்யத்தை) மோக்ஷத்துக்குக் காரணமாகச் சொல்லியிருப்பதினால், 'தமேவ விதித்வா' என்கிற வாக்யத்தில் 'தமேவ' என்கிற பதத்தினால் சொல்லப்படுவதாய், பஞ்சராத்ர சாஸ்த்ரத்தில் ப்ரதானமாகச் சொல்லப்பட்ட அர்த்தத்திற்கு மேன்மை சொல்லப்பட்டதாகிறது.

பிறகு எந்த சாஸ்த்ரத்தினால் ஹோமம் செய்யவேண்டியது என்கிற கேள்விக்கு, பஞ்சராத்ர சாஸ்த்ரத்தினால் செய்யவேண்டியது என்கிற பதிலை முடிவு பண்ணவேண்டியதற்காக மேல் க்ரந்தங்களுடைய ஸந்தர்ப்பம் ஆரம்பிக்கப்படுகிறது.

158-வது அத்யாயத்தில் ப்ரச்ந பூர்வகமாக உபசாரங்களின் வ்ருத்தாந்தத்தை ஆரம்பிப்பதற்காக,

𑌸 𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍋 𑌦𑍍𑌵𑌿𑌪𑌦𑌾𑌂 𑌵𑌰𑌿𑌷𑍍𑌠𑍋
𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍇𑌨𑍋𑌤𑍍𑌤𑌮𑌪𑍂𑌰𑍁𑌷𑍇𑌣 ।
𑌜𑌗𑌾𑌦 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌪𑌦𑌾𑌂 𑌵𑌰𑌿𑌷𑍍𑌠𑍋
𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌲𑍋𑌕𑌹𑌿𑌤𑌾𑌧𑌿𑌵𑌾𑌸𑌮𑍍 ॥

𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌕𑌾𑌰𑌣𑌦𑌿𑌦𑍃𑌕𑍍𑌷𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑌟𑌿𑌤𑌵𑌾𑌨𑍍—

𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌸𑍍𑌯 𑌵𑌚𑍋 𑌨𑌿𑌶𑌮𑍍𑌯
𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌸𑍍𑌯𑌾𑌕𑍍𑌷𑌤𑌪𑌦𑍍𑌮𑌨𑍇𑌤𑍍𑌰𑌾 ।
𑌮𑌹𑌰𑍍𑌷𑌿 𑌤𑌂 𑌨𑌾𑌰𑌦𑌮𑍁𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑍍 𑌵𑍈
𑌸𑌂𑌪𑍂𑌜𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌧𑌿𑌵𑌤𑍍 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌭𑌿𑌃 ॥

𑌇𑌤𑌿 𑌸𑍍𑌵𑌮𑍂𑌲𑌕𑌾𑌰𑌣𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌨𑍁𑌮𑌤𑌿𑌦𑌾𑌨𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾—

𑌦𑍈𑌵𑌤𑌂 𑌕𑌂 𑌯𑌜𑍇𑌤 𑌸 𑌇𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍇𑌣 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌸𑍍𑌯 𑌉𑌤𑍍𑌤𑌰𑌂, 𑌸𑌾𑌤𑍍𑌵𑌤𑌧𑌰𑍍𑌮𑌗𑍋𑌪𑍍𑌤𑍇𑌤𑌿 𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑍇𑌣𑍋𑌕𑍍𑌤𑍍𑌵𑌾

புருஷோத்தமனான நாராயணனால் கீழே சொல்லியபடி சொல்லப்பட்டவராய், மனிதர்களுக்குள் சிறந்தவராய், வார்த்தை சொல்வதில் ஸமர்த்தரான நாரதர், உலகத்தின் க்ஷேமங்களுக்கு இருப்பிடமான நாராயணனைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னார்.

என்பது முதலிய வாக்யங்களினால் ஜகத் காரணமான வஸ்துவைப் பார்க்கவேணு மென்கிற இச்சையை உண்டுபண்ணி,

பிறகு பஞ்சராத்ர தர்மங்களை ரக்ஷிக்கிறவனான நாராயணன் ப்ராஹ்மணோத்தமரான நாரதருடைய வார்த்தையைக் கேட்டு, விதிப்படி செய்ய வேண்டிய உபசாரங்களினால் அவரைப் பூஜித்து, நாரதரைப் பார்த்து 'நீர் போகலாம்' என்று சொன்னார்.

என்கிற வார்த்தைகளினால் தன்னுடைய மூல காரணமான பரப்ரஹ்மத்தைப் பார்க்க அநுமதி கொடுத்ததாகச் சொல்லிவிட்டு,

எந்த தேவதையைப் பூஜிக்கவேண்டியதென்கிற கேள்விக்கு மேலே விஸ்தாரமாகச் சொல்லப் புகும் பதிலை "ஸாத்வத தர்மகோப்தா" என்று முதலில் சுருக்கமாகச் சொல்லிவிட்டு,

𑌮𑍇𑌰𑍁𑌶𑌿𑌖𑌰𑌾𑌰𑍂𑌢𑌸𑍍𑌯 𑌨𑌾𑌰𑌦𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍𑌰 𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌭𑌗𑌵𑌤𑍍𑌕𑍃𑌪𑌯𑌾𑌤𑌿𑌦𑍂𑌰𑌸𑍍𑌥𑍇 𑌶𑍍𑌵𑍇𑌤𑌦𑍍𑌵𑍀𑌪𑍇 𑌮𑌹𑌾𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌾𑌨𑌾𑌂 𑌭𑌾𑌗𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾—𑌏𑌕𑍋𑌨𑌷𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑍇—

𑌅𑌨𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾 𑌅𑌨𑌾𑌹𑌾𑌰𑌾 𑌅𑌨𑌿𑌷𑍍𑌪𑌨𑍍𑌦𑌾𑌃 𑌸𑍁𑌗𑌨𑍍𑌧𑌿𑌨𑌃 ।
𑌕𑌥𑌂 𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾 𑌜𑌾𑌤𑌾𑌃 𑌕𑌾 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌗𑌤𑌿𑌰𑍁𑌤𑍍𑌤𑌮𑌾 ॥

𑌯𑍇 𑌹𑌿 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑍀𑌹 𑌨𑌰𑌾 𑌭𑌰𑌤𑌸𑌤𑍍𑌤𑌮 ॥
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍇𑌤𑌦𑍍𑌧𑌿 𑌯𑌚𑍍𑌛𑍍𑌵𑍇𑌤𑌦𑍍𑌵𑍀𑌪𑌵𑌾𑌸𑌿𑌨𑌾𑌮𑍍 ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌮𑍇 𑌸𑌂𑌶𑌯𑌂 𑌛𑌿𑌨𑍍𑌧𑌿 𑌪𑌰𑌂 𑌕𑍌𑌤𑍂𑌹𑌲𑌂 𑌹𑌿 𑌮𑍇 ।
𑌤𑍍𑌵𑌂 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌕𑌥𑌾𑌰𑌾𑌮𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌚𑍈𑌵𑍋𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾 𑌵𑌯𑌮𑍍 ॥

𑌇𑌤𑌿 𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾 𑌪𑍍𑌰𑌕𑌟𑌿𑌤𑌾 ॥

மேரு பர்வதத்தின் நுனியில் ஏறியிருக்கிற நாரதருக்குப் பகவானுடைய க்ருபையினால் அங்கிருந்தபடியே அதிக தூரதேசத்திலிருக்கிற ச்வேத த்வீபத்தில் வஸிக்கிற மஹாப்ரபாவமுள்ள பாகவதர்களுடைய தர்சனத்தைச் சொல்லிவிட்டு, 159-வது அத்யாயத்தில்—

ஷை ச்வேத த்வீபத்தில் வஸிக்கிற மஹாபுருஷர்கள் இந்த்ரியங்களில்லாதவர்களாயும், ஆஹார மில்லாதவர்களாயும், தேகமலங்களில்லாதவர்களாயும், நல்ல வாஸனையை உடையவர்களாயு மிருக்கிறார்களே! இவைகள் எதனால் அவர்களுக்கு உண்டாயின?

'ஓ பரத ச்ரேஷ்டனே! எந்த மனிதர்கள் இந்த உலகத்தைவிட்டு மோக்ஷத்தையடைந்தார்களோ, அவர்களுக்கன்றோ இவ்வாறு இருப்பது லக்ஷணமாகும். ஆகையினால் என்னுடைய ஸம்சயத்தை நீர் போக்க வேணும். எனக்கு இந்த விஷயத்தைத் தெரிந்துகொள்வதில் அதிகமான ஆசையிருக்கிறது. நீர் எல்லா விஷயங்களையு மறிந்தவர். நாங்கள் உம்மை ஆச்ரயித்திருக்கிறோம்.' என்கிற வாக்யங்களினால் ஜிஜ்ஞாஸையானது சொல்லப்படுகிறது.

𑌅𑌥 𑌉𑌪𑌰𑌿𑌚𑌰𑌵𑌸𑍋 𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌯𑌿𑌤𑍁𑌂 𑌤𑌤𑍍𑌕𑌥𑌾𑌯𑌾𑌃 𑌕𑌥𑌾𑌸𑌾𑌰𑌤𑌯𑌾 𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤 𑌬𑌹𑍁𑌮𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑍍𑌵𑌂, 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑌤𑍍𑌵𑌂 𑌚𑌾𑌹—

𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍇𑌣𑍈𑌷𑌾 𑌕𑌥𑌾 𑌰𑌾𑌜𑌨𑍍 𑌶𑍍𑌰𑍁𑌤𑌾 𑌮𑍇 𑌪𑌿𑌤𑍁𑌃 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 ।
𑌸𑍈𑌷𑌾 𑌨𑍃𑌪 𑌹𑌿 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌾 𑌕𑌥𑌾𑌸𑌾𑌰𑍋 𑌹𑌿 𑌸𑌂𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ॥

𑌶𑌨𑍍𑌤𑌨𑍋𑌃 𑌕𑌥𑌯𑌾𑌮𑌾𑌸 𑌨𑌾𑌰𑌦𑍋 𑌋𑌷𑌿𑌸𑌤𑍍𑌤𑌮𑌃 । 𑌰𑌾𑌜𑍍𑌞𑌾 𑌪𑍃𑌷𑍍𑌟𑌃 𑌪𑍁𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌤𑌤𑍍𑌰𑌾𑌹𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌵𑌾𑌨𑍍 𑌪𑍁𑌰𑌾 ॥ 𑌇𑌤𑌿

𑌅𑌥𑍋𑌪𑌰𑌿𑌚𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌮𑌾𑌹—

𑌰𑌾𑌜𑍋𑌪𑌰𑌿𑌚𑌰𑍋 𑌨𑌾𑌮 𑌬𑌭𑍂𑌵𑌾𑌧𑌿𑌪𑌤𑌿𑌰𑍍𑌭𑍁𑌵𑌃 ।
𑌆𑌖𑌣𑍍𑌡𑌲𑌸𑌖𑌃 𑌖𑍍𑌯𑌾𑌤𑍋 𑌭𑌕𑍍𑌤𑍋 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍇 𑌹𑌰𑍌 ॥

அதற்குமேல் உபரிசரவஸு என்கிற அரசனுடைய வ்ருத்தாந்தத்தைச் சொல்லுவதற்காக, அந்தக் கதையானது மற்றெல்லாக் கதைகளைக் காட்டிலும் ஸாரமான கதையாக இருப்பதனால் மிகவும் கொண்டாடக் கூடியதாக இருப்பதையும், தாம் அதை உபதேச பரம்பரை மூலமாகக் கேட்டிருப்பதையும் சொல்லுகிறார்.

ப்ரஜைகளை ரக்ஷித்து வருகிறவனான ஓ அரசனே! முன்பு இக்கதையானது என் பிதாவினுடைய ஸமீபத்தில் என்னால் விஸ்தாரமாகக் கேட்கப்பட்டது. அது எல்லாக் கதைகளைக் காட்டிலும் உயர்ந்ததாகையினால், அது உமக்கு அவசியம் சொல்லப்படவேண்டியது.

முன்பொரு காலத்தில் சந்தநு என்கிற அரசனால் கேட்கப்பட்ட மஹர்ஷிகளுக்குள் சிறந்தவரான நாரதர், இந்தக் கதையைச் சந்தனு என்னும் அரசனுக்குச் சொன்னார்.

அந்த இடத்திலிருந்த நான் முற்காலத்தில் இந்த கதையைக் கேட்டேன்.

பிறகு உபரிசரவஸுவின் வ்ருத்தாந்தத்தைச் சொல்லுகிறார்.

தனது பக்தர்களுடைய பாபங்களை அபகரித்துவிடுவதால் ஹரி என்னும் பெயருடையவனான நாராயணனிடத்தில் பக்தியுள்ளவனும், தேவேந்த்ரனுக்கு ஸமானமான ப்ரஸித்தனுமாயும், ஆகாயத்திலேயே தேருடன் ஸஞ்சரிப்பதால் உபரிசரன் என்ற பெயரினுலும் ப்ரஸித்திபடைந்தவனாய், இந்தப் பூமி முழுவதற்கும் அதிபதியான ஓரரசன் இருந்தான்.

𑌧𑌾𑌰𑍍𑌮𑌿𑌕𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌶𑍍𑌚 𑌸𑌦𑌾𑌚𑌾𑌰𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ।
𑌸𑌾𑌮𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌤𑍇𑌨 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌵𑌰𑍇𑌣 𑌵𑍈 ॥

𑌸𑌾𑌤𑍍𑌵𑌤𑌂 𑌵𑌿𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌾𑌯 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌸𑍂𑌰𑍍𑌯𑌮𑍁𑌖𑌨𑌿𑌃𑌸𑍃𑌤𑌮𑍍 ।
𑌪𑍂𑌜𑌯𑌾𑌮𑌾𑌸 𑌦𑍇𑌵𑍇𑌶𑌂 𑌤𑌚𑍍𑌛𑍇𑌷𑍇𑌣 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌾𑌨𑍍 ॥

𑌪𑌿𑌤𑍄𑌂𑌶𑍍𑌚 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌸𑌂𑌵𑌿𑌭𑌜𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌂𑌶𑍍𑌚 𑌸𑌃 ।
𑌶𑍇𑌷𑌾𑌨𑍍𑌨𑌭𑍁𑌕𑍍 𑌸𑌤𑍍𑌯𑌪𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍍𑌵𑌹𑌿𑌂𑌸𑌕𑌃 ॥

அவன் தர்மத்தை அநுஷ்டிப்பவனாகவும், எக்காலத்திலும் தர்மத்தையே செய்யவேணுமென்கிற ச்ரத்தை உள்ளவனும், அந்தத் தர்மாநுஷ்டாநத்துக்கு அவச்யம் வேண்டியதான நல்ல ஆசாரங்களோடும் கூடியவனும் இருந்தான்.

இப்படி ஸர்வ தர்மங்களையும் நாராயணனுடைய ஆராதநமாகவே அநுஷ்டித்து வருகிறவனான அவனால், எல்லாப் பூமிக்கும் ஓரே அரசனாக இருக்கக்கூடிய தன்மையானது அடையப்பட்டது.

[அதாவது : இப்படி நாராயணனை ஆராதித்ததற்குப் பயனாக அவனுடைய அநுக்ரஹத்தினால் அவன் இந்த ஸப்த த்வீபையான பூமி முழுவதற்கும் ஓரே யஜமானனாக ஆனான் என்று தாத்பர்யம்.]

அவன் முன்பு ஒருகாலத்தில் ஸர்வஜ்ஞர்களான சில மஹர்ஷிகளால் அருளிச்செய்யப்பட்ட பாஞ்சராத்ரம் என்கிற சாஸ்த்ரத்தின் க்ரமத்தை அநுஸரித்துத் தேவர்களுக்கெல்லாம் ஈச்வரனான நாராயணனைப் பூஜித்துவிட்டு, நாராயணனுடைய பூஜையில் உபயோகப்படுத்தின பதார்த்தங்களினாலேயே பித்ருக்கள், பிதாமஹர்கள், ருஷிகள், மற்றை ப்ராஹ்மணர்கள், மற்றும் தன்னை ஆச்ரயித்திருக்குமவர்கள், ஆகிய இவர்களுக்கும் ஆராதநம் செய்துவிட்டு, இப்படி யஜ்ஞ சிஷ்டமான ஆஹாரத்தையே சாப்பிட்டுவந்ததோடு, ஸத்யத்தையே முக்யமாக அநுஷ்டிப்பவனாகவும் ஸர்வ ப்ராணிகளிடத்திலும் அஹிம்ஸா தர்மத்தையும் அநுஷ்டிப்பவனாகவுமிருந்தான்.

ஸர்வபாவேந பக்தஸ்ஸ தேவதேவம் ஜநார்த்தநம் |
அநாதிமத்யநிதநம் லோககர்த்தாரமவ்யயம் ||

தஸ்ய நாராயணே பக்திம் வஹதோऽமித்ரகர்ஶந |
ஏகஶய்யாஸநம் ஶக்ர: தத்தவாந் தேவராட் ஸ்வயம் ||

ஆத்மராஜ்யம் தநம் சைவ களத்ரம் வாஹநம் ததா |
யத்தத் பாகவதம் ஸர்வமிதி தத் ப்ரேக்ஷிதம் ஸதா ||

தஸ்ய ப்ரஶாஸதோ ராஜ்யம் தர்மேணாமித்ரகாதிந: |
நாந்ருதா வாக் ஸமபவத் மநோ துஷ்டம் ச நாபவத் ||
ந ச காயேந க்ருதவாந் ஸ பாபம் பரமண்வபி |

அவன் உலகத்தை யெல்லாம் உண்டுபண்ணினவனும், விகாரமில்லாதவனும், ஆதி மத்யம் அந்தம் இவைகள் இல்லாதவனும், தேவர்களுக்கெல்லாம் தேவனும், ஸர்வ ப்ராணிகளாலும் ஸர்வாபீஷ்டங்களைக் குறித்து ப்ரார்த்திக்கப்படுகிறவனுமான நாராயணனையே ஸர்வ வஸ்துக்கள் என்கிற அபிப்ராயத்தினால் பக்தி பண்ணி வந்தான்.

[அதாவது: பகவானையே தனக்கு ப்ரியங்களான ஸர்வ வஸ்துக்களாகப் பாவித்து, தனக்கு ப்ரியங்களான எல்லா வஸ்துக்களிடத்திலும் வைக்கக் கூடிய ப்ரீதியை நாராயணனிடத்திலேயே வைத்துவந்தான் என்று அபிப்ராயம்.]

சத்ருக்களை யெல்லாம் ஜயிக்குமவனே! அவ்வரசன் பகவானிடத்தில் பக்தியைப் பண்ணி வருவதால் தேவர்களுக்கெல்லாம் அரசனான இந்திரன், அவ்வரசனுக்குத் தன்னுடைய ஸிம்ஹாஸநத்தின் பாதியை ஆஸநமாகக் கொடுத்தான். [இந்திரனோடு ஒரே ஸிம்ஹாஸநத்தில் கூட இருந்தான் என்றபடி.]

அந்த உபரிசரவஸு என்கிற அரசன் ஸர்வ காலத்திலும் தான், தன் பத்நீ, தன் ராஜ்யம், தன் த்ரவ்யம், ரதம், யானை, குதிரை முதலிய வாகனங்கள், மற்றும் தன் ராஜ்யத்திலுள்ள ஸர்வ வஸ்துக்களும், இவையெல்லாம் பகவானுடைய ஆராதனத்துக்காகவே இருக்கின்றன என்னும் அநுபவத்துடன் இருந்தான்.

இப்படி, தர்மத்துடன் ராஜ்யத்தை ஆண்டுகொண்டு தர்ம விரோதிகளை நாசம் பண்ணிக்கொண்டு வருகிற அவ்வரசனுடைய மனத்தில் ஒருவித தோஷமும் உண்டாகவில்லை; வாயிலும் பொய் உண்டாகவேயில்லை; அணுவளவு கூட பாபத்தை அவன் செய்யவேயில்லை.

பாஞ்சராத்ரவிதோ முக்யா: தஸ்ய கேஹே மஹாத்மந: ||
ப்ராபணம் பகவத்ப்ரோக்தம் புஞ்ஜதே சாக்ரபோஜநம் ||

காம்யநைமித்திகாஜஸ்ரா: யாஜ்ஞீயா: பரமா: க்ரியா: |
ஸர்வா: ஸாத்வதமாஸ்தாய விதிம் சக்ரே ஸமாஹித: ||

யே ஹி தே முநய: க்யாதா: ஸப்த சித்ரஶிகண்டிந: |
தைரேகமதிபிர்பூத்வா யத் ப்ரோக்தம் ஶாஸ்த்ரமுத்தமம் |

மரீசிரத்ர்யங்கிரஸௌ புலஸ்த்ய: புலஹ: க்ரது: |
வஸிஷ்டஶ்ச மஹாதேஜா: தே ஹி சித்ரஶிகண்டிந: ||

இப்படி மஹாத்மாவாய் விளங்காநின்ற அவ்வரசனுடைய க்ருஹத்தில் பஞ்சராத்ர சாஸ்த்ரங்களை அறிந்து அநுஷ்டிக்கிற அநேகம் ப்ராஹ்மண ஶ்ரேஷ்டர்கள், ஆராதந காலத்தில் பகவானுக்கு நிவேதனம் பண்ணின ஆகாரங்களை அவ்வரசனுக்கு முதலில் சாப்பிட்டு வந்தார்கள்.

[அதாவது: அவ்வரசன் பாஞ்சராத்ரம் அறிந்த அநேகம் வைஷ்ணவர்களுக்குத் தினந்தோறும் அந்நதானம் பண்ணி வந்தான் என்றபடி.]

அவ்வரசன் உலகத்தில் நித்யம், நைமித்திகம், காம்யம் என்ற கர்மாக்களையும், இவற்றுள் சிறந்ததான அஶ்வமேதயாகம் முதலான மற்றும் உயர்ந்த கர்மாக்களையும், பாஞ்சராத்ர சாஸ்த்ர க்ரமத்தையே அநுஸரித்து மிகவும் ஜாக்ரதையோடு நடத்திவந்தான்.

இனி, ஷை பாஞ்சராத்ர சாஸ்த்ரம் உண்டான க்ரமத்தைச் சொல்லுகிறார்.

மரீசி, அத்ரி, அங்கிரஸ், புலஸ்த்யர், புலகர், க்ரது, அதிகமான தேஜஸ்ஸையுடைய வஸிஷ்டர், இந்த ஏழு ரிஷிகளுக்கும் சித்ர சிகண்டிகள் என்று பெயர்.

இப்படி சித்ர சிகண்டிகள் என்று ப்ரஸித்தியடைந்திருக்கிற யாதொரு ரிஷிகள் இருக்கிறார்களோ, அந்த ஏழு மஹர்ஷிகளாலும் ஒரே அபிப்ராயத்தினால் எந்த உத்தமமான சாஸ்த்ரமானது உண்டாக்கப்பட்டதோ அதற்குப் பஞ்சராத்ரமென்று பெயர்.

𑌸𑌪𑍍𑌤 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌯𑍋 𑌹𑍍𑌯𑍇𑌤𑌾𑌃 𑌤𑌥𑌾 𑌸𑍍𑌵𑌾𑌯𑌂𑌭𑍁𑌵𑍋𑌽𑌷𑍍𑌟𑌮𑌃 ।
𑌏𑌤𑌾𑌭𑌿𑌰𑍍𑌧𑌾𑌰𑍍𑌯𑌤𑍇 𑌲𑍋𑌕𑌸𑍍𑌤𑌾𑌭𑍍𑌯𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌵𑌿𑌨𑌿𑌃𑌸𑍃𑌤𑌮𑍍 ॥

𑌏𑌕𑌾𑌗𑍍𑌰𑌮𑌨𑌸𑍋 𑌦𑌾𑌨𑍍𑌤𑌾 𑌮𑍁𑌨𑌯𑌃 𑌸𑌂𑌯𑌮𑍇 𑌰𑌤𑌾𑌃 ।

𑌇𑌦𑌂 𑌶𑍍𑌰𑍇𑌯 𑌇𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌇𑌦𑌂 𑌹𑌿𑌤𑌮𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ॥
𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌸𑌂𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌮𑌨𑌸𑌾 𑌤𑌤𑌶𑍍𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌚𑌕𑍍𑌰𑌿𑌰𑍇 ।

𑌤𑌤𑍍𑌰 𑌧𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌕𑌾𑌮𑌾 𑌹𑌿 𑌮𑍋𑌕𑍍𑌷𑌃 𑌪𑌶𑍍𑌚𑌾𑌚𑍍𑌚 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 ।
𑌮𑌰𑍍𑌯𑌾𑌦𑌾 𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌦𑌿𑌵𑌿 𑌭𑍂𑌮𑍌 𑌚 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 ॥

இந்த ஏழு மஹர்ஷிகளும், அப்படியே ப்ரம்மாவினுடைய புத்ரனான ஸ்வாயம்புவ மநுவும், ஆக எட்டு பேர்களும் உலகத்திற்குக் காரணமான ப்ராஜாபதிகள். ஆகையினால் இவர்களினாலேயே உலகமானது தரிக்கப்படுகிறது. ஆகையினால் அந்த ஏழு மஹர்ஷிகளினால் இந்தப் பஞ்சராத்ர சாஸ்த்ரமானது உண்டாக்கப்பட்டது.

வெளி இந்த்ரியங்களையும் மனத்தையும் அடக்கினவர்களாயும், பகவானையே த்யானம் பண்ணிக்கொண்டு மிருக்கிற இந்த ஏழு ரிஷிகளும், இந்தப் பஞ்ச ராத்ர சாஸ்த்ரமானது, உலகத்திற்கு மங்களங்களைத் தெரிவிப்பதாகவும், இந்த சாஸ்த்ரமானது ப்ரஹ்மத்தைத் தெரிவிக்கிறதாகவும் இந்த சாஸ்த்ரமானது ஸர்வோத்க்ருஷ்டமான உபாயத்தைத் தெரிவிக்கிறதாகவும் ஆகவேணுமென்கிற விஷயத்தில் ஒரே நோக்க முள்ள மனத்தை உடையவர்களாக உலக க்ஷேமத்தையே நினைத்த மனத்தினால் இந்தப் பஞ்சராத்ர சாஸ்த்ரத்தைப் பண்ணினார்கள்.

அந்தப் பாஞ்சராத்ர க்ரந்தத்தில் உலக ப்ரவ்ருத்தியை அநுஸரித்த முறையில் த்ரிவர்க்கமென்று சொல்லப்படுகிற தர்மம் அர்த்தம் காமம் என்னும் இவைகளும், இவைகளில் வைராக்யம் உண்டானவனுக்கே மோக்ஷ புருஷார்த்தத்தில் ப்ரவ்ருத்தி உண்டாகுமாகையினால், அவைகளுக்குப் பிறகு மோக்ஷபுருஷார்த்தமும் சொல்லப்பட்டிருக்கின்றன.

பூமியிலும் ஸ்வர்க்காதி லோகங்களிலும் இருக்கும் பலவிதங்களா[illegible] சொல்லப்பட்டிருக்கின்றன.

பரிதிமுன் னுதயஞ் செய்த வருணற்கே பரவிப் பாயு
மிருளெலா மிரிந்த தம்மா வொளியுளா ரிடஞ்சார் பற்ற
திருவினர்க் கெதிரின் மாறாய்த் திரிதருந் திறத்த வன்மை
யரிகளு முளரோ வெந்த மரங்கமா நகரு ளானே. 45

கயங்களின் மலர்ந்த வின்பங் கயங்களின் மலியுங் கன்னி
நயங்கொள வருந்திப் பாடு நாவின வளிக ளூத
முயங்குமின் முழவுத் தோள்கண் முண்டாக சனியின் பங்காய்
வயங்குமம் மலராள் பாத நூபுரத் திசையே மானும். 46

கூம்புமோர் குமுதத் தூடோர் பெடைமுரல் குரலைக் கேட்ட
வேம்பலா ரளியொன் றந்த விடுக்கணுக் கிரங்கி யாங்கே
யாம்பல படியே தாண்மூக் கவைகளா லுழுது செய்யும்
போம்படி புறத்துச் செய்ய முயற்சியைப் புரிந்து பாராய். 47

இன்னிசை யிழற்று மாங்கோ ரறுபத மினிது தோயு
மென்னறுங் குமுத நீத்து மலர்தர மினிருஞ் செய்ய
நன்னய முளரி யூடே நணுகுமா லெவர்க ளேனுந்
துன்னிய விபத்தர் தம்மைத் துறந்தப லெழுவ ராமால். 48

முயலின்கூ டிறைவ னோடே முயங்கிய நிசியா மங்கைச்
சயனவம் பரத்தின் மின்னுந் தாரகைக் குலமாங் கோதைப்
புயலினின் றுதிர்ந்த பூவுந் திமிரமா னனைப் பூச்ச
மயலகல் வுறவா தித்தன் பதங்களா லகற்று மாதோ. 49

வைகறைப் பொழுதி னேர்ந்து வாசவத் திசையா மாதர்
கைகளா யிரமாம் வெய்ய கதிரினங் குழுவி யின
மைகலு முளிக ளென்னுஞ் சிறையினர் மணமே மிக்க
வைகலர் தலங்கு மம்பு யத்தினின் விடுபட் டாரால். 50

தருத்தளிர் வெம்பின் றுது தடங்களை ரரிய செந்தா
மரைத்திரு மலரின் மின்னூர் மார்பொளிர் மரவத் தோடித்
திருத்தகு பொருள்க டோறுந் திகழுசெஞ் சவியை யிங்கே
யருத்துவன் றிசையின் மன்னு மிளங்கதி ரிரட்டிப் பிக்கும். 51

பங்கய மலரை யிதுவும் பாசடை மிசையே பால
பிங்கலன் வெயிலாற் சேந்து பிறங்கம்பு கணத்தைப் பேடை
தங்குமுன் னுயிர்த்த வண்ட மெனநினைந் தவற்றைத் தைவந்
தங்குதன் சஞ்சு தன்னு லனைமலே துணர்ந்த பிக்கும். 52

கதிரவ னுதய வெற்பி னுயர்முடி கலந்து வையம்
புதைதரு மிபிட வந்த காரமும் போகி வைக
லதுவர மலர்ந்த பூவி லளியின முரலத் தூய
மதுவிருந் தொழுகும் பள்ளி யெழுகவின் னரங்கத் தம்மா. 53

பனிப்பகை வெயில்க ளாசை யெங்கணும் பரவி விண்மீ
னினத்தொடு மதியின் சோபை யிகந்துபைங் கமுகின் பாளை
தனிற்படு மணத்தை வாரி வைகறைக் குரிய தண்கா
லினிப்புற வுலவும் பள்ளி யெழுகவின் னரங்கத் தம்மா. 54

பல்வகைப் பறவைத் தோடு பைம்பொழி லுறுறும் கூகாவென்
றல்கலி லிரட்டு மல்போ யாழியின் றிரையி னோதை
மல்குறு மமர ரீட்ட மருமலர்த் தொடைய லோம
புல்லிய புகழ்பூம் பள்ளி யெழுகவின் னரங்கத் தம்மா. 55

குடம்புரை செருத்தன் மேதிக் குலங்களைப் புடனே தொழுத்
திடந்தனை யொருவி மேயற் கிருங்கழை வயலுக் கேகு
மிடம்பெரு விடபத் துங்கா ரத்தொலி திசைசூழ் வைய
மடங்கலு மெழும்பும் பள்ளி யெழுகவின் னரங்கத் தம்மா. 56

ஆனிரை பழுவத் துய்க்கு மாயர் வேய்ங் குழலி னோசை
தேனசைந் துழலுந் தும்பி யிசையொடு திசையின் மல்கும்
வானவ ரவனிமாண வகர்களுக் குரைக்குஞ் சாம
கானமுங் கழுகும் பள்ளி யெழுகவின் னரங்கத் தம்மா. 57

அருக்கர்க ளிரதத் தம்மி னுருத்திரர் விடைமே லாடு
முருக்கினர் சிகியிற் கந்த னுகிய விலரோ டுற்ற
திருக்கினர் மருத்த ரட்ட வசுக்களுந் திரண்டின் கோயி
னெருக்கினர் நிலவும் பள்ளி யெழுகவின் னரங்கத் தம்மா. 58

இவர்சுர முனிவ ரீதோ மருத்துவன் மருத்தர் சூழத்
தவளமா வியக்கர் விச்சா தரர்கந் திருவரும் போத
நவமணி பதித்துப் பொன்னி னூட்டுமுன் வாயி னிற்கத்
தவநெருக் குடைத்துப் பள்ளி யெழுகவின் னரங்கத் தம்மா. 59

நிதிக்குவை கபிலை யோடு தருப்பண மினது பாதந்
துதிப்பதற் குரிய வெல்லாந் தும்புரு நார தாதி
மதிப்புறு முனிவர் கொண்டு மணந்தன ரிரவி மாகத்
துதித்தனன் கொளிரும் பள்ளி யெழுகவின் னரங்கத் தம்மா. 60

மாடக மணியா ழின்ப மண்ணமை முழவ மாதி
யாடருங் கருவி யோடிங் கின்னரர் கருடர் நன்கு
பாடுகந் திருவர் சித்த ராதியர் படிந்துன் கோட்டி
கூடுறக் குவிந்தார் பள்ளி யெழுகவின் னரங்கத் தம்மா. 61

மின்னெழி லடியா ருள்ள நிகர்க்கும்பொன் னியினீர் தோய்ந்து
பொன்னிலைப் பொருவு மாதர் பூந்துகி லளகந் தம்மை
மென்னறுங் கரத்தா னன்கு பிழிந்தக மிடையும் வேலை
யின்னறும் புலரி பள்ளி யெழுகவின் னரங்கத் தம்மா. 62

என்றுதேன் பெருகுங் குல்லை யிணைந்ததார் மலரின் கூடை
யொன்றிய புயத்துத் தொண்ட ரடிப்பொடி யுவந்து பின்ன
ரின்றுயி லெழுச்சி செய்த வியல்பென விசைக்க வைய
னன்றுள மகிழ்ந்து பள்ளி நன்குணர்ந் தெழுந்தா னன்றே. 63

வேறு

காலைபுரி கன்மமதன் பின்னைமுறை யாற்றி
மாலைவன நாறுமண மார்பரிக டம்மை
மேலையொளிர் சூரிகளின் மேதினிபு ரக்குங்
கோலையடை கொற்றவர்க ளாதியரி னோக்கா. 64

விமனொளிர் வெண்ணிடை விரைக்குழலி யோடு
மாமனிவ னேறியுடன் மற்றவரு மேகப்
பூமகண்மு கத்திலக மென்றவரும் போற்று
மாமறைய ணங்கமழ ரங்கமெழ லுற்றான். RK

அங்கமர ராதியனை வோருமவர் தங்க
டங்களுறு மூர்த்திகளி வர்ந்தனர்க டண்ணென்
றிங்களெனுங் கவிகைமுத லானவைதெ ரிந்தே
யங்கரமெ டுத்தருக ணைந்துசெல லுற்றார். 66

நாரணர்கள் வீயிறைக ணன்முதுகி வர்ந்தா
ராரண ரத்தினம ரன்விடையெ ருத்துஞ்
சீரியவ லாரியயி ராவதசி ரத்து
மேருறவி மானவல மிமையவரு மார்ந்தார். 67

மன்னவர்த மக்குரிய வாகனமி வர்ந்தார்
பன்னரிய பத்தரவர் பண்ணுமுறை யோக

மன்னுவல மாகியவி மானமதி வர்ந்தா
ரின்னவகை யெம்பரனை யேவருக்தொ டர்ந்தார். 68

அஞ்சிறையின் வேகமதி னம்புதமொ துங்க
விஞ்சியெழு முவணன்மிசை கோதையொடு விறைவிற்
கொஞ்சியெழு மெந்திருவ ரங்கன்களி கூர்ந்தே
மஞ்சனமா யின்னவண மற்றறைய லுற்றான். 69

மாலெனுமெ னக்குமிரு மாலைவிளை விக்கும்
பாலெனுமொ ழித்திருவே பாரெதிரு யர்ந்த
கோலமுறு பொன்முடிகள் குலவுறல னேகம்
மேலுலகு மேலுறைய மின்னுமலை யிதே. 70

செங்குலைய வேலநறும் பைங்கொடி கிளைக்க
ணெங்கணும்ப டர்ந்துமுளை யைந்தருவி னேயுங்
குங்குமமுஞ் சந்தனமுங் கோடியுழை யோங்கும்
பொங்குதிரை யுண்டமுனி புக்கிலது வாகும். 71

சந்தகிது நித்திலமுஞ் சார்ந்தொழுகு மிந்த
வுந்தியுயர் தாமிரப ருணியிதையிவ் வோங்கல்
சிந்துவெனு மருமகனு மொன்றிநனி சேர
முந்துமனை யாளௌமு தத்தடைய வுய்த்தான். 72

அந்தவரை மாலிருஞ்சோ லைமலையென் றுருஞ்
சிந்தைமகிழ் வோடுசெறிந் துய்ந்திடுவர் சேணோர்
விந்தையுறும் வேட்டையயர்ந் திந்தவரை யோர
மெந்தமயர் வேகவில ணிருந்தகங்க ளிப்பேம். 73

நூபுரந தித்தணறு துண்டிவலை கொண்டு
பூபலம லர்த்தலையின் பொன்விரையை மொண்டு
தாபமக வத்தவழுந் தண்வளியை யிந்தத்
தாபாம ளிக்குமுப காரமென வென்றும். 74

ஏறுசிலை யின்முலைக ளிந்துவுடல் பாய
வூறமிழ்ந்த டித்தலமு றைந்துவள ரோளி
நாறுமல ரின்மரயிந் நாகமிசை யொன்றும்
கூறருந றுஞ்சுவையே கூர்பழன ளிக்கும். 75

பற்றிறையு மின்றியெ மம்பர தலத்தி
லொற்றையுரு ளன்பரியெ மூற்றகனை யாறச்

சொற்றநதி தூயவிள வாயுகொடு வீசும்
பொற்றசிறு நுண்டுளிகள் கொண்டுவிதம் புரியும். 76

பானுகிர ணத்திரியி ருட்படலம் பம்மி
யானதுச ரண்புகலெ னப்பசுமை யான
மேனிறம ணித்திரளின் மிக்கவொளி யோளி
வானளவு மிந்தவரை வாயொளிர்தல் காணுப். 77

இருபுடையும் வெள்ளருவி யிழியமதி மீதே
மருவுறவ யங்குமிது மன்னுகுடை நீழல்
விரிநிலவெ ழிற்கவரி வீசவிரு பாலும்
புரிகுவது பூதரவி ராச்சியமே போலும். 78

நூபுரந திச்சிறிய கோன்மைபெறு கால்கள்
வீபுதிய மாதவியின் மேன்விரவி வீழும்
மாபெரிய மஞ்சுளம ராளநிவ கங்கள்
பூபருக ளித்திரள்பொ ருந்திவி கரிக்கும். 79

வேறு

பாரா யெந்தம் பைங்கிளியே முன்னே காணும் படர்வனத்தை
யோரார் சென்னி செழியர்களி னெல்லைக் கிடையே வருமீதிற்
போரா யிரவெங் கதிரோற்குப் பீதி யடைந்த விருட்படலஞ்
சேரா வொருங்கு குடிகொள்ளுஞ் செப்பற் கரிய திதன்பகடே. 80

காணு ரிங்குக் கானவரின் கரிய குழன்மங் கையர்முறையுண்
மேனார் சிகியின் றுஞ்சுவிடை மிடையு நாக மணிவிளக்கந்
தானு யெரியப் பொருதழிந்த தரணீ பாலர் குடைக்கதல
மாணு வாயி லதனுளுறைந் தன்பர் தம்பா லாடுவரால். 81

பொன்னித் தெண்ணீர் பாய்தாலும் புகழி னோங்கும் பூகங்கண்
மன்னித் திகழும் பொன்புரைபூம் பாளை தங்கண் மணநாறு
மின்னற் பசிய தேன்றளிக வென்று மெழுந்தம் பரமறைப்ப
மின்னிப் பெரிய துர்த்தினமாய் மேன்மைப்பொழிலேசோணாடாம்.

பாரா யிந்தப் பரவையிது பரசு பாணிக் கடுகளையா
யோரா ரிந்து வெழுமிடமா யிரத்தி னங்கட் காகரமாய்க்
காரார் குழலி யாமுணர்ந்தே கண்டுஞ் சும்பேர் மணவறையாச்
சீரா ரவனி மடந்தையிடை சேருங் கலையா யிலகுமொல். 83

ஆற்றிற் செல்லா மாதரமா யயிரா ணிக்கேள் வன்காற்றிற்
கூற்றிற் கிளருங் குலிசத்திற் குடைந்து குலைந்து சரண்புகுதும்
போற்றற் குரிய பொருப்பினத்தை விரைவிற் போது மெமதகமென்
றூற்றிக் கூவு மெனலாகு மலையா மத்தத் தலங்கிடுமால். 84

தவளக் கரியுச் சைசிரவத் தமரர் கோனைத் தண்புனலா
லவனி யுய்யப் பெய்முகிலைச் சோமன் றன்னு லைமுகனைச்
சுவையி னரிய வின்னமிழ்திற் சுரரை மணிக ளிறையினைமை
யுவகை பெருக வுஞற்றிமோ லொளிரும் வள்ளைக் குழைச்செவியாய்.

ஏற்று ரேற்ற படியெய்த வீயுஞ் சிந்தா மணிதேனு
வூற்று மொழுகு மகரந்த மலரைந் தருவா முவையின்று
கோற்றேன் புரையு மலரவனைப் பெற்றுக் கொடுத்த குரைகடலுக்
காற்று தாரே பகைத்திடுவா ரமையு முலகம் வள்ளியர்பால். 86

இவ்வா ரவ்வா றுறுவளங்க ளென்றெம் மன்னைக் கியம்பியெழுந்
தொவ்வா தொன்று முயராங்கத் தோங்கும் பொன்மா முடிச்சிகரி
யவ்வா யிற்க ணடைந்துவட மலையான் றன்னை யன்புமிகுஞ்
செவ்வாய் மொழியின் விடுத்தானை மலையான்றிருமா முகநோக்கி. 87

இன்மா முறுவ லிழைத்தனுப்பி யெழின்மா லிருஞ்சோலைப்பரனைப்
பொன்மாகடைக்க ணிப்பிழைத்துப் போக்கிச் சிரக்கம் பனம்புரியா
தென்மா வயல்சூழ் திருக்குடந்தை யமலன் றன்னை விடுத்திந்த
மன்மா வுரத்தார் களைப்புருவச் சேகை தன்னுன் மகிழ்ந்தனுப்பி. 88

திருக்கண் மலரை விழித்தனுப்பித் திசைமா முகனைச் சங்கரனை
புரைக்கும் பிரிய வுரையானே யொருவா றுறுமகன் முதலாந்
திருக்க ணீழல் வதியமரர் தமையுந் திசையின் பாலரையும்
பெருக்குஞ் சேனைத் தலைவனையும் பிறங்கு வையத் தரசரையும். 89

கூட லார்தன் கோவினையும் விரலை யசைத்துக் குளிர் கடைக்கண்
மாடி விடுத்து மறைமுதலோர் கார வுருவாய் மற்றொளிரு
நீடும் பொன்வி மானமதி லடியா ரோடு நீள்குழலிற்
சூடித்தந்த கோதையொடுஞ் சுகமுற்றெங்கு முறைந்தொளிர்ந்தான்.

13-வது சருக்கம்

இள வேனில்

ஒருவி லாவொரு பெண்ணையொ ழித்தனை
யொருவி லாவொரு பெண்ணையு முற்றனை
பொருவி லாதநின் பொன்புரை யாடலைக்
கருவி லார்திரு வாளருங் காண்பரே. 1

சேர புசாளர் சிறுமியர் தம்மொடும்
வார ணிந்த வனமுலைக் கோதையோ
டேர ணிந்த விலக்குமி தன்னொடு
மாரு மம்பொன்ன ரங்கத்தம் மானையே. 2

அண்டி மூவிரண் டாயவி ருதுகள்
கண்டு தம்முறை யின்வணங் கைதொழு
தண்ட நாயக னைந்த மேயுற
மண்டி மன்மத னோடுமெ னக்தவால். 3

குரவ மாவொடு கூர்தருஞ் சம்பகம்
விரவு சிந்துவா ரத்தொடு வெம்மணம்
பரவு பாடலங் கன்னிகா ரங்களு
மரவ வண்டுகண் மூதுவ லர்ந்தன. 4

பூக மூகம் பொலிந்தும லர்ந்தன
நாக காடுமெ சோகமும் பூத்தன
சாகை யன்னுறுங் கூவிள சாலமுங்
காக லந்துக மழ்ந்தலர்ந் தோங்கின. 5

இந்த வண்ணமெ ழுந்திடு வேனில்வாய்க்
கந்த வாகன லர்ந்துக மழ்தரு
மெந்த வின்மல ரின்மண முஞ்சொரி
தந்த தேனையுந் தான்கொடு வீசினான். 6

வைய முற்றும் வயங்கொ ளிலங்கிடும்
வெய்ய பூங்கணை வேடனக் கேவலஞ்
செய்ய வந்த செழும்வயக் தந்தனின்
ஐய மின்றிய மைந்தனர் யாவரே. 7

அந்த வம்பரு வத்திரு மேன்மையாற்
சிந்தை நன்கு சிமிழ்ப்புற ரங்கனுங்
கந்த வாரத் துடன்கள கண்டத்தின்
சந்த நாத நிறைபொழிற் சார்ந்தனன். 8

கோகி லத்திர ளங்கு குழுமிவள்
வாகை நண்ணை வருகெனக் கூவுமால்
சாகி தங்கள டித்தலந் தேங்குமேல்
வீக லந்து விழுந்த நறவமே. 9

வேறு

தாழிருஞ் சினைக ளாகுந் தனுவிடை நறவம் வேட்டு
வீழளி நிரைக ளாய நாரியி னிசையின் மேவி
யூழுற மலர்ந்த பூவா முளைவுறும் பகழி கொண்டு
காழுறு மனத்த காமன் கெடவரல் களிப்பி னுற்றும். 10

பன்மலர்ப் படலவல்லி படர்ந்தபைம் பவனந் தன்னுள்
வன்மையார் பவனன் றன்னு லருஞ்சுவை மதுவை வாச
மென்மலர்ச் சகடந் தண்ணுண் மிழற்றளிக் குடிகள் மேவி
யின்மையார் பெடையாம் பெண்டி ரிணைந்துறப் பருகி யார்ப்ப. 11

அறுபத நிகவம் வல்லி யடர்மனை யலர்ந்த பூவி
னறுமது வருந்திக் கோகி லங்களி னறிய பாடல்
செறிதரத் தளிர்க ளாய செங்கரச் சதியுஞ் சேர
வெறியுறு துளபன் காண விழுந ம் புரியு மாதோ. 12

கரும்புனொன் றலராம் பான பாசனங் கழுமுந் தேனில்
விரும்புறு பெடையி னீழல் விளங்குறு வதனில் வீழ்ந்த
தரும்பெடை யெனவே யார்த்தங் கீர்த்திடற் கணுகு மாற்றூற்
பெருங்குடி யர்களின் றன்மை யிற்றெனப் பிறங்கு மன்றே. 13

மென்பெடை யெனுமோர் நங்கை மிகுமதுப் பருகி யாடித்
தன்கருஞ் சிறகாந் தானை தனையெடுத் தகன்று நாணு
மன்புறு மளியாங் காமு கன்களித் தருகிற் காண
மன்பெரும் பொழிலி னூடே மகிழ்நடம் புரியு மாதோ. 14

வரிமணிச் சுரும்பின் கும்பர் வகையிலா துன்றி மெய்யி
விரும்பொடி திமிர்ந்து தள்ளாட் டத்துட னியங்கிக் கள்க
டிரும்பியே சுழல வுள்ளக் களிப்பொடு திரிதல் கள்ளை
விரும்பியுண் டுழலு மாந்தர் விறலினை விளக்கு மற்றும். 15

Vol. 24] SEPTEMBER 1935 [Part 3
Editor: V. V. SRINIVASA AIYANGAR

ஸ்ரீ
வேதாந்த தீபிகை

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸ்பையாரால்
ப்ரசுரிக்கப்படும் மாதத்
தமிழ்ப் பத்ரிகை.

யுவ ஹு

ஆவணி

பத்ராதிபர்:
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

CONDUCTED BY
Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.
MADRAS.

விஷய ஸூசிகை

1. ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு ஒரு விஜ்ஞாபநம் ... 81
[ஸ்ரீ. உ.ப. தி. இ. சடகோபாசார்யர், அட்வொகேட், கடலூர்]
2. கம்பர் மதம் ஸ்ரீ வைஷ்ணவம்
[பந்தல்குடி: பாரத்வாஜ மாடபூஷி: ஸ்ரீ. உ.ப. ரெ. திருமலை ஐயங்கார்] ... 85
3. ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத்
[ஸ்ரீ. உ.ப. ம. வி. கோபாலாசார்யர் அட்வொகேட் திருச்சி] ... 96
4. பதிவ்ரதா தர்மத்தின் சிறப்பு
[மஹா மஹோபாத்யாய ஸாரஸ்வத ஸார்வஜ்ஞ ஸ்ரீ. உப. தட்டை வெ. ஸ்ரீநிவாஸாசார்யர்] ... 105
5. மீமாம்ஸா ஸங்க்ரஹம்
[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்] ... 114
6. ஸ்ரீ க்ருஷ்ண தாதார்ய மஹா தேசிக சரிதம்
[ஸ்ரீ. உப. வித்வான் ஸ்ரீபா. க்ருஷ்ண தாதாசார்யர்] ... 117
7. அத்திகிரி அருளாளனும் ஆழ்வார்களும்
[ஸ்ரீ. உப. ஸி. நரஸிம்ஹாசார்யர் அட்வொகேட், சென்னை] ... 121
8. நவக்ரஹங்களும் மநுஷ்யர்களும்
[ஆண்டிக்காடு வங்கிபுரம் ஸ்ரீ. உப. ஜகந்நாதாசார்யர்] ... 125
9. ஸங்கல்பத்தின் தத்வ விசேஷம்
[ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்] ... 129
10. பத்ராதிபரின் அறிக்கைகள் ... 136

ஸ்ரீ:

ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்

(1) ஸ்ரீ பஞ்சஸ்தவம் : ஸ்ரீஸ்துதி—
ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரால் இயற்றப் பெற்ற ஒரு தமிழ் உரையுடன் கூடியது .... ரூ 0 2 0

(2) ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:—[ஸ்ரீ ஆளவந்தாரால் அநுக்ரஹிக்கப்பட்டது ; ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாநத்துடன் கூடியது] .... ரூ 0 8 0

(3) ஜிதந்தே ஸ்தோத்ரம்:—[ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாநத்துடனும் புத்தங்கோட்டகம் வித்வாந் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யருடைய வ்யாக்யாநத்துடனும் கூடியது] .... ரூ 0 6 0

மானேஜர், ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸ்,
ராமஸ்வாமி தெரு,
புதுமாம்பலம், தியாகராயநகர் போஸ்ட்,
மதராஸ்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே [illegible]

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

ஸம்பு. 24] யுவ ஆவணி மீ [ஸஞ்சிகை 3

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு ஒரு விஜ்ஞாபநம்

நமது விலக்ஷணமான ஸம்ப்ரதாய விஷயங்களை எல்லோரு மறியப் போதிப்பதற் கென்றே ஏற்பட்டு நடந்துவரும் ஸ்ரீ வேதாந்த தீபிகா பத்திரிகையின் உத்தரோத்தராபிவ்ருத்தியைக் கருதித் தத்காலம் சில ஏற்பாடுகள் செய்யப்படுவதாகத் தெரிய வருவதால், இந்த ஸந்தர்ப்பத்தில் இப்பத்திரிகையின் உபயோகத்தைக் குறித்துச் சில விஷயங்கள் சொல்ல விரும்புகிறேன்.

இந்தப் பத்திரிகை சுமார் 25 வருஷங்களுக்கு முன், ஸ்ரீ. உ. வே. ராஜகோபாலாசாரியர், ஸ்ரீ. உ. வே. வாஸுதேவாசார்யர் முதலிய ஆஸ்திகர்களுடைய முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டு, இவ்வளவு காலம் வெகு விமர்சையாய் நடந்துவந்தது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆரம்பம் முதல் இதற்கு முக்யாவலம்பமாயிருந்த ஸ்ரீ. உ. வே. வாஸுதேவாசார்ய ஸ்வாமி, இப்போது தமக்கு வய: ப்ரயுக்தமான தார்ட்யக் குறைவினால்

158957

[illegible] வஹிப்பது அஸௌகர்யமா யிருந்ததை நினைத்து, அந்த ஸ்தாநத்தை அதிகரிக்க ஸ்ரீ. உ. வே. V. V. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியை ப்ரார்த்திக்க, அவரும் அதை அப்யுபகமம் பண்ணியிருக்கிறார். இதுவரையில் ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமி தம்முடைய விடாமுயற்சியாலும் ஸாமர்த்யத்தாலும் இப்பத்திரிகையை வெகு ஒழுங்காய் நடத்தி வந்ததற்காக ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தரனைவரும் அவர் விஷயத்தில் அளவற்ற நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தம் ஸ்தாநத்தை வஹிப்பதற்காக, அதற்கு ஸர்வப்ரகாரத்திலும் யுக்தாதிகாரியாகிய ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியைக் கேட்டுக்கொண்டு, அவரை அதை ஒப்புக்கொள்ளும்படி செய்தது, இப்பத்திரிகையின் அபிவ்ருத்தியில் ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமிக் கிருக்கும் ஏகாக்ரமான ச்ரத்தையையும், ஔசித்ய ஜ்ஞாநத்தையும், கார்யஸாதந கௌசலத்தையும் நன்கு விளக்குகிறது. பத்ரிகையின் நிர்வாஹ பரத்தைப் பூர்ணமாக வஹிக்காமலிருந்தபோதிலும், ஸ்ரீ வாஸுதேவாசார்ய ஸ்வாமி, இனியும் பத்திரிகை விஷயத்தில் தமக்குள்ள அபிமாநத்தைச் சிறிதும் குறைக்காமல், அப்போதைக்கப்போது தம்முடைய ஸூக்ருத வசநங்களால் பத்ரிகா வாசகர்களுக்குத் திருப்தியைச் செய்யவேண்டுமென்று விநயத்துடன் ப்ரார்த்திக்கிறேன்.

இப்போது சிறிது காலமாகத் தீபிகைக்கு முன்னிருந்ததுபோல் ஜனங்களின் ஆதரவில்லாமல் சந்தாதாரர்கள் குறைந்துவிட்ட படியால், பத்திரிகை ப்ரசுரம் செய்வதே கஷ்டப்படுகிறதென்று தெரியவருகிறது. இது, நம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தரனைவருக்கும் மிக்க கவலையைத் தரக்கூடியதாயிருக்கிறது. நமது ஸித்தாந்தத்தின் வைலக்ஷண்யத்தைத் தகுந்த அதிகாரிகள் யதாசாஸ்த்ரம் லலிதமாகவும் மநோஜ்ஞமாகவும் தீபிகை முகமாக ப்ரசுரப்படுத்திவந்தது எல்லோரு மறிந்த விஷயம். லோகத்தில் பலவாறுக மதங்களும் ஸம்ப்ரதாயங்களும் ஏற்பட்டிருந்தபோதிலும், அவைகளனைத்தும் ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்துக்குமுன் ஆதித்யதேஜஸ்ஸினால் ஆக்ரமிக்கப்பட்ட பனி, நக்ஷத்ரம், சந்திரன், இவைகள் போல் நிரர்த்தமாகு மென்பது தடஸ்தர்களான ப்ராஜ்ஞ விமர்சகர்களுக்கு ஸ்பஷ்டமாகும். ஆகையால் ஸ்வதஸ்ஸார ஹீநமாய்க் கேவலம் ஜநஸங்கேத பலத்தால் விஜ்ரும்பணம் பண்ணுகிற தர்மப்ரணாலியைச் சிறிதும் அவலம்பிக்காத மதங்களுக் கெல்லாம் விசேஷமான ஸஹாயமும் ஆதரவும் மேன்மேலும் ஏற்பட்டுக்கொண்டிருக்க, ஸர்வதோமுகமான ச்ரேயஸ்ஸாதநமாய், தத்வைகாவலம்பியாய், ஸர்வோத்க்ருஷ்டமாய் ப்ரகாசிக்கும் நமது ஸம்ப்ரதாயத்தின் மஹிமையை எடுத்துரைக்கும் இப்பத்திரிகைக்கு நம் ஜனங்கள் ஆதரவளிக்கவில்லை யென்றால், இதைவிடக் கலி ஸாம்ராஜ்யத்துக்கு வேறு

நிதர்சந மென்ன வேண்டும்? இப்படிப்பட்ட ஔதாஸீந்யத்துக்கு முக்கிய காரணம் நம் ஸம்ப்ரதாயத்தின் பெருமையை நம் ஜனங்களில் பலர் அறியாததுதான். இந்த துஸ்திதியைப் போக்கி நம்மவர்கள் எல்லோரும் நம் ஸம்ப்ரதாய தத்வத்தை யதாசக்தி அறிந்துகொள்ளவேண்டு மென்பதற்காகவே இப்பத்திரிகை எங்கும் பரவி எல்லோருக்கும் உபகரிக்கும்படி ஸஹாயம் செய்யவேண்டியது ஸமஸ்த ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் முதற் கடமையாகும். ஸம்ப்ரதாய விஷயங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டியதும், அவைகளை ப்ரசுரம் செய்ய ப்ரயத்நப்பட வேண்டியதும், வ்ருத்த வ்யாபாரமென்றும் அகிஞ்சந ப்ரவ்ருத்தி யென்றும் நம்மில் யுவாக்களாகவும் ஆட்யர்களாகவு மிருப்போர் பலர் அபிப்ராயப்பட்டு உபேக்ஷா புத்திகளாய் வர்த்திப்பதே இவ்வகையான வைபரீத்யத்துக்கு ப்ரதாந ஹேதுவா யிருக்கிறது. நம்முடைய தத்கால தசையில், கண்ணில்லாதவன், தன் கையிலிருக்கும் வஸ்துவின் ரூபத்தைப் பிறர் சொல்லித் தெரிந்துகொள்ளவேண்டியதா யிருப்பதுபோல், நம் ஸம்ப்ரதாயஸ்தர்களுக்குக் குலதநமாகக் கிடைத்திருக்கும் மஹாரத்நமான ஸத்ஸம்ப்ரதாயத்தின் குணத்தை நாமறியாமல், அந்யர் அதை உகந்து பேசும்வரையில் நாமதை உபேக்ஷிப்பதாயிருக்கிறது. லோகமெங்கும் புத்திமான்கள் செய்து வரும் ஸமஸ்த ஆராய்ச்சிகளும், பராவர தத்வங்களை யதாவத்தாக அறிந்து கொள்ளவேண்டு மென்கிற உத்தேசத்தைக்கொண்டே செய்யப்பட்டு வருகின்றன. அதற்காகப் பிறர் பஹுப்ரகாரமாய்ப் பரிச்ரமப்பட்டும் அவர்களுக்கது இன்னும் கிட்டினதாகக் காணோம். இப்படி அந்ய துர்லபமான யதாவஸ்தித தத்வ ஸ்வரூபம் நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்களான பூர்வாசார்யர்களுக்கு யாத்ருச்சிக ஸுக்ருத வசத்தால் ஏற்பட்ட பகவத் க்ருபாவிசேஷத்தை முன்னிட்டு உள்ளங்கை நெல்லிக் கனிபோல் ஸுஸ்பஷ்டமாய் விளங்கியதுடன், அதனை யவர்கள் நமக்கு ஸமஸ்த ஸம்சயங்களு மறும்படி பரஸ்ஸத க்ரந்தங்களால் வெளியிட்டு ஸதாசார்ய பரம்பரா மூலமாய் அவைகளின் ஸாரத்தைப் புகட்டியிருக்கிறார்கள். இப்படி நிகரற்ற மஹா நிதிக்குப் பாக்யவசத்தால் இட்டுப் பிறந்திருக்கும் நாம், அதன் ப்ரபாவத்தை யதாவத்தாய் அறிந்துகொண்டு, அதை லோகோஜ்ஜீவநார்த்தம் யாவச்சக்தி ப்ரகாசிப்பித்து எல்லோரையும் தந்யர்களாக்க வேண்டியிருக்க, அதைத் தெரிந்துகொள்ளாமல் உபேக்ஷை செய்து, வறிஞரிடம் பிச்சைக்கு நிற்பாரைப்போல் தத்வஜ்ஞாந கந்தமே யில்லாதவர்கள் வாயைப் பார்த்திருப்பது விவேகமுடையவர்கள் மனத்தில் எவ்வளவு சோகத்தை யுண்டாக்கு மென்பதை அறியவேண்டும்.

விரஸமாயும் அரஸமாயும் அல்ப ரஸமாயு மிருக்குமவைகளே எங்கும் பரவியிருக்கிற இக்காலத்தில், அத்யுத்க்ருஷ்ட அபவர்க்க ப்ரதாநமாயும், அதி

குணவத்தான சாந்திரஸ பரிதமாயும், ஸத்வகுண பூர்ணமாயுமிருக்கும் நம் ஸம்ப்ரதாயார்த்தங்களை லலிதமாகவும் மதுரமாகவும் உபந்யஸிக்கிற இப்பத்திரிகையை, ஆர்ய ஜனங்கள் கோடைகாலத்தில் மேகத்தைக் கண்ட மயில் போல் அத்யாதரத்துடன் பரிக்ரஹிக்க வேண்டியதே ஸ்வரூப ப்ராப்தமாகும். இதில் எழுதப்படும் தத்வார்த்தங்களைக் கவனித்து வந்தால் காலக்ரமேண புத்திக்குக் கொஞ்சம் வைசத்யம் ஏற்பட்டு மநஸ்ஸில் ஸத் ஸம்ஸ்காரம் பிறந்து ஸதாசாரமார்க்கத்தை அவலம்பிக்க நேரும். அஃதுடன் அவ்வ்யாஜத்தைக்கொண்டே ஸதாசார்ய கடாக்ஷமும் ஏற்பட்டு ஆத்மோஜ்ஜீவநம் ஸித்திக்க ஹேது உண்டாகும். இது அநேகருடைய அநுபவத்தை யொட்டியிருக்கும் என்பதை அவரவர்கள் கண்டுகொள்ளலாம். ஆகையால் தத்வ ஜிஜ்ஞாஸையுடையவரெல்லோரும் இப்பத்திரிகைக்குச் சந்தாதாரராகச் சேர்ந்து யதாசக்தி ஸஹாயம் செய்ய வேண்டுமென்பதே என்னுடைய ப்ரார்த்தனை.

இக்காலத்தில் யாராவது ஒரு கார்ய மாரம்பித்தால் அதற்குப் பலர் போட்டிபோல அம்மாதிரியே தாம் செய்யத் தொடங்கி, கடைசியில் ஒன்றும் நெடுக நடக்க வொட்டாமல் செய்வதை நாம் பார்க்கிறோம். அந்த ரீதியை அநுஸரித்துப் பலவிடங்களில் பத்திரிகைகள் ஆரம்பித்துக் கைவிடுவதில் ப்ரயோஜன மில்லை. வெகு காலமாக வ்யபதிஷ்டர்களுடைய ஆதரவைப் பூர்ணமாய் அடைந்துவரும் இத்தீபிகையையே நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தர்கள் அனைவரும் தங்கள் ஆதாரத்துக்குப் பாத்ரமாகக் கொண்டு, அது மேன்மேலும் வளர்ந்தோங்கும்படி முயற்சிக்க வேண்டியது அவசியமான கார்யமென்று கருதவேண்டியது உசிதமாகும்.

தீபிகா ப்ரகாசகர்களும் அப்போதைக்கப்போது இக்காலத்துக்கு அநுகுணமாக சாஸ்த்ரார்த்தங்களை ஸுலபமாகவும் ரஸ்யமாகவும் எடுத்துரைப்பதுடன், தத்காலத்தில் பாச்சாத்யவித்யா ரீதியாய் ஏற்படும் யுக்திகளுக்கு நம் ஸம்ப்ரதாயம் இசைந்திருக்கும் அம்சத்தையும், எல்லாவித ந்யாயமான ஸம்சயங்களுக்கும் இதில் ஸமாதாநம் ஏற்படும் ப்ரகாரத்தையும் வ்யக்தமாகக் காண்பித்து, ஆதுநிகர்களின் புத்தியை ஆவர்ஜநம் பண்ணவேண்டியதும் அவசியமாகும். இவ்விதமான மஹோபகாரங்கள் தீபிகை மூலமாய் நடைபெறவேண்டி யிருப்பதை நன்குணர்ந்து, எல்லோரும் இதன் அபிவிருத்தியில் நோக்கமுடையவர்களா யிருக்கவேணுமென்று பஹுச: ப்ரார்த்திக்கிறேன்.

தி. ஈ. சடகோபாசார்யர்.

கம்பர் மதம் ஸ்ரீவைஷ்ணவம்

[பந்தல்குடி: பாரத்வாஜ மாடபூசி: ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்]

i. அவதாரிகை

கல்வியிற் பெரியர் கம்பர். இவர் தமிழ்க் கவிச்சக்கிரவர்த்தி.

“ அம்பிலே சிலையை நாட்டி யமரர்க்கன் றமுத மீந்த
தம்பிரா னென்னத் தானுந் தமிழிலே தாலை நாட்டிக்
கம்பநா டுடைய வள்ளல் கவிச்சக்கி ரவர்த்தி பார்மேல்
நம்புபா மாலையாலே நரருக்கின் றமுத மீந்தான். ”

[முற்காலத்தில் திருமால் மந்தரமலையைக் கொண்டு திருப்பாற்கடலைக் கடைந்து விண்ணுலகத்தவரான தேவர்கட்கு அமிர்தத்தைக் கொடுத்தது போல, இக்காலத்தில் கம்பரும் தமது நாவினால் தமிழ்க்கடலைத் துழாவிக் கடைந்து ஸ்ரீராமசரித்திரமாகிய அமிருதத்தை மண்ணுலகத்தவரான மனிதர்கட்குத் தந்தருளினன்.]

இப்புலவர் பெருந்தகை தமது சமயம் இன்னதென வெளிப்படையாகத் தாம் கூறிப்போந்தாரில்லை. அவர் காலத்திருந்த பிறரும் அங்ஙனம் செய்யாதொழிந்தனர். எனவே, அவர் சரித்திரக் குறிப்பு எழுதுவோர்க்கு அவர் மதக் கோட்பாட்டை நிச்சயித்தல் சிரமமாயிற்று. கம்பர் கைக்கொண்ட மதத்தைப் பற்றிப் பல அபிப்ராய பேதங்கள் உள. சிலர் இவரைச் சைவர் என்றும், வேறு சிலர் வைணவர் என்றும், பிறர் இவர் அரியையும் அரனையும் ஒப்ப நோக்கும் சம நோக்கமுடையவரென்றும் கூறுவர். அவரவர் தம் கொள்கையை நிலைநாட்டச் சான்றுகளுடன் விவகரிப்பர். ‘காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண் ஆய்தல் அறிவுடையார் கண்ணது’ ஆதலின், இவரியற்றிய நூல்களினின்று மேற்கோள்கள் பல காட்டி இப்புலவர் பெருமான் மதம் ஸ்ரீவைஷ்ணவம்தான் என நிரூபிப்பதே இக்கட்டுரையின் நோக்கு. குறை கடிந்து குணமே கொள்க.

ii. கம்பர் இயற்றிய நூல்கள்.

கம்பர் செய்த நூல்கள் இராமாயணம், சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, திருக்கைவழக்கம், சரசுவதியந்தாதி முதலியன. இவற்றில் இராமாயணமே ஏனை நூல்களினும் பெரிது ; இது திருமாலின் திருவவதார

ங்களில் ஒன்றாகிய இராமாவதாரத்தைக் கூறும் இதிகாச சிரேஷ்டம்; சரணாகதி வேதம்; ‘சிறையிருந்தவ ளேற்றஞ் சொல்கிறது’ என ஸ்ரீவைஷ்ணவ ஆசாரியர்களால் சிறப்பித்துக் கொண்டாடப்படுவது.

கம்பர் அவை யடக்கப் பிரதமச் செய்யுள் :

“ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவு நக்குபு புக்கென
ஆசை பற்றி யறைய லுற்றேன்மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ”

என்பது. இதில் உபமானத்தில், க்ஷீராப்தி செல்லும் பூசையைக் கூறிப் பின் ‘குற்றமில்லாத வெற்றியை யுடையவனும் சத்ய பராக்ரமம் விஷ்ணு பராக்ரமம் உடையவனுமான ஸ்ரீராமன் சரித்திரத்தைப் பக்தியால் கூறத்தொடங்கினேன்’ என்று சொல்வது இவர் வைஷ்ணவ பாகவதர் என்பதைக் காட்டுகின்றது ; மேலும் பிரபன்ன ஜன கூடஸ்தரான நம்மாழ்வாரைக் குறித்து அந்தாதித் தொடையில் சடகோபரந்தாதி என்ற பரம வைஷ்ணவ கிரந்தத்தைச் சாற்றியுள்ளார். இன்றும் ஆழ்வார் திருநகரி கோயில் முதலிய திருப்பதிகளில் இவ்வந்தாதி உற்சவ காலங்களில் சேவிக்கப்படுகின்றன.

iii. இராமாயண நூன்முகம்.

தாம் தொடங்கிய இராம சரித்திரம் இனிது நிறைவேறும் பொருட்டுக் கம்பர் காப்புச் செய்யுட்களாக மூன்று பாசுரங்கள் நூன்முகத்தில் செய்துள்ளார். அவற்றுள் முதலாவது : நம்மாழ்வார் துதி.

“தருகை நீண்ட தயரதன் றான்றரும்
இருகை வேழத் திராகவன் றன்கதை
திருகை வேலைத் தரைமிசைச் செப்பிடக்
குருகை நாதன் குரைகழல் காப்பதே.”

இராமனைச் ‘சக்கிரவர்த்தித் திருமகன்’ என்று கொண்டாடுவது வைஷ்ணவ சம்பிரதாயம். அதற்கேற்ப, ‘தருகை நீண்ட தயரதன் றான்றரும் இராகவன்’ என்கிறார். மேலும் தாம் எடுத்துக்கொண்ட பெருங்காரியம் நன்கு முடிவதற்காக வைணவ மரபின்படி விஷ்வக்ஸேநாராதன ரூபமாக அவரது அம்சமான நம்மாழ்வாரை முதலில் வணங்குகிறார் கவி. பகவானையே புதல்வராகப் பெற்று நமக்குத் தந்தவ ராதலின், தசரதன் கொடைத்திறத்தை முதன் முதல் வியந்து கூறுகிறார். தந்தையினும் பதின்மடங்கு தனயன் என்னுங் கணக்கிலே, தயரதன் தந்த இராமன் என்றது ‘இராகவன்’ என்பது இரகுவின் வம்சத் துதித்த அனைவர்க்கும் இப்பெயர் பொருந்து மெனின், இவனே அப்பெயர் புனைதற்கு உரியவன் என்பதைக் காட்டுகிறார். கொடைத்திறத்திலும், இராக்ஷஸப்பூண்டைக் களைந்ததிலும் ஏற்ற மடைந்தான் ரகு.

‘புற்பா முதலாப் புல்லெறும்பாதி ஒன்றின்றியே, நற்பா லயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும் நற்பாலுக் குய்த்தனன்’, ‘நீடிய அரக்கர்சேனை நீறு பட்டழிய வாகை சூடினான்’ என்பவற்றால் இதனுண்மை இராகவனிடத்துள்ளதை அறியலாகும். ‘இருகை வேழத்து’ என்ற அடைமொழி ஆராய்தற்குரியது. உலகில் காணப்படும் வேழம் போலன்றி இராமன், இரண்டு துதிக்கைகளையுடைய யானையையொத்தவன் எனக் குறிப்பிட்டது ஒரு தத்துவத்தை உணர்த்தற்கே. இராமனது அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹத்தை இது நன்கு புலப்படுத்துகின்றது. இதுவே அவதார ரகஸ்யம். மேலும் முன்பு ஒரு வேழமே எம்பெருமான் பரத்வத்தை நிரூபித்தது. அஃதன்றி வேழ உபமானம் வேறொரு ஆழ்ந்த கருத்தையும் உடைத்து. ஆறு குணங்களோடு கூடியுள்ள பகவானுக்கு ஆறு விதங்களில் யானையை உவமை கூறலாம். யானையை ஒரு நாள் கண்டோ மென்று திருப்தியாயிருக்க வொண்ணாதபடி தினந்தோறும் காணவேண்டு மென்னும் அவா உண்டாகின்றது. எம்பெருமான் ‘ஆராவமுதன்’ என்ற திருநாமத்துக் கிலக்காய் அனுதினமும் காணத்தக்க வடிவழகோடு கூடியுள்ளான். “அணிகொள் செந்தாமரைக் கண்ணன் செங்கனிவாய்க் கருமாணிக்கம்” என்பது திருவாய்மொழி. கஜம் மிக்க செருக்குடையது. பகவான் எப்பொருட்கும் இறைவனாயிருக்கும் தன்மை தோன்ற ஏழுலகும் தனிக்கோ லோச்சும் வானிளவரசாய்க் கொண்டிருக்கின்றான். வேழம் கைக்கெட்டினாரை நினைத்தபோது எடுத்துக் கழுத்திலே வைத்துக்கொள்ளும். இறைவன், நித்ய சம்சாரி தன்னைச் சரணமடைந்ததே காரணமாக அவனை ஏற்றுச் சிரசா வகிப்பன். கரி தன் மீது ஏற நினைப்பார்க்குப் பணிந்து கொடுக்கும். அமரர்கட் கதிபதி தன்னை அடைய விரும்பினோர்க்குத் தன்னையே கொடுக்கின்றான். பகடு உதவாதாரை ஆராயாது கிழித்துப்போடும், ஸ்வாமி பாகவத விரோதிகளை முன் பின் பாராமல் நிரஸனஞ் செய்வன். களிறு தன்னைக் கட்டுமாறு தானே கயிற்றை எடுத்துக் கொடுக்கும், பரமபத நாதன் தன்னைக் கட்டுப்படுத்துமாறு பக்தியைத் தானே தருகின்ற ருசிஜநகத்வம் உடையவன். ‘குருகை நாதன்’ என்றது திருக்குருகூரில் திருவவதரித்த தலைவராய நம்மாழ்வாரைக் குறிக்கும்; அவர் திருக்குருகூருக்கு நிர்வாஹனான சடாரி என்பதும் விளக்கம். அன்னார் திருவடியே எம்மைக் காக்கவல்லது என்று சரமோபாயமான சரணாகதியில் இழிகிறார் கம்பர். தாயின் அவயவங்கள் அனைத்துமிருக்க, குழவி தனக்குத் தாரகமான முலையில் வாய்வைப்பது போல, இவரும் தமக்குத் தாரகமான திருவடிகளில் கண்வைக்கிறார். இத்துதி சடகோபரந்தாதியின் ஸங்க்ரஹம் என்னலாம். இரண்டாவது : அனுமான் துதி.

“அஞ்சிலே யொன்று பெற்றா னஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்றா றாக வாரியற் காக வேகி

அஞ்சிலே யொன்று பெற்ற வணங்கைக்கண் டயலா ரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தா னவனெம்மை யளித்துக் காப்பான்."

ஆஞ்சனேயரை ஸ்ரீவைஷ்ணவர்கள் 'சிறிய திருவடி' எனக் கொண்டாடுகின்றனர். மாருதியின்றேல் இராமாயண மில்லை. இவரைப்பற்றிக் கூறுவதே சுந்தரகாண்டம். சீதாராமர்களுக்கு அந்தரங்கதூதர் அனுமார். இவர் தூது சென்ற விஷயம் மிக உள்ளுறையுடையது. அர்த்த பஞ்சகமே ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தின் அடிப்படை. இப்பாசுரம் இதனை நன்கு பிரதிபாதிக்கிறது. சுந்தரகாண்டத்தின் சங்கிரகச் செய்யுளே இது. இப்பாசுரத்தின் ஸ்வாபதேசம் முழுமையும் விசிட்டாத்வைதக் கொள்கையே யாகும். இன்னொ ரமயம் இதனைத் தனித்து ஆராய்வோம்.

மூன்றாவது: கலைமகள் துதி. இது இவரியற்றிய சரசுவதியந்தாதி என்ற பிரபந்தத்தின் ஸங்க்ரஹம் என்னலாம். நாமடந்தை நாரணனின் மருமகள்.

நம்மாழ்வாரைக் கூறியதால், பரமாசாரியனான பரமபத நாதன் வரையுங் கொண்டு எம்பெருமானை முதற்பட வாழ்த்தியதாகவும், ஸ்ரீவைஷ்ணவ அக்ரேஸரராக நூல்களில் கூறப்படும் ஈசுவரனைப் பிரதிபாதிப்பது ஆஞ்சனேயர் துதி என்றும், பகவானின் ஜேஷ்ட குமாரரின் மனைவியான கலைமகளைக் கூறியதால் பிரமனைக் குறித்ததாகவும் கொள்ளல் ஆன்றோர் முறை.

"நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும்
தான்முகமாய்ச் சங்கரனைத்தான் படைத்தான்—"

என்ற திருமழிசைப்பிரான் நான்முகன் திருவந்தாதியைப் பின்பற்றிக் கம்பர் தம் மிராமாயண நூன்முகம் செய்தார் என்பது மிகையாகாது.

iv. கடவுள் வாழத்து.

வான்மீகி ராமாயணத்தைப் பின்பற்றியே கம்பர் இராமசரிதம் இயற்றியது. அந்த ராமாயண ஸங்க்ஷேபம் நாரத பகவான் வான்மீகருக்குச் செய்த உபதேசம். கம்பரும் திருவட்டாக்ஷரத்தின் எண்ணிக்கைக் கேற்ப எட்டுக் கவிகளைச் செய்துள்ளார். இதை ஒருங்கு சேர்த்து நன்கு ஆராயின், கம்பர் மதம் வைணவமே என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். பாலகாண்டத்தில் தற்சிறப்புப் பாயிரத்தில்,

"உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலு நீங்கலா
அலகிலா விளையாட் டுடையா ரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே."

"சிற்கு ணத்தர் தெரிவரு நன்னிலை
யெற்கு ணர்த்தரி தெண்ணிய மூன்றனுள்
முற்கு ணத்தவ ரேமுத லோரவர்
நற்கு ணக்கட லாடுதல் நன்றரோ."
"ஆதி யந்த மரீஇயென யாவையும்
ஓதி னாரல கில்லன வுள்ளன
வேத மென்பன மெய்ந்நெறி நன்மையன்
பாத மல்லது பற்றிலர் பற்றிலார்."

என்ற இம்மூன்று கவிகளால் இப்பெருங் காப்பியத்திற்கு ஈடு மெடுப்புமிலீசனான உத்தம நாயகன் ஸ்ரீராமபிரான் ஸ்வரூப உபாய புருஷார்த்தங்களால் அறியப்படும் பரவஸ்து என்கிறார். அயோத்தியா காண்டத்தில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியே ஸர்வேசுவரன் என்று "வானின் றிழிந்து வரம் பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும்" என்ற பாசுர முகத்தாற் பேசி, ஆரணிய காண்டத்தில் "பேதியாது நிமிர்பேத வுருவம் பிறழ்கிலா" என்ற கவியால் அப்பிரான் மறை முதலிய நூல்களாலும் பிரமன் முதலிய அறிஞராலும் உணர்தற்கரிய வித்தகன் என்கிறார். கிஷ்கிந்தா காண்டத்தில், "மூன்றுரு வெனக் குண மும்மையா முதல்" என்ற கவியால் இக்காப்பியத் தலைவனான பெருமான் சகல அண்ட சராசரங்களையும் தனக்குச் சரீரமாகக் கொண்டவனென்று கூறி, விப்பிரலம்ப சிருங்காரம் ததும்பப் பெற்ற சுந்தரகாண்டத்தில் "அலங்கலிற் றோன்றும் பொய்ம்மை யரவெனப் பூதமைந்தும்" என்ற செய்யுளால் வஸ்து நிர்த்தேச ரூப மங்கள முகத்தாலே பரம்பொருளே ஸ்ரீராமனாகத் திருவவதரித்து இராவணாதி ராக்ஷஸ ஸம்ஹாரம் செய்தவனென்கிறார். கடையான உயுத்தகாண்டத்தில், "ஒன்றே யென்னி னொன்றேயாம் பலவென் றுரைக்கிற் பலவேயாம்" என்ற கவியால், 'ஆஸ்திக ரக்ஷணம் செய்த எம்பெருமான் நம்மைக் காப்பார்; அவனைப் பற்றிய நமக்கு அவன் இறுதியில் அந்தமில் பேரின்ப வீட்டை யளித்து ரக்ஷிப்பான்' என்று கடவுள் வாழ்த்தை முடித்துத் தலைக் கட்டுகிறார்.

v. திருமாலின் விவரணம்.

பாலகாண்டம் ஆற்றுப்படலத் துவக்கத்திலேயே 'மேகங்கள் சிவனைப் போலப் போய்த் திருமாலைப்போலத் திரும்பின' என்கிறார். அக்கவி வருமாறு:

"நீற ணிந்த கடவு ணிறத்தவான்
ஆற ணிந்துசென் றார்கலி மேய்ந்தகிற்
சேற ணிந்தமு லைத்திரு மங்கைதன்
வீற ணிந்தவன் மேனியின் மீண்டவே."

'திருமங்கை தன் வீறணிந்தவன்' என்பது புருஷகார பூதையான லக்ஷ்மிக்கு நாதன் ஸ்ரீமந் நாராயணன் என்ற நம் ஸித்தாந்த ரகஸ்யத்தைச் செவ்வனே காட்டுகின்றது.

துக்கசாகரத்தில் மூழ்கிக்கிடந்த தேவர்களின் துயர் தீர்க்கப் பரமபதநாதன் ஆகாய வீதியில் ஸேவை ஸாதித்ததைக் கம்பர்,

" கருமுகி லுமரைக் காடு பூத்துநீ
டிருசுட ரிருபுறத் தேந்தி யேடவிழ்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினன்."

என்கிறார். கோசலை இராமனைப் பயந்ததை,

" ஒருபக லுலகெலா முதரத் துட்பொதிந்
தருமறைக் குணர்வரு மவனை யஞ்சனக்
கருமுகிற் கொழுந்தெழில் காட்டுஞ் சோதியைத்
திருவுறப் பயந்தன ளிறங்கொள் கோசலை."

எனக் குறிக்கிறார். கோசலையின் புதல்வர்க்கு 'இராமன்' என வசிட்டன் நாமகரணம் செய்யுங்காலை,

" கராமலை யத்தளர் கைக்கரி யெய்த்தே
அராவணை யிற்றுயில் வோயென வந்நாள்
விராவிய ளித்தருள் மெய்ப்பொரு ளுக்கே
இராமனெ னப்பெய ரீய்ந்தன னன்றே."

என்று கஜேந்திரமோக்ஷ விவரணம் நன்கு ஆளப்பட்டிருக்கின்றது.

["போரானை பொய்கைவாய்"; "மொய்ம்மாம் பூம் பொழில்"; "மீனமர் பொய்கை"; "கடிகொள் பூம்பொழில்"; "தொட ரெடுத்த மால்யானை"; "நால்திசை நடுங்க" என்ற பிரபந்தப் பாசுரங்கள் இங்கு அநுஸந்தேயம்.]

கடிமணப் படலத்தில், ஆதியஞ் சோதியுருவை அங்குவைத் திங்குப் பிறந்த ஸ்ரீராமபிரானுக்குச் செய்த அலங்காரத்தைப் புகழ்ந்துரைக்க லாகா தென்ற கவிக்கூற்றை நன்கு நோக்குக. அது பின்வருமாறு:—

" முப்பரம் பொருளிற்குண் முதலை மூலத்தை
இப்பரந் துடைத்தவ ரெய்து மின்பத்தை
அப்பனை யப்பனு ளமிர்தந் தன்னையே
ஒப்பனை யொப்பனை யுரைக்க வொண்ணுமோ."

இப் பாசுரத்துக்கு உரை வைணவ சம்பிரதாயம் வல்லார்வாய்க் கேட்டு உணர்க. இப்பாட்டால் இவர் மதத்தில் ஐயம் கொள்ள இயலாது.

vi. சில அசாதாரணச் சின்னக் குறிப்புகள்.

ஸ்ரீவான்மீகி முனிவர் ஸ்ரீராமன் முதலியோரைப் பற்றி வருணிக்கையில், நெற்றியில் இன்னவாறு தரித்திருந்தா ரென்று எங்கும் ஒன்றுங்கூறாதிருக்க, கம்பர் கடிமணப் படலத்தில் இராமபிரான் திருமஞ்சனம் கண்டருளினர் என்பதை,

" சங்கினந் தவழ்கட லேழிற் றந்தன
சிங்கலி லருமறை தெரிந்த தீர்த்தங்கள்
கங்கையே முதலிய கலந்த நீரினால்
மங்கல மஞ்சன மரபி னாடியே."

என்று கூறி, உடனே திருமண்காப்பு தரித்தா ரென்று அடுத்த கவியான

" என்றுநான் முகன்முதல் யாரும் யாவையும்
நின்றபே ரிருளினை நீக்கி நீணெறி
சென்றமீ ளாக்குறி சேரச் சேர்ந்திடு
தன்றிரு நாமத்தைத் தானுஞ் சாத்தியே."

என்பதில் வருணிக்கிறார். அன்றியும்,

" அய்யனு மமைந்துநின் றூழியா னளவி னாம
நெய்சுடர் விளக்கிற் றோன்று நெற்றியே நெற்றி யாக
மொய்ம்மயிர்ச் சேனை பொங்க முரணயி லுதிர்வாண் மொய்த்த
கைகளே கைக ளாகக் கடைக்கூழை திருவா லாக."

என்று சுந்தரகாண்டம் சம்புமாலிவதைப் படலத்து வருவதுங் காண்க.

vii. திவ்ய தேசங்களில் ஈடுபாடு.

இக்ஷ்வாகுவைக் கொண்டாடக் கம்பநாடர் குலமுறைகிளத்துப் படலத்தில்,

" பிணியரங்க வினையகலப் பெருங்காலந் தவம்பேணி
மணியரங்க நெடுமுடியாய் மலரயனை வழிபட்டுப்
பணியரங்கப் பெரும்பாயற் பரஞ்சுடரை யாங்காண
அணியரங்கந் தந்தானை யறியாதா ரறியாதார்."

என விசேடித்துக் கூறியுள்ளார்.

அயோத்தியா நகரத்தை வருணிக்க ஆரம்பித்த கம்பர்,

" நிலமகண் முகமோ திலகமோ கண்ணோ
நிறைநெடு மங்கல நாணோ
இலகுபூண் முலைமே லாரமோ வுயிரி
னிருக்கையோ திருமகட் கினிய

மலர்கொலோ மாயோன் மார்பினன் மணிகள்
வைத்தபொற் பெட்டியோ வானோர்
உலகின்மே லுலகோ வூழியி னிறுதி
யுறையுளோ யாதென வுரைப்பாம்."

என்று தம் அனுபவத்தை வெளியிடுகிறார்.

கிட்கிந்தாகாண்டம் நாடவிட்ட படலம்,

" இருவினையு மிடைவிடா வெவ்வினையு மியற்றாதே
யிமையோ ரேத்தும்
திருவினையு மிடிபதஞ்சேர் சிறுமையையு முறையொப்பத்
தெளிந்து நோக்கிக்
கருவினைய திப்பிறவிக் கென்றுணர்ந்தங் கதுகளையுங்
கடையின் ஞானத்
தருவினையின் பெரும்பகைஞ ராண்டுளரீண் டிருந்துமடி
வணங்கற் பாலார்."

என்ற செய்யுளில் வேங்கடத்து ஞானியரைப் புகழ்கின்றார் கவிச்சக்ரவர்த்தியாய கம்பர்.

viii. கற்பனைக் களஞ்சியம்.

வான்மீகத்தை முதனூலாகவே அங்கீகரித்துப் போகிற கம்பர் அனேக இடங்களில் மாறுபடுகிறார். அங்ஙனம் விலகும்போ தெல்லாம் அவர் கற்பனைகளால் நூதன சிருட்டிகள் ஆக்குவித்துத் தம் அபிமதத்தை வெளியிடுகிறார். தேவசரணாகதி விருத்தாந்தத்தைக் கூறுமிடத்து, முதலில் தேவர்கள் நீலகண்டனிடம் சென்றதாயும், அவரால் முடியாதென்று தெரிந்து நான்முகனிடம் அவருடன் போனதாகவும் கவி கூறுகிறார். அச் செய்யுட்கள் ஈண்டு தருதும்.

" சுடுதொழி லரக்கராற் றொலைந்து வானுளோர்
கடுவமர் களனடி கலந்து கூறலும்
படுபொரு ளுணர்ந்தவப் பரமன் யாமினி
அடுவதில் லெனமறுத் தவரொ டேகினான்."

" வடவரைக் குடுமியி னடுவண் மாசறு
சுடர்மணி மண்டபந் துன்னி நான்முகக்
கடவுளை யடிதொழு தமர கண்டகர்
இடிநிகர் வினையம தியம்பின னரோ."

ஈசுவரனும் பிரமனும் உணர்ந்தவர்க்குப் பரகதி உதவி பண்ணின ஸ்ரீமந் நாராயணன் திருவடி தொழுதனர் என்பதைக் கீழ்ப் பாசுரம் தெரிவிக்கின்றது.

" எழுந்தனர் கரைமிடற் றிறையுந் தாமரைச்
செழுந்தவி சுகந்தவத் தேவுஞ் சென்றெதிர்
விழுந்தன ரடிமிசை விண்ணு ளோரொடும்
தொழுந்தொறுந் தொழுந்தொறுங் களிது ளங்குவார்."

அகலிகை சாபவிமோசனத்தைச் செய்தது காகுத்தன் கழல்துகள் என்பது கம்பர் முடிபு.

" கண்ட கன்மிசைக் காகுத்தன் கழற்றுகள் கதுவ
உண்ட பேதைமை மயக்கற வேறுபட் டுருவம்
கொண்டு மெய்யுணர் பவன்கழல் கூடிய தொப்பப்
பண்டை வண்ணமாய் நின்றனள் மாமுனி பணிப்பான்."

[வேறுபட் டுருவங் கோடல்—திவ்ய தேஹிகளான நித்ய சூரிகளாதல். அவன் - ஸ்ரீமந் நாராயணன்.]

கம்பர் களித்த கடிமணம் (சீதா விவாஹம்) அதி அற்புதமானது. இங்கும் தம் சித்தாந்தத்தை வெளிப்படுத்துகிறார் கவி.

" எண்ணரு நலத்தினா ளினையள் நின்றுழி
கண்ணொடு கண்ணினை கவ்வி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெறா துணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினா னவளு நோக்கினாள்."

" மருங்கிலா நங்கையும் வசையி லையனும்
ஒருங்கிய விரண்டுடற் குயிரொன் றாயினார்
கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினாற் பேசல் வேண்டுமோ."

வான்மீகத்தில் இராம விரகத்தால் உயிர் நீத்த தயாதன் சுவர்க்கம் சென்றதாகக் கூறப்பட்டுள்ளது. கம்பர் அன்னான் வைகுந்தம் அடைந்ததாக,

" இந்திரன் முதல்வராய கடவுளர் யாரு மீண்டிச்
சந்திர னனையதாங்கோர் மானத்தின் றலையிற் றாங்கி
வந்தன னெந்தைதந்தை யெனமனங் களித்து வள்ளல்
உந்தியா னுலகினும்பர் மீள்கிலா வுலகத் துய்த்தார்"

என்ற கவியால் விளக்குகிறார். [மீள்கிலாவுலக மென்றது—ஒளிரும் பரம பதம்]

சரபங்கர் தாம் பரமபதம் செல்வதாக இந்திரனிடம் கூறுவதைக் கவி,

" சிறுகா லையிலா நிலையோ திரியா
குறுகா நெடுகா குணம்வே றுபடா

உறுகால் கிளர்பூ தமெலா முகினும்
மறுகா நெறியெய் துவென்வா னிடையாய்."

எனச் சிறப்பிக்கிறார்.

இராவணன் சீதையைத் தரையுடனே பெயர்த்தெடுத்ததாகக் கூறுகிறார். அச்செய்யுள் வருமாறு.

"ஆண்டா யிடைதீ யவனு யிழையைத்
தீண்டா லெனுமே லுரைசிந் தைசெயாத்
தூண்டா னெனலா முயர்தோள் வலியாற்
கீண்டா னிலம்யோ சனைகீ ழொடுமேல்".

இரணியன்வதைப் படலம் என்பது கம்பரின் புதிய சிருட்டி. இது வான்மீகத்திற் கிடையாது. எம்பெருமான் கருணைக்குப் பூர்ண பாத்திரரான கம்பர், வைணவ பக்தசிகாமணியாகிய பிரகலாதாழ்வான் சரித்திரத்தை நூற்றெழுபத்தாறு செவிக்கினிய செஞ்சொற் கவிகளால் விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை நன்கு உணர்த்தி, பக்திரசம் முற்றும்படி பாடியுள்ளார். அப்படலத்து இறுதிச் செய்யு ளிது.

"ஈதாகு முன்னிகழ்ந்த தெம்பெருமா னென்மாற்றம்
யாதானு மாக நினையா திகழ்தியேல்
தீதாய் விளைதனனி திண்ணமெனச் செப்பினான்
மேதாவி கட்கெல்லா மேலாய மேன்மையான்."

ix. இராமாயண அரங்கேற்றம்.

கம்பராமாயணம் திருவரங்கத்திலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் கூடிய சபையில் மேட்டழகிய சிம்பர் சிரக்கம்பஞ் செய்யுமாறு அரங்கேற்றப்பட்டதென்பது ஆன்றோர் கொள்கை. ஆழ்வார் என்ற பட்டம் அப்போது ஸ்ரீமந்நாத முனிகளால் நம் கவிக்குச் சாத்தப்பட்டது என்பது கர்ண பரம்பரை வரலாறு.

"எண்ணிய சகாத்தமெண் ணூற் றேழின்மேற் சடையன்வாழ்வு
கண்ணிய வெண்ணெய்நல் லூர் தன்னிலே கம்பநாடன்
பண்ணிய விராமகாதை பங்குனி யுத்தரத்திற்
கண்ணிய வரங்கர்முன்னே கவியரங் கேற்றினானே."

"தராதலத்தி னுள்ள தமிழ்க்குற்ற மெல்லாம்
அராவு மரமாயிற் றன்றே—யிராவணன்மே
லம்புநாட் டாழ்வா னடிபணியு மாதித்தன்
கம்பநாட் டாழ்வான் கவி."

என்ற தனிப்பாடல்களே இதற்குச் சான்று.

x. வைணவர்கள் போற்றுதல்.

ஸ்ரீரங்கத்திலும் திருவழுந்தூரிலும் அமைந்த பெருமாள் கோயில்களிலேயே கம்பர் சிலை இருக்கின்றது. இயற்பா பெரியதிருமடல் முடிவுக்குப் பின்னுள்ள,

"என்னிலைமை யெல்லாம் அறிவித்தா லெம்பெருமான்
தன்னருளு மாகமும் தாரானேல்—பின்னைப்போய்
ஒண்டுறைநீர் வேலை யுலகறிய வூர்வன்நான்
வண்டறை பூம்பெண்ணை மடல்."

என்ற பாசுரம் கம்பர் பாடிய தென்பர்.

நாட்டரசன் கோட்டையில் வைஷ்ணவ சம்பிரதாயப்படி கம்பரைச் சமாதி செய்திருக்கின்றனர். கம்பராமாயணம் ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களாகிய பெரியவாச்சான் பிள்ளையாலும், நம்பிள்ளையின் உபன்னியாசத்தைப் பட்டோலை கொண்டருளிய வடக்குத்திருவீதிப் பிள்ளையாலும் நன்கு ஆதரிக்கப்பெற்று, நாலாயிர திவ்யப் பிரபந்த வியாக்யானங்களில் மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கின்றது. அதனை ஆங்காங்கு கண்டு கொள்க. விரிக்கிற் பெருகும்.

xi. முடிவு

இதுகாறும் கூறியவாற்றால் கம்பர் மதம் வைஷ்ணவமே யென்பதும், அவரைப் பாராட்டல் நம்மவர் கடன் என்பதும், அவர் இயற்றியருளிய இராமாயணம், சடகோபரந்தாதி, சரசுவதியந்தாதி முதலியவற்றைத் தக்க முறையில் பிரசாரஞ் செய்வதே அவர்க்குரிய கைம்மாறென்பதும் நன்கு தெளியக் கிடக்கின்றன.

"நன்மையுஞ் செல்வமு நாளு நல்குமே
தின்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே
சென்மமு மரணமு மின்றித் தீருமே
யிம்மையே ராமவென் றிரண்டெழுத் தினால்."

ஸ்ரீவரதராஜ பஞ்சாசத்

[ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்யர், அட்வொகேட், திருச்சி]

உஜ்ஷிஉாதுமணநெ கிமிஹாஷி ஶக்யம்
ஶக்யெந வா தவ கரீஶ கிமஷி ஸாயும் ।
யதஷி ஸாயய மயா தஷி ஸயாவா
கிம் வா ஹவெஜுவதி கிஂவி உநீஹமாநெ ॥

मद्भक्तिमात्रगणने किमिहास्ति शक्यं
शक्येन वा तव करीश किमस्ति साध्यं ।
यद्यस्ति साध्य मया तदपि त्वया वा
किं वा भवेद्भवति किंचिदनीहमाने ॥

இங்கே சங்கைகள் பலவிதமாக உண்டாகின்றன. ‘எனக்கு மதியையும் ஸரஸ்வதியையும் கொடும்; நான் உம்மை ஸத்யமாகவும் வேகமாகவும் ச்லாகநீயமுமான ஸ்தோத்ர பதங்களால் ஸந்தோஷப்படுத்துகிறேன்’ என்று முன் ச்லோகத்தின் பிற்பாதியில் சொன்னீர். இந்த ஸ்தோத்ரமென்னும் க்ருதியில் இருவரும் கூட்டாளிகளாகச் சேர்ந்து இதைச் செய்துமுடிப்பதாக உம்முடைய தாத்பர்யம்போலும். கூட்டு வ்யாபாரம், கூட்டுச் செய்கை, ஆகிய இவைகளை இருவிதமாய்க் கண்டிருக்கிறோம். எவ்விதமெனில்: இருவரும் பேருக்குக் கொஞ்சம் முதல் போடுவார்கள்; அவரவர் முதலுக்குத் தக்கபடி லாபத்திலும் பங்கு எடுத்துக்கொள்வார்கள். ஒருவர் முதலேபோடாமல் கஷ்டம் மட்டும் படுவது; அந்தக் கஷ்டத்திற்காக லாபத்தில் அவருக்குப் பங்கு கொடுப்பார்கள். மற்றொருவர் முதல் முழுவதையும் கொடுத்துத் தாம் கஷ்டப்படாமல், முதல் கொடுத்ததற்காக லாபத்தில் பங்கு பேசிக்கொள்வார்கள். இவ்வகைகளில் இது என்ன விதமான கூட்டு? முதலில் உமது பங்கு எத்தனை என்று எண்ணுவீரா? (கணநம் செய்வீரா?) கஷ்டம் (ப்ரயாஸம்) உம்முடையதா? முழுவதுமா? அல்லது ஏகதேசமா? எத்தனை பாகமென்று எண்ணுவீர்? நம்மையும் ஒரு கூட்டாளியென்று ஒப்புக்கொள்ளுகிறீரே. எனக்கென்ன இதில் லாபம் (ஸாத்யம்)? இருவர் கூட்டுச் சேர்வதற்கு ஒவ்வொருவருக்கும் லாபத்தில் பங்கு இருக்கவேணும்; ஒவ்வொருவரும் முதலாவது கொடுக்கவேணும்; அல்லது கஷ்டமாவது படவேணும். இந்தக் கூட்டில் எப்படி ஏற்பாடு?

த்ருவனுக்குப்போல உமக்கும் ஸ்தோத்ர சக்தி கொடுக்கவேண்டும் என்றீர். நீர் அவரைப்போலச் சிசுவல்லவே. அவர் ஐந்து வயதுக் குழந்தை. அவருக்கு ஜாயமாந தசையிலே சக்தி கொடுக்கப்பட்டிருந்த போதிலும், அந்தச் சக்தி சைசவத்தில் ப்ரபுத்த மாகாமல் தூங்கிக்கொண்டு கிடந்தது. அது கார்யகரம் ஆவதற்கில்லை. அவரும் ஸ்தோத்ராரம்பத்தில்,

‘யொஉஷ: வுவிஶ்ய உஉ வாஅஷிஉாம் வுஸுவூாம்’

என்று தம்முடைய வாக்கு அடியோடு தூங்கியிருந்த தென்றார். ‘வுஸுவஷிவ ஸவ.ஜுத:’ என்று ப்ரளயாவஸ்தையைச் சொல்லுவர். ப்ரளயத்தில் போல நீர் வ்யாபகமாயும் நிச்சேஷ்டமாயும் ப்ரலீநமாயும் இருந்ததாக அவர் தாத்பர்யம்.

‘ஶக்திஜீவுணதாஜொக.....காவ்யாஉஷ்வெக்ஷணாகீ ।
காவ்ஜு ஶிக்ஷயா ஹ்யாஸ: உதிஹெதுஸஉஷவெ ॥’

என்று காவ்ய ரசனைக்காகக் கவிக்கு வேண்டிய ஸாமக்ரி யெல்லாம் முன்பே உமக்கு ஸித்தமாயிற்றே. சக்தி யென்பது நான் (ஈச்வரன்) கொடுக்கும் கவிதா சக்தி தானே. அதை முன்பே நான் கொடுத்தாயிற்றே. சிசுவான த்ருவனுக்குப்போல அந்தச் சக்தி உம்மிடம் ப்ரஸுப்த மல்லவே. ஏற்கெனவே அது அபிவ்யக்தமாகி உமக்கு ப்ரபுத்தம்தானே. இந்தக் கவிதா ஸாமக்ரியைக்கொண்டு முன்பே எத்தனையோ ஸ்தோத்ரங்களும் காவ்யங்களும் செய்திருக்கிறீரே. அந்தச் சக்தியைக்கொண்டு நிர்மாணம் செய்யுமே. மறுபடியும் அர்த்தங்களையும் வாக்கையும் யாசிப்பானேன்?

இந்த ஸ்தோத்ரம் செய்வது என்னும் க்ரியையில் யாருக்குக் கர்த்ருத்வம்? உமக்கா? எமக்கா? உமக்குக் கர்த்ருத்வமும் எமக்குக் காரயித்ருத்வமா? உலகத்தில் காரயித்ருத்வம் இருப்பதில் கர்த்தா ஒருவரை த்வாரமாகக் கொண்டு காரயிதா நடத்திவைப்பர். அங்கே த்வாரமான கர்த்தாவுக்கும் கர்த்ருத்வம் உண்டு. அதுபோல உமக்கு இங்கே கர்த்ருத்வமா? எனக்குக் காரயித்ருத்வம் மட்டுமா? அல்லது எனக்குக் காரயித்ருத்வம் இருப்பதோடு கர்த்ருத்வமும் உண்டா?

ப்ரயோஜநத்தை உத்தேசிக்காமல் மதிகேடன்கூட ப்ரவ்ருத்திக்க மாட்டான் என்பரே. இந்த ஸ்தோத்ரச் செய்கையில் சேர்வதில் எனக்கு என்ன ப்ரயோஜநம் உளது? நான் ஆப்தகாமனல்லவோ? ‘ஆப்தகாமஸ்ய காஸ்ப்ருஹா?’ எனும் மாண்டூக்யோபநிஷத் வாக்யம் நீர் கேட்டதுதானே. எனக்குப் புதிதாக அடையவேண்டிய ஸ்வப்ரயோஜநம் என்ன உளது? நான் ஏன் இதில் இறங்கவேண்டும்?

இப்படிப் பல சங்கைகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் முதலிலே தெளிவாகத் தீர்மானித்து வ்யவஸ்தை செய்துகொண்டுதானே ஒரு கூட்டு வ்யாபாரத்தில் இறங்கவேணும். இந்தக் கேள்விகளுக்கெல்லாம் ஸமாதானம் அருளிச்செய்கிறார்.

உத்க்ஷிதாத்ர மணமே கிமிஹ நாஸ்தி ஸாக்ஷ்யம்--இங்கு ‘மாத்ர’ எனும் பதத்தின் (‘முழுவதும்’ ‘மட்டும்’ என்னும்) இரண்டு பொருள்களையும் இரண்டு யோஜனைகளில் கொள்ளவேண்டுமென்று ஸ்ரீகரூர் ஸ்வாமி வெகு அழகாகக் காட்டியிருக்கிறார். ப்ரஹ்ம ஸூத்ரத்தில் ‘மாயாமாத்ரம் து’ என்கிற ஸூத்ரத்தில் ‘மாத்ரம்’ எனும் சப்தம் ‘முழுவதும்’ என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறதென்று ஸ்ரீபாஷ்ய ச்ருதப்ரகாசிகைகளுக்குத் தாத்பர்யமென்று பாவப்ரகாசிகையில் அழகாகக் காட்டப்பட்டது. ‘ஸ்வப்ந ஸ்ருஷ்டி முழுவதும் ஆச்சர்யம்; அதில் ஆச்சர்யமில்லாத பாகமே இல்லை; ஆகையால் அது பகவானுடைய ஆச்சர்ய சக்தியாகிற மாயா சக்தியால் தான்’—என்று அங்கே பொருள். ‘போகமாத்ரஸாம்யலிங்காச்ச’ என்கிற கடைசி அதிகரண ஸூத்ரத்திலும் ‘மாத்ர’ சப்தத்திற்கு இரண்டு பொருள்களையும் கொள்ளலாம். ‘ஈச்வரனோடு முக்தனுக்கு ஆநந்தம் முழுவதும் (போகம் முழுவதும்) ஸமம்’ என்பதால் இருவருக்கும் ஆநந்தத்தில் தார்தம்யமில்லை யென்பது கிடைக்கும். ஆநந்தம் மட்டில் ஸாம்யமே யல்லது, ஈச்வர லக்ஷணமான ஜகத் ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களில் ஸாம்யமில்லை யென்பதும் கிடைக்கும். இங்கே, ‘என் சக்தி முழுவதையும்’ எண்ணினாலும், அந்த முழு சக்தியால் என்னதான் கூடிவரும்? கார்யகரமே யாகாது. ஸ்தோத்ர பதங்களில் ஒன்றுகூட அமையாது. ‘என்னுடைய சக்தி’ என்னுமிடத்தில் ‘சக்தி’ சப்தத்தில் ஒரு வேடிக்கை உண்டு.

‘கார்யத்துக்கு உபயோகியான அப்ருதக் ஸித்த விசேஷணம் சக்தி’—என்று லக்ஷணம் உரைப்பர். என்னுடைய சக்தி முழுவதையும் கூட்டினாலும் ஒரு கார்யமும் சக்யமாகாது. ஆகையால் என் சக்திக்குச் சக்தி என்கிற பெயரே விபரீத லக்ஷணையாகத்தான் பொருந்தும். என்னுடைய அசக்திக்குச் சக்தி யென்று திருநாமம் சாத்தப்பட்டிருக்கிறது. என் சக்தியால் இங்கே என்ன சக்யம்? சக்ய மில்லாதது சக்தியாகுமோ? ஆகையால் அது பொய்ப் பெயர்தான் என்று காட்ட ‘என் சக்திக்கு ஒன்றும் சக்ய மில்லை’ என்று வேடிக்கையாக ஸாதிக்கிறார். இரண்டுபேர் கூட்டில் ஒவ்வொருவர் பாகத்தையும் ‘மதி’ என்றும் ‘தவ’ என்றும் பிரித்து நிஷ்கர்ஷம் செய்கிறார். என் சக்தி முழுவதும் சேர்ந்தது சூந்யம். சூந்யத்தை எண்ணமுடியாதென்று ‘மணமே’ சப்தத்தால் த்வநி. ‘பெருமாளுடைய தோஷங்களை எண்ண முடியாது; ஏனென்றால் தோஷங்கள் அவருக்கு அடியோடு இல்லை. இல்லாததை (அபாவத்தை, சூந்யத்தை) எப்படி எண்ணுகிறது என்னும் ஆர்ஷ வசநத்தை நினைக்கவேணும். அங்கே பெருமாளுடைய குணங்களை எண்ணமுடியாது; ஏனெனில் குணங்கள் அநந்தம்; எண்ணிக்கை யில்லாததை எப்படி எண்ணுவது என்றபடி. இங்கே உமது சக்தி அநந்தம். அதுவும் எண்ணில் அகப்படாது. அதற்கு அசக்யமாவது இல்லை என்று ஆர்த்திகமாக இங்கே பொருள். என் சக்திக்குச் சக்ய மொன்றுமில்லை. உம்முடைய சக்திக்குச் சக்ய மில்லாத தில்லை. ‘கிமிஹ நாஸ்தி ஸாக்ஷ்யம்’ என்னும் கேள்வியால், ‘நாஸ்தி ஸாக்ஷ்யம்’ என்று கிடைப்பதால், நாஸ்திதான் என் சக்திக்குச் சக்யம். அஸ்தி என்பது உம் ஒருவர் விஷயத்தில்தான் கூடுமென்றும் தாத்பர்யம். கேநோபநிஷத்தில் ப்ரச்ந முறையில் பேசுவதுபோல் இங்கே 1, 2, 4-பாதங்களில் கேள்வி முறையாகப் பேச்சு. என் சக்தியைமட்டும் எண்ணினால் என்ன சக்யமாகும்? ‘உமக்கு முன்பே கவிதா சக்தி கொடுத்திருக்கிறோமே; மறுபடியும் சக்தியை யாசிப்பானேன்? உம் கவிதாசக்தியால் இயன்றதைப் பாருமே’ என்ற தேவரீர் வார்த்தைக்கு, ‘தேவரீருடைய கீதாகாநத்தைத்தான் பதிலாக விண்ணப்பம் செய்கிறேன்.

‘தமேவம் மத்வா பரவாந் ஆத்மாநம் கேவலம் து ய: ।
பச்யத்யக்ருதபுத்தித்வாந் ந ஸ பச்யதி துர்மதி: ॥’

என்று உம்முடைய பாடலை மறக்கலாமோ? ப்ராணிகளுடைய ஸர்வ கர்மங்களும் ஸித்திப்பதற்கு ஐந்து காரணங்கள் வேண்டும். அதில் தைவம் என்கிற ஐந்தாவது காரணம் ப்ரதாநமென்று எம் இராமானுசன் வ்யாக்யை. ‘பத்மநாபனுடைய முகபத்மத்திலிருந்து வெளிப்பட்ட கீதைகளை ஸங்கீதங்களாகச் செய்யவேண்டும்’ என்பர் ருஷிகள். சப்தம் புறப்படு மிடமாகிய நாபியும் கமலம்; சப்தம் வெளியேவரும் த்வாரமான திருமுகமும் கமலம்; உம்முடைய கீதையின் சிறப்பைச் சொல்வேனா? அதற்கு எம் இராமானுசன் உரைத்த பாஷ்யச் சிறப்பைச் சொல்வேனா? யதிபரிப்ருடரான இராமானுசன் எவருடைய கீதங்களுக்கு உபநிஷத்துக்களோடு மிகவும் நெருங்கியதும் மாசற்றதுமான உண்மைப்பொருளை உரைத்துப் பாஷ்யம் செய்யும் பாக்யம் கிடைத்ததோ அந்தக் கண்ணனைப் பணிகிறேன்’ என்று ஸ்ரீ தாத்பர்ய சந்த்ரிகை ஆரம்பத்தில் அருளிச் செய்தார். கீதை பாடினதிலும், கீதைக்கு உடையவர் பாஷ்யம் செய்யப் பெற்றது பெருமாளுக்குப் பெரிய பாக்யமென்று தாத்பர்யம். ‘கேவலம் ஆத்மாவை (தன்னை)க் கர்த்தாவாகப் பார்ப்பவன் பார்ப்பவனல்லன்; அவன் துர்மதி’ என்று கீதாச்லோகத்தில் ‘கேவலம்’ என்ற பதத்தின் பொருளை இங்கே ‘மாத்ர’ என்பதால் காட்டுகிறார். இங்கேயும், அடுத்த ச்லோகத்திலும், காரண பஞ்சகத்தைச் சொல்லும் கீதா ச்லோகங்களும், உடையவர் பாஷ்யமும், ஸ்வாமி நெஞ்சில் ஓடுகின்றன. ஐந்து பொருள்

கள். சேர்ந்த கர்த்ருத்வக் கூட்டில் சரீரம் இந்த்ரியங்கள் ப்ராணவ்ருத்திகள் என்ற மூன்றும் அசேதநமானதால் கூட்டாளி என்று சொல்ல இடமில்லை. அவ்வசேதநங்கள் பங்கும் கேட்கமாட்டா. சேதநர் இருவருக்குத்தான் கூட்டுப் பார்க்கவேணும். அவர்கள் இருவரும் சரீரம் என்னும் ஒரு கூட்டிலுள்ள ஸகாக்களான பக்ஷிகள். பெருமாள் விநயத்தோடு நாலோடு ஐந்தாவது காரண மென்று தம்மைக் குறைத்துப் பேசினாலும், அவர்தான் ப்ரதாநமான ஹேதுவென்று பாஷ்யம். அது எப்படி ? இந்தக் கீதையிலே முன்னும் பின்னும் பெருமாள் என்ன சொன்னார் ? 'நான் எல்லா ப்ராணிகளின் ஹ்ருதயத்திலும் உட்கார்ந்திருக்கிறேன் ; நினைப்பு, மறதி, ஞானம் எல்லாம் என்னிடமிருந்தே உத்பத்தியாகும்' என்று முன்பு 15-வது அத்யாயத்தில் பேசினதையும், 'ஹே அர்ஜுந ! ஸர்வ பூதங்களின் ஹ்ருதய தேசத்தில் ஈச்வரன் இருந்துகொண்டு தன்னுடைய ஆச்சர்ய சக்தியால் எல்லா ப்ராணிகளையும் ஆட்டிக்கொண்டிருக்கிறான்' என்று இந்த 18-வது அத்யாயத்தில் மேலே பேசப்போவதையும் ஸ்ரீபாஷ்யகாரர் உதாஹரித்தார். 'பரமாத்மா கொடுத்ததும், அவரை ஆதாரமாக உடையதும், அவராலே வைக்கப்பட்ட சக்திகளை உடையதுமான கரண களேபரங்களால் ஜீவாத்மா தானும் பரமாத்மா ஆதாரனாயும் அவரால் ஆளப்பட்ட சக்தி யுடையவனாயும் தன் இச்சையினால் ப்ரயத்நத்தை ஆரம்பிக்கிறான். அவனுக்கும் உயிராய் உள்ளே இருக்கிற பரமாத்மா அவனுக்குத் தம் அநுமதி தாநத்தால் அவனை ப்ரவ்ருத்திக்கச் செய்கிறார்' என்று அங்கே பாஷ்யம். கூட்டில் சேர்ந்த கரண களேபராதிகளான மூன்று அசேதநங்களிலும் சக்தியை ஆதாநம் செய்வதுபோல, சேதநனான ஜீவனுக்கும் சக்தியை ஆதாநம் செய்கிறாரென்று அங்கே ஸாதித்தபடி. என் சக்தி முழுவதும் உம்மால் ஆஹிதம் தானே என்று இங்கே ஸூசிக்கிறார்.

ஶக்த்யா வா தவ கரீஶ கிமஸ்தி ஸாத்யம்---உம்மால் ஆஹிதமான என்னுடைய சக்தி ஏதாவது ஸாதிக்கக்கூடியதா யிருந்தாலும், அஸ்திகிரிப் பெருமாளே ! உமக்கு ஸாதிக்கவேண்டிய ப்ரயோஜநம் என்ன இருக்கிறது ? இந்தக் கூட்டினால் நீர் அடைந்துகொள்ளக்கூடிய ஸ்வப்ரயோஜநம் ஒன்றுமில்லையே. இந்தக் கூட்டில் ஒரு கூட்டாளியென்று சொல்லப்படுமென்றால் ஒரு கார்யமும் ஸாதிக்க முடியாது ; ஆகையால் என்னைக் கஷ்டக் கூட்டாளியென்றும் சொல்ல வொண்ணாது. ஸகல வேலையும் நீரே செய்து, புத்தி வாக்கு முதலிய ஸகல முதலும் நீரே போட்டு நீர் கூட்டாளியா யிருக்க, உமக்கு ஆசைப்படக் கூடிய லாப மொன்றுமில்லை யாதலால் இந்தக் கூட்டு உமக்கும் உபயோகமில்லை ; எனக்கும் சக்யம் இல்லை ; உமக்கு ஸாத்யமும் இல்லை. இது ஒரு விசித்ரமான கூட்டு. இதற்கென்ன பரிஹார மென்றால், 'பவதி த்வதிச்சயைவ'—'உம்முடைய இச்சையிருந்தால்'—என்பதை இந்த

முதலிரண்டு பாதங்களிலும் கூட்டிக்கொண்டால், உம் இச்சையால் என் சக்தியால் சக்யமாகும் ; என் மநோரதத்தைப் பூரணம் செய்யும் என் ப்ரயோஜநம் உம்முடைய ப்ரயோஜநமே யாகும். ஆகவேண்டிய ஸ்வப்ரயோஜநம் உமக்கு இல்லையே யொழிய, நீர் ஆசைப்படும் பரப்ரயோஜநம் உம் இச்சையால் ஸாத்யமாகத் தடையில்லை. இப்படி பரப்ரயோஜந மென்னும் ப்ரயோஜநம் உமக்கு இனி ஸாதிக்கவேண்டி யிருந்தால், உம்மை எப்படிப் பூர்ணகாமரென்றும் ஆப்தகாமரென்றும் சொல்லுவ தென்று கேட்பீரானால், இதற்குப் பதில்,

'ஸம்பூர்ணஸர்வஸ்ய ஸமீஹிதம் பவதி ஹ பவதோऽவதீர்ண காமஸ்ய வா ॥'

என்று உமது அநுக்ரஹத்தால் ப்ரவஹிக்கப்போகும் தத்வமுக்தா கலாபத்தில் உம்முடைய நாயகஸரம் முதல் ச்லோகத்திலும், பெரிய பெருமாள் அநுக்ரஹத்தால் வெளிவரப்போகிற அதிகரண ஸாராவளியில், 'ஸஹிதஸமயஸித்த ஸ்வாதந்த்ர்யகாம:' என்று பணிக்கப் போவதிலும் கண்டு கொள்வீர். நீர் அளிக்கும் ஸமாதாநம்தான் அது. 'ஸாத்யம்' என்பது ஓர் அர்த்தத்தில் 'ஶக்யம்' என்னும் பொருளைக் கொடுப்பதால், இவ்விரண்டு கூட்டாளிகளில் எனக்கும் ஒன்றும் சக்யமில்லை ; உமக்கும் ஒன்றும் சக்யம் (ஸாத்யம்) இல்லையென்று சப்த வேடிக்கை. இச்சித்த மாத்ரத்தால் பரப்ரயோஜந மெல்லாம் உமக்கு உடனே ஸித்தமாதலால், பூர்ண காமத்வத்திற்கு விரோதமில்லை. இச்சைமட்டும் போதும்; இச்சிக்கும் பரப்ரயோஜநத்தை ஸாதிக்க ப்ரயத்நம் என்னும் க்ருதி வேண்டியதில்லை. உம்முடைய இச்சாரூபமான ஞானம் மட்டும் போதுமானது. உம்மை ஆப்தகாம ரென்றும், ஸத்யகாம ரென்றும், 'ஸோऽகாமயத' என்றும் வேதம் ஓதுகிறபடியால் உமக்கு விருப்பம் என்பது இல்லை யென்று சொல்லமுடியாது. விரும்புவதெல்லாம் உடனே ஸத்யமாக நிறைவேறிவிடுவதால் உம்முடைய பூர்ண காமத்வத்திற்கு விரோத மில்லை யென்று சொல்லவேணும். உமக்கு ஸ்வப்ரயோஜநம் இல்லாமற் போனாலும், எம்போன்ற பிறர் ப்ரயோஜநத்தை உம்மதாக அபிமானிக்கும் உமக்கு ஆகவேண்டிய ஸாத்யமுண்டு. அந்த ஸாத்யம் 'பவதி த்வதிச்சயைவ'—நீர் இச்சிக்கும்போதே ஸித்தமாகிறது.

பத்யுஸ்ஸாதயஸ யோ—நீர் கொடுக்கும் சக்தியோடு கூடிய—என்னைக் கொண்டு ஸாதிக்கக்கூடிய—உமதென்று நீர் அபிமானிக்கும் என் ப்ரயோஜநமாகிய இந்த ஸ்தோத்ரம் என்னும் ப்ரயோஜநம் உமக்கு ஆகவேண்டியிருந்தால், என்னை நிருபகரணமாகக் கொண்டு ஸாதித்துக்கொள்ளும். 'யோ ஸாதய' என்கிற த்ருதீயைக்குக் கரணமென்று அர்த்தம் கொள்ளலாம். கீதா ச்லோகங்களின் பாஷ்யத்தில்,'வைதிகமான புத்தியோவென்றால் சரீரேந்த்ரிய ப்ராண ஜீவாத்மாக்களை உபகரணமாகவுடைய பரமாத்மாவையே கர்த்தா

வாக நிர்ணயிக்கிறது' என்று ஸாதித்து, அந்தர்யாமி ச்ருதியை ப்ரமாணமாக உதாஹரித்தருளினர். மற்ற மூன்று அசேதநங்களும் உபகரணமாவது போல ஜீவாத்மாவும் ஓர் உபகரணமாவான் என்று ஸாதித்தபடி, என்னை ஒரு கரணமாக வைத்துக்கொண்டு ஸாதித்துக்கொள்ளும். 'யெ அ ஊுாஊ,ந' என்பதைப்போல 'நானும் ஒருவன்கூடப் பரிகரமாக இருக்கவேண்டிய நிர்ப் பந்தத்தால் என்னையும் கூடவைத்துக்கொண்டு ஸாதியும்' என்று மூன்றும் வேற்றுமைக்கு 'ஸஹ' (கூட) என்கிற பொருளையும் சொல்லலாம்.

தஃவி ஊுயா வா—என்னாலே யென்று உபகரணமாகக்கூட என்னை ஒரு பொருளாகச் சேர்த்துப் பேசுவதும் ஸரியல்ல. 'நான்' என்பது யார்? உம் முடைய சக்திதானே. எப்படி ப்ரக்ருதி உமக்குச் சக்தியோ, அப்படி சேதந வர்க்கம் முழுவதும் உம்முடைய சக்திதானே. 'என்னாலே ஸாதித்துக்கொள் ளும்' என்றால், 'உம்முடைய சக்தியால் நீர் ஸாதித்துக்கொள்ளும்' என்று தானே முடி வேற்படும்.

'ஊஊ ரூாய யஃஷி யொஉஷூஷம் ஷகஙும் தஜ் தவெவ ஊாயவ'

என்கிற புத்தியல்லவோ தெளிந்த புத்தி. 'என் சக்தி' என்பது, 'உம் முடைய சக்தியாகிய என்னுடைய சக்தி' என்றுதானே யாகும். சுற்றிச் சுற்றி உம்மிடத்தில் வந்துதானே விச்ராந்தி யடையும். '**தஃவி**' (அதுவும்) என்னாலே என்பதும், '**ஊுயாவா**' உம்மாலேயே என்று முடியும். 'வா' என்பதற்கு 'ஏவ' என்பது பொருள். '**ஊுயா**' என்பதும் '**ஊயா**' என்பதும் ஓரே பொருளானால், நானே நீ என்று அத்வைதம் பேசுகிறீரோ? ஓய்! வேதாந்தாசிரியரே! 'இல்லை; எம் தேவராஜஸ்வாமிந்! '**கூரீபப**' என்று உம்மைக் கூப்பிட்டு நீர் உம்மாலேயே ஸாதித்துக்கொள் ளும் என்றல்லவோ ப்ரார்த்திக்கிறேன். ஈசனென்று உம்மைக் கூப்பிடுவ தால், நான் அநீசன் (அடிமை) என்றுதானே ஸ்பஷ்டமாகப் பேசுகிறேன். உம்முடைய சக்தியாகிய என்னை உம்மைக் காட்டிலும் வேறு பொருளாகச் சொல்லுவது அநுசித மென்றல்லவோ நான் இப்படிப் பேசுவது. அநந்யத் வம் தான் நான் பேசுவது. சக்திக்கும் சக்திமானுக்கும் பிரிக்கக்கூடிய பேதமில்லை யென்னும் முறையில்தான் பேசுகிறேன். இந்தக் கூட்டில் என்னை வரவு செலவில் சேர்க்காமல் உம் இச்சைப்படி நீரே இக் கார் யத்தை உம்மாலேயே (உம் ஸ்வந்த சக்திகளாலே) தலைக்கட்டிக்கொள் ளும். முக்யமான கர்த்தாவும் நீரே; காரயிதாவும் நீரே; உலகத்தில் இதைப் போன்ற கர்த்ருத்வமும் காரயித்ருத்வமும் வேறெங்கும் காண முடியாது. மற்றொரு அந்தர்யாமி எந்த ப்ராணிக்காவது இருந்தா லல்லவோ த்ருஷ்டாந்தம் காட்டலாம். 'ஏக' என்று ஸுபால ச்ருதி, திவ்ய தேவன் ஒருவனே அந்தர்யாமி என்றது. இங்கே அந்தர்யாமி ச்ருதி

ஸ்ரீ பாஷ்யகாரரால் உதாஹரிக்கப்பட்டது. ஸுபாலோபநிஷத்தில் அந்தர் யாமி ச்ருதியில், திவ்ய தேவனான நாராயணன் அந்தர்யாமி என்று கூறியதால், இந்தத் தேவராஜன் என் அந்தர்யாமி. அவர்தான் கர்த்தா. '**கூரீபப**' என்னும் ஸம்போதநத்தால் பிறர் ரக்ஷணத்தையே தம் ப்ர யோஜநமாகக் கொள்ளுகிறாரென்னும் ஸமாதாநமும் ஸூசிக்கப்படுகிறது. பரமபதத்திலிருந்து அத்திகிரிக்கு ஏன் எழுந்தருளி இங்கே குடிகொண் டார்? எம்போன்ற சேதநர் ஆர்த்தியைப் போக்கி எம்மை உத்க்ருஷ்ட தாநத்தால் ரக்ஷிக்கத்தானே. அவர் நம்மை அநந்யமாக நினைப்பதுபோல் நாம் அவருக்கு அநந்யரென்று தெரிந்து நடந்தால் நாம் பிழைத்துவிடலாம்.'

கிஂவாஹவெஜூவதி கிஂஜிஃநீஹஊாரெ—இதுவரை ஸ்வாமி கீதா பாஷ் யத்தை நெஞ்சிற்கொண்டு ஸாதித்து வந்தார். இப்பொழுது ஸ்தோத்ர ரத்நத்திலுள்ள கைமுத்ய வசநத்தை அடியொற்றி, 'உம்முடைய இச்சை யில்லாமல் என்ன நடக்கும்? உம்மையே ஸ்தோத்ரம் பண்ணுவதற்கு நீர் ப்ரவர்த்திக்கலாமா என்று நீர் சங்கைப்படக் கூடாது. ப்ரவ்ருத்தி மட்டு மல்ல; நீர் அந்த விஷயத்தில் இச்சையும் படவேணும். நீர் இச்சிக்காம லிருந்தால் எதுதான் நடக்கும்? என் மநோரதத்தை நிறைவேற்ற நீர் உம் ஸ்தோத்ரத்தைச் செய்ய இச்சிக்கத்தான் வேணும்' என்று ஸாதிக்கிறார். ஸ்தோத்ரத்தில்,

'நாவெக்ஷெஸ யதி ததொ ஹுவநாநூ ஊஷி
நாஹூம் வுலொ ஹவிதுஉெவ கூதஃ வுவூதிஃ ॥'

என்று ஸாதித்ததை இங்கே அநுஸரிக்கிறார். புவநத்துக்கே (உண்டா கைக்கும் இருப்புக்கும்) உம்முடைய கடாக்ஷ மில்லாமல் யோக்யதை யில் லையே. ப்ரவ்ருத்திக்கு யோக்யதை எப்படி ஸம்பவிக்கும்? அங்கே, 'ப்ரவ் ருத்தி யோக்யதை யென்பதைக் காட்டக் கைமுத்யத்தை உத்காடநம் செய்கிறார்' என்று ஸ்வாமி பாஷ்யம். அங்கேயும் ஸ்தோத்ரத்திற்கு வேண் டிய சக்தி முதலியவற்றை ப்ரார்த்தித்து ஸம்பாதித்துக் கொள்வதற்கு ஆசை. 'ஹரியின் காரணத்வம், நியந்த்ருத்வம், ஸுஹ்ருத்வம், ஸ்வாமித் வம், வாத்ஸல்யம் என்னும் இந்த ஐந்து ஸத் குணங்களும் கண்டோக்தங் கள்' என்று இவர் பாஷ்யத்தில் பணித்தபடி. இங்கேயும் அக் குணங்களை அநுஸந்திக்கிறார். '**ஹவெக**' என்பதற்கு, '**ஹவிதுஂ ஊஙுஂ**' என்பது பொருள். '**நாவெக்ஷெஸ யதி**' என்பதன் பொருளை, '**ஹவதி கிஂஜிஃநீஹ ஊாரெ**' என்று உரைக்கிறார். 'என் ஸ்தோத்ரத்தை நானே செய்யவும் செய்விக்கவும் இருக்கலாமா?' என்று நீர் லஜ்ஜைப்பட்டு உதாஸீநராய் இருக்கக்கூடாது. இதில் வெட்கப்பட்டு என்ன பயன்? நீர் இச்சைப்படா மல் எதுதான் நடக்கும்? ஸ்தோத்ரமோ நடைபெற்றுத் தீரவேணும்.

என் ஆசைக்காக 'ஸாவதாநம் விதயாஶூஹம்' என்று தேவரீர் அருளிச் செய்தாலும் நீர் பக்தச்சந்தாநுவர்த்தி யாயிற்றே. எனக்காக நீர் உம் ஸ்தோத்ரத்தை ஆசைப்பட்டே தீரவேணும். என் ஸத்தா ஸ்திதிகளே உம் இச்சையில்லையானால் இல்லாமற் போகவேண்டியிருக்கும். உம் இச்சையில்லாமல் இந்த ஸ்தோத்ர ப்ரவ்ருத்தி எப்படி ஸாத்யமாகும்? இந்தக் கடைசி பாதத்தை இரண்டு வாக்யங்களாகவும் ஒருவாறு யோஜனை செய்யலாம். 'கிம்வா ஹவெக' (எதுதான் உண்டாகக்கூடும்?) என்று கேள்வி. அதற்கு 'ஹவதி'-உண்டாகும். 'கிம் நிரீஹஸாநெ'—அத்யந்தம் ஆகிஞ்சந்யத்தை அவலம்பித்து அவன் திருவுள்ளப்படி செய்யக்கூடுமென்று நான் நிச்சேஷ்டனாக இருந்தால்—அவனே கதியென்று அடியேன் கைவாங்கி அநிச்சலனாய் இருந்தால்—அவன் திருவுள்ளப்படி என் மநஸ்ஸையும் கரணங்களையும் ஆட்டிக் கார்யத்தை ஸாதித்துவிடுவேன். 'எதுதான் ஆகும்?' என்ற கேள்விக்கு 'ஹவதி' என்று உடனே உத்தரம். 'ஈஹ' தாது, சேஷ்டையில் படிக்கப்பட்டுள்ளது. ஈஹை - சரீரத்தை அசக்குதல் என்பர் வையாகரணர்.

இந்த ச்லோகத்திலும் த்ருவர் ஸ்தோத்ரம் ஸ்வாமி நெஞ்சில் ஓடுகிறது. 'அவிமுமுக்ஷியா: ஸர்வாஶா'—எல்லா சக்தியும் அவனது தானே. எனக்கு எது சக்தி? 'கூதஹமஸ்ஹா ஶாயாவதுவொஙாமா' என்று அந்த ஸ்தோத்ரத்தில் இரண்டாவது ச்லோகம். ஆச்சர்ய சக்தி அவனதுதானே. 'அதிஹிகஜககதரம்' என்று அங்கே உள்ளபடி முதல் ச்லோகத்திலும் கடைசி ச்லோகத்திலும் கல்பகவ்ருக்ஷ மென்று ஸாதிக்கிறார். 'கூதஶவஸொ, அவநதாதிஶஹா' என்று அந்த ப்ரகரணத்தில் ப்ரணதார்த்திஹர ஸமாந நாமங்களைக் காண்கிறோம். மேலே அங்கங்கே ஸாத்ருச்யங்களைக் காட்டுவோம். இந்த கர்த்ருத்வ விஷயமான கீதா ச்லோகங்களின் சந்த்ரிகையில்,

'கிம்வொஶாரதயா உஶீத வரமெஶ வாமஹம்தி வெஶாமஶிம்'

என்று தம் ஆசிரியரான அப்புள்ளார் ச்லோகத்தை உதாஹரித்திருப்பதால், தம் ஆசிரியரும் இந்த கீதா ச்லோகங்களில் சொல்லப்பட்ட தைவம் தேவராஜனை வரதனென்று ஸாதித்ததைக் காட்டினார். 'இந்த ஐந்து காரணங்களையும் என்னிடம் தெரிந்துகொள்' என்ற கீதா ச்லோகத்தில் சந்த்ரிகையில் 'எப்படி பஞ்ஜர சகுந்த போஷணாதிகளும் அதனால் பக்ஷிக்கு உண்டாகும் ஸுகம் முதலியவைகளும் ஸார்வபௌமனுக்குச் சேஷபூதமோ' என்று ஸாதித்ததையும் கவனிக்கவேணும். அடுத்த ச்லோகத்தில் அந்தப் பதங்களும் அந்த த்ருஷ்டாந்தமும் ஸாதிக்கப்படுவதையும் கவனிக்கவேணும். ஸ்தோத்ர ரத்நம்போல இந்த வரதராஜ ஸ்தோத்ரமும் ஒரு ஸ்தோத்ர ரத்நமாய் இருக்கவேணு மென்று மநோரதம். இங்கே ஐந்தாவது ச்லோகத்தில் கீதோக்தமான ஐந்து காரணங்களின் நினைப்பு.

॥ ஸ்ரீ: ॥

பதிவ்ரதா தர்மத்தின் சிறப்பு

[மஹா மஹோபாத்யாய ஸாரஸ்வத ஸாரஜ்ஞ ஸ்ரீ. உ.வ. தட்டை. வெ. ஸ்ரீநிவாஸாசார்யர்.]

பர்த்தாவினிடம் தேவதாபாவனை உள்ள மாது பதிவ்ரதை எனப்படுவள்.

'ஸுப்தே ஹதஶயி யா பஶ்சாத் பூர்வமேவ ப்ரபுத்யதே ।
நாந்யம் காமயதே சித்தே ஸா ஜ்ஞேயா பதிவ்ரதா ॥''

என்றபடி தன் கணவன் படுத்து உறங்கின பிறகு எவள் படுப்பளோ, அவன் விழிப்பதற்கு முந்தியே எவள் விழித்து எழுந்திருப்பளோ, தன் கணவனைத் தவிர வேறு மனிதனை எவள் தன் மனத்தில் நினைக்கமாட்டாளோ, அந்த மாது பதிவ்ரதை என்று அறியத்தக்கவள். சாண்டிலீ, அருந்ததீ, அநஸூயை, ஸீதை, த்ரௌபதீ, ஸாவித்திரீ, தமயந்தீ, மதயந்தீ, நாளாயநீ முதலிய அநேக ஸ்திரீகள் பதிவ்ரதைகளென்று சொல்லப்படுவர். பதிவ்ரதையானவள் எப்பொழுதும் அவதாநத்துடன் கூடியவளாக இருந்துகொண்டு, பர்த்தாவை நோக்கி அப்ரியங்களாகவும் அஹிதங்களாகவும் பருஷங்களாகவுமிருக்கிற வாக்கியங்களை ஒருக்காலும் உரைக்கமாட்டாள். தேவதைகள் பித்ருக்கள் ப்ராஹ்மணர் இவர்களைப் பூஜிக்கும் விஷயத்தில் ச்ரத்தை யுள்ளவளாகவும், பர்த்தாவின் இங்கிதத்தை அறிந்து நடப்பவளாகவும், மாமனார் மாமியார்களுக்குச் சுச்ரூஷை செய்பவளாகவும், கோள் சொல்லும் ஸ்வபாவமில்லாதவளாகவும், தலைவாசலில் நெடுநேரம் நின்றுகொண்டு பேசாதவளாகவும், புன்சிரிப்புள்ளவளாகவும், பரபுருஷர்களை உற்றுப் பாராதவளாகவும், உரத்த குரலுடன் ஸம்பாஷணம் செய்யாதவளாகவும் இருப்பாள். குடும்ப கார்யார்த்தமாக வேறு ஸ்தலங்களுக்குப் போய்விட்டு க்ருஹத்துக்கு வந்த பர்த்தாவுக்கு, ஆதரவுடனும் அன்புடனும் பாத்யத்தைக் கொடுத்து, ஆஸநமிட்டு, பாநீயத்தை ஸமர்ப்பித்து, அவன் ச்ரமம் தீரும்படி விசிறி, பாதஸம்வாஹநம் செய்வாள். பர்த்தாவுக்கு எது ப்ரியமோ அப்படிப்பட்ட அந்நபாநாதிகளையே ஸாவதாநமாக ஏற்படுத்துவாள். க்ருஹத்தில் அக்நி ஸம்ரக்ஷணம் செய்து, ஹோமகார்யங்களில் பர்த்தாவுக்கு நிழல் போல இருந்து, தர்மங்களை நன்கு அநுஷ்டிக்கச் செய்வாள். கணவன் தேசாந்தரம் போயிருந்தால் அக்காலத்தில் மங்கள ஸ்நாநம், நல்ல ஆடை, புஷ்பதாரணம், அஞ்ஜநம் இவைகளை ஒழித்து, அலங்காரத்தையும் விட்டு, மங்கள த்ரவ்யங்களான குங்குமம் மஞ்சள் தாடங்கம் திலகம் இவைகளை

மாத்திரம் தரித்து, பர்த்தாவின் க்ஷேமத்தையே த்யாநித்துக்கொண்டு நல்ல வ்ரதத்தை அநுஷ்டித்துக்கொண்டிருப்பாள். நல்ல ஆஹாரத்தை உட்கொள்ளமாட்டாள்; நல்ல வஸ்த்ரம் தரியாள்; இப்படிப்பட்ட தன்னுடைய நன்னடத்தையினால் பதிவ்ரதைகள் தன்னையும் தன் பர்த்தாவையும் உபய வம்சங்களையும் உத்தமகதியை அடையச் செய்திருக்கிறார்கள். இந்த விஷயமானது மஹாபாரதத்தில் ஆநுசாஸநிக பர்வம் 185-வது அத்யாயம் சாண்டிலீ ஸுமநா ஸம்வாதத்தைப் பார்த்தால் நன்கு விளங்கும். சரணாகதி வேதமாகிய ஸ்ரீமத் ராமாயணத்தில் இந்தப் பதிவ்ரதா தர்மத்தை ஜகந்மாதாவான ஸ்ரீ ஜாநகி தன் அநுஷ்டாநத்தால் உலகத்தாருக்கு நடத்திக் காட்டி யிருக்கிறாள்.

“𑌇𑌯𑌂 𑌸𑌾 𑌦𑌯𑌿𑌤𑌾 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌵𑌶𑌮𑌾𑌗𑌤𑌾 ।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌭𑍋𑌗𑌾𑌨𑍍 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌭𑌰𑍍𑌤𑍃𑌸𑍍𑌨𑍇𑌹𑌬𑌲𑌾𑌤𑍍𑌕𑍃𑌤𑌾 ॥
𑌅𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑌿 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌾 𑌨𑌿𑌰𑍍𑌜𑌨𑌂 𑌵𑌨𑌮𑍍 ।
𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌾 𑌫𑌲𑌮𑍂𑌲𑍇𑌨 𑌭𑌰𑍍𑌤𑍃𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌣𑍇 𑌰𑌤𑌾 ।
𑌯𑌾 𑌪𑌰𑌾𑌂 𑌭𑌜𑌤𑍇 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌂 𑌵𑌨𑍇𑌽𑌪𑌿 𑌭𑌵𑌨𑍇 𑌯𑌥𑌾 ॥
𑌇𑌮𑌾𑌂 𑌤𑍁 𑌶𑍀𑌲𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑌾𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑌿 𑌰𑌾𑌘𑌵𑌃 ।
𑌰𑌾𑌵𑌣𑍇𑌨 𑌪𑍍𑌰𑌮𑌥𑌿𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌾𑌮𑌿𑌵 𑌪𑌿𑌪𑌾𑌸𑌿𑌤𑌃 ॥
𑌕𑌾𑌮𑌭𑍋𑌗𑍈𑌃 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌾 𑌹𑍀𑌨𑌾 𑌬𑌨𑍍𑌧𑍁𑌜𑌨𑍇𑌨 𑌚 ।
𑌧𑌾𑌰𑌯𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌦𑍇𑌹𑌂 𑌤𑌤𑍍𑌸𑌮𑌾𑌗𑌮𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌣𑍀 ॥
𑌭𑌰𑍍𑌤𑌾 𑌨𑌾𑌮 𑌪𑌰𑌂 𑌨𑌾𑌰𑍍𑌯𑌾𑌃 𑌭𑍂𑌷𑌣𑌂 𑌭𑍂𑌷𑌣𑌾𑌦𑌪𑌿 ।
𑌏𑌷𑌾 𑌤𑍁 𑌰𑌹𑌿𑌤𑌾 𑌤𑍇𑌨 𑌭𑍂𑌷𑌣𑌾𑌰𑍍𑌹𑌾 𑌨 𑌶𑍋𑌭𑌤𑍇 ॥”

என்னும் ஸுந்தரகாண்டத்திலுள்ள இந்த ச்லோகங்களாலும், இவை போன்ற இந்த ஸந்தர்ப்பத்திலுள்ள அநேக ச்லோகங்களாலும், பதிவ்ரதா தர்மம் மஹர்ஷியினால் நன்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. ஸப்தர்ஷி பத்நிகளிடம் காதல்கொண்ட தன் கணவனான அக்நியை த்ருப்தி செய்விப்பதற்காக ஸ்வாஹா தேவியானவள் நாள்தோறும் ஸப்தர்ஷிகளின் பத்நிகளுள் ஒவ்வொருத்தியின் வேஷத்தை ஒவ்வொரு நாள் தரித்து, தன் கணவனை த்ருப்தி யடையச் செய்து, கடைசியாக வஸிஷ்டருடைய பத்நியான அருந்ததீ வேஷத்தைத் தரிக்க ஆரம்பிக்கையில், அந்த அருந்ததீ வேஷமானது அவளுக்கு இசையாமலே போய்விட்டது. ஏனென்றால்: அருந்ததீ பதிவ்ரதா சிரோமணி யானபடியால், இந்தக் கபட வேஷம் தரித்து வ்யபிசரித்தல் என்கிற கார்யத்துக்கு இடம் கொடுக்கவில்லை என்கிற மஹேதிஹாஸ கதையினால் அருந்ததியின் பாதிவ்ரத்யமானது லோகோத்தரமென்று ஏற்படுகிறது. அவ்வண்ணமே அத்ரிபத்நியான அநஸூயா தேவியின் மஹிமையும் வாக்குக்கும் மனத்துக்கும் எட்டவொண்ணாதது. அஜ்ஞா

நத்தினால் தனக்கு நேர்ந்த ஓர் அபராதத்தின் பயன் ஸூர்யோதய காலத்தை எதிர்பார்த்திருந்ததால் ‘ஸூர்யோதயமே ஆகாமல் உலகம் இருளடைந்திருக்கட்டும்’ என்று அநஸூயை சாபமிட்டவுடன், அவளது பாதிவ்ரத்ய மஹிமையினால் உலகமே ஸூர்யோதய மில்லாமல் இருளடைந்திருக்க, மும்மூர்த்திகளும் திடுக்கிட்டு அநஸூயையிடம் வந்து, ‘அம்மா! நீ வேண்டிய வரனைக் கேள்; நாங்கள் கொடுக்க ஸித்தமாக இருக்கிறோம்; ஸூர்யோதய மாகும்படி உன் வாக்கால் சொல்வாயாக’ என்று வேண்ட, ‘நீங்கள் மூவரும் எனக்குப் புதல்வர்களாக ஜனிக்கவேண்டும்; அதை நீங்கள் ஏற்றுக்கொண்டால் ஸூர்யோதய முண்டாகும்படி செய்வேன்’ என்று சொல்ல, அவ்வண்ணமே ‘நாங்கள் உனக்குப் புத்திரர்களாகப் பிறக்கிறோம்’ என்று மும்மூர்த்திகள் ஒப்புக்கொள்ள, அநஸூயையும் ஸூர்யோதய மாகும்படி செய்து, உலகத்துக்கு ஏற்பட்ட அநர்த்தத்தை நீக்கினாள் என்று பாத்மபுராணக் கதை. மஹாவிஷ்ணு தத்தாத்ரேயராகப் பிறந்தார்; ப்ரஹ்மதேவன் சந்த்ரனாகப் பிறந்தார். ருத்ரன் துர்வாஸ மஹர்ஷியாகப் பிறந்தார். இவ்வாறாக த்ரிமூர்த்திகளும் அநஸூயையினிடம் புத்ரர்களாகப் பிறந்து, தாங்கள் கொடுத்த வரனைத் தலைக்கட்டினார்கள். பிறப்பில்லாத மஹா விஷ்ணுவைக்கூட பிறக்கும்படி செய்தது அநஸூயாதேவியின் பாதிவ்ரத்யமன்றோ! எல்லாப் பதிவ்ரதைகளைக் காட்டிலும் இவள் பாதிவ்ரத்யம் சிறப்புடையது. த்ரௌபதியானவள் இந்த்ராணியின் அம்சத்தால் ஜநித்தவளென்று பாரதம் ஆதிபர்வத்தில் உள்ளடங்கிய ஸம்பவபர்வத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பூர்வஜந்மத்தில் பதிவ்ரதையான நாளாயநி தவம் புரிந்து ப்ரஹ்மதேவனை ஸாக்ஷாத்கரித்து, ‘பதிம் தேஹி’ என்று ஐந்து தடவை ஆதரத்தினால் வரம் கேட்க, அவரும் ‘அவ்வண்ணமே தந்தேன்’ என்று ஐந்து தடவை கூறினபடியால், அடுத்த ஜந்மத்தில் அந்த நாளாயநியே த்ரௌபதியாகப் பிறந்து, தவத்தின் பயனாக யுதிஷ்டிரர் முதலான பஞ்ச பாண்டவர்களைப் பர்த்தாக்களாக அடைந்தாள். இவள் பதிவ்ரதா சிரோமணி; பரமாத்மாவான ஸ்ரீகிருஷ்ணனையே நம்பினவள்; பாபியான துச்சாஸநன் இவளைக் கௌரவ ஸபையில் இழுத்துவந்து துயிலுரியும் ஸமயத்தில்,

“𑌹𑌾 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌦𑍍𑌵𑌾𑌰𑌕𑌾𑌵𑌾𑌸𑌿𑌨𑍍 𑌕𑍍𑌵𑌾𑌸𑌿 𑌯𑌾𑌦𑌵𑌨𑌨𑍍𑌦𑌨 ।
𑌇𑌮𑌾𑌮𑌵𑌸𑍍𑌥𑌾𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾𑌮𑌨𑌾𑌥𑌾𑌂 𑌕𑌿𑌮𑍁𑌪𑍇𑌕𑍍𑌷𑌸𑍇 ॥”

என்று வேண்டினாள். உடனே பக்தபராதீநனான பகவான் அக்ஷயமாக வஸ்த்ரத்தை வ்ருத்தி அடையச் செய்து, அவள் ப்ரார்த்தனைக்கு இணங்கி அவளைக் காப்பாற்றினார். துர்யோதநனால் தூண்டப்பட்ட துர்வாஸ மஹர்ஷியானவர் அகாலத்தில் த்வைத வநத்துக்குப் பதினாயிரம் சிஷ்யர்களுடன் யுதிஷ்டிரரிடம் வந்து, ‘யுதிஷ்டிர! நான் சிஷ்யர்களுடன் மிகுந்த பசியோடு வந்திருக்கிறேன்; கங்கையில் நீராடி அநுஷ்டாநங்களைச் செய்து

முடித்துக்கொண்டு சிஷ்யவர்க்கத்துடன் விரைவாக வருவேன்; பக்ஷ்ய போஜ்யங்கள் ஸித்தமாக இருக்கவேண்டும்' என்று சொல்லி நதியை நோக்கி ஸ்நாநத்திற்காகச் செல்லவே, யுதிஷ்டிரர், 'அக்ஷயபாத்ரம் கவிழ்த்தாய் விட்டதே; இனி எப்படிச் சிஷ்யவர்க்கத்துடன் கூடின துர்வாஸ மஹர்ஷிக்கு ஆதித்யம் செய்வது? தவறினல் கோபநரான மஹர்ஷி சபித்து விடுவரே!' என்று துயரக்கடலில் ஆழ்ந்து தவிக்கும் ஸமயத்தில், பதிவ்ரதையான த்ரௌபதியானவள் ஸ்ரீக்ருஷ்ண பகவானைத் தியானித்து,

"பாஹி மாம் க்ருபயா தேவ சரணாகதவத்ஸல ।
த்வயா நாதேந தேவேச ஸர்வாபத்ப்யோ பயம் ந ஹி ।
துச்சாஸநாதஹம் பூர்வம் ஸபாயாம் மோசிதா யதா ।
ததைவ ஸங்கடாதஸ்மாந் மாமுத்தர்த்துமிஹார்ஹஸி ॥"

என்று ப்ரார்த்தித்தவுடன்,

"த்ரௌபத்யாஸ்ஸங்கடம் ஜ்ஞாத்வா தேவதேவோ ஜகத்பதி:
பார்ச்வஸ்தாம் சயநே த்யக்த்வா ருக்மிணீம் கேசவ: ப்ரபு: ।
தத்ராஜகாம த்வரிதோ ஹ்யசிந்த்யகதிரீச்வர: ।"

என்றபடி கண்ணன் த்ரௌபதியிடம் வந்து

['சீக்ரம் போஜய மாம் க்ருஷ்ணே பச்சாத் ஸர்வம் கரிஷ்யஸி ।
சீக்ரம் மஹ்யம் ச ஸ்தாலீமாநயித்வா ப்ரதர்சய ॥
இதி நிர்ப்பந்தத: ஸ்தாலீமாநாய்ய ஸ யதூத்வஹ: ।
ஸ்தால்யா: கண்டே ஸம்லக்நம் சாகாந்நம் வீக்ஷ்ய கேசவ: ॥
உபயுஜ்யாப்ரவீதேநாமநேந ஹரிரீச்வர: ।
விச்வாத்மா ப்ரீயதாம் தேவஸ்துஷ்டச்சாஸ்து யஜ்ஞபுக் ।
க்ஷுதார்த்தாந் தாந் முநீந் சீக்ரம் போஜநாயேதி ஆஹ்வய ॥']

அக்ஷய பாத்ரத்தைக் கொண்டுவரச் சொல்லி அதில் தன் ஸங்கல்பத்தால் சாகலேசத்தை ஏற்படுத்தி, அதை த்ரௌபதியின் கையினல் தான் வாங்கிப் புஜித்து ரிஷிகளைத் திருப்தியடையச் செய்து, துர்வாஸ மஹர்ஷி சாபத்துக்கு லக்ஷ்யமாக ஆகாமல் பாண்டவர்களை ரக்ஷித்தார்.

இவ்வண்ணமே மத்ரதேசத்து அரசனகிய அச்வபதியின் குமாரியான ஸாவித்ரீ தேவியும், தன் பாதிவ்ரத்ய மஹிமையினல் ஒருவருக்கு மெட்டாத பாக்யங்களை அடைந்திருக்கிருள். அவள் அல்பாயுளுள்ள ஸால்வ தேசத்தரசனக இருந்த த்யுமத்ஸேநனுடைய புத்திரனை ஸத்யவானைப் பர்த்தாவாக வரித்து, பாதிவ்ரத்ய மஹிமையால் அவனுடைய உயிரைக் கொண்டுபோக வந்த ம்ருத்யுவை ஸாக்ஷாத்கரித்து, அவனிடமிருந்து தன் பர்த்தாவுக்குத்

தீர்க்காயுஸ்ஸையும், மாமனரான த்யுமத்ஸேநனுக்கு நஷ்டமான நேத்ரத்தையும், நஷ்ட ராஜ்யத்தையும், தனக்கு நூறு புதல்வர்களையும், தன் பிதாவான அச்வபதிக்கு நூறு புதல்வர்களையும் வரமாகப் பெற்று, உபயகுலங்களையும் உத்தாரணம் செய்து புகழ்பெற்று, இம்மண்ணுலகில் வேண்டிய போகங்களை அநுபவித்துத் தவத்தினல் உத்தம கதியை அடைந்தாள். ஸாவித்ரி தன் அபிஸந்தியை வெளியிட்டிருக்கிற ச்லோகங்களுக்குள் இந்த ஒரு ச்லோகம் ரஸிகர்களால் கவனிக்கத்தக்கது.

"ந காமயே பர்த்ருவிநா க்ருதா ஸுகம்
ந காமயே பர்த்ருவிநாக்ருதா திவம்
ந காமயே பர்த்ருவிநாக்ருதா ச்ரியம்
ந பர்த்ருஹீநா வ்யவஸாமி ஜீவிதும் ॥"

தமயந்தியும் பதிவ்ரதைகளுக்குள் சிறப்புடையவளென்று ஐந்தாவது வேதமாகிய மஹாபாரதத்தில் சொல்லப்பட்டுள்ளது. நிஷத தேசத்தில் மாவிந்த நகரத்தில் வீரஸேந மஹாராஜனது புதல்வனன நளமஹாராஜனுக்கு, விதர்ப்ப தேசத்து ராஜதாநியான குண்டிநபுரியிலுள்ள பீமராஜனுடைய குமாரியான தமயந்தி என்பவள் பார்யையாக அமைந்தாள். இவள் தமநர் என்கிற மஹர்ஷியின் அநுக்ரஹத்தால் உண்டானள். இவளுக்குத் தமன், தாந்தன், தமநன் என்று மூன்று ஸஹோதரர்கள் இருந்தார்கள். பதிவ்ரதா ரத்நமாகிய தமயந்தியானவள் கலியின் கோபத்தால், நளன் ராஜ்யத்தை இழந்து உடுக்க வஸ்திரங்கூட இல்லாமல் கானகத்தில் உறங்கிக்கொண்டிருக்கும்பொழுது தன் வஸ்த்ரத்தில் ஒரு பாகத்தைக் கிழித்து மாநஸ்தாநத்தை மறைத்துக்கொண்டு, தன்னைத் தனியே விட்டுவிட்டுப் போன தருணத்தில், தான் காட்டில் பெரியதொரு மலைப்பாம்பினல் விழுங்கப்படவே ஸஹிக்க முடியாமல் ரோதநம் செய்ய, அந்த த்வநியைக் கேட்ட ஒரு வநசரன் ஓடிவந்து பார்த்து, பாம்பின் வாயை இரண்டாகக் கிழித்துத் தன்னை அந்த ஆபத்தினின்று விடுவித்தான். பிறகு அந்த காதுகனை வேடன் தன்னிடம் கெட்ட எண்ணம் கொள்ளவே, அவனைத் தன் பாதிவ்ரத்யாக்நியினல் சாம்பலாக ஆக்கினள். இந்தக் கதை மஹாபாரதம் வநபர்வம் அறுபதாவது அத்யாயத்தில் உள்ளது. இவள் பாதிவ்ரத்யமானது பதினறு மாற்றுத் தங்கத்துக்கு ஒப்பானது.

இவ்வாறே மதயந்தியும் ஸர்வோத்தமமான பாதிவ்ரத்யத்தைப் பூஷணமாகக் கொண்டவள். இவள் ஸூர்யவம்சத்தில் தோன்றின ஸுதாஸனுடைய புத்ரனை மித்ரஸஹன் என்கிற அரசனுடைய பார்யை என்றும், அவளுடைய பதிவ்ரதா தர்மம் சிறப்புள்ளதென்றும் விஷ்ணு புராணம் நான்கா

வது அம்சம் நான்காவது அத்யாயத்தில் கூறப்பட்டிருக்கிறது. அந்த மித்ரஸஹன் காட்டில் வேட்டை யாடிக்கொண்டிருக்கும் தருணத்தில் இரண்டு புலிகளைக் கண்டு, 'இந்தப் புலிகளே காட்டில் எல்லா ம்ருகங்களையும் அழித்தன' என்று எண்ணி, அந்த இரண்டு புலிகளுக்குள் ஒன்றைக் கொன்றான். அது உயிரை விடும் தருணத்தில் ஒரு ராக்ஷஸனாகக் கீழே விழுந்து உயிர் துறந்தது. மற்றொரு புலியும் ராக்ஷஸ வடிவம் பூண்டு அரசனை நோக்கி, 'நீ செய்த இந்தக் கார்யத்துக்குத் தக்க பரிஹாரத்தை உனக்குச் செய்வேன்' என்று சொல்லி மறைந்துபோயிற்று. அந்த ராக்ஷஸன் வஸிஷ்ட வேஷம் தரித்து ஸௌதாஸனிடம் வந்து, 'ராஜனே! மநுஷ்ய மாம்ஸ பக்ஷணத்தில் எனக்குப் பேராவல் உண்டு; அதைப் பக்வம் செய்துவை; நான் போஜநத்திற்காக வருவேன்' என்று சொல்லி அந்த ராக்ஷஸனே சமையல் செய்பவனாக வேஷம் பூண்டு நர மாம்ஸத்தைப் பக்குவம் செய்து வைத்தான். அரசன் ராக்ஷஸனுடைய வஞ்சனையை அறியாமல் உள்ளபடியே வஸிஷ்டர் மாம்ஸத்தை ஆவலுடன் கேட்டிருக்கிறார் என்று எண்ணி, வெள்ளிப் பாத்ரத்தில் நர மாம்ஸத்தை எடுத்துக்கொண்டு வஸிஷ்டரிடம் செல்ல, அவர் பார்த்து முனிந்து, 'அரசே! எந்தக் காரணத்தினால் அபோஜ்யமான இந்த நர மாம்ஸத்தை எனக்குப் பரிவேஷணம் பண்ணவந்தாயோ, அதனால் நீ நர மாம்ஸத்தைப் பக்ஷிக்கிற ராக்ஷஸனாகக் கடவாய்' என்று சபித்தார். அரசன், 'நர மாம்ஸத்தைப் பக்ஷிக்கவேண்டும்; பக்குவம் செய்துவை' என்று நீரே என்னிடம் சொல்லி, இப்பொழுது அதை உமது சொற்படி செய்துகொண்டு வந்த எனக்குச் சாபமிடலாமோ?' என்று சொன்னவுடன் மஹர்ஷி த்யாநத்தினால் உண்மையை அறிந்து 'இது ராக்ஷஸனுடைய வஞ்சனை; அரசன் குற்றவாளியல்லன்' என்று அறிந்து அரசனைப் பார்த்து, 'இந்தச் சாபம் உன் ஆயுள் வரையில் வேண்டாம்; பன்னிரண்டு வருஷகாலம் உன்னால் அநுபவிக்கத்தக்கது' என்று கூறவே ஸௌதாஸன் கோபம் கொண்டு, நிரபராதனான தனக்கு சாபத்தைக் கொடுத்த குருவைச் சபிக்கக் கையில் தீர்த்தத்தை எடுத்தான். மதயந்தியானவள் தன் கணவனைப் பார்த்து 'நாத! மஹாநுபாவனாயும் நமது வம்சத்துக்குக் குருவாகவுமிருக்கிற மஹர்ஷியைச் சபிக்கலாகாது; நமக்கு ச்ரேயஸ் உண்டாகாது; கோபத்தை அடக்கும்; இந்தச் சாபஜலத்தைப் பூமியில் விட்டால் ஸஸ்யங்கள் நாசமடைந்துவிடும்; ஆகாயத்தில் விட்டால் மேகங்கள் நாசமடைந்து மழை இல்லாமல் உலகத்தில் பஞ்சம் ஏற்படும்; ஆதலால் காலில் விட்டுக்கொள்ளுங்கள்' என்று சொல்லிக் காலில் விடப்பண்ணினவுடன், அவன் காலானது அந்தச் சாபஜலத்தால் கறுத்துவிடவே 'கல்மாஷபாதன்' என்று அவனுக்கு உலகில் ப்ரஸித்தி ஏற்பட்டது. ரிஷி சாபத்தால் ராக்ஷஸனான அந்தக் கல்மாஷபாதன், காமஸுகத்தை அநுபவித்துக்கொண்டிருக்கிற ஒரு ப்ராஹ்

மண தம்பதிகளைக் கண்டு, காமஸுகாநுபவம் நிறைவேறுவதற்குள்ளாகவே அந்தத் தம்பதிகளில் புருஷனைப் பிடித்துப் பக்ஷிக்க ஆரம்பிக்கவே, பெண், 'வேண்டாம் இந்த அகார்யம்; நீர் ராக்ஷஸனல்ல; ஸூர்யவம்சத்தி லுதித்த மித்ரஸஹன் என்கிற ராஜகுமாரனன்றோ? விட்டுவிடும்; தவிரவும், காமஸுகத்தை நாங்கள் அநுபவித்துக்கொண்டிருக்கும் தருணத்தில் அந்த ஸுகம் நிறைவேறுவதற்குள் என் நாதனை நீர் இவ்வண்ணமாகப் பிடித்துப் பக்ஷிப்பது ந்யாயமல்ல' வென்று கதறிக்கொண்டிருக்கும் பொழுதே அந்த ப்ராஹ்மணனைப் பக்ஷித்துவிட்டபடியால் ப்ராஹ்மணீயானவள் துயரமடைந்து, 'காமஸுகம் நிறைவேறுவதற்குள் என் நாதனை நீ கொன்றதனால் நீயும் ஸ்திரீ ஸம்பந்தம் பெறுவாயே யாகில் காமஸுகபலி பூர்த்தி ஆவதற்குள் உயிர் துறப்பாயாக' என்று சாபமிட்டாள். பிறகு பன்னிரண்டு வருஷங்கள் கழிந்தன. சாபம் நீங்கி அரசன் மதயந்தியுடன் சேர விரும்பவே, அந்த மாது ப்ராஹ்மணீ சாபத்தை அரசனுக்கு அறிவித்து, அந்த விருப்பத்தை அகற்றி, வம்ச வ்ருத்தியை உத்தேசித்துப் பர்த்தாவினுடைய அநுமதியினால் வஸிஷ்டருடன் சேர்ந்து கர்ப்பம் தரித்தாள். ஏழு வருஷகாலம் கர்ப்பம் வெளிப்படாமலிருக்கவே கல்லால் கர்ப்பத்தை இடித்தாள். அந்தக் கர்ப்பத்திலிருந்து புருஷப்ரஜை வெளியில் வந்தது. அதற்கு 'அச்மகன்' என்று பெயரிட்டாள். இவ்வாறு தன் நாதனை நிழல்போல அநுஸரித்திருந்து, அவனுக்கு ஹிதத்தைக் கருதி, குருவின்மீது ப்ரதிசாபம் போடாமலிருக்கச் செய்தும், தன்னுடன் சேர அரசன் விரும்பும்பொழுது ப்ராஹ்மணியின் சாபத்தை ஞாபகப்படுத்தியும், வம்ச வ்ருத்தியின் பொருட்டுத் தன் கணவன் அநுமதியின் பேரில் ப்ரஹ்மநிஷ்டரான வஸிஷ்டருடைய சேர்க்கையைப் பெற்று, ஸத்புத்திரனை உண்டுபண்ணினவளுமான மதயந்தியின் பாதிவ்ரத்ய மஹிமை புகழத்தக்கது.

"அஹல்யா த்ரௌபதீ ஸீதா தாரா மண்டோதரீ ததா ।
பஞ்சகந்யா: ஸ்மரேந்நித்யம் மஹாபாதகநாசநம் ॥"

என்னும் ச்லோகத்தை அநுஸந்தாநம் செய்துகொண்டு மஹநீயர்கள் சயனிக்கிறார்கள். இந்தச்லோகத்தில் கூறியிருக்கிறபடி அஹல்யை முதலான ஐந்து ஸ்திரீகள் பதிவ்ரதைகளென்பது ஸ்பஷ்டம். அதிலும் அஹல்யை முதன்மை வாய்ந்திருக்கிறாள். ஸ்ரீமத்ராமாயணம் பாலகாண்டம் 48-வது ஸர்க்கத்தில்

'மதிம் அகார்ஷம் துர்மேதா: தேவராஜகுதூஹலாத் ।'

என்று அஹல்யை தன்னிடத்தில் காதல்கொண்டு கௌதம வேஷம் பூண்டு வந்திருக்கிற தேவேந்த்ரனிடம் 'தேவராஜன் என்னை விரும்பி வந்திருக்கிறான்'

என்று குதூஹலத்துடன் சேர்ந்து காமஸுகத்தை அநுபவித்தாள் என்று மஹர்ஷி கூறியிருப்பதால், அவள் எப்படி பதிவ்ரதையாவள் என்கிற ஸம்சயம் எல்லோருக்கும் உண்டாகும். அந்த ஸந்தேஹம் உண்மை அறிந்தவர்களுக்கு உதியாது. உண்மை பின் வருமாறு :— கௌதமர் ஒரு ஸமயம் மிகவும் கடுந்தவம் புரிந்தார். எந்தத் தேவபதத்தை உத்தேசித்து ரிஷி தபஸ் செய்கிறாரோ என்கிற ஸம்சயம் தேவர்களுக்கு ஏற்பட்டு, எந்த உபாயத்தாலாவது அவருடைய தபஸ்ஸை அழிக்கவேண்டு மென்று எண்ணமுண்டாகி, தேவராஜனை நாடி, 'தேவராஜனே! நீர் தேவ மாயையைக் கைக்கொண்டு அவருடைய தர்மபத்நியின் மனத்தைக் கலக்கி, அவள் கற்பை அழித்து, மஹர்ஷிக்குக் கோபத்தை உண்டுபண்ணித் தவத்தை அழிக்கவேண்டும். அதனால் ஏற்படும் அவத்யத்தினின்று நாங்கள் உம்மைப் பாதுகாப்போம்' என்று சொல்லித் தேவராஜனை அனுப்பினார்கள். அவ்வண்ணம் தேவகார்யத்தை நிறைவேற்ற வந்த இந்திரன் தேவ மாயையினால் அஹல்யையின் புத்தியைத் திகைக்கச் செய்து அவளுடன் ஸமாகமம் செய்தான். இந்த விஷயத்தில் தேவமாயைக்கு உடன்பட்டு மெய்ம்மறந்து இந்திரனுடன் சேர்ந்த அஹல்யை வ்யபிசார தோஷத்துக்கு ஆட்படமாட்டாள்.

" வித்யதே கௌதமே ஸத்யம் வித்யதே ப்ராஹ்மணே தப: ।
வித்யதே ஸ்த்ரீஷு சாபல்யம் வித்யதே ஜாதிதோ பயம் ॥ "

என்கிற அபியுக்தர்களின் வசநப்படி, அஹல்யை சாபல்யத்தால் வ்யபிசரித்தாளென்று சிலர் கூறுவார்கள். அஜ்ஞாநத்தால் நேர்ந்த இந்தத் தோஷத்திற்கு,

'இஹ வர்ஷஸஹஸ்ராணி பஹூநி த்வம் நிவத்ஸ்யஸி ।
வாயுபக்ஷா நிராஹாரா தப்யந்தீ பஸ்மஶாயிநீ ।
அத்ருஶ்யா ஸர்வபூதாநாம் ஆஶ்ரமே஽ஸ்மிந் நிவத்ஸ்யஸி ॥
யதா த்வேதத் வநம் கோரம் ராமோ தஶரதாத்மஜ: ।
ஆகமிஷ்யதி துர்தர்ஷஸ் ததா பூதா பவிஷ்யஸி ॥'

என்று கௌதமரிட்ட சாப பலாநுபவம் ப்ராயச்சித்தமாயிற்று. ஸ்ரீ ராமபிரானுடைய பாவநமான தர்சநமும் அவளுடைய பாபத்துக்கு மஹா ப்ராயச்சித்தமாக ஏற்பட்டது. ஆகையால் அவள் நிர்த்தோஷையாக ஆய்விட்டாள். இவ்விஷயத்தில்,

" தாரயைநாம் மஹாபாகாம் அஹல்யாம் தேவரூபிணீம் ॥ "

என்று விச்வாமித்ரரே அஹல்யையைப் புகழ்ந்திருக்கிறார். ஸ்ரீராமபிரானும் தபஸ்விநியாக ஜ்வலிக்கிற அஹல்யையைக் கண்டாரென்று மஹர்ஷி கூறியிருப்பதினாலேயே, அவருடைய மஹிமை வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதது என்று புலப்படுகிறது. தவிரவும்: ராம லக்ஷ்மணர்களே அஹல்யையின் சரணங்களில் நமஸ்காரம் செய்திருப்பதினாலும், அவள் ஆதித்தியத்தை ஸ்ரீ ராமபிரான் ஏற்றுக்கொண்டிருப்பதினாலும், அஹல்யை பதிவ்ரதாசிரோமணியே யாவள்.

தாரையும் பதிவ்ரதை என்று ப்ரஸித்தி பெற்றிருக்கிறாள். இரண்டு தாரைகள் உண்டு. ஒருத்தி ப்ருஹஸ்பதியின் பத்நி; மற்றொருத்தி வாலியின் மனைவி. பதிவ்ரதா கோஷ்டியில் எடுக்கப்பட்ட தாராதேவியானவள் ப்ருஹஸ்பதி பத்நி யல்ல. அவள் சந்திரனுடன் சேர்ந்து புதனைப் பெற்றவள்; கற்பில்லாதவள். இரண்டாமவளான வாலியின் மனைவியான தாரையே பதிவ்ரதை. தன் கணவனான வாலியை ஸம்ஹரித்த ஸ்ரீ ராமபிரானைப் பார்த்த உடனே தன் கணவனைக் கொன்றவன் என்கிற எண்ணத்தையும் துக்கத்தையும் விட்டு,

" த்வமப்ரமேயஶ்ச துராஸதஶ்ச ஜிதேந்த்ரியஶ்சோத்தமதார்மிகஶ்ச ।
அக்ஷய்யகீர்திஶ்ச விசக்ஷணஶ்ச க்ஷிதிக்ஷமாவாந் க்ஷதஜோபமாக்ஷ: ॥"

என்று யோகிகளுக்குங்கூட த்யாநத்துக்கு விஷயமாகாத பரமபுருஷனை நேரில் கண்டு தத்வஜ்ஞாநம் உதிக்கப்பெற்று, பகவானை உள்ளபடி அறிந்து துதிக்க வேண்டுமானால் எவ்வளவு ஸுக்ருதம் செய்தவளாக இருக்கவேண்டும். தாரை பதிவ்ரதையாகில் வாலி இறந்த பிறகு தன் மைத்துனனான ஸுக்ரீவனைக் கணவனாக அவள் அணுகலாமா என்று சிலர் சோத்யம் செய்வார்கள். அது வாநர ஜாதியின் முறையானதால் தோஷமல்ல. அந்த ஜாதியில் பர்த்தா இருக்கும்பொழுது அந்யனை நாடினால் கற்பழிந்தவள் என்பது மஹரிஷிகளின் கொள்கை.

வ்ருத்தம் பதிவ்ரதாயாஸ்து யதாமதி நிரூபித: ।
வாதூலவம்ஶஜாதேந ஸ்ரீநிவாஸேந ஸூரிணா ॥

ஸ்ரீமீமாம்ஸா ஸங்க்ரஹம்

[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜசார்யர்.]

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

176. இனி எவன் யாகத்தைச் செய்யச் சக்தியுள்ளவன் என்பது விசாரிக்கப்படுகிறது.

குருடன், முடவன், செவிடன், ஊமை, மாடு முதலான திர்யக்குகள்—இவைகளுக்கு அறிவு இருப்பதால் மிகுந்த ஸுகமான ஸ்வர்க்கத்தில் ஆசை யுண்டாகலாம். அவர்கள் அதிகாரிகளா? என்று ஸந்தேஹம்.

பூர்வ பக்ஷம்—உண்டு. கேள்வி:—சில அங்கங்களைச் செய்வதில் அவர்களுக்குச் சக்தியில்லையே. நெய்யை ஸம்ஸ்காரம் செய்யும்போது அதை யஜமாநன் பார்க்கவேண்டும். இது குருடனுக்கு முடியாது. விஷ்ணு க்ரமம் என்பதைச் செய்கையில் மூன்று அடி நடக்க வேண்டும்; இது முடவனால் முடியாது. அத்வர்யு சொல்லும் மந்த்ரத்தைச் சொல்ல வேண்டியது; இது செவிடனால் முடியாது. வியாபாரங்களெல்லாம் நடக்கும்போது அநுமந்த்ரணம் செய்யவேண்டும்; இது ஊமையால் முடியாது. திர்யக்குக்கள் வெகு அங்கங்களில் சக்தி இல்லாதவைகள். இவர்கள் எப்படி யாகத்தைச் செய்யலாம் என்பது பதில். "ஸ்வர்க்ககாமோ யஜேத" என்பது ப்ரதாநமான வாக்யம். இதில் எல்லாருக்கும் அதிகாரம் ஏற்படுகிறது. நெய்யைப் பார்ப்பது முதலானவைகளைச் சொல்லும் வாக்யங்கள் முக்யமானவைகள் அன்று. அவைகளைக் கொண்டு முக்யமான வாக்யத்தின் விஷயத்தை ஸங்கோசம் பண்ணுவது (குறுக்குவது) ஸரியன்று. முக்யமான வாக்யத்தை ஒத்து அங்கங்களைச் செய்வதைக் குறைக்கலாம்.

ஸித்தாந்தம்—செய்யமுடியாத வியாபாரங்கள் புருஷார்த்தமா யிருந்தால் அவைகளை விட்டுவிடலாம். அதனால் யாகத்துக்குக் குறைவில்லை. அவைகளை க்ரத்வர்த்தமாக வன்றோ வேதம் விதிக்கிறது. அவைகளை விட்டுவிட்டால் யாகமே ஏற்படாதே. ஆகையால் சக்தியில்லாதவனுக்கு அதிகாரமில்லை. (அதி. 27.)

177. அடுத்த விசாரம் ஸ்திரீகளுக்கு அதிகாரம் உண்டா என்பது; பூர்வபக்ஷம் "ஸ்வர்க்ககாமோ யஜேத" என்கிற வாக்யத்தில் புல்லிங்க

மான (ஆண்பாலான) சொல்லாலே அதிகாரியைச் சொல்லியிருப்பதாலே அதிகாரம் ஸ்திரீகளுக்கு இல்லை. ஒரு கேள்வி:—"க்ரஹம் ஸம்மார்ஷ்டி" என்கிற வாக்யத்தில் வசநத்தை (ஒருமை பன்மை) சொல்லுவதில் கருத்தில்லை என்று சொல்லப்பட்டதே. அப்படியே லிங்கத்தையும் (ஆண்பால் பெண்பால்) சொல்லுவதில் கருத்தில்லை. நீர் சொன்னது எப்படிக் கூடும்? பதில்:—ஒன்று என்னும் ஸங்க்யை ப்ரத்யயத்தின் பொருள். லிங்கம் அப்படியன்று. அது ப்ரக்ருதியின் அர்த்தம். க்ரஹத்தைச் சொல்லுவதில் எப்படிக் கருத்தோ, அப்படியே பும்லிங்கத்தைச் சொல்லுவதிலும் கருத்து உண்டு.

ஸித்தாந்தம்—ஒன்று என்னும் ஸங்க்யையைச் சொல்லுவதில் கருத்தில்லை யென்று சொன்னதற்குக் காரணம், அது ப்ரத்யயத்தின் பொருள் என்பது அன்று; அது உத்தேச்யத்தில் சேர்ந்திருந்தது என்பதுதான். இங்கேயும் அப்படியே யிருக்கிறது. எவனுக்கு ஸ்வர்க்கத்தில் ஆசையோ, அவன் யாகம் செய்யவேண்டும் என்பது அவ்வாக்யத்தின் பொருள். பும்லிங்கமும் உத்தேச்யத்தில் சேர்ந்திருப்பதால், ஸங்க்யையைப்போலவே இருக்கிறது. அதைச் சொல்லுவதில் கருத்தில்லை.

(2) லிங்கம் ப்ரக்ருதியின் பொருள் என்று சொன்னது பிசகு. ஸ்திரீ லிங்கம் பிப் முதலான ப்ரத்யயத்தாலே காட்டப்படுகிறது. "வரக்ஷாநு" என்கிற சொல்லில் இரண்டாவது விபக்தியின் அங்கமான "ந" என்கிற எழுத்தால் புல்லிங்கம் காட்டப்படுகிறது. நபும்ஸக லிங்கம் "காலம்" என்கிற சொல்லின் முதலாவது விபக்தியின் ஏகவசநத்தால் காட்டப்படுகிறது.

(3) மேற்சொன்ன காரணங்களால் ஸ்திரீகளுக்கும் அதிகாரமுண்டு. (அ. 37.)

178. ஸ்திரீகளுக்கு யாகம் செய்ய அதிகார மிருந்தால், அவள் அதைத் தனியாய்ச் செய்யலாமா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—செய்யலாம். 'யஜேத' என்கிற சொல்லில் ப்ரத்யயம் ஒன்று என்கிற ஸங்க்யையைச் சொல்லுகிறது. அது உத்தேச்யத்தில் சேர்ந்திருந்தால், அதைச் சொல்லுவதில் கருத்தில்லை யென்று சொல்லலாம். அப்படியில்லை. ஆகையால் யாகத்தை ஒருவர்தான் செய்யவேண்டியது. புருஷனும் தனியாய்ச் செய்யலாம். ஸ்திரீயும் தனியாய்ச் செய்யலாம்.

ஸித்தாந்தம்-சொன்னபடி ஒவ்வொருவரும் தனியாய்ச் செய்தால் யாகத்துக்குக் குறைவு உண்டாகும். கர்மங்களைச் செய்யும்போது, பத்நீ பார்க்க

வேண்டும், யஜமானன் பார்க்க வேண்டும் என்று இந்த இரண்டும் சொல்லப்பட்டிருக்கின்றன. யஜமானன் செய்யும் யாகத்தில் பத்நீ பார்ப்பதில்லாமல் போகும். பத்நீ செய்யும் யாகத்தில் யஜமானன் பார்ப்பதில்லாமல் போகும். இந்தக் குறைவுகள் வாராமைக்காக இரண்டு பேர்களுக்கும் சேர்ந்து அதிகாரம்.

(2) இதனால் ஒன்று என்கிற ஸங்க்யைக்கு விரோதமில்லை. எப்படி அக்நியும் ஸோமனும் சேர்ந்து அக்நிஷோம என்று ஒரே தேவதை ஆகிறார்களோ, அப்படியே புருஷனுக்கும் ஸ்திரீக்கும் சேர்ந்து ஒரே அதிகாரம். சேர்ந்துதான் அவர்கள் ஒரு கர்த்தாவாகிறார்கள். (அதி. 4.)

179. இதன் மேலே ஒரு கேள்வி—யஜமானனும் ஸ்திரீயும் இரண்டு பேர்களும் யஜமானனாய் இருப்பதால் யஜமானன் செய்யும் தேவதையின் உபஸ்தானம் அநுமந்த்ரணம் முதலான வியாபாரங்களைப் பத்நீயும் செய்ய வேண்டாமா? யஜமானம் என்கிற ஸமாக்யையால் புருஷனுக்கு எப்படி அவைகள் உண்டோ அப்படி ஸ்திரீக்கும் என்று பூர்வபக்ஷம்.

ஸித்தாந்தம்—அவைகள் ஸ்திரீக்கு இல்லை. அவளுக்கு அத்யயநம் இல்லாதபடியால் அவளால் அவைகளைச் செய்யமுடியாது. யஜமானன் தான் அவைகளைச் செய்யவேண்டியது. (அதி. 6.)

180. அடுத்த கேள்வி—பிராம்மணன் முதலான நாலு ஜாதிகளில் சூத்ர ஜாதியில் பிறந்தவனுக்கு அதிகாரமுண்டா?

பூர்வபக்ஷம்—யாகம் செய்ய வேதத்தில் சொல்லப்பட்டபடி யாகம் செய்யும் விதம் தெரியவேணும். புஸ்தகங்களைப் படித்தோ, அல்லது அந்தக் காலத்தில் ஒரு ஆசார்யனிடம் கேட்டோ, வேண்டிய விஷயம் அறியலாம். ஆகையால் அதிகாரம் உண்டு.

ஸித்தாந்தம்—இது கூடாது. யாகங்களைச் செய்யும்படி சொல்லுகிற வேதத்தின் விதிகளுக்குப் பிரயோஜநமில்லாமல் போகாமைக்காக வன்றோ சூத்திரன் வேத வித்யை ஸம்பாதிக்கவேணும் என்று கல்பிக்கவேணும். வேதத்தை அத்யயநம் செய்து வித்யையைப் பெற்றிருக்கும் பிராம்மணன் முதலான மூன்று ஜாதியாரும் இருப்பதால், விதிகள் அவர்களைப் பிடித்துக் கொள்ளுகின்றன. இதனால் திருப்தியை யடைந்து சூத்திரர்களைத் தேடுகிறதில்லை. (அதி. 7.)

181. கீழே சொன்ன முடிவுக்கு இரண்டு விலக்குகள் இருக்கின்றன, அவைகளாவன—

(1) '**வர்ஷாஸு ரதகார ஆததீத**' என்று ஒரு வாக்யம். வைச்ய ஸ்திரீயினிடம் க்ஷத்ரியனுக்குப் பிறந்த பிள்ளை மாஹிஷ்யன். சூத்ர ஸ்திரீயிடம் வைச்யனுக்குப் பிறந்த பெண் கரணி; கரணியிடம் மாஹிஷ்யனுக்குப் பிறந்தவன் ரதகாரன். இப்படி இந்தச் சொல்லுக்குப் பொருள் ரூடியால் ஏற்பட்டிருப்பதால், ரதத்தைச் செய்கிறவன் ரதகாரன் என்று யோகத்தால் பொருள் கொள்வது கூடாது. அவன் வர்ஷ ருதுவில் ஆதாநம் செய்யலாம் என்று விதி. (அதி. 12.)

(2) ஒருவிதமான இஷ்டியைச் சொல்லி, "**ஏதயா நிஷாதஸ்தபதிம் யாஜயேத்**" என்று ஒரு வாக்யம் இருக்கிறது. இதன் பொருள்:—'நிஷாத ஸ்தபதியை இந்த இஷ்டியைச் செய்விக்கவேண்டியது' என்பது. நிஷாத ஸ்தபதி என்கிற சொல்லுக்கு (1) நிஷாதர்களுடைய ஸ்தபதி (தலைவன்) என்றும், (2) நிஷாதனான ஸ்தபதி என்றும் இரண்டு வழியால் அர்த்தம் பண்ணலாம். முன் சொன்னபடி பொருள் கொண்டால், நிஷாத என்கிற சொல் நிஷாத ஸம்பந்தமுள்ளவனை லக்ஷணையால் சொல்லவேணும். பின் சொன்னபடி பொருள் கொண்டால் லக்ஷணையில்லை. ஆகையால் அதுவே ஸரியானது. நிஷாதன் என்கிறவன் ஜாதிக் கலப்பால் உண்டானவன். அவனுக்கு இந்த அதிகாரம் வேதம் கொடுத்திருப்பதால் யாகம் செய்யும் காலத்தில் ஒரு ஆசார்யன் உபதேசத்தால் வித்யையைப் பெற்று யாகம் செய்யலாம். (அதி. 13.)

ஸ்ரீ க்ருஷ்ண தாதார்ய மஹா தேசிக சரிதம்

[ஸ்ரீ. உ.ப. வித்வான் ஐயா. க்ருஷ்ணதாதாசார்யர்.]

ஸ்ரீ தேசிகன் திருவவதாரஸ்தலமான தூப்புல் நகரிலே ஒரு புரட்டாசித் திருவோணத்தில் ஸ்ரீ தேசிகனுக்குத் திருமலை ஸ்ரீநிவாஸதாதாசார்யர் காலம்முதல் நடந்துவந்த ஸ்ரீ பேரருளாளன் மங்களாசாஸநோத்ஸவம் சத்ருபாதையாலே ஒரு ஸம்வத்ஸரத்தில் 8-வது உத்ஸவம் முதல் செய்துவைத்து ஸந்நிதிக்கு எழுந்தருளப்பண்ணி, போராதுக்காக்ராந்தராய்த் திருக்காப்புச் சேர்த்துவர, பிறகு 60 ஸம்வத்ஸரங்கள் திருவாராதநம் கூட நடவாமலிருந்து வந்தது. பிறகு திவ்யமங்கள விக்ரஹம் இதுவென்றுகூட அறியப்போகாமல் இருந்தமை கண்டு, ஸ்ரீ ஸ்வாமியும், ஸ்ரீ தேசிகன் திருவடிகளில் உண்டான பக்தி ப்ரகர்ஷத்தால் நூதநமான ஓர் அர்ச்சாதிருமேனி உகந்தருளப் பண்ணிவைத்தார். அவ்வளவிலே நைநாராசார்யர் ஸ்வப்நத்திலே எழுந்தருளி, 'நாம் உகந்தருளப் பண்ணினதும், உமது கூடஸ்தரான திருமலை ஸ்ரீநிவாஸதாதாசார்யர் முதலாக உம் முன்னோர்களாலே திருவாராதநம் செய்யப்பட்டுவந்ததுமான அர்ச்சா திருமேனி அங்கேதானே இருக்கிறது. நீர் விரோதி நிரஸநம் பண்ணித் திருவாராதநம் முதலாக

எல்லாம் பண்ணப் பாரும்; நூதநமாக ஒன்றும் வேண்டாம்; நீர் நினைத்தபடி எல்லாம் கைகூடும்' என்று நியமித்தருளினார். அந்த ஸ்வப்ந நியோகத்தைப் பலமாகக்கொண்டு விரோதி நிரஸநத்திலே ப்ரவர்த்திக்கும்போது, நடுவிலே பெருமாளுக்குச் சிலருடைய தௌராத்ம்யத்தாலே சிறைக்கட்டு நேரும்போலிருந்தது. அப்போது ஸஹாயபூதரா யிருப்பார் சிலர் பயந்து, ஸ்ரீஸ்வாமி ஸந்நிதியிலே மிகுந்த துக்கத்துடன், 'எம்பெருமானாருக்கு க்ருமிகண்ட சோழன்போலே நமக்கு இப்போது அதிகாரி ஏற்பட்டான்; இந்தக் கார்யம் நமக்கு அடுத்ததன்று; கையெழுத்துக் கொடுத்து ஒதுங்கிவிடுவோம்; இல்லாவிடில் நம் எல்லார்க்கும் சிறைக்கட்டு தப்பாது' என்று விண்ணப்பம் செய்தார்கள். ஸ்ரீ ஸ்வாமியும் அதிதைர்யத்துடன் 'வன்சிறையி லவன் வைக்கில் வைப்புண்டாலென் செய்யுமே' என்கிற பாசுரத்தை அருளிச்செய்து, நைநாராசார்யர் திருவடிகளில் பரத்தை ஸமர்ப்பித்துச் செய்யவேண்டும் கார்யங்களைக் குறைவற நடத்திக்கொண்டு வந்தார். அதிகாரியும் விரோதிகளைக் கொண்டு தானே ஸ்ரீ ஸ்வாமி ப்ரபாவத்தைத் தெரிந்துகொண்டு, ஸ்ரீ ஸ்வாமி திருவுள்ளப்படியே வ்யவஹாரத்தை முடித்து வைத்தார். எல்லாரும் பேர உகந்தார்கள். பின்பு ஸ்ரீ தூப்புல் தேசிகன் ஸந்நிதியைக் கைப்பற்றி புநச்ச விசேஷமாக ஸம்ப்ரோக்ஷணம் முதலியன செய்து, நித்ய விசேஷ ஆராதநோத்ஸவங்களும், புரட்டாசி மாஸத்தில் திருவோணத்துக்கு முன் ஒன்பது திநங்களிலே இரண்டு காலமும் விசேஷோத்ஸவங்களும் நடத்திவைத்தார்.

ஸ்ரீ.தேப்பெருமாள் ஸந்நிதி அர்ச்சக கைங்கர்யம் ஸ்ரீ பாஞ்சராத்ரம் தேன வேதியர் குலத்தவரான ஐயா பட்டரென்று ப்ரஸித்தரான வாஸுதேவபட்டர் ஸ்வாமியாலே, ஸ்ரீ தேசிகன் திருவவதாரத்தன்று திருமலையில் ஸ்ரீ பேரருளாளன் மங்களாசாஸந வ்ருத்தாந்தத்தைக் கேட்டு, அப்படியே திருவவதார தினத்தன்று ஸ்ரீ பேருளாளன் திருப்பல்லாக்கு சத்ரசாமரங்கள் முதலிய ஸமஸ்த பரிகரங்களையும் மரியாதையுடனே அனுப்பி, ஸமஸ்த பிருதுகளோடு ஸ்ரீ தேசிகனை ஸ்ரீ பேரருளாளன் ஸந்நிதிக்கு எழுந்தருளப் பண்ணிவைத்தார். அன்றியும் ஸ்ரீ தேசிகன் ஸந்நிதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீதாத தேசிகனுக்குத் திருமாலை தொடக்கமாக வரிசைகள் ஸாதித்து, அங்கே தானே கைத்தலத்திலே எழுந்தருளச் செய்து, ஸ்தோத்ராநுஸந்தாநத்துடனே, சக்ரவர்த்தித் திருமகன், திருவனந்தாழ்வான், கருமாணிக்கப்பெருமாள், திருமடைப்பள்ளி நாச்சியார், கண்ணன், பெருந்தேவித்தாயார், பெரிய திருவடி நாயனார், ஸ்ரீந்ருஸிம்ஹன், ஆண்டாள், விஷ்வக்ஸேநர் இவர்களை மங்களாசாஸநம் செய்வித்து, திருமலையிலே எழுந்தருளப் பண்ணிவைத்து, ஆஸ்தாந நிர்வாஹகர் அருளப் பாடிட அர்த்த மண்டபம் எழுந்தருளினார். பின்பு அந்தரங்க கைங்கர்யபரர் தாங்களே கர்ப்பக்ருஹத்திலே பெருமாள் திருமுன்பே எழுந்தருளப் பண்ணிவைத்து, விபவத்தில் மங்களாசாஸநம் செய்தருளும் க்ரமத்திலே ஸ்தோத்ர ப்ரபந்தாநுஸந்தாநங்களுடனே, மங்களாசாஸநம் செய்வித்து, அநந்தரம், மஹா மண்டபத்தின் எதிரிலிருக்கும் கோலப்படியிலே எழுந்தருளப் பண்ணிவைத்து, தீர்த்தம், திருப்பரியட்டம், திருமாலை, ஸ்ரீசடகோபன் முதலியன ப்ரஸாதித்து, திருப்பாவை சாத்துமுறையும் செய்வித்து, கோஷ்டியில் தீர்த்தமும் ஸ்ரீ சடகோபமும் அங்குள்ள முதலிகளுக்கெல்லாம் ப்ரஸாதிப்பித்து, ஸ்ரீ பேரருளாளன் ஸ்ரீ தேசிகனுக்கு வழிகொண்டு விடுவதைப் போலே, திருமலையி

லிருந்து புறப்பட்டருளி, திருவபிஷேக மண்டபத்தளவும் எழுந்தருளி வழிவிட்டு, ஆஸ்தாந நிர்வாஹகர் அருளப் பாடிட்டு விடை கொடுக்க, பரிஜந பரிவர்க்கங்கள் கண்ணுக்குத் தோன்றுமளவும் கடாக்ஷித்திருந்து, குணவத் புத்ர விச்லேஷத்திலே பிதாவுக்கு முகத்திலே வாட்டம் தட்டுமாப்போலே திருமுகம் வாடி உள்ளே எழுந்தருள்வர்.

அநந்தரம், புஷ்கரிணிக் கரையில் ஸ்ரீ வராஹநயனார், திருவாழி யாழ்வான், ஆழ்வார், மற்றுமுள்ள ஆசார்யர்கள் ஆகிய இவர்களை, மங்களாசாஸநம் செய்துவைத்து, மறுபடியும் திருப்பல்லக்கிலேதானே எழுந்தருளப்பண்ணி, மிகுந்த ஸம்ப்ரமத்துடனே திருவீதி வலமாக ஸந்நிதிக்கு எழுந்தருளப் பண்ணிவைத்தார்.

ஸ்ரீ பேரருளாளன் வைகாசித் திருநாள், அவப்ருதத்தன்று திருவோண மாகையால், அவப்ருதம் ஆன பிறகு, ஸ்ரீ தூப்புல் தேசிகனுக்கு ஸாயங்காலம் விசேஷோத்ஸவம் செய்துவைத்து, ஸ்ரீ பேரருளாளனை ராத்ரி உத்ஸவத்திலே, ஸ்ரீ தூப்புலில் எழுந்தருளப் பண்ணிவைத்து, ஸ்ரீ தேசிகனுக்கு விசேஷ மர்யாதைகள் செய்வித்துத் திருவாய்மொழி சாத்துமுறையும் நடத்தி வைத்தருளினார். ஸ்ரீ தூப்புல் தேசிகனுக்கு ப்ரதிஸம்வத்ஸரம் ஐந்து தினங்கள் ஸ்ரீ பேரருளாளனிடமிருந்து விசேஷ மர்யாதை. இவைகளில் வைகாசி கருடோத்ஸவத்தன்று நடந்துவரும் மர்யாதை, திவ்ய ப்ரபந்த விஷயத்திலே, கச்சித் தெருவில் அத்வைதிகளால் வந்த உபரோதத்தை நிவர்த்திப்பித்து, திருச்சின்னமாலை அருளிச்செய்து, ஒற்றைத் திருச்சின்னம் பரிமாறும்படி நியமிக்கையாலே ஸ்ரீ பேரருளாளன் தானே உகந்து ஸ்ரீ தேசிகன் விபவத்திலே தொடங்கி நடந்து வருவதாயிருக்கும். ஐந்தாம் உத்ஸவம் நாச்சியார் திருக்கோலத்தன்று மர்யாதை, ஸ்ரீ தேசிகன் அர்ச்சையிலே திருமலை ஸ்ரீநிவாஸாசார்யர், தாம் ஆராதித்து வந்த பெருமைக்கு நடத்திவைத்தது. சித்ரா பௌர்ணமி யன்று மர்யாதை, ஸ்ரீ கோடிகந்யகாதாநம் லக்ஷ்மிகுமார தாததேசிகன் செய்துவைத்தது. வைகாசித் திருவோணத்தன்று நடக்கும் மர்யாதை, ஸ்ரீ ஸ்வாமி தாமே செய்துவைத்தது. சித்திரை மாதத்திலே ஸ்ரீ பேரருளாளன் வநவிஹாரோத்ஸவத்திலே ஒரு மர்யாதை உண்டு. அது அந்த உத்ஸவ கைங்கர்யபரர் ப்ரார்த்தனையாக நடந்துவருகிறதென்று ஸம்ப்ரதாய வ்ருத்தர்கள் சொல்லுவார்கள்.

ஸ்ரீ ஸ்வாமி பரஸம்ப்ரதாயத்திலே வசநபூஷண மீமாம்ஸா பாஷ்யம், ரஹஸ்யத்ரய மீமாம்ஸா பாஷ்யம், சரமச்லோக டிப்பணீ, சதுச்லோகீ வ்யாக்யாநம், தாத்பர்ய தீபிகை—இந்த க்ரந்தங்கள் அசாஸ்த்ரீயமாயும் அஸம்ப்ரதாயமாயும் இருக்கக் கண்டு, இவைகளுக்கெல்லாம் கண்டநம் செய்தருளவேணுமென்று திருவுள்ள முகந்தருளினார். அப்போது அளவூர் நடாதூர் ராஜகோபாலாசாரியர் என்னுமொரு வித்வான் வசநபூஷண மீமாம்ஸை என்கிற பரபக்ஷ க்ரந்தத்தையும், அதற்குக் கண்டநமாக ஸ்ரீ பரகால ஸ்வாமி அருளிச்செய்த துரஹஸிக்ஷை என்கிற க்ரந்தத்தையும் ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியில் ஸமர்ப்பித்து, "இந்தத் துரஹஸிக்ஷா க்ரந்தம் ப்ரத்யாக்யாநத்திலே அவ்வளவு பர்யாப்தமாகவில்லை; ஸ்ரீ ஸ்வாமி, பர்யாப்தமாகும்படி ஸமக்ரமமாகக் கண்டநம் செய்தருளவேணும்" என்று ப்ரார்த்தித்தார். தாம் நினைத்ததற்குமேலே பாகவத நியமநமும் இருந்ததென்று கொண்டு 'துரபவதாரீகரணம்' என்று ஒரு க்ரந்தம் அந்த பாஷ்யத்

துக்கு ஸம்பூர்ண கண்டநமாக ஸ்ரீ ஸ்வாமி அருளிச்செய்தார். பாகவத நியமநத்தாலே இந்த க்ரந்தம் திருவவதரித்தது என்பதை,

‘ஸ்ரீவாஸயோகீஶ்வர வாதிஶைலவாக்யாம்ருதாஸ்வாதந ஸம்ப்ரதாய: ।
ஸ்ரீக்ருஷ்ணதாதோத்தம தாஸியோமா ஸூரிகரோ தத்ர ப்ரகடீஜாதம் ॥’

என்று ப்ரதிஜ்ஞையிலே தானே அருளிச்செய்ததாக இந்த க்ரந்தத்திலே ப்ராயச: ரஹஸ்யத்ரய மீமாம்ஸா பாஷ்யத்துக்கும் கண்டநம் அருளிச்செய்த ப்ராயம். தாத்பர்ய தீபிகையிலுள்ள அபார்த்தங்களுக்கு ஸ்ரீந்யாய ஸித்தாஞ்ஜந வ்யாக்யாந ஸ்ரீ ரசநபேடிகையிலே ஈச்வர பரிச்சேத ப்ரகரணத்திலே கண்டநம் அருளிச்செய்தார். ‘இயம் கேவல ஶுக்ஷீப’ என்கிற காரிகா வ்யாக்யாநத்திலே சரம ச்லோக டிப்பணியிலும் சதுச்லோகி வ்யாக்யாநத்திலுமுள்ள அபார்த்தங்களுக்குக் கண்டநம் அருளிச் செய்தார். காரிகா வ்யாக்யாந மென்று தனியே ஒரு க்ரந்தம்; இது ஸ்ரீந்யாய ஸித்தாஞ்ஜநத்தில் அடங்கியதன்று. இந்த க்ரந்தத்துக்கு ‘இயம் கேவல தத்ராதி ஶ்லோகாய விசாரம்’ என்றும் பெயருண்டு.

ஸ்ரீந்யாய ஸித்தாஞ்ஜநத்துக்கு ஸ்ரீரசநபேடிகை என்றொரு வ்யாக்யாநம் அருளிச் செய்தார். ஸ்ரீ ந்யாயஸித்தாஞ்ஜந மென்னும் க்ரந்தம் நம் ஸித்தாந்தத்திலே ப்ரமேய நிஷ்கர்ஷம் பண்ணி, அவற்றிற்கு லக்ஷண நிஷ்கர்ஷம் பண்ணுகிறது. இந்த க்ரந்தத்துக்குத் தசோபநிஷத் பாஷ்யகாரர் ப்ராசீந ஸரணியிலே ஒரு வ்யாக்யாநம் அருளிச் செய்திருக்கிறார். மைஸூர் அநந்தாழ்வான் ஸித்தாந்த ஸித்தாஞ்ஜந மென்னும் ஒரு க்ரந்தம் நவீந ரீதியிலே செய்து, ஸ்ரீ ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் அருளிச் செய்த அர்த்தங்களை அநாதரித்து, ஸ்வதந்த்ரமாகச் சில அர்த்த நிஷ்கர்ஷமும், சில இடங்களிலே விருத்தமாயும் பல நிஷ்கர்ஷம் பண்ணியும், மற்றும் சில வாதங்கள் ஸ்ரீ பாஷ்யம் இன்னும் ஸ்ரீ தேசிகன் முதலான ப்ராசீநாசார்ய ஸ்ரீ ஸூக்திகளுக்கும் விருத்தமாகச் செய்திருக்கிறார். ஸ்ரீ ஸ்வாமி ஸ்ரீ ந்யாயஸித்தாஞ்ஜந வ்யாக்யாநம் ரங்க ராமாநுஜ ஸ்வாமி வ்யாக்யாநுஸாரி. இவ் வர்த்தத்தை,

“ஸ்ரீரங்கராமாநுஜயோகிவர்ய ஸம்ப்ரதாயைவ வ்யாக்யாநபூர்வகை: ।
ஸ்ரீஸூக்திஸூக்திவ்யாக்யாஸூக்தம் ஸம்தஸம் தாஸவராயதே ॥”

என்று ப்ரதிஜ்ஞையிலேதானே அருளிச் செய்தார். இந்த வ்யாக்யாநம் நவீந தர்க்க ரீதியிலே லக்ஷண பரிஷ்காரங்கள் செய்து அநுகமங்களாலும் வித்வதாநந்தஜநகமாயிருக்கும். அநந்தாழ்வான் ஸ்வதந்த்ர நிஷ்கர்ஷங்களுக்கும் இதிலேயே அருளிச் செய்திருக்கிறார். ஆகையால் அவர் வாதங்களுக்குத் தனித்தனியே கண்டநம் அருளிச் செய்யவில்லை. ப்ரஹ்மாநந்தீயம் என்கிற அத்வைத க்ரந்தத்துக்கு அநந்தாழ்வான் ந்யாயபாஸ்கரம் என்றொரு க்ரந்தம் அருளிச் செய்திருக்கிறார். அதில் சொன்ன கண்டநங்கள் அவ்வளவு பொருந்தவில்லை யென்றுகொண்டு ஸ்ரீ ந்யாயஸித்தாஞ்ஜநம் ஈச்வர பரிச்சேத வ்யாக்யாநத்திலே அந்த கண்டநத்திலே தோஷங்களைக் காட்டி வேறு விதமாக ப்ரஹ்மாநந்தீயத்திலே தோஷோத்காடநம் பண்ணியும், மற்றும் ப்ரஹ்மாநந்தீயத்திலே ஆவச்யகமாயிருக்கும் சில அர்த்தங்களுக்குக் கண்டநமும் அருளிச் செய்திருக்கிறார். ஸ்ரீ ஸர்வார்த்த ஸித்தியிலும் இம்மாதிரியான விமர்சங்கள் அநேகம் உண்டு.

(தொடரும்)

அத்திகிரி அருளாளனும் ஆழ்வார்களும்

[ஸ்ரீ. உப. ஸி. நரஸிம்ஹாசாரியர், அட்வொகேட், சென்னை.]

ஆழ்வார்கள் அவதரித்த காலத்துக்கு முன்னரே அயோத்யா, மதுரா, மாயா, காசி, காஞ்சீ, அவந்திகா, துவாரகா என்னும் ஏழு நகரங்களும் சிறந்த புண்ய க்ஷேத்ரங்கள் என்பது நூலோர் கொள்கை. அவ் வேழினுள்ளும் “நகரேஷு காஞ்சீ” என்றும், “முத்தி தரும் நகரேழில் முக்கியமாங் கச்சி” என்றும் சொல்லுகிறபடி, காஞ்சிமா நகரம் மிகவும் சிறப்புற்றது என்பதும் அந்நூலோர் துணிபு. புண்யகோடி, காமகோடி, ருத்ரகோடி என்னும் மூன்று கோடிகளும் அமைந்துள்ளது அந்நகர்.

ஆழ்வார்களால் மங்களாசாஸநம் செய்யப்பட்ட திருப்பதிகள் 108-ல், தொண்டை நாட்டில் 22 திருப்பதிகள் உள்ளன. அவற்றுள் முதன்மையானது ‘ஹஸ்திகிரி’ என்னும் திருப்பதி. மற்றும் 13 திருப்பதிகள் சேர்ந்து, 14 திருப்பதிகள் காஞ்சீபுரத்தில் உள்ளன. ஆகையால் ‘ஹஸ்திகிரி’ என்னும் திருப்பதி ஆழ்வார்களால் மங்களாசாஸநம் செய்யப்பட்ட திவ்ய தேசங்களில் ஒன்றும். இன்றேல் 108-ல் ஒன்று குறைந்துபோம். அந்த ஹஸ்திகிரிக்கு நாதன் தேப்பெருமாள் என்கிற பேரருளாளன் என்பது ஸுப்ரஸித்தம். ஒவ்வொரு கோவிலிலும் ப்ரதாநமான எம்பெருமான் தவிர, மற்ற திவ்ய தேசத்து எம்பெருமான்களையும் சுற்றுக் கோவில்களாக ப்ரதிஷ்டை செய்வது வழக்கம். அதுபோல் பேரருளாளன் ஸந்நிதியிலும் மலையடிவாரத்தில் அழகிய சிங்கர் ஸந்நிதியும், பக்கத்தில் சக்ரவர்த்தித் திருமகன் ஸந்நிதி முதலிய பல சுற்றுக் கோவில்களும் உண்டு. ஆனால் அவ்வெம்பெருமான்கள் ஒருவரும் ஹஸ்திகிரி நாதன் ஆகமாட்டார்கள்.

அத்தி என்பது ஹஸ்தி என்னும் வடசொல்லின் திரிபு. அதற்கு யானை என்பது ஒரு பொருள். இந்திரனுடைய ஐராவத யானை ஒரு குன்று வடிவங்கொண்டு எம்பெருமானைத் தாங்குவதாலும், கஜேந்திராழ்வான் ஒரு யுகந்தோறும் நாடாத மலர் நாடி வாடாத மலரடிக் கீழ் வைத்து வணங்கினமையாலும், அஷ்ட திக்கஜங்கள் அர்ச்சித்தமையாலும், அம்மலைக்கு ‘ஹஸ்திகிரி’ அல்லது ‘அத்திகிரி’ என்றும், அம்மலையின்மீது ஔபநிஷத பரம புருஷ ஸ்வரூபியான எம்பெருமானுக்கு ‘ஹஸ்திகிரி நாதன்’ என்றும் ‘அத்தியூரான்’ என்றும் பெயர் உண்டாயிற்று என்பர். இராமாநுச நூற்றந்தாதியில், “தென் அத்தியூரன் கழலிணைக் கீழ்ப் பூண்ட அன்

பாளன்" என்னும் பாசுரத்தில் அத்தியூரன் என்பது பேரருளாளன் என்பதில் ஐயமில்லை.

"உலகேத்து மாழியான் அத்தியூரான்" என்றும், "அத்தியூரான் புள்ளை யூர்வான்" என்றும் முதலாழ்வார்களில் ஒருவர் மங்களாசாஸநம். இங்கும் 'அத்தியூரான்' என்பது அத்தியூருக்கு நாதனை பேரருளாளனே யன்றி, அம்மலை யடிவாரத்தில் சுற்றுக் கோவில் அழகிய சிங்கர் அல்லர் என்பது ஸுஸ்பஷ்டம். இராமானுச நூற்றந்தாதியில் திருவரங்கத்தமுதனார் 'அத்தியூரன்' பேரருளாளன் என்றும், திருவந்தாதி 'அத்தியூரான்' பேரருளாளன் அன்று என்றும் பொருள்கொள்ள எவ்வித ந்யாயமும் இல்லை. எந்தப் பூர்வாசார்யர்களாவது 'அத்தியூரான்' என்பது அழகிய சிங்கர் என்று நிர்வஹிக்கவில்லை. அப்பாசுரத்தில் "தானவனை வன்னெஞ்சங் கீண்ட மணிவண்ணன்" என்பது போல் அதற்கு முன் உள்ள பாடகத் தெம்பெருமான் பாசுரத்திலும் காணலாம். "அந்திப்போ தவுணனுட லிடந்தானை" என்று ஸ்ரீ ரங்கநாதன் விஷயமான பாசுரத்திலும் உள்ளது. அவையனைத்தும் அவ்வெம்பெருமான் பெருமையைப் பேசியதாகும்.

"வரந்தரும் மாமணி வண்ணன்" என்பது திருமங்கையாழ்வார் மங்களா சாஸநப் பாசுரம். இதற்கு வ்யாக்யாநம் செய்த பெரியவாச்சான் பிள்ளை, "அருளாளப் பெருமாளாய் நின்று ஸர்வாபேக்ஷிதங்களையும் கொடுக்கிறவனுக்கு வாஸஸ்தாநம்" என்றும், அரும்பதக்காரர் "அருளாளப் பெருமாள் என்று தேப்பெருமாளுக்குப் ப்ரஸித்தமான திருநாமமிறே. எம்பெருமானார் யஜ்ஞ மூர்த்திக்கு அருளாளப் பெருமாள் என்று தேப்பெருமாளுடைய திருநாமம் சாற்றிற்றும் ப்ரஸித்தமிறே" என்றார்.

"கல்லுயர்ந்த நெடுமதிள்சூழ் கச்சிமேய களிறு" என்பது திருநெடுந்தாண்டகம். இது பாடகத் தெம்பெருமானைக் குறிக்கும் என்பர் சிலர். பாடகத்தில் கல்லுயர்ந்த நெடுமதிள்களே இல்லை. அது ஒரு சிறு கோவில். 'களிறு' என்னும் ப்ரயோகம் ஹஸ்திகிரி நாதனுக்கு அமையுமே யன்றி மற்றொருவருக்கும் அமையாது. "ஐயன் பாழியில் ஆனை போர்க்கு உரித்தாமோ?"

"கச்சி வெஃகாவிற் கிடந் திருந்து நின்றதுவு மங்கு"—முதலாழ்வார் காலத்தில் நின்ற திருக்கோலமான பேரருளாளனும், இருந்த திருக்கோலமான அழகிய சிங்கரும், கிடந்த திருக்கோலமான யதோக்தகாரியும், ஆகிய மூன்று எம்பெருமான்கள் உள்ள ஸ்தலத்திற்கு 'வெஃகா' என்னும் திருநாமம் என்பது சிலர் நிர்வாஹம். 'கச்சி வெஃகா' என்பதை ஓரே திவ்ய

தேசமாகக் கொண்டால், யதோக்தகாரி ஸந்நிதியில் கிடந்த திருக்கோலமே யொழிய நின்ற திருக்கோலமாவது இருந்த திருக்கோலமாவது கிடையாது. மூன்று திவ்ய தேசங்களும் சேர்ந்ததுதான் கச்சிவெஃகா. கச்சியிலும் வெஃகாவிலும் என்று இரண்டு திவ்யதேசங்களாகப் பொருள்கொண்டாலும், கச்சியில் நின்ற திருக்கோலம் பேரருளாளனே யன்றி வேறில்லை. 'கச்சி' என்பது 'காஞ்சீ' என்னும் வடசொல் திரிபாய், ப்ரஹ்மாவால் நிர்மாணம் செய்யப்பட்ட நகர் என்று பொருள்படும். "நின்ற தெந்தை யூரகத் திருந்த தெந்தை பாடகத்து" என்கிறபடி ஊரகத்து எம்பெருமானையும் பாடகத்து எம்பெருமானையும் 'கச்சி' என்னும் பதப்ரயோகம் குறிக்கும் என்று சொல்வது பொருந்தாது. பாடகத் தெம்பெருமானுக்கு ஒரு தனிப் பாசுரம் இட்டுளார். (3-30)

ப்ரஹ்மாவின் யாகத்தில் பேரருளாளன் ஆவிர்ப்பவித்தான் என்பது புராண ப்ரஸித்தம். அந்த யாகத்தைத் தடுக்கவந்த சாபஸ்வரூபியான ருத்ரனையும் வேகா ஸேதுவான ஸரஸ்வதியையும் தகைத்து, யாகம் நிர்விக்நமாக ஈடேறுவதற்கே 'அரியுருவா மட்டபுயகரத்தான்', 'வேளுக்கை யாளரி' முதலிய ந்ருஸிம்மாவதாரங்களும், 'யதோக்தகாரி' 'நிலாத்திங்கள் துண்டத்தான்', 'கார்வானத்துள்ளான்' முதலிய ஆழ்வார்கள் பாடல்பெற்ற பல எம்பெருமான்கள் தோன்றினார்கள் என்பதும் புராண ப்ரஸித்தம். அந்த யாகசாலை, திருக்கடன்மல்லையிலிருந்து திண்டிவனம் வரையில் விஸ்தரித்தது நோக்கி, 'கச்சிக் கிடந்தவனூர் கடல்மல்லைத் தலைசயனம்' என்றார் மங்கை மன்னனும். ச்ருதி ப்ரோக்தமான திருநாமங்களான 'தேவாதிராஜன்' 'மஹாதேவி' என்னும் பெயர்கள் பேரருளாளன் பெருந்தேவித் தாயாருக்கே உள்ளன. ஹஸ்திநாத ப்ரபோதிநியான மஹாதேவி மற்று எந்தத் திவ்யதேசத்திலும் இல்லை. யானையின் குரல் யானை மலையி லல்லது மற்றெங்கு?

ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு முக்யமான திருமந்த்ரம், த்வயம், சரமச்லோகம் என்கிற மூன்றுக்கும் ப்ரவர்த்தகர் பேருளாளே என்று ஆழ்வார்களும் ஆசார்யர்களும் நிர்வஹித்துப் போருவர். "பிணியொழித் தமரர் பெருவிசும் பருளும் பேரரு ளாளனெம் பெருமான்....வதரியாச்சிராமத் துள்ளானே" என்றார் திருமங்கையாழ்வார். இப்பாசுரத்திலுள்ள 'பேரருளாளன்' தேப்பெருமாள்தான் என்பதற்குச் ஸாக்ஷ்யமாகக் குருபரம்பரையில் எம்பெருமானாருக்கு வேடனும் வேடுவிச்சியுமான பேரருளாளன் பெருந்தேவித் தாயாரும், "நாங்கள் உத்தர தேசத்தில் ஸித்தாச்ரமத்தில் நின்றும் வருகிறோம்; ஸத்ய வ்ரத க்ஷேத்ரமேறப் போகிறோம்" என்று சொன்னதும்

காணலாம். குருபரம்பரை காஞ்சீபுரத்தார் ஸ்வாமிமார்களாய் எழுதிய தன்று.

எம்பெருமானாருக்கு மதுராந்தகம் ஏரியில் த்வயோபதேசம் ஆனவுடன் அதன் அர்த்தம் என்ன வென்று கேட்க, 'ஹஸ்திகிரி மூர்த்தாவில் காணலாம்' என்கிற ஆசார்ய வாக்யமே இதற்கு ப்ரபல ப்ரமாணம்.

" அமரர்களதிபதி.....துயரறு சுடரடி தொழுதெழென் மனனே " என்கிற திருவாய்மொழி முதல் பாசுரத்தில், 'அமரர்களதிபதி' தேப் பெருமாளே என்று எம்பெருமானார் நிர்வஹித்துப் போந்து, அந்தத் திருவாய்மொழி பத்துப் பாசுரமும் பேரருளாளன் விஷயம் என்றதும், ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன், முதல் நூறு பாசுரமும் பேரருளாளன் விஷயம் என்று ஸாதித்ததும் நன்கு கவனிக்கத்தக்கவை. 'ஆழ்வார் வீதி' என்பதும் அதில் கருடாரூடனாய்ப் பெருமாள் எழுந்தருள்கிறதும் அவ்வூருக்கே அஸாதாரணம். " அருளாழிப் புட்கடவீ ரவர்வீதி யொருநாளென் றருளாழி யம்மானைக் கண்டக்கா லிதுசொல்லி யருள் " என்கிற ஆதாரம் நீங்கவே, 'அருளாழி யம்மான்' பேரருளாளன் என்று பெருமக்களும் பெரியோர் களும் பரிக்ரஹித்துப் போருவார்கள்.

ஆழ்வார்கள், ஸ்ரீரங்கம் திருவேங்கடம் போல் பத்துப் பத்தாகப் பாட வில்லையே எனில், அதற்கு 'உ—ஹஸ்தி' என்றார் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன். மற்றும் அவ்வூர் வேதவித்துக்கள் பேரருளாளன் ஸந்நிதியை 108-வது திவ்ய தேசமாகிய பூலோக பரமபதம் என்றும், பரப்ரம்ஹ விஷயமான முதல் திருவாய்மொழியும் மற்றும் பல பாசுரங்களும் பேரருளாளன் விஷயம் என்றும் நிர்வஹிப்பர். ஆழ்வார்கள் தாங்கள் அவதரித்த தேசத்துக்கு ஸமீபமான ஸந்நிதிகளையே பெரும்பாலும் பேசுவார்கள். நம்மாழ்வார் மங் களாசாஸநம் அநேகமாய்த் திருநெல்வேலி திருவாங்கூர் ப்ரதேசமே. திரு மங்கையாழ்வார், தஞ்சாவூர் திருச்சினாப்பள்ளி திவ்ய தேசங்களில் காலூன் றினார். நம்மாழ்வார் அவதரித்த திருக்குருகூரையாவது அதற்கு அருகி லுள்ள நவதிருப்பதிகளையாவது அவர் மங்களாசாஸநம் செய்யவில்லை. அதனால் என்ன குறை ?

ஆகவே 108-திவ்ய தேசங்களில் 'ஹஸ்திகிரி' ஒன்றானால், ஹஸ்திகிரி நாதனை ஆழ்வார்கள் மங்களாசாஸநம் செய்யவில்லை என்பது எவ்வாறு பொருந்தும்?

நவக்ரஹங்களும் மநுஷ்யர்களும்

[ஆண்டிக்காடு வங்கீபுரம் ஸ்ரீ. உப. ஜகந்நாதாசாரியர்]

ஜோதிஷம் என்பது ஆகாயத்தில் ஜோதிரூபமாக ஸஞ்சரிக்கிற கோளங்களின் ஸஞ்சாரங்களைக் கவனித்து ஆராய்ச்சி செய்து ஸித்தாந்தம் செய்யும் சாஸ்த்ரம். அது இருவகைப்படும். இன்றைதினம் அமாவாஸை, இன்றைதினம் பௌர்ணமி, இன்றைதினம் இன்ன நக்ஷத்ரம், இன்றை தினம் உத்தராயண ஆரம்பம், இன்றைதினம் ஸௌர்ய க்ரஹணம், சந்த்ர க்ரஹணம் என்பவற்றைக் கணக்குப் பார்த்து ஸித்தாந்தம் செய்வது ஒரு வித ஜோதிஸ் சாஸ்த்ரம். இது முதலாவதாகும். இது தான் முதலில் பூர்விகர்களால் வேதாந்தங்களின் அங்கங்களில் ஒன்றான ஜோதிஸ் சாஸ்த்ர மென்று கூறப்படுகிறது. மற்றது: ஒரு ஸ்திரீயோ, புருஷனோ, ஜனித்த காலத்தை நிர்ணயித்துக்கொண்டு, அதை ஆதரவாகக் கொண்டு, க்ரஹ சாரங்களையும் தசாபுக்தி என்று சொல்லப்படும் விபாகங்களையும் கணக் குப் போட்டு, அதைக்கொண்டு ஒவ்வொருவருக்கும் ஜீவதசையில் வரும் காலத்தில் நடக்கப்போகிற விசேஷமான கார்யங்களை யெல்லாம் முன் னறிந்து சொல்வது. இந்த இரண்டாவது அர்த்தத்தில் தான் தத்காலத்தில் ஜோதிஷம் என்கிற பதம் வழங்கப்பட்டு வருகின்றது.

'இப்படியும் ஒரு சாஸ்த்ரம் நிஜமாக இருக்கிறதா ?' என்று கேட்பது உலகில் யாவர்க்கும் ஸகஜந்தான். நம்மவர்களில் அநேகருடைய அநு பவத்தில் ஒரு காலத்திலாவது ஜோதிஸ் சாஸ்த்ரத்தின் உண்மையை நிஜ மாய்க் கண்டறிந்திருக்கக் கூடும்.

ஜோதிஷர்களில் சிலராவது, சில காலத்திலாவது, வரப்போகிற ஸம்ப வங்களை வெகு நாள் முன்னமேயே நிச்சயமாய்ச் சொல்லி, அவ்விதமே நடந்திருப்பது அநேகருக்கு அநுபவத்திலேயே தெரிந்திருக்கும். ஆனால் 'ஒன்று சரியாக நடந்தால், மற்றவைகள் தப்புவானேன் ?' என்று ந்யாய மாய்க் கேட்கக் கூடும். அவ்விதம் தப்புவதற்குக் காரணம் சாஸ்த்ரத்தி னுடைய தோஷமல்ல. அதைக் கண்டறிந்து சொல்லுகிறவர்களுடைய ஞானமும் ஆராய்ச்சியும் அநுபவமுமே காரணமாதல் வேண்டும்.

ஆண்டு வருகிற க்ரந்தங்களின் ரீதியும், ஆபாஸங்களையும், கெடுதல் களையும் சொல்லக்கூடா தென்கிற எண்ணங்களும், கூடியவரையில் நன்மை

யான பலன்களையே சொல்லவேண்டுமென்கிற மனோரீதியும், இவை ஒவ்வொன்றுமே பிசகு உண்டாகவேண்டுவதற்குக் காரணமாகக் கூடுமானால் எல்லாம் ஒன்று சேர்ந்தால் சொல்லவும் வேண்டுமோ ?

ஆதலால், சாஸ்த்ரத்தைக் கொண்டு வருங்காலத்தை நிர்ணயித்துச் சொல்லும் விஷயத்தில் தப்பிப் போவதுதான் ஸகஜமாகத் தோன்றும். அப்படியிருக்க, ஏதாவது ஒரு விஷயத்திலாவது, குறிப்பாயும் விவரமாயும் வருங்காலத்தில் ஸம்பவிக்கப் போகிற ஒரு விஷயத்தை ஜோதிஷர் ஒருவர் நிச்சயமாய்ச் சொல்லும் பக்ஷத்தில், அதைச் சாஸ்த்ரம் பாராமலே ஊஹமாய்ச் சொன்னாரென்று எப்படிச் சொல்லக்கூடும் ? அப்படி நிச்சயமாய்ச் சொல்லும் விஷயங்கள் ஏதோ அகஸ்மாத்தாய் ஸம்பவித்திருக்கலா மென்று எண்ணமுடியாமல், குறிப்பாயும் விவரமாயும் சொல்லப்பட்டிருக்கும் பக்ஷத்தில், அது சாஸ்த்ர பலத்தாலேயே தான் என்று நிச்சயமாய்ச் சொல்ல வேண்டும்.

நம்மவர்களில் அநேகர், ‘வருவது வந்தே தீரும் ; வரப்போகும் கெடுதியை முன்னறிந்து ஏன் துக்கப்படவேண்டும் ? நன்மையானால் முன்னறிவதில் ஸந்தோஷக் குறைவுதானே; ஆதலால் ஜோதிஸ் சாஸ்த்ரமே நிஷ்ப்ரயோஜநம்’ என்று வாதிக்கக் கேட்டிருக்கிறேன். அதைப் பற்றி நான் பிற்பாடு எழுதக்கூடும். அப்படி சாஸ்த்ரம் நிஷ்ப்ரயோஜநமாய் இருப்பினும், அவ்விதம் நிச்சயமாய் ஒரு சாஸ்த்ரம் இருக்குமேயானால் அதனுடைய உண்மையைக் கண்டறிந்துகொள்ள வேண்டியது அத்பாவச்ய மில்லையா? மற்ற சாஸ்த்ரங்களெல்லாவற்றைக் காட்டிலும் அது ஆச்சர்யமான சாஸ்த்ர மல்லவா ? ஒருவனுக்குப் பிறந்தது முதல் இறக்கும் வரையில் நேரிடக்கூடிய நன்மை தீமைகள் யாவற்றையும் க்ரஹங்களுடைய நிலைமையைக் கொண்டு அறியக் கூடுமானால், இதைவிட ஆச்சர்யமான சாஸ்த்ரம் என்னதான் இருக்கக் கூடும் ?

ஆதலால், இந்த சாஸ்த்ரத்தில் நம்பிக்கை உள்ளவர்களும் நம்பிக்கை இல்லாதவர்களும் ஒன்று சேர்ந்து ஆராய்ச்சி செய்து, சாஸ்த்ரம் மெய்யோ பொய்யோவென்று நிர்த்தாரணம் செய்வதுதான் ந்யாயமும் ஆவச்யகமும் ஆகும்.

இன்னும் அநேகர், இந்த சாஸ்த்ரம் நிஜமா யிருக்கும் பக்ஷத்தில், ‘ஒவ்வொரு மநுஷ்யனும் பொம்மலாட்டத்துப் பொம்மை தானோ? ஆட்டத்தான் படுகிறானோ? ஸ்வசக்தி ஸ்வப்ரயத்நம் என்பவையெல்லாம் ப்ராந்தியோ? இப்படியும் ஒரு ஸ்ருஷ்டி இருக்கக் கூடுமோ ?’ என்று இவ்விதமாய்க்

கேள்விகள் கேட்கிறார்கள். இவையெல்லாம் அந்த சாஸ்த்ரத்தின் நிஜமான தத்வத்தையும் ரீதியையும் அறியாதவர்களே கேட்பது.

வேதாங்கமான இந்த ஜோதிஸ் சாஸ்த்ரத்தில், சில திதி நக்ஷத்ரங்கள் கூடின காலங்களில் அந்தந்த கார்யங்கள் செய்வது நலமென்றும், அது பயனை அளிக்குமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மநுஷ்ய ப்ரயத்நம் நிஷ்ப்ரயோஜந மென்று ஜோதிஸ் சாஸ்த்ரத்தின் கொள்கையுமல்ல ; ஸம்சநமுமல்ல.

அப்படிப்பட்ட சாஸ்த்ரம் மனிதர்களுடைய உபயோகத்திற்காகவே ஏற்பட்டுள்ளது. வருவது கெடுதலானால் அதைத் தடுக்கவோ, அதன் கொடுமையைக் குறைக்கவோ, மநுஷ்யன் தகுந்தபடி முயற்சித்தால் அது பலன் அளிக்காமற் போகாது. அவ்விதமே வருவது நன்மையாயின், அது நிச்சயமாய்க் கிடைப்பதற்கான முயற்சி செய்யும் பக்ஷத்தில் அவ்விதமே கிடைக்கும்.

“ தெய்வத்தா னாகா தெனினும் முயற்சிதன்
மெய் வருந்தக் கூலிதரும்”

என்றார் திருவள்ளுவரும்.

ஜோதிஸ் சாஸ்த்ரத்தின் ஸித்தாந்தமே சாந்திகள், தேவதார்ச்சனைகள், தாநங்கள், வ்ரதங்கள் முதலியவைகளால் தீமையைத் தவிர்க்கவும் நன்மையை உண்டாக்கவும் ஸாத்ய மென்பதுதான்.

ஸாதாரணமாய் மநுஷ்யர்கள் கையில் உள்ள ரேகைகளைப் பார்த்து, அவர்களுடைய ஜநந காலத்தில் இருந்த க்ரஹ நிலைகளையும் லக்நம் முதலான விவரங்களையும் கூடப் பிசகில்லாமல் கண்டறியலாம் என்பது அநேகருக்கு அநுபவத்தில் தெரிந்திருக்கும். இந்த அகண்ட ஸ்ருஷ்டியில் பூலோகத்தில் ஒரு மூலையில் ஒரு குடிசையில் ஜனிக்கும் சிசுவின் கையிலிருக்கும் ரேகைகளுக்கும், கோடாநுகோடி மைல்கள் தூரமுள்ள க்ரஹங்களுக்கும் என்ன ஸம்பந்தம் ?

இதைவிட ஆச்சர்யம் உலகத்தில் என்ன இருக்கக் கூடும் ? ஆனால் கையில் இருக்கும் ரேகைகள் க்ரஹ ஸ்திதிகளினால் எழுதப்பட்டிருக்கின்றன என்று நினைப்பது சுத்த தவறு. அவ்விதமே க்ரஹங்களின் ஸஞ்சாரமே ஒரு மநுஷ்யனுக்கு நன்மை தீமைகள் உண்டாவதற்குக் காரணம் என்று நினைப்பதும் தவறு.

ஆனால் ஏழரை நாட் சனி என்றும், க்ரஹங்களில் கெட்டவன் நல்லவன் இவர்களுடைய தசாபுக்திகளென்றும் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். ஆனால் நிஜமாய் விசாரிக்குங்கால் இவையெல்லாம் வெகு தூரத்திலுள்ள க்ரஹங்களால் செய்யக்கூடிய கார்யங்களல்ல. ஒவ்வொரு மநுஷ்யனுக்கும் இந்த ஜந்மாவில் அடையக்கூடிய நன்மை தீமை யாவற்றிற்கும் அவன் பூர்வ ஜந்மத்தில் செய்த புண்யபாபங்களின் பலனென்பதும், அவரவர்கள் கர்மமென்பதும், அவை காரணகார்ய ஸம்பந்தமாய் நேரிடுகின்றனவென்பதும் வேதாந்திகளின் கொள்கை. அப்படியிருக்க, ஸம்பவங்கள் க்ரஹ சாரங்களினாலும் தசாபுக்தி பேதங்களினாலும் உண்டாகின்றனவென்று நினைப்பது தவறு. ஆனால் பூர்வ ஜந்மத்தில் சிலவிதமான கர்மாக்கள் செய்தவன் பின் ஜந்மத்தில் ஏதோ ஒரு யோநியில், ஏதோ ஓரிடத்தில், க்ரஹங்கள் ஒரு ஸ்திதியிலிருக்க, அந்த விநாடியிலேயே ஜநிக்கவேண்டுமென்பது ஒரு பெரிய தெய்வீக சட்டத்தின் நீதியாகும். அவ்விதமே ஒருவனுடைய கர்மாவினால் அவனுக்கு நேரிடும் நன்மை தீமைகள் யாவும், ஆகாசமாகிற கடிகாரத்தில் க்ரஹங்களாகிற முள்ளினால் காட்டப்படுகின்றனவென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். அந்த உபமாநத்தையே அவலம்பித்து, எவ்விதம் ஒருவன் மூன்று மணிக்குமேல் நான்கு மணி என்றும், ஆறுமணி அடித்தால் சூரியாஸ்தமந மென்றும் காலத்தைக்கொண்டு செய்யவேண்டிய கார்யத்தைச் செய்ய முயலுகிறானோ, அவ்விதமே இந்த ஜீவதசையிலும் நம்முடைய பூர்விக கர்மத்தினால் ப்ராப்தமாயிருக்கும் நன்மை தீமைகளை க்ரஹங்களின் சாரங்களினாலும் தசாபுக்தி முதலானவற்றாலும் கண்டறிந்து, அந்தந்தக் காலத்திற்கு உசிதமான காரியங்களைச் செய்வதும் முயற்சிகளைச் செய்வதும் புத்திமான்களுக்கு ஜோதிஸ் சாஸ்த்ரத்தால் கிடைக்கும் மஹத்தான உபகாரம்.

ஸங்கல்பத்தின் தத்வ விசேஷம்

[ஸ்ரீ. உப. V. V. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்]

சில நாட்களுக்கு முன் தமிழில் நான் சிலவிஷயங்கள் சொல்லிவர, எனது நண்பர் தமிழ்ப் பண்டிதர் ஒருவரை அவற்றை எழுதும்படி வேண்ட, அவரும் அப்படியே எழுதிவருங்கால், 'தீர்மாநம்' என்கிற அர்த்தம் கிடைக்கவேண்டிய ஓர் இடத்தில் 'ஸங்கல்பம்' என்கிற பதத்தை நான் உபயோகிக்க நேரிட்டது. அந்தப் பதத்தை அவர் எழுதாமலே 'தீர்மாநம் என்று எழுதக்கூடாதோ?' என்று வினவினார். அதற்கு நான் இரண்டு பதங்களுக்கும் அர்த்தம் ஒன்றுதானே என்று பதில் சொன்னேன்.

தத்காலத்தில், ஒரு வைதிக கர்மாவை ஆரம்பிப்பதற்கு முன், உபாத்யாயர் ஸம்ஸ்க்ருதத்தில் சொல்ல, நாமும் அதே மாதிரி அநுவதித்துச் சொல்லும் திதி வார நக்ஷத்ரங்கள் கூடிய ஒரு பத்ததியைத்தான் ஸங்கல்பம் என்று வழங்கிவருகிறோம். ஆனால் ஸங்கல்பம் என்கிற பதத்திற்குத் தீர்மாநம் என்பதுதான் முதலில் கிடைக்கக் கூடிய அர்த்தம். நன்றாய் ஸாதிக்கக் கூடியதும், ஸாதிக்க வேண்டியதுமான விஷயங்களில் இச்சை பிறந்து தீர்மாநத்துக்கு வருவதுதான் ஸங்கல்பமாகும்.

ஸ்ரீ காளிதாஸ மஹாகவி செய்த சாகுந்தல நாடகத்தில், கண்வ மஹர்ஷி, "सङ्कल्पितं प्रथममेव मया तवार्थे भर्तारमात्मसदृशं सुकृतैर्गतात्वं' என்கிறார். இந்த அழகிய அர்த்த புஷ்டியான வாக்யத்தில் மஹர்ஷியானவர் ப்ரதமமேவ (அதாவது: சகுந்தலை விவாக வயதடைவதற்கு வெகு காலம் முன்னமே) அவளுடைய அழகுக்கும் ஸந்ததிக்கும் தகுதியான ஒரு பர்த்தாவை அவள் அடையவேண்டுமென்று தான் ஸங்கல்பித்திருந்ததாகவும், அதை அவளே, தான் செய்த பூர்வ கர்மாக்களின் பலமாக அடைந்து விட்டாளென்றும் சொல்லுகிறார். இதில் ஸங்கல்பம் ஒருவருடையதாயிருக்க, செய்கை மற்றொருவருடையதாயிருக்க, உத்க்ருஷ்டமாய் இருந்த ப்ராப்தமான பலத்துக்குக் காரணம் பூர்வஸுக்ருதம் என்று நிர்த்தேசிக்கிறார். இதனால் மஹாகவி காளிதாஸன், மஹான்களுடைய ஸங்கல்பங்கள் எந்தெந்த விதத்தில் எவ்வெவ்வித காரணங்களால் பலவத்தாகும் என்பதை ஸூசிப்பிக்கிறார். இது நிற்க: இவ்விடத்தில், 'ஸங்கல்பிதம்' என்பது மநப்பூர்வமாயும் த்ருடமானதுமான தீர்மாநத்தையே குறிக்கும்.

ஆனால் தத்காலத்தில் நாம் ஸங்கல்பம் என்று வழங்கிவரும் வைதிக கர்மாக்களின் பூர்வாங்கமான ப்ரக்ரியை, அநேகமாய் ஏதோ ஒரு நிரர்த்தகமான பின் உச்சரிப்பாகவே இருந்து வருகிறது. அதனுடைய நிஜமான அர்த்தமும், முக்யமான கருத்தும், வேதாந்த அந்தர்ப்பூதமான தத்வமும் அறிந்தவர் சிலரே இருக்கக்கூடும். இது விஷயத்தில் வைதிக வேதாந்த ஸம்ஸ்காரம் சிறிதுமில்லாத லௌகிகர்களுக்கு மாத்ரமே யன்றி, ப்ரதிதினமும் எண்ணிறந்த தடவைகள் ஸங்கல்பத்தை மனப்பாடமாகச் சொல்லி வரும் உபாத்யாயர்களுக்குங் கூட அர்த்தஞானமும் தஜ்ஜநிதமான அர்த்தஸ்வாரஸ்யானுபவமும் அநேகமாய்க் கிடையாவென்றே கூறலாம். ஸம்ஸ்க்ருத பாஷையில் விசேஷ ஜ்ஞானம் பெற்று, வேதாந்த சாஸ்த்ரத்திலும் வித்வான்களா யிருக்கிற அநேக மஹான்களுக்குக்கூட சிறுவயது முதல் ஏற்பட்ட அதிபரிசய தோஷத்தாலோ, பின் எக்காரணத்தாலோ, நாம் ஸங்கல்பம் என்று சொல்லும் ப்ரக்ரியையில் அநேக முக்யமான அம்சங்களும் ரஸங்களும் மனத்தில் தோன்றுவதாகத் தெரியவில்லை. அது காரணமாகத்தான் அடியேன் இந்த விஷயத்தைப்பற்றி சிறிது விஜ்ஞாபித்துக் கொள்ளத் துணிந்தேன்.

நம்முடைய வைதிக மதத்தைச் சார்ந்த ஒருவன், ஸங்கல்பத்தின் நிஜமான அர்த்தத்தை யறிந்து, அதனுடைய முக்யமான கருத்தை உட்கொண்டு, அதனால் கொண்டாடப்படும் வேதாந்த தத்வத்தைத் தனக்கு உரிமையாக்கிக் கொள்ளுவானாகில், அவன் ஸாதாரணமாய்த் தன்னுடைய வாழ்நாளுக்கு அவச்யமாய்த் தெரிந்துகொள்ள வேண்டிய வேதாந்த விஷயங்களில் பெரும்பாலானவற்றை அநேகமாய்த் தெரிந்துகொள்வான்.

ஸ்ரீ வைஷ்ணவர்களிலும் அநேக ஸம்ப்ரதாய பேதங்கள் உண்டென்றாலும், அவ்வித பேதங்களினால், நாம் விசாரிக்கப்புகும் விஷயத்தில் எவ்விதமான பேதங்களும் முக்யமான அம்சங்களில் இருக்கமாட்டாவென்றே நினைக்கிறேன்.

'ஸங்கல்பம்' என்பதற்கே முக்யமான கருத்து யாதெனில்: ஒரு விஷயத்தைக் குறித்துத் தீர்மானித்துவிட்டால், அதை அந்த மனிதன் செய்தே ஆகவேண்டும் என்பதே. இதைத் தான் வேறு ஸந்தர்ப்பங்களில், 'கங்கணம் கட்டிக்கொள்வ' தென்றும், 'தீக்ஷிதனாக ஆவ' தென்றும் சொல்லிக் கொள்கிறோம். 'ஸத்ய ஸங்கல்பன்' என்கிற நாமதேயம் பகவானுக்கு அநந்ய ஸாதாரணமாய் ஏற்பட்டிருப்பது, அல்ப மனிதர்களின் அசக்தியையும் பராபேக்ஷையையுமே தெரிவிக்கிறது. இதனால் நாம் முக்யமாக அறியக்கூடியது யாதெனில்:

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு."

என்று திருவள்ளுவர் அருளிச்செய்த பொன்மொழியின் தர்ம ஸூக்ஷ்மமேயாகும். இதனால் மநுஷ்யஸாமாந்யர்கள் அனைவரும் தீர்மானித்த கார்யத்தைச் செய்து முடிப்பது அவச்யமென்பதும், அவ்விதம் செய்து முடிக்காமல் விட்டுவிட ஒருவன் இணங்கினானாகில், அவன் பசே பசே பௌருஷத்தை இழந்து, வெள்ளத்திடைப்பட்ட செத்தைபோல் சக்தியற்று, வெள்ளம் போகும் வழியே போய்ச் சேரவேண்டியது தான் என்பதும் நிர்த்தாரணமாகும். அவ்வித மநோபாவத்தையும் மநோதிடத்தையும் பிடிவாதத்தையும் பெரியவர்களா யிருக்கிற, நாம் பிள்ளைகளுக்குச் சிறு பிராயம் முதற்கொண்டே மனத்தில் பதியச்செய்து பழக்கத்திற்கொண்டு வரவேண்டியது அத்யாவச்யகம் என்பது இதனால் தெரிய வருகிறது.

ஸங்கல்பம் ஆரம்பிக்குங் காலத்தில், ஸ்ரீ வைஷ்ணவர்களாகிய நமக்கு, அத்யாவச்யமான குருஸ்மரணமும் ப்ரணாமமும் குறிக்கப்பட்டிருக்கின்றன. 'ஆசார்ய பக்தி பகவத் பக்தியை விட விசேஷித்தது' என்று கொண்டாடப்படும் நம்முடைய ஸித்தாந்தத்தின் இவ்விஷயம், விசேஷமாய் விவரிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. ஆனால் ஆசார்ய பரம்பரையில் ஆசார்யர்களையும் ப்ராசார்யர்களையும் நமஸ்கரித்து, அவர்களுக்கெல்லாம் பரமாசார்யர்களான திவ்ய தம்பதிகளை நாம் ஒவ்வொரு கர்மாவின் ஆரம்பத்திலும் ஸ்மரித்து ப்ரணாமம் செய்த பிறகு, எடுத்துக்கொண்ட கர்மாவை ஆரம்பிப்பது, நம்முடைய ஸித்தாந்தத்திற்கும் ஸம்ப்ரதாயத்திற்கும் அஸாதாரணமான ஒரு முக்யாம்சம். இதனால், நம்முடைய குரு பரம்பரையின் அநிதர ஸாதாரணமான விசேஷமும் குறிக்கப்படுகின்றது.

அடுத்தபடி: நம் தென்னாட்டிலேயே சில ப்ரதேசங்களில் 'श्रीमन्नभीष्ट-वरदत्वामस्मि शरणङ्गतः' என்று ஆரம்பித்து 'भगवतः कर्मणा भगवन्तं अर्च-यिष्यामि' என்ற ஒரு வாக்யத்தை, செய்யப்போகிற ஸங்கல்பத்துக்குப் பூர்வாங்கமாக அநுஸந்திப்பதுண்டு. இந்த ஸம்ப்ரதாயம் ஒருவேளை ஸ்ரீ மந்த்ஸாலகட்டை ஸ்வாமி ஸம்ப்ரதாயமாக இருக்குமென்று நம்புகிறேன். ஒவ்வொரு மநுஷ்யன் செய்யும் கர்மாக்கள் எல்லாம் பகவதாராதன ரூபம் என்பது மிகவும் அழகான ஸித்தாந்தம் என்பதற்கு ஐயமில்லை. அவ்வித வாக்யங்களில், ஸ்பஷ்டமாய் ஏற்பட்டிருக்கும் மற்றொரு தத்வமும் உண்டு. அதாவது: ப்ரேரகனும் கர்த்தாவும் எல்லாம் பகவானே என்பது. இது எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களாலும் ஒப்புக்கொள்ளப்படத் தக்கதே.

ஆனால் இது ஸம்பந்தமாயும், ஸாத்விக த்யாகம் என்று நம்மவர்களால் அநுஷ்டிக்கப்படுகிற அநுஸந்தாந ஸம்பந்தமாயும், ஒரு முக்யமான விஷயம் சொல்லலாம். அதாவது: 'ச்ரௌதஸ்மார்த்த கர்மாக்கள் விஷயமாக மாத்ரம் ஏன் இவ்விதமான அநுஸந்தாநங்கள் அவச்யம்? மநுஷ்யன் செய்யும் எல்லாக் கார்யங்கள் ஸம்பந்தமாகவுமே அப்படிப்பட்ட மனோபாவமும் அநுஸந்தாநமும் கூட ஆவச்யகம் அல்லவோ? '**कर्ताहमिति मन्यते**' என்னும் வாக்யத்திற்கு அந்வயம் வைதிக கர்மாக்களில் மாத்ரந்தானோ? மற்ற கர்மாக்களின் ஸம்பந்தமாய் ஒருவன் தன்னைக் கர்த்தாவென்று நினைத்துக்கொண்டு மார்பு தட்டிக்கொண்டால் அது பிசகாகாதோ? வேதாந்தம் என்பது வைதிக கர்மாக்களுக்கு மாத்ரந்தானோ? மனிதர் வாழ்வு முழுமைக்கும் செய்யும் கார்யங்கள் எல்லாவற்றிற்கும் வேதாந்தம் வேண்டாமோ?' இவற்றையெல்லாம் நம்முடைய ஸித்தாந்த ஸம்ப்ரதாயங்களில் நிச்சய புத்தியுள்ளவர்கள் யோசிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கப் படுகிறது.

இவற்றுக் கெல்லாம் ஒரு சரியானதும் முடிவானதுமான பதில் ஒன்றுண்டு. அது யாதெனில்: ஸாத்விக த்யாகம் முதலான வேதாந்த ப்ரக்ரியையை அநுஸரித்து வசநங்களும் க்ரியைகளுங்கூட, மனோபாவமாவது அர்த்த ஞானமாவது கொஞ்சங்கூட இல்லாமல், 'வாத்யார் சொன்னபடி தர்ப்பயாமி' என்னும் ரீதியில் அநுஷ்டிக்கப்பட்டு வருவதால், அது விஷயத்தில் தாரதம்ய விசாரத்திற்கு அவகாசமேயில்லையென்பதே.

'பகவான், தானே தனக்காகவே எல்லாக் கர்மாக்களையும் செய்து கொள்ளுகிறான்' என்கிற வேதாந்த தத்வமானது கர்மாரம்பத்துக்கு முன் '**स्वयमेव कारयति**' என்றும், கர்மா ஸம்பூர்ணமான பிறகு, '**स्वयमेव कारितान्**' என்றும் ஸாதாரணமாக அநுஸந்தித்து வருவது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. அப்படியிருக்க, ஸங்கல்பமென்று நாம் சொல்லி வரும் வாசகங்களின் முதலிலேயே,

"**स्वशेषभूतेन मया स्वीयैः सर्वपरिच्छदैः ।**
विधातुं प्रीतमात्मानं देवः प्रक्रमते स्वयं ॥"

என்றொரு ச்லோகம் எல்லாராலும் சொல்லப்பட்டு வருகிறது. 'தன்னைத் தானே ப்ரீதனைக் செய்துகொள்வதற்காகத் தேவன் ஆரம்பம் செய்கிறான்' என்று இப்படிச் சொல்லியிருப்பதின் கருத்தும் மேற்சொன்ன விதமேதான். இப்படி அநேக விதங்களாய் ஸங்கல்பத்தோடு கூட ஸாத்விகத்யாகரூபமான அநுஸந்தாநங்கள் ஏற்பட்டிருப்பதை யோசித்தால், இவைகளெல்லாம் காலா

வட்டத்தில் சேர்க்கப்பட்டவைகளாகத் தோற்றுகின்றன. 'விஹித கர்மாக்களைச் செய்யத்தான் வேண்டும்; கர்மங்கள் செய்வதால் பாபபுண்யங்கள் உண்டாகின்றன; அப்படிப் பாபபுண்யங்கள் உண்டானால் அவைகளின் பலத்தை அநுபவித்தே ஆகவேண்டும்' என்றிப்படி முடிவில்லாமல் போய்க் கொண்டிருப்பதால், செய்யவேண்டிய கர்மாக்களையும் செய்து, அவைகளை க்ருஷ்ணார்ப்பணமாகச் செய்துவிட்டால் அவைகளின் பலன்கள் நம்மைத் தொடரமாட்டா என்பது அவ்வித தத்வத்தின் உட்கருத்து. இவ்விதம் ஒவ்வொரு மனிதனுடைய மனத்திலும் கார்யங்கள் செய்யும்போதெல்லாம், 'அவைகள் யாவற்றையும் பகவான்தானே ப்ரேரேபித்துத் தன்னுடைய ப்ரீத்யர்த்தமாகவே செய்து கொள்ளுகிறான்; அவற்றின் பலங்கள் அவனைச் சேர்ந்தனவே' என்கிற புத்தியானது ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் அவனுக்கு ஏற்பட்டுவிடுமேயானால், அதைவிட மேற்பட்ட யோகம் என்ன இருக்கிறது?

ஆனால் இவ்விஷயத்தில் ஒரு ஆக்ஷேபணை சொல்லக்கூடும். அதாவது: 'பகவான் தானே செய்து கொள்ளுகிறான் என்கிற புத்தி முதிர்ந்துவிட்டால், ஒன்றையும் செய்யாமலே உட்கார்ந்துகொண்டிருக்க ஒரு நல்ல சாக்கு ஏற்பட்டுவிடுமே; மநுஷ்யர்கள் கர்மாக்களைச் செய்யாமலே சோம்பேறிகளாய் இருந்து விடுவார்களே' என்று நினைக்கக்கூடும். ஆனால் இவ்விஷயம், 'கர்மாக்களைச் செய்யவேண்டுமா? வேண்டாமா? எந்தக் கர்மாக்களைச் செய்யவேண்டும்? எவைகளைச் செய்யவேண்டாம்' என்பதை நிர்ணயிக்க ஏற்பட்டதல்ல. 'கர்மாக்கள் செய்வதில் எப்படி எந்த மனோபாவத்துடன் செய்யவேண்டும்' என்பதைத்தான் இது குறிக்கிறது.

நிற்க: ஸங்கல்பம் எனப்படுவதின் உண்மையான தத்வத்தையும் ரீதியையும் சிறிது விசாரிப்போம். ஸங்கல்ப ஆரம்பத்தில் கோவிந்தநாம ஸங்கீர்த்தநம் பண்ணி, உடனே, "**अस्यश्रीभगवतो महापुरुषस्य श्री विष्णोराज्ञया प्रवर्तमानस्य**" என்று சொல்லுகிறோம். இதற்கு, 'இதோ இங்கே இருக்கிற ஸ்ரீபகவானான மஹாபுருஷனாகிய விஷ்ணுவினுடைய ஆஜ்ஞையாலே ப்ரவர்த்தித்துக்கொண்டிருக்கிற' என்பது பொருள். கையால் சுட்டிக்காட்டி 'இந்த மஹாபுருஷனான விஷ்ணுவினுடைய ஆஜ்ஞையால்' என்று சொல்லுவதானது, ஸங்கல்ப காலத்திலே பக்வான் ஸ்ரீ மஹாவிஷ்ணு ப்ரத்யக்ஷமாக இருப்பதாகவன்றோ ஊர்ஜிதமாகின்றது? அநேக வருஷங்களாய் ஸங்கல்ப வாக்யங்களை அடிக்கடி சொல்லிக்கொண்டு வந்திருந்தும், அடியேனுக்கு இந்த அர்த்த ஸ்வாரஸ்யம் சில நாளைக்கு முன்னேதான் திடீரென்று மனத்தில் உத்பவித்தது. உடனே எனக்குப் புளகாங்கிதம் உண்டாகி, ஓர் ஆச்சர்யமும் ஆனந்தமும் உண்டாயின. அப்படிக் கைகாட்டிச் சொல்வது,

அந்தர்யாமியைக் குறித்துச் சொல்வதானாலும் சரி; அல்லது இந்த்ரிய கோசரமான பஹிர்லோகத்தை ஸ்வரூபமாகவுடைய பகவான் என்று சொன்னாலும் சரி; அல்லது ஸாக்ஷாத் ஸ்ரீய:பதியையே ப்ரத்யக்ஷபாவனையாகச் சொன்னாலும் சரி; எப்படியிருந்தாலும் அந்த பகவான் அந்த ஸங்கல்ப காலத்தில் அத்யந்த ஸாமீப்யத்தை அடைந்திருப்பதாக மனோபாவம் உண்டாக்கிக்கொள்வது எவ்வளவு ஆச்சர்யமான கார்யம் என்பதை ஒவ்வொருவரும் தாங்களே யோசித்துக்கொள்ளலாம். அது மாத்திரமோ? அப்படிப்பட்ட பகவானுடைய ஆஜ்ஞையினாலே ப்ரஹ்மகல்பம் முதலான கால தேசவர்த்தமானங்கள் யாவும் ப்ரவர்த்தித்துக்கொண்டு வருகின்றன என்று குறிக்கும் வாக்யமானது ப்ரம்மஸ்ருஷ்டி முதலல்லவா நம்முடைய மனத்தைக் கொண்டுபோய் விடுகிறது. அப்படி ஸ்ருஷ்டிமுதல் ஆரம்பித்து, காலத்தைக் குறுக்கி, மந்வந்தரம், யுகம், யுகபாதம், ஸம்வத்ஸரம், அயனம், மாஸம், பக்ஷம், திதிவார நக்ஷத்திரங்கள் வரையில் சுருக்கிக்கொண்டு வந்து, அந்தக் கர்மா செய்யப்படும் க்ஷணம் வரையில் மனத்தை ஸமாதி செய்து வைக்கிறது. அவ்விதமே அகண்ட பூமண்டலத்தினுடைய விஸ்தாரமான ப்ரதேசத்தில் எந்த இடத்திலிருந்து கர்மாவைச் செய்கிறோமோ, அதையும் மனத்தில் சிந்தித்துத் தாரணம் செய்யச் சொல்லுகிறது. இவ்விதம் அனந்தமான காலத்தில் ஏற்பட்டிருக்கும் க்ஷணத்தையும், அனந்த வ்யாப்தியாயுள்ள ப்ரதேசத்தில் ஏற்பட்ட ஸ்தலத்தையும், மனத்தில் சிந்தித்துத் தாரணம் செய்து, பிறகு, 'குறித்த கர்மாவைச் செய்யப் போகிறேன்' என்று, ஸங்கல்பம் என்பது செய்யப்படுகிறது.

இந்த விதமாய் அனந்த வ்யாப்தியிலிருந்து அடுத்திருக்கும் காலதேசம் வரையில் புத்தியை வ்யாபிக்கச் செய்து, படிப்படியாய் சுருங்கச் செய்து, குறித்த கர்மாவில் அவதானத்தால் மனஸ்ஸமாதி செய்வது எவ்வளவு அருமையும் பலவத்தமமுமாகு மென்பது அதை யோசித்தறிந்தவர்களுக்கே தெரியும்; அனுபவித் தறிந்தவர்களுக்கும் அனுபவ ஸித்தமாயிருக்கும். எந்தக் கார்யத்தையும் சரியாகவும், ஸாத்யமான வரையில் தோஷமில்லாமலும், உத்தமமான ரீதியிலும் செய்யவேண்டுமே யானால், அதை அனன்ய ப்ரவ்ருத்தி யில்லாமல் கவனத்துடனும் அவதானத்துடனும் செய்தால்தான் முடியும். அப்படி ஒரு அவதானம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமே யானால், புத்தியை முதலில் ஸ்ருஷ்டி முதல் வ்யாபிக்கச் செய்து சுருக்கி ஸூக்ஷ்மமாக ஏகாக்ரமாய்ச் செய்யும் பக்ஷத்தில், அவ்விதமாய் ஏற்படும் ஏகாக்ரமானது வ்யாப்தியிலிருந்து சுருங்கும் வேகத்தால் ஆச்சர்யமும் அபூர்வமுமான ஒரு சக்தியை உடையதாகிறது. அது, 'ஸ்ருஷ்டி ஸ்திதிகளுக் கெல்லாம் காரண

மாயிருக்கிற பகவச்சக்தி' என்று சொல்வதைத் தவிர வேறு எவ்விதமாய்ச் சொல்ல முடியும்? அப்படிச் செய்வோமேயானால், அர்த்தமில்லாமல் பகவானே செய்கிறான் என்று நாம் சொல்லும் வார்த்தையானது அர்த்தவத்தமாகி, பகவச்சக்தியை நாம் ஆகர்ஷித்துக் கொண்டு செய்ய ஸங்கல்பிக்கும் கார்யத்திற்கு ஸாத்ய காரணமாக அமைத்துக்கொள்ளக் கூடும். இதனால் நாம் அறிந்துகொள்ளவேண்டியது யாதெனில்: வைதிக கர்மாக்களுக்கு மாத்ரமேயின்றி, எல்லாக் கர்மாக்களுக்குமே மனத்தினால் இவ்விதம் அவதானம் உண்டாக்கிக்கொண்டு, ஸங்கல்பித்துக்கொண்டு கார்யம் ஆரம்பித்துச் செய்வோமே யாகில், அது பகவச் சக்தியினாலும் பகவத் க்ருபையினாலும் பலவத்தமமாய் ஸித்திக்கும் என்பது நிச்சயம்.

அதுவுமல்லாமல், 'பகவான், தானே தன் ப்ரீத்யர்த்தமாகவே செய்கிறான் என்பதும், செய்தான் என்பதும் வெறும் வார்த்தை; வாயால் சொல்லுவதால் என்ன பலன் உண்டாகக் கூடும்? அவ்வித வாசகங்களுக்கு ஒத்த மனோபாவமும் இருந்தாலல்லவோ அவை அர்த்தவத்தாவும், கார்யம் பலவத்தாகவும் ஆகும்? அவ்விதமில்லாமல் அர்த்த ஜ்ஞானமே லக்ஷ்யத்துமில்லாமல் வாத்யார் மந்த்ரம் சொல்லிவர, நாமும் அதைப் பின்பற்றிச் சொல்லிவருவதால் இதுவும் ஒரு வேடிக்கையோ, ஏமாற்றலோ' என்றுதான் நினைக்கவேண்டியதாயிருக்கிறது. அப்படியின்றி ஒவ்வொருவனும் வைதிக கர்மாவோ லௌகிக கர்மாவோ ஆரம்பிப்பதற்குமுன் கண்ணை மூடிக்கொண்டு, கிஞ்சித் த்யானித்து, 'ப்ரவ்ருத்தமான கார்யம் அந்தப் பகவானுடைய சக்தியினாலும் அனுக்ரஹத்தாலுமே நடக்கக்கூடும்; நடக்கப்போகிறது' என்று மனத்தில் பாவனை செய்துகொண்டு செய்வதை வழக்கமாய் அனுஷ்டித்து வருவானாகில், அதனால் அவனுடைய சக்தியானது ஒரு ஜீவநதியிலிருந்து வெட்டி விடப்பட்ட வாய்க்கால் போல் எப்போதும் எவ்வளவும் குறைவடையாது ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் அவனுக்கு ஸர்வோபகாரமாய் ஸித்தித்துவிடும்.

ஸ்ரீ:

பத்ராதிபரின் அறிக்கைகள்

சென்ற மாதம் ஹிந்து பத்ரிகையில் நான் 'ஸ்ரீவேதாந்த தீபிகை' எனும் இப்பத்ரிகையைக் குறித்து ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் ச்ரத்தையுள்ள எல்லோருக்கும் பொதுவான ஒரு விஜ்ஞாபநம் செய்துகொண்டேன். அதை வாசித்தவர் அநேகர் இந்தப் பத்ரிகைக்கும், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசாரக ஸபைக்கும், கூடியவரையில் உதவி செய்வதாகத் தெரிவித்திருப்பதைக் கண்டு நான் மிகவும் ஸந்தோஷமும் க்ருதஜ்ஞதையு முள்ளவனாக இருக்கிறேன். இந்த சில வாரங்களுக்குள்ளேயே அநேகர் புதிய சந்தாதாரர்களாகச் சேர்ந்திருக்கிறார்களென்பதும் எனக்கு மிகுந்த த்ருப்தியை அளிக்கின்றது. இதனாலேயே, கூடிய சீக்ரத்தில் இந்தப் பத்ரிகையானது ப்ரசாரத்திலும், ஆகர்ஷண சக்தியிலும், உபயோகத்திலும் வ்ருத்தியடையக் கூடுமென்று நம்பியிருக்கிறேன். இந்த மாதமுதல் புதிய அச்சாபீஸில் இந்தப் பத்ரிகை அச்சிட ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அச்சிடப்படும் காகிதமும் கொஞ்சம் உயர்ந்ததாகவே இருக்கிறது. இதையும், பத்ரிகையைப் படிப்போர்கள் கண்டு ஸந்தோஷிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இவ்விதமே இன்னும் நூற்றுக்கணக்காய்ச் சந்தாதாரர்கள் சேரும் பக்ஷத்தில், படிப்படியாய்ப் பத்ரிகை எல்லா விதங்களிலும் வ்ருத்தியடைந்துகொண்டு வருமென்பது நிச்சயம். ஆதலால் இப்போதிருக்கும் சந்தாதார்கள் ஒவ்வொருவரும், மற்றும் சந்தாதாரர்களைச் சேர்ப்பதில் சிறிது ப்ரயத்நம் எடுத்துக் கொள்ளும் பக்ஷத்தில், அதி சீக்ரத்திலேயே இந்தப் பத்ரிகையானது பெரியதோர் ஔந்நத்யத்தை அடைந்து நம்முடைய ஸித்தாந்தத்தைச் சார்ந்த யாவரையும் களிப்புறச் செய்யும். இதை, இந்தப் பத்ரிகையின் ப்ரார்த்தனையாகவே கருதவேணும்.

சென்ற மாதம் தீபிகையில் ஸம்பாதகர் கமிட்டி ஒன்று ஏற்பாடு செய்வதாகத் தெரியப்படுத்தி யிருந்தேன். அவ்விஷயம், அதே விதமாய்ப் பின்னும் சில பத்ரிகைகளில் அநேக பண்டிதர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டிருப்பதையும், இன்னும் சில காரணங்களைக் கொண்டும், தத்காலம் அப்படி ஒரு விளம்பரம் செய்யவேண்டாமென்று நிறுத்திவிடப்பட்டது.

அநேக புது விஷயங்கள் பத்ரிகையில் சேர்க்கப்படு மென்று தெரிவித்திருந்த விஷயத்தில், அதுவும் கூடிய வரையிலும் படிப்படியாகச் செய்யப்படு மென்கிற விஷயத்தையும் இதனால் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஶ்ரூயதாம் தபஸா தேவம் ஹரிம் நாராயணம் ப்ரபும் ।
திவ்யம் வர்ஷஸஹஸ்ரம் து தேவ ஸம்வத்ஸரை ருக்ரைர்ருஷிபி: ஸஹ ॥

நாராயணாநுஶிஷ்டா ஸா ஹிதா தேவீ ஸரஸ்வதீ ।
விவேஶ தாந் ருஷீந் ஸர்வாந் லோகாநாம் ஹிதகாம்யயா ॥

தத: ப்ரவ்ருத்தா ஸம்யக் தபோவித்பிர் த்விஜாதிபி: ।
ஶப்தே சார்தே ச ஹேதௌ ச ஏஷா ப்ரதமஸர்கஜா ॥

ஶ்ருத்யைவ ஹி ததோங்காரஸ்வரேண விபூஷிதம் ।
ருஷிபி: ஶ்ராவிதம் தத்ர யத்ர காருணிகாமணா: ॥

தத: ப்ரஸந்நோ பகவாநநிர்திஷ்டஶரீரக: ।
ருஷீநுவாச தாந் ஸர்வாந் அத்ருஶ்ய: புருஷோத்தம: ॥

தேவமாநத்தினால் ஆயிரம் வர்ஷ காலங்களில் எல்லா மஹர்ஷிகளும் சேர்ந்து செய்த தபஸ்ஸினால் அநிஷ்டங்களை அபஹரிக்குமவனாய், இஷ்டபலங்களையெல்லாம் கொடுக்குமவனாய், ஆகையினால் எல்லாருக்கும் தேவனாக விளங்காநின்ற நாராயணனை ஆராதித்து, அதனால் த்ருப்தியடைந்த நாராயணனால் நியமிக்கப்பட்டவளாய், அநுகூலத்தைச் செய்வதே ஸ்வபாவமாக உள்ளவளான ஸரஸ்வதீ தேவியானவள், உலகங்களுக்கெல்லாம் ஹிதத்தைப் பண்ணவேணுமென்கிற எண்ணத்தினால் அந்த எல்லா ருஷிகளிடமும் அநுப்ரவேசித்தாள்.

இப்படி, அதிகமான தபஸ்ஸைப் பண்ணின ப்ராஹ்மணர்களினால் தங்களிடம் ஸரஸ்வதியினுடைய அநுப்ரவேசத்திற்குப் பிறகு, ஸர்வ புருஷார்த்த விஷயத்திலும், புருஷார்த்தங்களுக்கு ஸாதநங்களான அந்தந்த உபாயங்களை விதிக்கும் விஷயத்திலும், அந்தந்த விதிகளை யுக்திகளோடு நிரூபிக்கும் விஷயத்திலும், செவ்வையாக ப்ரவர்த்திக்கப்பட்ட இந்தப் பாஞ்சராத்ர க்ரந்த ஸ்ருஷ்டியானது மற்றைச் சாஸ்த்ரங்களை ஸ்ருஷ்டிப்பதற்கு முந்தின காலத்தில் உண்டானது.

எந்தப் பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தில் பகவானுடைய க்ருபா மூலங்களான ஸௌசீல்யம் ஸௌலப்யம் வாத்ஸல்யம் முதலிய குணங்கள் அதிகமாகச் சொல்லப்படுகின்றனவோ, அந்தப் பாஞ்சராத்ர சாஸ்த்ரமானது உண்டான ஆதிகாலத்திலேயே மஹர்ஷிகளினால் ஓங்காரத்தினால் அலங்கரிக்கப்பட்டதாக இருந்தது.

இப்படி ஸரஸ்வதி தேவியினுடைய அநுப்ரவேச மூலமாக மஹர்ஷிகள் பாஞ்சராத்ரத்தை அருளிச்செய்த பிறகு, ப்ரஸந்நமான மநஸ்ஸையுடையவனாய், தனது ஸ்வாபாவிகமான சரீரத்தைத் தரிக்காதவனாய், ஆகையினால்

𑌕𑍃𑌤𑌂 𑌶𑌤𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌹𑌿 𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌶𑌤𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌲𑍋𑌕𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌸𑍍𑌯 𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑍍 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥

𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍌 𑌚 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍌 𑌚 𑌯𑍋𑌨𑌿𑌰𑍇𑌤𑌦𑍍𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ।
𑌋𑌗𑍍𑌯𑌜𑍁𑌸𑍍𑌸𑌾𑌮𑌭𑌿𑌰𑍍 𑌜𑍁𑌷𑍍𑌟𑌂 𑌅𑌥𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌿𑌰𑌸𑍈𑌸𑍍𑌤𑌥𑌾 ॥

𑌯𑌥𑌾 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌚 𑌮𑌯𑌾 𑌕𑍃𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌜𑌃 ।
𑌰𑍁𑌦𑍍𑌰𑌶𑍍𑌚 𑌕𑍍𑌰𑍋𑌧𑌜𑍋 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌃 𑌯𑍂𑌯𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌯𑌸𑍍𑌤𑌥𑌾 ॥

𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌸𑍌 𑌵𑌾𑌯𑍁𑌰𑍍 𑌭𑍂𑌮𑌿𑌰𑌾𑌪𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌰𑍇𑌵 𑌚 ।
𑌸𑌰𑍍𑌵𑍇 𑌚 𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌗𑌣𑌾𑌃 𑌯𑍇 𑌚 𑌭𑍂𑌤𑌾𑌭𑌿𑌶𑌬𑍍𑌦𑌿𑌤𑌾𑌃 ॥

அம்மஹார்ஷிகளாலும் பார்க்கக்கூடாதவனாய், பக்தன் முக்தன் இவர்களைக் காட்டிலும் விலக்ஷண ஸ்வபாவமுள்ளவனாக இருக்கையினாலே புருஷோத்தமனென்று ப்ரஸித்தனாக இருக்கிற பகவான், பிறகு அந்த எல்லா மஹார்ஷிகளையும் பார்த்துச் சொன்னான்.

அதாவது: ஸமஸ்தங்களான லோக மர்யாதைகளுடைய தர்மமானது எந்தப் பாஞ்சராத்ர க்ரந்தத்தினால் தெரிந்துகொள்ளக் கூடுமோ, அப்படிப்பட்ட லக்ஷம் ச்லோகங்களையுடைய பஞ்சராத்ர சாஸ்த்ரமானது உங்களால் உண்டு பண்ணப்பட்டது.

ருக், யஜுஸ், ஸாம, அதர்வணம், அங்கிரஸம் என்கிற வேத பாகம், இவைகளில் சொல்லப்படும் ஸர்வார்த்தங்களோடு கூடியதான இந்தப் பஞ்சராத்ர சாஸ்த்ரமானது, மனிதர்களால் செய்யக்கூடிய விஷயங்களைத் தெரிவிப்பதிலும், விட்டுவிடக்கூடிய விஷயத்தைத் தெரிவிப்பதிலும் முக்யமான காரணமாக (ப்ரமாணமாக) ஆகப்போகிறது.

என்னுடைய அநுக்ரஹ ஸமயத்தில் பிறந்தவரான ப்ரஹ்மா, எப்படி உலகத்திற்கு ப்ரமாணமாக என்னால் பண்ணப்பட்டிருக்கிறாரோ, என்னுடைய கோப ஸமயத்தில் பிறந்தவரான ருத்ரன், என்னால் எப்படி உலகத்திற்கு ப்ரமாணமாகப் பண்ணப்பட்டிருக்கிறாரோ, ஓ ப்ராஹ்மணர்களே! உலகத்திற்குக் காரணங்களான நீங்களும் அப்படியே ப்ரமாணமாக ஆகக்கடவீர்கள்.

[அதாவது: உலகத்திற்கு ப்ரஹ்ம ருத்ரர்களுடைய வார்த்தைகள் எப்படி ப்ரமாணமோ, அப்படியே உங்களுடைய வார்த்தையும் ப்ரமாணமாகக்கடவது என்றபடி.]

இந்த உலகத்தில் ஸூர்யன் சந்த்ரன், அக்நி, மற்றும் குரு சுக்ரன் முதலிய நக்ஷத்ரங்கள், ப்ருதிவீ முதலிய பஞ்ச பூதாபிமாநி தேவதைகள் எப்படி அதிகாரி புருஷர்களாக இருக்கிறார்களோ, அப்படியே ப்ரஹ்மவித்துக்களான பஞ்சராத்ரத்தைப் பண்ணின ப்ராஹ்மணர்களும் அதிகாரி புருஷர்கள் ஆகக்கடவர்.

𑌅𑌧𑌿𑌕𑌾𑌰𑍇𑌷𑍁 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌤𑌥𑍈𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌹𑌿 𑌯𑌥𑌾 𑌤𑌥𑍈𑌤𑌚𑍍𑌛𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ॥

𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌵𑍈 𑌏𑌤𑌨𑍍𑌮𑌦𑌨𑍁𑌶𑌾𑌸𑌨𑌮𑍍 ।
𑌅𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍 𑌮𑌨𑍁𑌃 𑌸𑍍𑌵𑌾𑌯𑌂𑌭𑍁𑌵𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂 ॥

𑌉𑌶𑌨𑌾 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌶𑍍𑌚𑍈𑌵 𑌯𑌦𑍋𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑍌 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌃 ।
𑌤𑌦𑌾 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌯𑍁𑌷𑍍𑌮𑌨𑍍𑌮𑌤𑌿𑌭𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑌂 ॥

𑌸𑍍𑌵𑌾𑌯𑌂𑌭𑍁𑌵𑍇𑌷𑍁 𑌧𑌰𑍍𑌮𑍇𑌷𑍁 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌚𑍋𑌶𑌨𑌸𑌾 𑌕𑍃𑌤𑍇 ।
𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌮𑌤𑍇 𑌚𑍈𑌵 𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌤𑌿𑌚𑌾𑌰𑌿𑌤𑍇 ॥

𑌯𑍁𑌷𑍍𑌮𑌤𑍍𑌕𑍃𑌤𑌮𑌿𑌦𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌾𑌲𑍋 𑌵𑌸𑍁𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌸𑌕𑌾𑌶𑌾𑌦𑍍𑌵𑍈 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌤𑍇 𑌦𑍍𑌵𑌿𑌜𑌸𑌤𑍍𑌤𑌮𑌾𑌃 ॥

வேதம், தர்மசாஸ்த்ரம் முதலிய சாஸ்த்ரங்கள் உலகத்திற்கு எப்படி ப்ரமாணமாக இருக்கின்றனவோ, அப்படியே உத்தமமான இந்தப் பஞ்சராத்ர சாஸ்த்ரமும் உலகத்திற்கு ப்ரமாணமாகக் கடவது. இப்படி நாம் உத்தரவு செய்திருக்கிறோம்.

ஸ்வாயம்புவமநு என்கிற ப்ரஜாபதியானவர் இந்தப் பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தின் மூலமாகவே தர்மங்களைச் சொல்லப்போகிறார். [அதாவது: அதிக விஸ்தாரமான இந்தப் பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களைத் தெரிந்துகொண்டு உலக க்ஷேமார்த்தமாக ஸங்க்ரஹித்து மநுஸ்ம்ருதி என்கிற க்ரந்தத்தை எழுதப்போகிறார் என்று தாத்பர்யம்.]

ப்ருஹஸ்பதி சுக்ரன் இவர்கள் எந்தக் காலத்தில் உண்டாகப்போகிறார்களோ, உங்கள் மனத்தினால் வ்ருத்தி பண்ணப்பட்ட இந்தப் பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தை அவர்களிருவரும் விசேஷமாக ப்ரவசநம் பண்ணப்போகிறார்கள்.

ஸ்வாயம்புவ மநுவினால் செய்யப்பட்ட தர்மங்களும் (தர்மசாஸ்த்ரமும்) பிறகு சுக்ரனால் செய்யப்பட்ட அர்த்தசாஸ்த்ரமும், ப்ருஹஸ்பதியினால் செய்யப்பட்ட லோகாயத சாஸ்த்ரமும் உலகங்களில் பரவின காலத்தில், ஓ ப்ராஹ்மண ச்ரேஷ்டர்களே! உங்களால் பண்ணப்பட்ட இந்

𑌸 𑌹𑌿 𑌮𑌦𑍍𑌭𑌾𑌵𑌿𑌤𑍋 𑌰𑌾𑌜𑌾 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍋 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ।
𑌤𑍇𑌨 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥
𑌏𑌤𑌦𑍍𑌧𑌿 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌮𑍍 ।
𑌏𑌤𑌦𑌰𑍍𑌥𑍍𑌯𑌂 𑌚 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌚 𑌯𑌶𑌸𑍍𑌯𑌂 𑌚𑍈𑌤𑌦𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ॥
𑌅𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌨𑌾𑌚𑍍𑌚𑍈𑌵 𑌪𑍍𑌰𑌜𑌾𑌵𑌨𑍍𑌤𑍋 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌥 ।
𑌸 𑌚 𑌰𑌾𑌜𑌾 𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌮𑌹𑌾𑌨𑍍𑌵𑌸𑍁𑌃 ॥
𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 𑌚 𑌨𑍃𑌪𑍇 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍇𑌤𑌤𑍍𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍 ।
𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌧𑌾𑌸𑍍𑌯𑌤𑌿 𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌮𑍇𑌤𑌦𑍍𑌵𑌃 𑌕𑌥𑌿𑌤𑌂 𑌮𑌯𑌾 ॥
𑌏𑌤𑌾𑌵𑌦𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌵𑌚𑌨𑌮𑌦𑍃𑌶𑍍𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ।
𑌵𑌿𑌸𑍃𑌜𑍍𑌯 𑌤𑌾𑌨𑍃𑌷𑍀𑌨𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌕𑌾𑌮𑌪𑌿 𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑍋 𑌦𑌿𑌶𑌮𑍍 ॥

தப் பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தை உபரிசரவஸு என்கிற அரசன் ப்ருஹஸ்பதியிடத்திலிருந்து அத்யயநம் பண்ணப்போகிறான்.

அந்த உபரிசரவஸு என்கிற அரசன் என்னிடத்தில் விசேஷ பக்தியுள்ளவன்; ஆகையினால் என்னால் அநுக்ரஹிக்கப்பட்டவனாய் இருக்கப்போகிறான். அவ்வரசன் உலகங்களில் செய்யப்படுகிற ஸர்வ கர்மாக்களையும் பாஞ்சராத்ர க்ரமத்தினால் அநுஷ்டிக்கப்போகிறான்.

இந்தப் பாஞ்சராத்ர சாஸ்த்ரமானது மற்றை எல்லா சாஸ்த்ரங்களைக் காட்டிலும் உத்தம சாஸ்த்ரமென்று ப்ரஸித்தியை அடையப் போகிறது. இந்த சாஸ்த்ரமானது அர்த்தங்களையும், தர்மங்களையும், கீர்த்தியையும் கொடுக்கக்கூடியது. ஆகையினால் இது உத்தமமான சாஸ்த்ரம்.

அந்த உபரிசரவஸு என்கிற அரசன் இந்தப் பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தை ப்ரவர்த்தநம் பண்ணப்போகிறபடியால் அதிக ப்ராஜைகளையுடையவனாக ஆகப்போகிறான்; அதிகமான ஐசுவரியத்தையுடையவனாகவும், எவனாலும் பூஜிக்கக்கூடியவனாகவும் ஆகப்போகிறான்.

அவ்வரசன் இறந்துபோன காலத்தில் நீண்ட காலமாக வ்ருத்தியடைந்துவந்த இந்தப் பாஞ்சராத்ர சாஸ்த்ரமானது மறைந்துவிடப்போகிறது. இப்பொழுது இந்தப் பாஞ்சராத்ர சாஸ்த்ர விஷயமாக என்னால் என்னென்ன விஷயங்கள் சொல்லப்பட்டனவோ, அவை யாவும் நிச்சயமாக நடக்கப் போகின்றன.

புருஷோத்தமனான ஸர்வேச்வரன் இவ்வளவு வார்த்தைகளைச் சொல்லிவிட்டு, அந்த எல்லா மஹர்ஷிகளையும் விட்டுவிட்டுத் தனக்கு இஷ்டமான திக்கை நோக்கி எழுந்தருளினான்.

𑌤𑌤𑌸𑍍𑌤𑍇 𑌲𑍋𑌕𑌪𑌿𑌤𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌾𑌰𑍍𑌥𑌚𑌿𑌨𑍍𑌤𑌕𑌾𑌃 ।
𑌪𑍍𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌯𑌨𑍍𑌤 𑌤𑌚𑍍𑌛𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌧𑌰𑍍𑌮𑌯𑍋𑌨𑌿𑌂 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍 ॥

𑌉𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑍇𑌽𑌙𑍍𑌗𑌿𑌰𑌸𑍇 𑌚𑍈𑌵 𑌯𑍁𑌗𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑍇 ।
𑌸𑌾𑌙𑍍𑌗𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑍌 ॥

𑌜𑌗𑍍𑌮𑍁𑌰𑍍𑌯𑌥𑍇𑌪𑍍𑌸𑌿𑌤𑌂 𑌦𑍇𑌶𑌂 𑌤𑌪𑌸𑍇 𑌕𑍃𑌤𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌾𑌃 ।
𑌧𑌾𑌰𑌣𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌕𑌾𑌃 ॥

𑌷𑌷𑍍𑌟𑌿𑌶𑌤𑌤𑌮𑍇

𑌤𑌤𑍋𑌽𑌤𑍀𑌤𑍇 𑌮𑌹𑌾𑌕𑌲𑍍𑌪𑍇 𑌉𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑍇𑌽𑌙𑍍𑌗𑌿𑌰𑌸𑌃 𑌸𑍁𑌤𑍇 ।
𑌬𑌭𑍂𑌵𑍁𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌾 𑌦𑍇𑌵𑌾 𑌜𑌾𑌤𑍇 𑌦𑍇𑌵𑌪𑍁𑌰𑍋𑌹𑌿𑌤𑍇 ॥

பிறகு எல்லா உலகங்களுடைய க்ஷேமத்தையே ஆலோசிக்குமவர்களாயும், உலகங்களுக்கு ரக்ஷகர்களாயும் உள்ள அந்த மரீசி முதலான மஹர்ஷிகள், அநாதிகாலமாக இருப்பதாயும் தர்மங்களைத் தெரிவிப்பதுமான பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தை உபதேசித்து வந்தார்கள்.

பிறகு ஸர்வ லோகங்களையும் ரக்ஷிக்கிறவர்களாயும், ஸர்வ தர்மங்களையும் உலகத்தில் பரவச் செய்கிறவர்களுமான அந்த மஹர்ஷிகள், முதல் யுகமென்று சொல்லப்படுகிற க்ருத யுகத்தில் ப்ருஹஸ்பதியானவர் அவதரித்தவுடன், கர்மங்களின் ஸ்வரூபங்களையும் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தையும் தெரிவிக்கிற பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தை ப்ருஹஸ்பதிக்கு உபதேசித்துவிட்டு, தபஸ்ஸைச் செய்வதில் ஆஸ்தையுள்ளவர்களாய்த் தங்கள் தங்களுக்கு இஷ்டமான க்ஷேத்ரங்களுக்குப் போய்விட்டார்கள்.

160-வது அத்யாயத்தில்,

பிறகு அந்த மஹா கல்பமானது முடிந்த காலத்தில் அங்கிரஸ்ஸினுடைய புத்ரரான ப்ருஹஸ்பதியானவர் உண்டாகி, தேவர்களுக்குப் புரோஹிதராகவும் ஆன ஸமயத்தில், தேவர்கள் ஸந்தோஷத்தை அடைந்தவர்களாக ஆனார்கள். [அதாவது: ‘அங்கிரஸ்ஸினுடைய புத்ரரான ப்ருஹஸ்பதியானவர் இந்தப் பஞ்சராத்ர சாஸ்த்ரத்தை உலகத்தில் விசேஷமாகப் பரவச்செய்யப்போகிறார்’ என்கிற பகவானுடைய வார்த்தையைக் கேட்டு ப்ருஹஸ்பதியினுடைய அவதாரத்தை எதிர்பார்த்திருந்த தேவதைகள் அவர் பிறந்ததைக் குறித்து ஸந்தோஷித்தார்கள் என்று தாத்பர்யம்.]

𑌬𑍃𑌹𑌦𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌮𑌹𑌚𑍍𑌚𑍇𑌤𑌿 𑌶𑌬𑍍𑌦𑌾𑌃 𑌪𑌰𑍍𑌯𑌾𑌯𑌵𑌾𑌚𑌕𑌾𑌃 ।
𑌏𑌭𑌿𑌃 𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑍋 𑌰𑌾𑌜𑌨𑍍 𑌗𑍁𑌣𑍈𑌰𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌃 ॥

𑌤𑌸𑍍𑌯 𑌶𑌿𑌷𑍍𑌯𑍋 𑌬𑌭𑍂𑌵𑌾𑌗𑍍𑌰𑍍𑌯𑍋 𑌰𑌾𑌜𑍋𑌪𑌰𑌿𑌚𑌰𑍋 𑌵𑌸𑍁𑌃 ।
𑌅𑌧𑍀𑌤𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌦𑌾 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌚𑌿𑌤𑍍𑌰𑌶𑌿𑌖𑌣𑍍𑌡𑌿𑌜𑌮𑍍 ॥

𑌸 𑌰𑌾𑌜𑌾 𑌭𑌾𑌵𑌿𑌤𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌦𑍈𑌵𑍇𑌨 𑌵𑌿𑌧𑌿𑌨𑌾 𑌨𑍃𑌪 ।
𑌪𑌾𑌲𑌯𑌾𑌮𑌾𑌸 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌂 𑌦𑌿𑌵𑌮𑌾𑌖𑌣𑍍𑌡𑌲𑍋 𑌯𑌥𑌾 ॥

𑌤𑌸𑍍𑌯 𑌯𑌜𑍍𑌞𑍋 𑌮𑌹𑌾𑌨𑌾𑌸𑍀𑌦𑌶𑍍𑌵𑌮𑍇𑌧𑍋 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌰𑍁𑌪𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌹𑍋𑌤𑌾 𑌬𑌭𑍂𑌵 𑌹 ॥

𑌧𑌨𑍁𑌷𑌾𑌕𑍍𑌷𑍋𑌽𑌥 𑌰𑍈𑌭𑍍𑌯𑌶𑍍𑌚 𑌉𑌰𑍍𑌵𑌾𑌵𑌸𑍁𑌪𑌰𑌾𑌵𑌸𑍂 ।
𑌋𑌷𑌿𑌰𑍍𑌮𑍇𑌧𑌾𑌤𑌿𑌥𑌿𑌶𑍍𑌚𑍈𑌵 𑌤𑌾𑌣𑍍𑌡𑍍𑌯𑌶𑍍𑌚𑍈𑌵 𑌮𑌹𑌾𑌨𑍃𑌷𑌿𑌃 ॥

ப்ருஹத், ப்ரஹ்ம, மஹத் என்னும் சப்தங்கள் பெருந்தன்மையை யுடைய வஸ்துவைச் சொல்லக் கூடியவைகள். ஓ அரசனே! உலகத்தில் இந்த சப்தங்களினால் சொல்லக்கூடிய பற்பல மஹா குணங்களோடு வித்வானாகவும் இருந்தபடியால், அவர் ப்ருஹஸ்பதி என்ற காரணப் பெயருடையவரானார்.

உபரிசரவஸு என்னும் அரசன் அந்த ப்ருஹஸ்பதிக்கு முக்ய சிஷ்யனாக ஆனான். சித்ர சிகண்டிகள் என்று கீழ்க் கூறிய மரீசி முதலிய ஏழு மஹர்ஷிகளால் சொல்லப்பட்ட பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தை அக்காலத்தில் அவன் நன்றாக அத்யயநம் பண்ணினான்.

ஓ அரசனே! அந்த உபரிசரவஸு என்கிற அரசன் உலகத்தை ஸ்ருஷ்டித்த தேவனான நாராயணனால் முன்பே அநுக்ரஹிக்கப்பட்டவனாய், தேவேந்த்ரன் ஸ்வர்க்கத்தை ரக்ஷிப்பது போலப் பூமியை ரக்ஷித்து வந்தான்.

மஹாத்மாவான அவ்வரசனால் அச்வமேதம் என்கிற மஹா யஜ்ஞமானது அநுஷ்டிக்கப்பட்டது. அவ்வரசனுடைய ஆசார்யனான ப்ருஹஸ்பதியானவர் அந்த யாகத்துக்கு ஹோதா வென்கிற ருத்விக்காக இருந்தார்.

பிறகு அந்த யாகத்தில் தநுஷாக்ஷர், ரைப்யர், உர்வாவஸு, பராவஸு, மேதாதிதி, தாண்ட்யர், சக்தி, வேதசிரஸ், கபிலர், சாலிஹோத்ரர்,

𑌋𑌷𑌿𑌃 𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑌸𑍍𑌤𑌥𑌾 𑌵𑍇𑌦𑌶𑌿𑌰𑌾𑌶𑍍𑌚 𑌯𑌃 ।
𑌕𑌪𑌿𑌲𑌶𑍍𑌚 𑌋𑌷𑌿𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌃 𑌶𑌾𑌲𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌃 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃 ॥

𑌆𑌦𑍍𑌯𑌃 𑌕𑌠𑌸𑍍𑌤𑍈𑌤𑍍𑌤𑌿𑌰𑌿𑌶𑍍𑌚 𑌵𑍈𑌶𑌮𑍍𑌪𑌾𑌯𑌨𑌪𑍂𑌰𑍍𑌵𑌜𑌃 ।
𑌕𑌣𑍍𑌵𑍋𑌽𑌥 𑌦𑍇𑌵𑌹𑍋𑌤𑍍𑌰𑌶𑍍𑌚 𑌏𑌤𑍇 𑌷𑍋𑌡𑌶 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃 ॥

𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌸𑍁𑌤𑌾𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌸𑌦𑌸𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌾𑌭𑌵𑌂𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑌃 ।
𑌏𑌕𑌤𑌶𑍍𑌚 𑌦𑍍𑌵𑌿𑌤𑌶𑍍𑌚𑍈𑌵 𑌤𑍍𑌰𑌿𑌤𑌶𑍍𑌚𑍈𑌵 𑌮𑌹𑌰𑍍𑌷𑌯𑌃 ॥

𑌸𑌂𑌭𑍃𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌭𑌾𑌰𑌾𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌰𑌾𑌜𑌨𑍍 𑌮𑌹𑌾𑌕𑍍𑌰𑌤𑍌 ।
𑌨 𑌤𑌤𑍍𑌰 𑌪𑌶𑍁𑌘𑌾𑌤𑍋𑌽𑌭𑍂𑌤𑍍 𑌸 𑌰𑌾𑌜𑍈𑌵𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑍋𑌽𑌭𑌵𑌤𑍍 ॥

𑌅𑌹𑌿𑌂𑌸𑍍𑌰𑌃 𑌶𑍁𑌚𑌿𑌰𑌕𑍍𑌷𑍁𑌦𑍍𑌰𑍋 𑌨𑌿𑌰𑌾𑌶𑍀𑌃 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌤𑍁𑌤𑌃 ।
𑌆𑌰𑌣𑍍𑌯𑌕𑌪𑌦𑍋𑌦𑍍𑌭𑍂𑌤𑌾𑌃 𑌭𑌾𑌗𑌾𑌸𑍍𑌤𑌤𑍍𑌰𑍋𑌪𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌾𑌃 ॥

பிதாமஹர், கடர், தைத்திரி, வைசம்பாயநருடைய ப்ராதா, கண்வர், தேவ ஹோத்ரர்—இந்தப் பதினாறு ருஷிகளும்,

ப்ரஹ்மாவினுடைய புத்ரர்களான ஏகதர், த்விதர், த்ரிதர் என்கிற மூன்று மஹர்ஷிகளும் ஸதஸ்யர்களாக இருந்தார்கள்.

ஓ அரசனே! அந்தப் பெரிய யாகத்தில் வேண்டிய ஸர்வ பதார்த்தங்களும் ஸந்நத்தங்கள் ஆக்கப்பட்டன. அந்த யாகத்தில் பசுஹிம்ஸை செய்யப்படவில்லை. அந்த அரசன் பசுஹிம்ஸை இல்லாமலே யாகங்களைச் செய்பவனாக ப்ரஸித்தனாக இருந்தான்.

அவ்வரசன் அஹிம்ஸையிலேயே ஆஸ்தையுள்ளவனாயும், அல்ப பலங்களான ஸ்வர்க்காதிகளில் ஆசையில்லாதவனாயும், அந்தந்த கர்மங்களைச் செய்யும்பொழுது அந்தந்த கர்மங்களின் பலன்களில் ஆசையை விட்டு அக்கர்மங்களை ஈச்வரனுடைய ஆராதந ரூபமாகவே செய்கிற வாஸனை யுள்ளவனாகவும் இருந்தான். அந்த யாகத்தில் கல்பிக்கப்பட்ட ஹவிர்ப்பாகங்கள் எல்லாம், ஆரண்யகம் என்று சொல்லப்படுகிற உபநிஷத் வாக்யங்களைச் சொல்லியே கொடுக்கப்பட்டன.

ப்ரீதஸ் ததோ(அ)ஸ்ய பகவாந் தேவதேவ: புராதந: |
ஸாக்ஷாத் தம் தர்சயாமாஸ ஸோ(அ)த்ருச்யோ(அ)ந்யேந கேநசித் ||

ஸ்வயம் பாகமுபாக்ராய புரோடாசம் க்ருஹீதவாந் |
அத்ருச்யேந ஹ்ருதோ பாகோ தேவேந ஹரிமேதஸா ||

ப்ருஹஸ்பதிஸ் தத: க்ருத்த: ஸ்ருவமுத்யம்ய வேகித: |
ஆகாசம் க்நந் ஸ்ருவ: பாதை ரோஷாதச்ரூண்யவர்த்தயத் ||

உவாச சோபரிசரம் மயா பாகோ(அ)யமுத்யத: |
க்ராஹ்ய: ஸ்வயம் ஹி தேவேந மத்ப்ரத்யக்ஷம் ந ஸம்சய: ||

உத்யதா யஜ்ஞபாகா ஹி ஸாக்ஷாத் ப்ராப்தா: ஸுரைரிஹ |
கிமர்த்தமிஹ ந ப்ராப்தோ தர்சநம் ஸ ஹரி: ப்ரபோ ||

ஆகையினால் அதிக ப்ரீதியை அடைந்தவனாயும் மற்றொருவராலும் பார்க்க முடியாதவனாய்த் தேவதைகளுக் கெல்லாம் தேவதையாய் விளங்குகின்றவனாய் அநாதியா யிருக்கிற பகவான் அந்த யாகத்தில் அவ்வரசன் தன்னை ஸாக்ஷாத்கரிக்கும்படி செய்தார்.

தானே நேரில் வந்து தனது பாகத்தை மோந்து பார்த்துப் புரோடாசத்தைத் தானே வாங்கிக் கொண்டார். பிறகு ஹோமம் பண்ணின ப்ருஹஸ்பதியின் கண்களுக்குத் தோன்றாதவனான விஷ்ணுவினால் ஹவிஸ்ஸினுடைய பாகமானது வாங்கப்பட்ட ஸமயத்தில், பகவான், தம்முடைய கண்களுக்குத் தோன்றாததால் கோபம் கொண்ட ப்ருஹஸ்பதியானவர், வேகத்தினால் ஸ்ருவத்தை உயரத் தூக்கிக்கொண்டு ஆகாயத்தில் கிளம்பிக் குதித்துக்கொண்டு ரோஷத்தினால் கண்ணீரைப் பெருக்கினார்.

ப்ரஹஸ்பதியானவர், 'என்னால் கொடுக்கப்பட்ட இந்த ஹவிர்ப்பாகமானது பகவானால் என்னுடைய கண்ணுக்கெதிரில் தானாக நேரில் வந்து வாங்கப்படவேண்டியது தானே; இந்த விஷயத்தில் ஸம்சயமில்லையே' என்று உபரிசரவஸுவைப் பார்த்துச் சொன்னார்.

'இந்த யாகத்தில் என்னால் கொடுக்கப்பட்ட மற்ற யஜ்ஞபாகமானது என்னுடைய எதிரில் தேவதைகளினால் வாங்கிக்கொள்ளப்பட்டது. ஓ அரசனே! விஷ்ணு மாத்ரம் ஏன் என்னுடைய கண்களுக்கு எதிரில் வரவில்லை?' என்று கேட்டார்.

நந்தனத் தரிய காம வல்லிக ணனிமேற் சுற்றச்
சுந்தரத் துடனே தோன்றுங் கற்பகத் தரும மென்ன
வந்தநற் பொதும்பர் நாப்ப ணரங்கனின் மகளி ரீட்டம்
பந்தமுற் றருகிற் சூழத் துலங்கினன் பவள வாயான். 16

மணிவளை யொலிப்பக் கண்கண் மானெனெ மருள மேலா
ரணிகோளே காசஞ் சோரத் துயில்வரத் தரளத் தாரம்
பிணையனார் முன்மு னென்று பேய்முலை சுவைத்தாற் காங்கே
மணநறு மலர்கள் கொய்ய முந்தினர் மயிற் குழாம்போல். 17

நாண்மல ருணர்ந்து கொய்யு நங்கைமா ரைம்பா னுறுஞ்
சேண்மண மலரில் வீழ்ந்து சிலீமுகத் திரள்கள் சேர்ந்த
நீண்மகி தலத்தி லாயு நேர்மையை யறிவி னீண்டோர்
மாண்மலி பொருளில் வீழ்ந்து மற்றவை வணவ ரன்றே. 18

மயிலெனு மகவு மங்கை யொருத்தியின் மணமீ தாரு
முயர்வுறு மேரு பூத்த மலரெலா முவந்து கொய்தும்
பயில்வுறு நுனியின் மற்ற மலரையும் பறித்தற் கெட்டாண்
முயல்வுறும் விழுமி தென்றான் முழுதுமே விழைவ ரன்றே. 19

தழைகிளை குழையப் பூத்த தமனியச் செண்ப கத்தோ
ரிழைபுரை நுசுப்பின் மின்னா ளெய்துபு பறிக்கு மெல்லைக்
குழைபொரு நயன நீழல் பாய்ந்தவண் குலவன் முற்று
தழைதரு கரும்புட் சங்கச் சங்கையை நுவலு மன்னே. 20

நடைமணிச் சிலம்பின் னாதங் களிலன மெனுமோர் நங்கை
விடையெனக் குலவுங் கண்கண் மீதுமென் பதம்வைத் தேறும்
புண்டயுயர் தருவின் மல்கும் பூப்பறித் திடுத ரும்பர்
மடவர லவர்மீ தேறி யாடுதற் கெழுவ மாலும். 21

மற்றொரு நாலுங் கோவை மணியொளிர் நிதம்ப மாதர்
சிற்றிடை யிடுகச் சென்ற லத்தகஞ் செறிந்த தாளி
னொற்றலு முயர சோகஞ் செம்மல ரொருங்கு பூத்த
துற்றிடுங் கருவித் தன்மை காரிய முலகி னென்ப 22

கூடுறுங் குடத்தி மார்கள் குவிமுலைக் கண்ணின் வண்ண
மாடிய வரங்க முன்னோ ரணியிழைக் கமர ரூரி
னீடுபூந் தருவை யிங்குக் கொணர்ந்துட னிலவச் செய்த
வாடலார் நினக்கு மிந்த வருஞ்சினை குறித்த லென்னே. 23

சேவடி செறிவோர் தங்க டமசிரச் சுக்க டேய்க்கும்
பாவனை யதனை னின்றன் பன்னியர் விழிமேல் வீழும்
பூவிரச் சையும் பொங்கு மணிநிரைத் தமசை யும்பே
ராவலின் மலர்க்கை தன்னை லகற்றுபு வருந்து கின்றாய். 24

என்றுமா டகயாழ் நாண விசைத்திடு மகளிர் தம்மை
நன்றுவந் தருளிமாய னறுமலர் பறித்து வாசத்
துன்றிடுங் குழலிற் சூடி யெழிற்புயம் புளகம் பூர்க்க
மன்றலின் மலர்க்கை தன்னை னீவலு மகிழ்வு பூத்தார். 25

கோதையுன் னிட்ட கோதை யாரினி வசன் நோக்க
மேதகு பொருளிற் றண்ணென் னிலவெறி முறுவ லின்ன
கோதறு விதியி னுரு நகைமலர் குளிர்ந்து பூத்த
மாதவ னுரும் பாரி சாதத்திற் பயனும் வாய்ந்தார். 26

முதுவேனில்

வேறு

வேனி லின்னணம் விலகனுஞ் சுடுமுது வேனில்
கான்ம லிந்தலர் பாடல மலருரு கல்லாத்
தேன மர்ந்தமா லதிமணத் திறைப்பொருள் கொணரா
நீனி றந்திக ழுரங்கனுக் கெதிருற நிகழும். 27

வேனி லின்றுணர் வீந்திடச் சுசிமலர் மலரா
வானி யஞ்சில வவற்றிடை யிரதியி னன்பன்
பான லந்தரு மொழினர் பானலங் கடைக்க
ணான வாகைசே ராசுகந் துரந்தடல் செறிந்தான். 28

திங்க ளின்குடைச் செல்வனுந் திறனுரு நிருபன்
பொங்கு தென்றலா மூர்திமுன் வயங்கொளப் புவன
மெங்கு மெய்திய வயர்வொழித் திடநினைந் ததனைத்
தங்கு மந்துரஞ் செறிதரத் தளைத்தனன் சுசியில். 29

ஒற்றை யாழியான் படியமர் பயமெலா முறிஞ்சி
யெற்றி ரும்பெருங் கானலா யியற்றின னியதி
செற்ற மோடரு வளமெலாஞ் சிதைத்தரு வினையின்
மற்று மின்னலின் மனிதரைப் புடைப்பது கடுப்ப, 30

பூவை யார்களின் பொலிகுயக் கலசமேற் றரளக்
கோவை போலரும் பிடுவியர் வையின்றுளிக் குலங்கண்
மேவு றம்பய மலிதர மிளிர்குட மென்னுந்
தாவ ரும்பெயர் தகுந்தகு மெனவிளக் கிடுமால். 31

கோடை யித்தகைக் கொடுமுது வேனில்வா யரங்க
நாட னுற்றக நறும்புன லாடகங் கொழிக்கு
நீட லைக்கரக் காவிரி நினைதுழைப் படரும்
பாடு பெற்றெனப் பகர்வதற் கெழுந்தன முடுகும். 32

பொதிய வெற்பரை யன்றிருத் தனையையாய்ப் பொங்கும்
விதுக ரத்தலைக் கடலெனும் வேந்தனின் மனையாய்ச்
சுதையெ னப்பெரு குறும்பொனி யுவளகந் துன்றும்
மதுகை பெற்றநல் வாயில்காப் பாளனு மாகி. 33

கான வங்கியின் கவின்பெறு நண்பனாய் மலய
மான மானநா கஞ்செலுத் துயிர்ப்பென லாகி
மேனி வந்தொளிர் தருக்களின் சினையெலாம் வீழ்த்தி
வான நாடச லங்களுஞ் சலித்திட வலிந்து. 34

அருவி யின்கட மலைகளுஞ் சலிப்புற வசைத்துக்
கருவி மாமழைத் திரள்களும் புரண்டிடக் கலக்கி
யிருவி லின்னிரை யிடிதர விசைத்தெழிற் பொன்னி
மருவி மீதெழு திரைகளுந் தகர்ந்திட மாடி. 35

வெள்ளை நுண்மணல் விசைத்தெழுந் தம்பரஞ் சிதறி
தெள்ளு தாரகைக் குலமகற் பொழுதினுந் திகழ்மென்
றெள்ள யாவரு முளுற்றுபு திசைதொறுந் தாவங்
கொள்ளு மன்னுநீ ராசன விதியெனக் குலவ. 36

ஆற்றி யுஞ்சலித் திடுமெயின் சலலமா மயிலார்
கூற்று மஞ்சுறு மெயிறடைந் தெரிதருங் கொடிய
மாற்ற ரும்வன வன்னியின் சிகையெனு நாவு
மேற்று வேய்தருங் கூறையை மிசையெடுத் தெறிந்தே. 37

ஆவெ னத்திறந் தமர்ந்திடு மகமெனுட் வாயும்
மேவி மண்ணெலாம் விழுங்கிட விரும்பிய தெனவே
யேவ ரும்வெரு வரும்பயி றவத்துரு வேய்ந்து
நாவி னுஞ்சொல நடுங்குறும் படிநனி கிளர்ந்து. 38

வீசு வெம்மையின் வெற்பிருந் தருமுக டடறிப்
பூசி மெய்ப்படும் புண்ணிருந் தொழுகுசெம் புனலா
லோசை யுற்றெழுந் ததுவெனச் செந்துக ளுடனே
யாசு கம்மது குணகடல் குறித்தெழுந் ததுவாம். 39

வேறு

ஓவா முறையி னெழுந்துகரை யுடைக்குந் தரங்கச் சிகரங்க
டாவா வெளியிற் பாய்ந்துதிசை யெங்குந் தரணிக் கதிர்மறையப்
பூவா ழுழவர்க் கருந்தனமாய்ப் பொங்கிப் புதிய செம்புனலின்
மேவா வளியிற் கவேர னெழின் மகளே மிக்குப் பெருகினளால். 40

முடுகும் பவனத் தெழுந்துதெழித் திடுபே ரலையின் முழக்கினளாய்த்
தடமார் பாத பங்களினைத் தன்னுட் படுக்குந் தன்மையளாய்க்
கடமா மலையு மீர்த்திடுமுட் கடூர மாகும் சுழியினளா
யடருந் தவள நுரைத்துளிக ளசைந்து செல்லு மழகினளாய். 41

அவனி மாதி னுரத்திலகுந் தண்ணந் தரளத் தனிவடமாய்
நவையிற் பொதிய வரைமதமா நனிநின் றாற்று மதப்பெருக்காய்ப்
புவனத் திருவை குந்தமெனப் பொலியு மாங்க மெனும் பூவை
யவிரு மிடையி னளிந் தொளிரு மழகார் வெண்பட் டாடையுமாய். 42

அள்ளிற் கினிய விசையின்மே யன்னத் தொழுங்கா மம்புயமு
மெள்ளற் கரிய திரைமறியும் புருவத் திலங்கும் பங்கயமாங்
கொள்ளற் குரிய வதனமொடு துனிமீ தூர்ந்து கலக்கமுட
னுள்ளற் கரிய விரைவினளா யரங்கத தம்மா னுழையுற்றாள். 43

ஆடித் திங்க ளீரொம்பா னுய திவசத் தகல்பொன்னி
யோடிக் கரிய திருவரங்க னூரைச் சூழ்ந்து கரைபுரளா
வாடற் பெரிய திரைக்கரத்தா லணியு பணியு மாடைகளு
மேடுற் றலரு மலங்கலொடு மெல்லா மேற்றுப் பெருகினளால். 44

காழார் வாசக் காரகிலுங் கரியும் பரியு முதற்பலவு
மாழா ரோதத் தடித்தொழுகு மதனுன் மூடுற் றேமுருவாய்
வாழா மொருவி மானமதில் வளரு மரங்கன் பிரளயநீர்
சூழா லிலையி னென்றினிடைத் துலங்கு மாறு தோன்றினனே. 45

உலக முண்ட பெருவாய னவன்பா லாடற் குள்விழையா
விலகுந் திருமா மணிப்பணியு மெழிலார் பூம்பட் டாடைகளுங்
குலநற் கன்னி வேட்பவர்முன் னருளும் பொருள்கள் கொண்டினமும்
மலரா ளாதி மனைவியர்கள் சூழப்பொன்னித் தடஞ் செறிந்தான். 46

சென்று மதுவைச் செகுத்தபிரான் செம்பொற் பணிமின் சீரைமுத
லொன்றும் பலவு முவந்துதவி யுற்று நோக்க வவள்புதிய
மன்றன் மகளி ரென நாணி மறியு மீன விழியினளாய்த்
துன்றுங் கீழ்பான் முகத்தினளா யொழுகும் வனப்பிற் றுலங்கினளாம். 47

நீரே யாட நீலவண னிமிருங் கோட்டி னின்றதனுட்
காரார் கரிய குழலரவக் கணமா மணிசேர் மேகலையார்
வாரார் முலையி னுடன்போத வனமா மதத்த வாரணமொன்
றேரார் பிடிக ளுடனுடற் கிழிவ தென்ன விறங்கினளால். 48

காயா மலரின் மேனிதனிற் காளிந்தி யென்ன வெண்ணகையிற்
பாயா நின்ற பாகிரதி யெனவே பைம்பொ னம்பரத்தின்
வீயா வொளியிற் சோணையென விளம்ப நோக்கும் விழுமியரு
மோயா தொழுகு மொருநதியை யுவண கேத னுஞற்றினனே. 49

பன்னற் கரிய பன்னியரப் பரந்தா மன்றன் பாகுகளைப்
பொன்னற் கழைநோ புயல்தையிற் புகன்று பிடித்துப் புனல்குடைய
மின்னற் கொடியோ ரீரிண்டின் மிளிர்ந்து தொடங்கு மேன்மையினே
மன்னப் பொலிந்தா னுற்புயமு மணந்த பயத்தை மாயவனே. 50

தாழுங் குழலார் தரங்கிணியூ டிழிய நிதம்பந் தாம்புகலுஞ்
சூழுங் கறையிற் புரண்டருகிற் சொல்லா ரகன்ற வயல்பாய்ந்த
வீழுஞ் சுவையா ரின்பயமும் விளங்கு நாபி யழுந்திடனு
மாழங் குன்றிச் சமமுறவுள் ளடங்கிற் றென்ப மீண்டுடனே. 51

வேறு

மாயவன் கந்தர மட்டுமெவ் வருபுனற்
றேயமார்ந் திடவவன் றுணைவியாத் தொடிபுனை
வேயெனும் புயநதி விரிதிரைக் கரமொடத்
தூயநற் களந்தனைத் துணைவுறப் பற்றிய. 52

பாடகச் சேயடிப் பாவைமார் தோயவே
யாடகக் கடங்க ரவர்குயம் படிதரு
மீடிகத் தினநதி யிமயநற் சேய்முன
நீடகத் தாழ்ந்தநீ ளுததியை நிகர்த்ததே. 53

கஞ்சநேர் கண்ணினர் கங்கணங் கறங்கவே
மஞ்சிநேர் மாயவன் மீதுநீர் தூவினர்
விஞ்சுமோர் கடகரி மீதுவெம் பிடிபல
துஞ்செலுங் கைகொடு தாமிறைத் தென்னவே. 54

பிறழுமஞ் சேலுடன் பிறங்குகண் ணுைத்தன
நறியசை வலத்தொடுஞ் செறிகுழ லண்ணின
நிறைதருங் கோகமுங் கொங்கையு நிகர்த்தன
வெறிமலர்க் குழலினர் வெம்புனல் குடையவே. 55

ஒருமயிற் சிவிறியா லொருதுயி லெந்திரத்
தொருசுகங் கைகளி னுந்திபின் புனல்கொளா
வொருபொருப் பஞ்சனத் துச்சியிற் பலமுகின்
மருவுபு பெய்தென மகிழ்வொடுந் தூவினர். 56

ஒழுநீர்நாள் பங்கய மொராடர வல்குலாள்
வழுவுறு தோச்சவவ் வாரிசக் கண்ணனுக்
கெழுதரும் பூங்கணை யென்னவே வீழ்ந்ததாற்
பழுதறும் பாவைமற் றெப்படி வெல்வதே. 57

அம்பினுண் மூழ்குமோ ராயிழை தன்னுட
னெம்பரன் மூழ்கிமே லின்கரத் தேந்தினன்
முன்பிர ளயவுத திக்குளே மூழ்கிய
வம்புவி தனையெடுத் தாதரித் தென்னவே. 58

கந்தரத் தளவமிழ்ந் தமர்தருங் காந்தையர்
சுந்தரத் திருமுகஞ் செந்நிறத் தோடகத்
தந்தமார் மலர்நிகர் தவிருபோ தவர்குழல்
வந்துவீழ் வைமிசை வண்டினஞ் சிவணுமே. 59

பூந்துகி னெகிழ்தரக் களபமும் போதரக்
கூந்தலுஞ் சோர்தரப் பணிகளுங் குலைதரக்
காந்தையர் கண்ணினிற் கழுமு நீராடின
ரேந்துபூம் பகழியா னுடல்செய்த தென்னவே. 60

ஆடியிவ் வாறரிச் சிலம்பினு ரோடுமா
னீடுரும் பிரணவ நேர்விமா னத்துளே
யாடலா ரொருகளி றருகுபல் பிடியொடுங்
கூடுநீ குஞ்சமு டென்னவே கூடினன். 61

வேறு

தோகைக் கருந்துணையாய்த் தோலினத்திற் குறுமதமா
யேகத் திரளெகினக் கெறுழசனி யாய்க்கழிந்த
வாகைச் சுகிக்கபிசா ரத்தினெழும் வலியபுகை
யாகிக் கனசமய மாங்கடைந்த தென்பவரோ. 62

மினைலெனுங் கூத்தியர்கண் மேவும் யவனிகையாய்
மன்னுமக லம்பரத்தின் மன்னும் விதான மெனக்
கன்னன் மதனன் கரக்கணையி னின்றெழும்பும்
பன்னரிய தூமமெனப் பரந்தனபைங் கொண்டலெங்கும். 63

பூவின் கணைக்குமரன் போர்முரச வென்முழக்காய்
மேவும் விகங்கத் திரளிரியும் மந்திரமாய்த்
தூவும் கரடமலைத் தொழுதுபுரி யும்பிளிறுய்
வாவும் கருமுகில்கள் வானெங்குஞ் சென்றிடிக்கும். 64

கரிய முகிற்படலங் காண்டலுமன் னப்படல
முரிய வலவெனவாங் கோடிக்க ரந்தனவிப்
பெரிப படியுழிவெண் பேவரும் பெற்றியர்கள்
கரிய வியல்புடையார் கண்முகப்பிற் காண்குவரோ. 65

தணந்திங் குழல்பவர்க்குத் தருமன் விடுதூதாய்
மணந்தங் கரவிந்த மலர்வீட்டும் வெம்பசையாம்
புணர்ந்தின் புறுகவெனப் போதிக்கு மந்திரமாய்க்
கணந்தண் புனல்சிதறுங் கொண்டல் கலந்தெங்கும். 66

சீதப்பு யல்வளியாற் செறிந்தெங்குந் தான்பரவு
மேதக்க செந்தாழை மென்குடசத் தின்மலரின்
றுதிற்க மழ்பொடிவே டன்றுதார் தமைவலிக்க
வூதிக்கி ளர்மாயத் தொண்பொடியி னேக்கியதால். 67

கொண்ட லெனும்வெய்ய வுயிர்ப்பெறிந்து குரைகடலை
மொண்டு கிளம்பம்புதகா கங்கவற்ற மொய்ம்பழியுந்
திண்டிறலி னிளைஞர்களுக் கார்வமுறுந் தேமொழியார்
தண்டரளத் தாரகலந் தழுவுகையே யின்மருந்தாம். 68

பெய்யுமுகில் விண்டெழிக்கப் பேரா ரெதிரொலிபோல்
வையமதில் வாரணமண் டேகிகி சாதகங்கள்
செய்யுந் தமதிதயஞ் செம்மாந் திருமுழக்க
னையும் விரகியர்பா லஞ்சாய்ப் பரவியதால், 69

தாமரையி னுபத்துத் தணந்தோர் படுங்காளம்
மீமழையென் குஞ்சரங்கண் மேவும்பெருங் கொம்பா
நாமமுறு யிரவி நலியுங் கொடுவெயிலும்
போமரிய வெஞ்சாபப் பொங்கும் புனலாகி. 70

கண்ணு யிரனுடனோர் கலவமயி னல்வினையாய்
நண்ணு வருந்துபுன னலிந்தேங்குஞ் சாரங்க
முண்ணு மகிழ்மருந்தா யும்பர்முழு தும்பரந்த
பண்ணார் புயல்சொரியும் பைம்புனலும் வீழ்ந்ததரோ. 71

பாரெங்கும் வென்றியுறப் படையெடுத்த வங்கசற்குக்
காரன்பிற் செய்முகிலாங் கவினுபட மண்டபத்தின்
சீரொன்றுந் தந்துவினுற் செய்திடுவெண் ணுனினம்போ
லேரொன்றுந் தாரைமழை யெத்தலையுஞ் சொரிந்ததுவே. 72

மேலோடுங் கால்விசையின் மேகபட லங்கரிய
வாலாலம் போலிரைந்தாங் கம்பரத்து ராய்தரலும்
பாலாமு டுக்கணங்க ளுக்கதெனப் பார்முழுதுங்
கோலா கலமாகக் குடமலர் பூத்தனவால். 73

கொண்மூ வெனும் விசைய கொய்யுளையை யூர்ந்தொழுகும்
பெண்மோகத் தாயிரங்கண் பெற்ற சதமகவான்
கொண்மா மலர்க்கரத்திற் கூருங் கசைநிகர
வொண்மா சபலையொழுங் கம்பர தலத்தொளிர்ந்த. 74

பாயும்ப யோதரத்தால் வெங்கதிருந் தண்கதிரு
மாயும் பொழுதுவெயின் மற்ற மதிக்கலையும்
வேயும் மலர்க்குழலார் விம்முங் குபங்களினு
மேயுந் திருமுகத்து மிருந்து சுடர்விடுமால். 75

ஆவணியிற் பின்பக்கத் தட்டமிரோ கிணிநிசிவாய்ப்
பூவலயந் தானுய்யப் பூத்த திருவிழவை
மாவகலும் வாய்பிளந்த மன்னு திருவரங்கன்
றேவர்களும் போற்றிசைப்பத் திருவிழியிற் கண்டருளும். 76

சிங்கமதி யிடையிற் சீரார் திருவரங்க
னங்கபரி வர்த்தனமா கரிவாசர திவசத்
தெங்குமுள வெம்பரம ரெல்லோருந் தாங்குழுமப்
பொங்கும் [illegible] வுற்சவத்தாற் பூரிக்கும். 77

158957

விற்பனைக்குத் தயாராய் இருக்கும் புத்தகங்கள்

1. ஸ்ரீ யதுநாதகத்யம் :—இப்பிரபந்தம், ஸ்ரீ பாகவத தசமஸ்கந்தத்தில் அடங்கிய கதையைப் பொருளாகக் கொண்டு, ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் அருளிச் செய்த ஸ்ரீ ரகுவீர கத்யத்தை அடியொற்றிக் கத்ய ரூபமாக (க்ரந்தாக்ஷரத்தில்) பந்தல்குடி வேலாமூர் வித்வான் ஸ்ரீநிவாஸாசார்யரால் இயற்றப்பட்டுப் பாக்கெட் ஸைஸில் அச்சிடப்பட்டுள்ளது. இதனுடன், ஷை தசமஸ்கந்த கதையை அநுஸரித்து, "கிருஷ்ண பஜநதசகம்" என்ற ஒரு க்ரந்தமும் அச்சிடப்பட்டிருக்கிறது. இதில் அடங்கிய ச்லோகங்கள், பலவித ராகங்களிலும் மெட்டுகளிலும் அமைத்துத் தாளத்துக்கு இசையப் பாடுவதற்குத் தகுதியானவை. ஷை க்ரந்தங்கள், அநுஸந்தாநத்துக்கும் உபந்யாஸாதி ப்ரவசநங்களுக்கும் மிகவும் உபயோகமானவை. இவை, பல பெரிய வித்வான்களால் பார்வையிடப்பட்டு நன்கு ஆமோதிக்கப்பட்டுள்ளன.

இதன் விலை அணா 0 1 6
தபால் சார்ஜ் உள்பட அணா 0 2 0

2. திருப்பாவை:—இது, ஸ்ரீரங்கராமாநுஜ ஸ்வாமி அருளிச் செய்த ஸம்ஸ்க்ருத வ்யாக்யாநத்துடனும், ஸ்ரீ பரகால ஸ்வாமி, ஸ்ரீரங்கநாத ஸ்வாமி, இவர்கள் அருளிச்செய்த மணிப்ரவாள வ்யாக்யாநங்களுடனும், ப்ரதி பத தாத்பர்யத்துடனும் கூடியது. முகவுரையில் ஆண்டாள் வைபவச் சுருக்கமும் அடங்கியுள்ளது. இதன் விலை (பைண்டுடன்) ரூ. 2-0-0 தபால் சார்ஜ் வேறு.

3. க்ருஹ்ய ரத்நம் :—இந்த க்ரந்தம், விவாஹம் முதலான பூர்வ கர்மாக்களைச் செய்து வைக்கும் உபாத்யாயர்களுக்கும், அவர்கள் இல்லாத இடத்தில் தாமாக அறிந்து செய்யவேணுமென்று எண்ணங்கொண்ட பிறர்க்கும் மிகவும் உபயோகமுள்ளது. 'கண்ட பூஷணம்' என்னும் ஸம்ஸ்க்ருத வ்யாக்யாநமும், அதற்கேற்ற தமிழ் வ்யாக்யாநமும் அடங்கியுள்ளது. இதன் விலை (பைண்டுடன்) ரூ. 1-0-0. தபால் சார்ஜ் வேறு.

கிடைக்கு மிடங்கள் :—

1. மானேஜர், வேதாந்த தீபிகா ஆபீஸ்,
ராமஸ்வாமி தெரு, புதுமாம்பலம், தியாகராயநகர் போஸ்ட், சென்னை.
2. மானேஜர், ஸ்ரீ ஸத்வித்யா புக் டெப்போ,
1, புஜங்கராவ் தெரு, சைதாப்பேட்டை (மதராஸ்)

Registered No. M. 916.

Sri Vaishnava Siddhanta Prachara Sabha Ltd.

An Institution under the above designation has recently been registered under the Indian Companies Act for the purpose of promoting and propagating the doctrines of Sri Vaishnava Religion and Philosophy. The Company has published a Memorial Edition of Sri Vedanta Desika's Works, in Nagari Script. 'NYAYA SIDDHANJANAM' with the commentary of Sri Rangaramanuja Swami and with an introduction by Mahamahopadhyaya Ramanuja Vijayadhvaja Kapisthalam Desikacharia Swami. Copies can be had at Rs. 5/- each. The second volume, TATWATIKA, is in the press and is nearing completion.

Shares in the Company of Rs. 50 each are payable by convenient instalments. The following are the office-bearers of the Company.

Sriman	V. V. Sreenivasa Aiyangar	*President*
do	P. Rangaswami Iyengar, Retd. Sub Judge	*Genl Secy.*
do	T. Rajagopalachariar, Retd. Sub Judge.	*Exec. Secy.*
do	S. Jagannathachariar, Organiser, United India Life Assurance Co., Ltd. Madras.	do
do	S. Aravamuda Iyengar, Advocate.	*Treasurer.*
do	R. Kesava Iyengar, Advocate,	*Director.*
do	T. D. Sreenivasachari, Advocate,	do
do	N. T. Shamanna, Solicitor.	do
do	M. Sudarsana Iyengar, Merchant.	do
do	C. V. Venktaramana Iyengar, Coimbatore.	do
do	T. E. Satakopachariar, Advocate Cuddalore.	do

It is requested that all Sri Vaishnavas will take shares in and otherwise co-operate with the work of the Company.

Subscriptions to Vedanta Dipika should be remitted either to the Manager, No. 1, Ramaswami Street, East Mambalam Theagarayanagar Post, Madras or to the Registered Office of the Sabha at 39, Muthiyalu Chetty Street, Vepery, Madras, according to the convenience of the subscribers. Memorandum of Association and any other information may be had on application to the Registered Office of the Sabha.

Printed by Kabeer Printing Works, Triplicane and Published by
Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd. Madras.